# ஆண்டறிக்கை 2016




மத்திய சுற்றாடல் அதிகாரசபை

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு

# தூரநோக்கு

அதிசிறந்த சேவையின் ஊடாக

சுத்தமானதும் பசுமையானதுமான

சுற்றாடலொன்றை கட்டியெழுப்பல்

# செயல் நோக்கு

ஒருங்கிணைத்தல், ஊக்குவித்தல், பொது மக்களின் பங்கேற்றலை மேம்படுத்தல், வலுவூட்டல், முறையான தொழில்நுட்பவியல் தலையீடுகளை மேற்கொள்ளல் மற்றும் சுற்றாடல் கல்வி ஆகியவற்றின் மூலம் சுற்றாடலின் தரத்தை முகாமைத்துவம் செய்வதில் தேசத்திற்கு தலைமைத்துவம் வகித்தல்

# முன்னுரை

2016ஆம் ஆண்டின் ஆண்டறிக்கையானது, தலைமையகத்தின் பிரிவுகள்/அலகுகள் 15 தை சேர்ந்த பணிப்பாளர்கள்/தலைவர்கள், 09 மாகாண அலுவலகங்கள் மற்றும் சுற்றாடல் பேரவை ஆகியோர்/ஆகியவற்றிடமிருந்து கிடைக்கப்பெற்ற தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் (ம.சு.அ) மேற்கொள்ளப்பட்ட விஷேட கருத்திட்டங்களின் செயலாற்றுகை மற்றும் தகவல்கள் ஆகியனவும் இவ்வறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகவல்கள் தலைமை அலுவலகம் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் முக்கியமான பிரிவுகள்/அலகுகள் ஆகியவற்றின் பிரதான செயலாற்றுகையின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளன.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் 14ஆம் வாசகம் மற்றும் நல்லாட்சி வழிக்காட்டிகள் ஆகியவற்றுக்கு அமைவாக இவ்வாண்டின் அறிக்கையை மத்திய சுற்றாடல் அதிகாரசபை தயாரிக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால் இவ்வறிக்கையானது அதிகாரசபையின் செயலாற்றுகை, வருடாந்த கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை பற்றிய தகவல்களையும் உள்ளடக்கியுள்ளது.

அவசியமான தகவல்களை அனுப்பிவைத்ததன் மூலம் ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கிய அனைத்து பணிப்பாளர்கள்/பிரிவுகளின் தலைவர்கள்/பிரிவுகள்/மாகாண அலுவலகங்கள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக்கொள்ள இந்த சந்தர்ப்பத்தை திட்டமிடல் கண்காணிப்பு குழு பயன்படுத்திக்கொள்கின்றது.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவு

## 2016 ஆம் ஆண்டறிக்கை பற்றியதலைவரின் செய்தி

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் (ம.சு.அ) வருடாந்த அறிக்கையையும் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதி ஆண்டிற்கான இருப்புக்கூற்று அறிக்கை, பணப்புழக்க அறிக்கை மற்றும் கணக்காய்வு நாயகத்தின் அறிக்கை உள்ளடக்கிய கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகள் ஆகியவற்றை உங்களிடம் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

நாட்டின் விரைவான வளர்ச்சிக்காக சுற்றாடல் கருத்தாய்வுகளை ஒருங்கிணைக்கும் மத்திய அமைப்பான மத்திய சுற்றாடல் அதிகாரசபை பல்வேறு பிரிவுகளின் கீழ் அதன் முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுக்கிறது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையாகிய நாங்கள், சட்ட வரைவு மற்றும் சட்ட ஆலோசகருடன் ஒரு கலந்துரையாடலை மேற்கொண்டதுடன், சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளை திருத்தியமைத்தல், பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களின் பட்டியல் மற்றும் திட்ட ஒப்புதல் நிறுவனங்களின் பட்டியல் ஆகியவற்றை மாற்றுவதற்கு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு மூலம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டோம். சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஒழுங்குவிதிகளில் உள்ளடங்கப்பட்டவாறு திட்ட பிரேரணையாளரால் புதிய விதிகளுக்கு அமைய கண்காணிப்பு நடவடிக்கைகள் உட்பட்ட சுற்றாடல் முகாமைத்துவ திட்டத்தை சமர்ப்பித்தல் வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட திட்டங்களின் பட்டியல் மற்றும் திட்ட ஒப்புதல், நிறுவனங்களின் பட்டியல் ஆகியவை மறுசீரமைக்கப்பட்டன. அவை மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்கள் மற்றும் பங்குதாரர்களின் கருத்துக்களையும் உள்ளடக்கியது.

நீர் வளங்களின் தரத்தை பராமரிப்பது மக்களின் நன்மை பயக்கும் ஒரு முக்கிய அம்சமாகும். ஆனால் தொழில்துறை கழிவுப்பொருட்களை அகற்றும் நடைமுறை வேகமாக வளர்ந்து வருவதால் நீர் வளங்கள் மாசடைந்து வருகின்றன. எனவே, இந்த ஆண்டிலிருந்து இலங்கையின் பிரதான நீர்வழங்கல் மாதிரிகளை சேகரித்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடம் மூலம் அவற்றை பரிசோதனை செய்ய முடியும். வெவ்வேறு நீர் நிலைகளிலிருந்து மேற்பரப்பு நீர் மற்றும் நிலத்தடி நீர் மாதிரி மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்காக சேகரிக்கப்பட்ட தொழில்துறை கழிவு நீர், வர்த்தக அடிப்படையில், ஒழுங்குமுறை கண்காணிப்பு மற்றும் சட்டபூர்வமான தேவை ஆகியவற்றிற்கான நீர் மாதிரிகளை இவை உள்ளடக்கியது.

நீர்த்தாரைகள், நீரேந்து பிரதேசங்கள் மற்றும் நீர் தேங்கங்கள் பாதுகாக்கப்படுவதற்கான தேசிய கொள்கையின் படி, நீர் வள ஆதாரங்கள்/ நீரேந்து பிரதேசங்கள் பற்றிய தயாரிக்கப்பட்ட பட்டியலிற்கு அமைய, அவை அடையாளம் காணப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகள் என அறிவிக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கிறது. இது தவிர, நீர் வள ஆதாரங்களின் பாதுகாப்பிற்காக ஹொரண, இங்கிரிய மற்றும் பதுளை மாவட்டத்திலுள்ள நீரேந்து பிரதேசங்கள் ஆகியவற்றிற்கான பாதுகாப்பிற்கு மத்திய சுற்றாடல் அதிகாரசபை முன்னெடுப்புகளை மேற்கொண்டது. இதற்கிடையில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 547 நீர்வீழ்ச்சிகள் பட்டியலிடப்பட்டு, அவை சுற்றாடல் பாதுகாப்புப் பகுதியாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில் நிலவுகின்ற இடைவெளியை பூர்த்தி செய்ய, மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் சுற்றாடல் சார் அம்சங்களை ஆராய்வதற்காக ஒழுக்காற்று ஆராய்ச்சி குழு நிறுவப்பட்டது. எண்ணெய்க்காக பாம் பயிர்ச்செய்கை பற்றிய சர்ச்சைக்குரிய சுற்றாடல் பிரச்சினை, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆராய்ச்சி பகுதியாக அடையாளம் காணப்பட்டது. எண்ணெய்க்காக பாம் பயிர்ச்செய்கையால் நிலத்தடி நீரின் மீது தாக்கங்களை ஆய்வு செய்வதற்காக ஒரு ஆராய்ச்சி திட்டமும் உருவாக்கப்பட்டது.

நாட்டில் இலத்திரனியல் பொருட்களுக்கான அதிக தேவை இருப்பதால், கடந்த சில ஆண்டுகளில் உருவாக்கப்படும் இலத்திரனியல் பொருட்களின் கழிவு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்துள்ளது. இலத்திரனியல் கழிவுப்பொருட்களின் முகாமைத்துவத்தை பொதுமக்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதன் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டதுடன், வீட்டு மட்டத்தில் உருவாக்கப்படும் இலத்திரனியல் கழிவுகளின் சேகரிப்பை எளிதாக்குவதற்கும் மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையின் கீழ் 2016 அக்டோபர் மாதம் 24 முதல் அக்டோபர் 30 திகதி வரை இலத்திரனியல் கழிவு, பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை அகற்றுவதற்கான தேசிய வாரம், மத்திய சுற்றாடல் அதிகாரசபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது.

சுற்றாடல் மீது அதிக கவனம் செலுத்துவதற்கு மற்றும் சுற்றாடல் பாதுகாப்பிற்காக பொது மக்களின் பங்களிப்பை அவர்களின் மூலம் ஒருங்கிணைப்பதற்கு சுற்றாடல் கல்வியை வழங்குவதும் விழிப்புணர்வை

ஏற்படுத்துவதும் எங்களது பொறுப்பாகவுள்ளது. ஆகையால், சுற்றாடல் மற்றும் அதன் முக்கியத்துவத்தைப் பற்றி மக்களுக்கு அறிவூட்டுவதற்காக பல்வேறு கல்வி மற்றும் விழிப்பூட்டல் நிகழ்ச்சிகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடத்தியது. மேலும், “வனவிலங்குகளை சட்டவிரோதமாக வர்த்தகத்தில் ஈடுபடுத்துவதற்கு எதிராக போராடு” என்ற தலைப்பின் கீழ், உலக சுற்றாடல் தின கொண்டாட்டம் மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் பிரதான தலைமையில் ஜூன் மாதம் 5 ம் திகதி மாத்தளை மாவட்டத்தில் நடைபெற்றது.

கழிவு முகாமைத்துவம் தொடர்பாக உள்ளூராட்சி அதிகாரசபையின் முக்கிய பொறுப்புகளில் ஒன்று வீடுகள், வணிக நிறுவனங்கள் மற்றும் பொது இடங்களிலிருந்து கழிவு சேகரிப்பதாகும். நகராட்சி கழிவுகளை நிர்வகிக்க வேண்டியதற்கு முக்கிய தடைகளில் ஒன்றாக இருப்பது போதுமான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை. இந்த உண்மையைக் கருத்திற் கொண்டு, உள்ளூராட்சி அதிகாரசபைகள் அவர்களின் பிராந்தியத்தில் சேகரிக்கப்பட்ட திண்ம கழிவுகளை முகாமைத்துவம் செய்வதற்காக வேண்டி, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கீழ் செயற்படுத்தப்படும் பிலிசரு செயற்திட்டமானது ஆறு புதிய கொம்போஸ்ட் உருவாக்கும் தளங்கள், மூன்று உயிர் வாயு ஆலைகள், ஒரு சுகாதார முறைப்படியிலான நில நிரப்புகை, ஒரு குறைந்த விலையிலான எரியூட்டி, பிளாஸ்டிக் மீள்சுழற்சி மையங்கள் மற்றும் இரண்டு பிளாஸ்டிக் /பொலித்தீன் கழிவு சேமிப்பு மையங்கள் ஆகியவற்றை வழங்கியது. அத்தோடு, காலி, யாழ்ப்பாணம், பொலன்னறுவை, அனுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் உருவாக்கப்படும் கழிவுகளின் மொத்த தொகையை ஆய்வு செய்த பிறகு, குறித்த மாவட்டங்களுக்காக நான்கு சுகாதார முறைப்படியிலான நில நிரப்புகைக்கான கட்டுமானப்பணிகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபை தொடங்கி வைத்துள்ளது.

எனினும், அனைத்து தொழில்நுட்ப பிரிவுகள் மற்றும் செயற்திட்டங்கள் தங்கள் பெறுமதியான சேவைகளை விரிவாக்கும் போது, மற்றைய திட்டமிடல் அலகு, மனிதவள, நிர்வாக மற்றும் நிதி பிரிவு, உள்ளக கணக்காய்வு அலகு மற்றும் தகவல் தொழிநுட்ப அலகு ஆகியன அவற்றுக்கு ஆதரவு வழங்குவதன் மூலம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முயற்சி வெற்றியளிக்கிறது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் குறிக்கோள்களை அடைய, அவற்றின் பங்களிப்புக்காக, பணிப்பாளர் நாயகம், முகாமைத்துவ சபையினா் மற்றும் ம.சு.அதிகாரசபையின் ஊழியர்களுக்கு நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன். மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் விவகாரங்களின் முகாமைத்துவத்தில் எனக்கு ஒத்துழைப்பு, வழிகாட்டல், அறிவுரை மற்றும் ஆதரவு வழங்கிய ம.சு.அதிகாரசபையின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்கள் மற்றும் சுற்றாடல் ஆலோசனை சபை உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்கு நான் இந்த வாய்ப்பைப் பெற்றுக்கொள்கிறேன். ஒத்துழைப்ப, சிரத்தை மற்றும் ஆலோசனைக்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர், மேலதிக செயலாளர்கள் மற்றும் அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் என் பாராட்டுக்களை தெரிவிக்கின்றேன். மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சரான மேன்மைதங்கிய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் மகத்தான அறிவுரைகள் மற்றும் வழிகாட்டுதலுக்காக எனது பெருமைக்குரிய நன்றியை தெரிவிக்க விரும்புகிறேன்.

# ஒழுங்கமைப்பு கட்டமைப்பு




Figure 3.1:CEA Organizational structure

31

# மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் முகாமைத்துவ குழு

**பேராசிரியர் மர்வின் தர்மசிறி** (B.A., M.A., Pg. Dip., M. Sc., PhD)

தலைவர்

**திரு கே.எம்.யூ. முத்துகுட ஆராச்சி** (B. Sc, M. Sc)

பணிப்பாளர் நாயகம்

**பொறியியலாளர் ஜே.எம். யூ இந்திரரத்ன** (B. Sc (Eng.) Hons. MBA, C. Eng. FIE (SL) Grad. IE (Aus.))

பிரதி பணிப்பாளர் நாயகம் (HRD, Admn, Fin.)

**திரு யூ.கெ.டி ஜயசிங்க** (B. Sc, M. Sc)

பிரதி பணிப்பாளர் நாயகம்(EM & A)

**கலாநிதி ஆர்.எம்.எஸ. கே ரத்நாயக்க** (B.Sc. (Sp), Ph.D., Chtd. Chemist, Dip. Chemistry)

உதவி. பிரதி பணிப்பாளர் நாயகம (EPC)

**திரு . எம்.ஜே.ஜே பர்னாந்து** (B.Sc, M. Sc, PG. Diploma (RS & GIS))

பிரதி பணிப்பாளர் நாயகம (EE&A)

**திரு.எம்.கே.எஸ் நாணயக்கார** (B.Com. (Hons.), Licentiate –SLICA, FPAF)

பணிப்பாளர் (நிதி)

**மிஸ்.காந்தி த சில்வா** (B. Sc, M. Sc)

பணிப்பாளர் (EIA)

**திரு. ஏம்.எஸ்.ஏ.ஈ திஸ்மபொல** (சட்டத்தரணி, PGD in HR)

பணிப்பாளர் (RD / C/U நிர்வாகம்)

**திரு.எம்.ஏ.ஏ.என். ஹேமகுமார** (B. Sc, M. Sc)

பணிப்பாளர் (R & D)

**திரு. நீல் பெரேரா** (BA, பொருளாதாரம். (Special), MA (பொருளாதாரம்) Dip (பொது முகாமைத்தவம்)

பணிப்பாளர் (EE&A)

**மிஸ்.மன்சுளா விமலசேன** (சட்டத்தரனி,, LLB (Sri Lanka), நொத்தாரிசு, Commisioner for Oaths and Company Secretary)

பணிப்பாளர் (சட்டம்)

**திரு. டீ.எம்.ஏ.எஸ.கே றொட்றிகோ** (B. Sc, M. Sc (Forestry))

பணிப்பாளர் (NRM &கண்காணிப்பு )

**மிஸ்.வசன்தா விஜேசிங்க** (B. Sc (Chemistry) Hons. M.Sc. (பகுப்பாய்வு இரசாயனவியல்), M.I Chem, (பட்டய இரசாயனவியலாளர்))

பணிப்பாளர் (ஆஸ்வுகூட சேவைகள்)

**மிஸ்.டி.விதானகே** (B. Sc, M. Sc (சுற்றாடல் முகாமைத்துவம்), PGD (சுற்றாடல் விஞ்ஞானம்))

C/U பணிப்பாளர (EPC)

**திரு. ஜீ.ஏ வீரசுந்தர (**B. Sc, M. Phil)

பணிப்பாளர் (WM)

**திரு.ஆர்.வல்பொல** (B.A.Hons., MSSc (சமூகவியல்))

பணிப்பாளர் (பிலிசரு கருத்திட்டம்)

**மிஸ்.குமாரி குலதிலக** (B.A (Gen))

பணிப்பாளர் (P&M)

**திரு சுனில் த சில்வா** (B.Sc. (Gen.), PGD கணனி தொழில்நுட்பம், M.Sc. (கணனி விஞ்ஞானம்), Chartered IT Professional Member of British Computer Society (MBCS CITP))

Programmer /Analyst

**மிஸ். டி.விதானகே** (B. Sc, M. Sc (சுற்றாடல் முகாமைத்துவம்), PGD (Envtl. Science))

பணிப்பாளர் (HA)

**மிஸ். ஏ.சீ.பீ. தாபரே** (B.A, Asso. Chtd. libB.A, Asso.Chtd. lib, M.Sc. (LIS))

சிரேஸ்ட நூலகவியலாளர்

**மிஸ் யூ.விதானாட்சி** (B. sc (Admin), SLICA, MAAT, HDM)

உள்ளக கணக்காய்வாளர்

**திரு.கே.ஜீ.டி.என் கிரியெல்ல** (B. Sc, M.Sc) பணிப்பாளர் (CP)

**திரு.கே.ஏ.பீ. வெலிகன்னகே** (B. Sc, M. Sc, MA, PGD (Envtl. Science), Dip (HRM & Marketing))

பணிப்பாளர் (SaP)

**திரு.சிவகுமார்** (B. Sc, M. Sc)

பணிப்பாளர் (EP)

**திரு.எச்.எஸ். பிரேமசந்திர** (B. Sc (sp) Hons, M. Sc, M.I. Biol, MIEPSL, C. EnvP, MPMI (US))

பணிப்பாளர் (கம்பஹா மாவட்டம்)

**திரு. என்.எஸ். கமகே**
(B. Sc, M.Phil)

பணிப்பாளர் (WP)

**திரு.சுசன்த வெதகே** (B. Sc, M. Sc)

பிரதி பணிப்பாளர் (UP)

**மிஸ். சமன்தா மல்லபதிரன** (B. Sc, M. Sc, PGD)

பிரதி பணிப்பாளர் (SuP)

**திரு.ஜீ.எம்.கே பெரேரா** (B. Sc, M. Sc (Forestry), PGD (Envtl. Science))

பிரதி பணிப்பாளர் (NCPO)

**மிஸ். விஜிதா சத்தியகுமார்** (B. Sc, M. Sc (NRM), PGD (Envtl. Science))

பதில் பிரதி பணபிபாளர் (NP)

**திரு.டி.எம்.கே. திசாநாயக்க** (Bsc. Msc)

பதில் பிரதி பணபிபாளர்(NW)

# உள்ளடக்கம்

முன்னுரை……………………………………………………………………………………………………ii
உள்ளடக்கம;………………………………………………………………………………………………..vii
அட்டவணைப் பட்டியல;…………………………………………………………………………………ix
உருக்களின் பட்டியல;……………………………………………………………………………………x
சுருக்கக் குறியீட்டு பட்டியல்……………………………………………………………………………xi
அத்தியாளம் 1: மத்திய சுற்றாடல் அதிகாரசபை………………………………………………………1
1.1அறிமுகம்…………………………………………………………………………………………………1
1.2. குறிக்கோள்………………………………………………………………………………………………1
1.3.அதிகாரங்கள்,தத்துவங்கள் மற்றும் கடமைகள்…………………………………………………2
1.4.அதிகாரசபை உறுப்பினர்கள்……………………………………………………………………3
1.5.சுற்றாடல் பேரவை………………………………………………………………………………………4
அத்தியாயம்.2: ம.சு.அ கடமைகள் மற்றும் பொறுப்புகள் ………………………………………7
அத்தியாளம்.3::சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு அலகு………………………………………………13
3.1சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு………………………………………………………………13
3.2.ஆய்வுகூட சேவைகள் பிரிவு……………………………………………………………………18
3.2.1.வளி வளங்கள் முகாமைத்தும் மற்றும் கண்காணிப்பு அலகு……………………………18
3.2.2.நீர் தரங்கள் கண்காணிப்பு அலகு………………………………………………………………19

3.3.கழிவு முகாமைத்துவ அலகு……………………………………………………………………26
அத்தியாயம்.4: சற்றாடல் முகாமைத்தவம் மற்றும் மதிப்பீட்டு அலகு………………………………33
4.1.சுற்றாடல் தாக்கம் பற்றிய மதிப்பீட்டு அலகு……………………………………………………33
4.2.இயற்கை வளங்கள் முகாமைத்தவம் மற்றும் கண்காணிப்பு அலகு……………………………41
4.3.ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு……………………………………………………………53
அத்தியாயம்.5:.சட்டப் அலகு………………………………………………………………………………61
அத்தியாயம்.6:சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு அலகு……………………………………66
அத்தியாயம்.7: திட்டமிடம் மற்றும் கண்காணிப்பு அலகு……………………………………………74
அத்தியாயம்.8:புகார் அலகு…………………………………………………………………………………78
அத்தியாயம்.9:தகவல் தொழில்நுட்ப அலகு…………………………………………………………83
அத்தியாளம்.10: உள்ளக கணக்காய்வு அலகு…………………………………………………………86
அத்தியாயம்.11:ம.சு.அ யின் பன்முகப்படுத்தல் ……………………………………………………88
11.1.ம.சு.அ மாகாண அலுவலகங்களுக்கு அதிகாரம் பகிந்தளித்தல் ………………………………88
11.2.உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அதிகாரம் பகிந்தளித்தல் ………………………………88
11.3.மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழு…………………………………………………89
அத்தியாயம்.12:ம.சு.அ பிராந்தியமயமாக்கல் ……………………………………………………90
12.1.அறிமுகம் ……………………………………………………………………………………………90
12.2.சு.பா.உ செயன்முறை………………………………………………………………………………92
12.3.புதிய கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பரிந்துரைகள் வழங்கள் ………………………………93
12.4.சுற்றாடல் மாசு தொல்லைகள் மற்றும் சட்டவிரோத இயற்கை வளங்கள் பாவனை பற்றிய பொது மக்களின் புகார்களை தீர்த்துவைத்தல் ……………………………………94
12.5. ச.த.நி.தா 14000 நியமங்களின் கீழ் கைத்தொழில் சான்றிதழளிப்பு டபிள்யு.பீ.ஓ பங்களிப்பு………………………………………………………………………………………………96
12.6.சுற்றாடல் முகாமைத்துவம் ………………………………………………………………………96
அத்தியாயம் 13: ம.சு.அ நிறைவேற்றும் விசேட கருத்திட்டங்கள் …………………………………99
13.1.”பிலிசறு” தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் ……………………………………99
13.2.பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் ……………………………………………………127
13.3.இலங்கையில் ம.சு.அ ஆய்வுகூடங்கள் மேம்பாடு மற்றும் கண்காணிப்பு திறன் விருத்தி…………..136

13.4.இலங்கையில் திண்மக் கழிவு அகற்றல் வசதிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் (ஈ.டி.சீ.எப. கருத்திட்டம்). ........................................................................................................139
13.5.இலங்கையில் பாரிய நீர் நிலைகளின் நீர் தரம் கண்காணிப்பு மற்றும் ம.சு.அ ஆய்வுகூடங்கள் மற்றும் அமுலாக்கல் உத்தியோகத்தர்கள் ஆகியவற்றின் ஆற்றலை கட்டியெழுப்பும் கருத்திட்டம் (ஜெய்கா) ........................................................................................................150
13.6.கிரீன் பார்க்(பசுமை பூங்கா) கழிவு முகாமைத்துவ நிலையம்-ம.சு.அ...........................................154
அத்தியாயம்.14: கூட்டாண்மை ஆட்சி அறிக்கை.......................................................................157
அத்தியாயம்.15: மனித வளங்கள் அபிவிருத்தி,நிர்வாகம் மற்றும் நிதி அலகு.....................................161
15.1. மனித வளங்கள் அபிவிருத்தி அலகு..........................................................................161
15.2.மனித வளங்கள் முகாமைத்துவ அலகு.......................................................................163
15.3.நிதி அலகு..........................................................................................................167
அத்தியாயம்.16: நிதிசார் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை........168

# அட்டவணைப் பட்டியல்

அட்டவணை 1.1: அட்டவணை 1.1: சுற்றாடல் பேரவையின் உறுப்பினர்கள்……….3
அட்டவணை 1.2: சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள……..4
அட்டவணை 1.3: தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்…4
அட்டவணை 1.4: 2016ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் இடம்பெற்றது.அவற்றின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன ……………………5
அட்டவணை 3.1 EPL விபரங்கள்……. 12
அட்டவணை 3.2:சு.மா.க பிரிவால் வழங்கப்பட்ட இணக்கப்பாடு………12
அட்டவணை 3.3 : பிரிவால் கையாளப்பட்ட புகார்கள்…………….13
அட்டவணை 3.4: கண்காணிக்கப்பட்ட கைத்தொழில்கள் ……………………13
அட்டவணை 3.5: முன்னேற்றச் சுருக்கம்: 2016- சு.மா.க பிரிவு …………..16
அட்டவணை 3.6 : தொழில்நுட்ப ஆலோசனை/ உதவிப் செயற்பாடு ………………….20
அட்டவணை 3.7 : அளவீடுகள் ஊடாக வழங்கிய சேவைகள் ………………21
அட்டவணை 3.8 : எல்லை-கடந்த வளி மாசு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டம ……………21
அட்டவணை 3.9 : 2016 ஆம் ஆண்டில் கைத்தொழில் கழிவுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகள …..23
அட்டவணை 4.1: அறிக்கையிடப்பட்ட காலத்தில் ம.சு.அ சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு (சு.தா.ம) பிரிவால் ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு (சு.தா.ம) /ஆ.சு.ம ஒழுங்குவிதிகளுக்கு அமைய ஒப்புதல் அளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் ………33
அட்டவணை 4.2 : சு.தா.ம/ஆ.சு.ம ஒழுங்குவிதிகளுக்கு அமைய அறிக்கையிடப்பட்ட காலத்தில் மறுக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் …………34
அட்டவணை 4.3 : ம.சு.அ யின் இணக்கப்பாட்டுடன் ஏனைய PAAs அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்லெ …………….34
அட்டவணை 4.4 : சு.தா.ம ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக சு.தா.ம பிரிவால் செயல்முறைக்கு உள்ளாக்கப்படும் கருத்திட்டங்களின் பட்டியல் ………………..35
அட்டவணை 4.5 : இக்காலத்தில கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் ……………38
அட்டவணை 4.6 : இலங்கையில 2016ஆம் ஆண்டில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள் …………..56
அட்டவணை 6.1: இயற்கை கள நிலையங்கள் ………………64
அட்டவணை 6.2: செய்தி வெளியீடுகள் மற்றும் இணைய பதிவேற்றங்கள் ………………… 66
அட்டவணை 6.3: பாடசாலை நூலகங்கள் தாபித்தல் ………………….. 67
அட்டவணை 8.1 பொதுமக்கள் புகார்களை கையாள்வது தொடர்பில் பிரிவுகள்,மாகாண அலுவலகங்கள்,மறறும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இடையிலான பொறுப்பு பங்கீடு பற்றிய சுருக்கம்-2016 ……………….. 73
அட்டவணை 12.1: பிராந்திய மட்டத்தில் EPL செயல்முறையை நடைமுறைபடுத்தல் …………………..86
அட்டவணை 12.2புதிய கைத்தொழில்களை தாபிப்பது தொடர்பில் பரிந்துரைகள்: …. 87
அட்டவணை 12.3: 2016ஆம்ஆண்டிள் கையாளப்பட்ட புகார்கள் ……. 89
அட்டவணை 12.4: EIA/IEE ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சு.தா.ம பிரிவால் 2015ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்…………………………………………………….……90
அட்டவணை 12.5: குறித்துரைக்கப்படாத நடவடிக்கைகளின் மீதான 2016ஆம் ஆண்டில் பரிந்துரைக்கப்பட்ட உருக்கள் ………… 91
அட்டவணை 13.1: கூட்டுப்பசளை அமைவிடங்களின் கண்காணிப்ப வரைபடங்கள் - 2016 …….95
அட்டவணை 13.2 : மாவட்ட நெறிமுறையாக்கம் அமர்வுகள் முன்னேற்ற மீயாள்வு அமர்வகள் பற்றிய விபரங்கள் ……. 100
அட்டவணை 13.3: 2016 ஆம் ஆண்டில் நிதியளிக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ வசதிகள் .102
அட்டவணை 13.4: உள்ளூர் அதிகாரசபைகளின் பயனுறுதியான கழிவு முகாமைத்துவ வசதிகளுக்கு உபகரணங்கள் மற்றும் வசதிகளை வழங்குதல் ………………………………………………………… 105
அட்டவணை 13.5: நடமாடும் கழிவு சேகரிப்பு நிலையங்களின் முன்னேற்றம(சம்பத் பியஸ்) …………106
அட்டவணை 13.6: கலப்பு பசளை கருத்திட்டங்களின் முன்னேற்றம் …………..107

அட்டவணை 13.7: 2016ஆம் ஆண்டில் பகிர்ந்தளிக்கப்பட்ட கழிவு சேகரிப்பு தொட்டிகள் / பிலாஸ்டிக் கழிவு சேகரிப்பு தொட்டிகள் மற்றும் கலப்பு பசளை தொட்டிகளின் விபரங்கள் 108
அட்டவணை 13.8: மொன்ரோவியாவத்தை தற்காலிக கழிவு அகற்றும் அமைவிடம் ….109
அட்டவணை 13.9: உள்ளூர் அதிகாரசபை பணியாட்டொகுதி மற்றும் ஏனையோருக்கான கழிவு முகாமைத்தவ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ….110
அட்டவணை 13.10: 2016 ஆம் அண்டில் காணப்பட்ட ஆளனிப் பதவிகளின் விபரங்கள் …. 111
அட்டவணை 13.11: திறைசேரி நிதி பற்றிய பகுதிவாரியான நிதிசார் முன்னேற்ற பகுப்பாய்வு ….113
அட்டவணை 13.12: புனருத்தைய தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் பகுதிவாரியான நிதிசார் முன்னேற்ற பகுப்பாய்வு …. 114
அட்டவணை 13.13: இலங்கையிலுள்ள பாடசாலைகளின் மொத்தம்- 10042 (சிங்களம் மற்றும் தமிழ் மொழிமூலம்) … 116
அட்டவணை 13.14: EPP சாதனங்கள் உற்பத்தியின் முன்னேற்றம் …116
அட்டவணை 13.15: தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் … 118
அட்டவணை 13.16: ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் ..118
அட்டவணை 13.17: அதிபர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் .. 119
அட்டவணை 13.18: விழிப்புணர நிகழ்ச்சித்திட்டம் …120
அட்டவணை 13.19: சூழல்-கிளப் சாதனங்கள் உற்பத்தி முன்னேற்றம் -2016 கீழே கொடுக்கப்பட்டுள்ளது .. 120
அட்டவணை 13.20: கருத்திட்ட பணியாற்கள் தொகுதி (EDCF) ..130
அட்டவணை 13.21: நிதி முன்னேற்ற அறிக்கைகளின் சுருக்கம் - 2016 .. 131
அட்டவணை 14.1: பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ..143
அட்டவணை 14.2: 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பு, பதவி உயர்வு, இராஜிநாமா, பதவி இடைநிறுத்தம் மற்றும் இளைப்பாறல் ……………………………………………………………………..145
அட்டவணை 14.3: “பிலிசரு” தேசிய திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்…………………….146
அட்டவணை 14.4: திண்மக்கழிவு அகற்றல் வசதி கருத்திட்டம் நிர்மாணித்தல்……………………………147

# உருக்களின் பட்டியல்

உரு. 3-1 : ம.சு.அ ஆய்வுகூடங்களின் அனைத்தினதும் முன்னேற்றம்- 2016………………………………….…24
உரு 3-2 : பல்வேறு சாராமாறிகள் சார்பில் மாகாண ஆய்வுகூடங்களினால் சேகரிக்கப்பட்டமாதிரிகள்-2016…24
உரு 3-3 : 2016 ஆம் அண்டில் வர்த்தக பரிசோதனைகள் மூலம் ம.சு.அ ஆய்வுகூடங்கள் அனைத்தும் ஈட்டிய வருமானம்……………………………………………………………………………………….25
உரு 3-4 : பொலிதீன் மற்றும் இ-கழிவு இல்லாதொழித்தல் தேசிய வாரத்தின் போது இடம்பொற்ற கழிவு கைவிடல் நிகழ்வுகள் ……………………..…………………………………………………………………30
உரு 3-5 : இ-கழிவு சேகரிப்பாளர்கள் துறைக்கு முறைசாரா விழ்ப்புணர்வு பயிற்சிப்பட்டறை ……………….30
உரு 4-1: இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய துண்டுப்பிரசுரம்……………………………………..42
உரு 4-2 : சித்திரப் போட்டி………………………………………………………………………………….…..48
உரு 4-3 : சமூக கட்டமைப்பு பாதிப்பு சாத்தியம் பற்றிய படங்கள்…………………………………….……49
உரு 4-4 : களனி ஆற்று வடிநிலங்கள் அமைவிடம்…………………………………………………………50
உரு 4-5 : கண்டி மாவட்டத்திலுள்ள சீரழிந்த காணிகள் ……………………………………………..……53
உரு 4-6 : நுவரெலியா மாவட்டத்திலுள்ள சீரழிந்த காணிகள்……………………………………….…53
உரு 4-7 : சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய பத்திரிகை……………………………..……54
உரு 4-8 : 2016 ஆம் ஆண்டில் இறுதியில் உள்ளவாறு நாட்டில் உள்ள மாசுபடுத்தம் கைத்தொழில்களின் பரம்பல்…………………………………………………………………………..……55
உரு 4-9 : சுற்றாடல் வள பக்கவுருக்கள் பற்றிய முகப்பு-பக்கங்கள்……………………………………..……57
உரு 6-1 : நில்வானபெத மற்றும் சோபாகெத……………………………………………………….…..….67
உரு 6-2: பாடசாலை நூலகங்கள் தாபித்தல்……………………………………………………….……..…..68
உரு 8-1: பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு இமையில் புகார்களை பங்கீடுசெய்தல் 2016………………………………………………………………………………………74
உரு 8-2: ம.சு.அ பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் அகியவற்றால் பெறப்பட்டதும் தீர்த்து வைக்கப்பட்டதுமான பகார்கள் ……………………………………………………………………………..77
உரு 13-1: மாதிரி நடமாடும் வளநிலையம்……………………………..……………………………………106
உரு 13-2: மொநோரியாவத்த தற்காலிக கழிவு அகற்றல் அமைவிடம் ………………………..…………….109
உரு 13-3: சனாதிபதி விருது வழங்கும் விழா……………………………………………..………………..121
உரு 13-4: கள விஜயம் – மெதிரிகிரிய……………………………………………………………………….128
உரு 13-5: பங்குதாரர் கூட்டம்– மெதிரிகிரிய…………………………………………….…………………..128
உரு 13-6: பங்குதாரர் கூட்டங்கள கீரிமலை, யாழ்ப்பாணம்…………………………………………………..129
உரு 13-7: ருகுனு பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆராய்ச்சி………………………………139
உரு 13-8: சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடம் ………………………………………………………139

# சுருக்க குறியீடுகளின் பட்டியல்

| | | |
|---|---|---|
| BOD | - | உயிரியல் ஒட்சிசன் கேள்வி |
| BOI | - | முதலீட்டுச்சபை(மு.ச) |
| CEA | - | மத்திய சுற்றாடல் அதிகார சபை(ம.சு.அ) |
| COD | - | இரசாயன ஒட்சிசன் கேள்வி(இ.ஓ.கே) |
| CETRAC | - | நிர்மாணம் மற்றும் உபகரணப் பயிற்சி நிலையம்(நி.உ.ப.நி) |
| DDG | - | பிரதி பணிப்பாளர் நாயகம்(பி.ப.நா) |
| DEO | - | பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்(பி.சு.உ) |
| DO | - | மாவட்ட அலுவலகம்(மா.அ) |
| E & NR | - | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்(சு.இ.வ) |
| EE & A | - | சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு(சு.க.வி) |
| EIA | - | சுற்றாடல் தாக்க மதிப்பீடு(சு.தா.ம) |
| EM & A | - | சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு(சு.மு.ம) |
| EMS | - | சுற்றாடல் முகாமைத்துவ முறைமை(சு.மு.மு) |
| EPC | - | சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு (சு.மா.க) |
| EPL | - | சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சு.பா.உ) |
| GSMB | - | புவிச்சரதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் (பு.ச.ஆ.சு.ப) |
| HRD | - | மனிதவள அபிவிருத்தி (ம.வ.அ) |
| HWM | - | தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவம்(தீ.க.மு) |
| IEE | - | ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு(ஆ.சு.ம) |
| IEMP | - | ஒருங்கிணைந்த சுற்றாடல் முகாமைத்துவ கருத்திட்டம் (ஒ.சு.மு.க) |
| ITI | - | கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகம் (கை.தொ.நி) |
| JBIC | - | சர்வதேச ஒத்துழைப்பு ஜப்பான் குழு (ச.ஒ.ஜ.கு) |
| JICA | - | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை (ஜ.ச.ஒ.மு) |
| KPS | - | குருவிட்ட பிரதேச சபை (கு.பி.ச) |
| NBRO | - | தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவகம் (தே.க.ஆ.நி) |
| LLF | - | சுமை அடிப்படையிலான உரிமம் கட்டணம் (சு.அ.உ.க) |
| NEA | - | தேசிய சுற்றாடல் சட்டம் (தே.சு.ச) |
| NEIC | - | தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் (தே.சு.த.நி) |
| NERD | - | தேசிய பொறியியளாலர் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் (தே.பொ.ஆ.அ.நி) |
| OP & M | - | இயக்க திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு(இ.தி.க) |
| PO | - | மாகாண அலுவலகம் |
| PVC | - | பாலிவினைனல் குளோரைட்டு (பா.கு) |
| SEO | - | சிரேட்ட சுற்றாடல் உத்தியோகத்தர் (சி.சு.உ) |
| SLTB | - | இலங்கை போக்குவரத்து சபை (இ.போ.ச) |
| SRO | - | பிராந்திய அலுவலகம் கண்டி |
| TPS | - | தம்மன்கடுவ பிரதேச சபை (த.பி.ச) |
| WDF | - | கழிவு நீர் அகற்றும் கட்டணம் (க.நீ.அ.க) |
| WEA | - | வயம்ப சுற்றாடல் அதிகாரசபை (வ.சு.அ) |
| WWMA | - | மேல்மாகாண கழிவு மகாமைத்துவம் (மே.மா.க.மு) |
| WPO | - | மேல்மாகாண அலுவலகம் (மே.மா.அ) |
| CPO | - | மத்திய மாகாண அலுவலகம் (ம.மா.அ) |
| SaPO | - | சப்பிரகமுவ மாகாண அலுவலகம் (ச.மா.அ) |
| SuPO | - | தென் மாகாண அலுவலகம் (தெ.மா.அ) |
| NCPO | - | வட மத்திய மாகாண அலுவலகம் (வ.ம..மா.அ) |
| UPO | - | ஊவா மாகாண அலுவலகம்(ஊ.மா.அ) |
| NPO | - | வட மாகாண அலுவலகம் (வ.மா.அ) |
| JAICA | - | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு கைத்தொழில் (ஜ.ச.ஒ.கை) |
| IQMU | - | வளித் தரம் கண்காணிப்பு பிரிவு (வ.த.க.பி) |
| PM | - | குறிப்பிட்ட விடயம் (கு.வி) |
| KECO | - | கொரியன் சர்வதேச ஒத்துழைப்பு (கொ.ச.ஒ) |
| NCC | - | தேசிய ஒருங்கிணைப்பு குழு (தே.ஒ.கு) |

| | | |
|---|---|---|
| TACMIC | - | கைத்தொழில் இரசாயனப் பொருட்களை முகாமைத்துவம் செய்யும் தொழில்நுட்ப ஆலோசனைக் குழு (கை.இ.பொ.மு.தொ.கு) |
| MEEE | - | இலத்திரனியல் மற்றும் மின் உபகரணங்கள் முகாமைத்துவம் (இ.மி. உ.மு) |
| BMICH | - | பண்டாரநாயக்க ஞாபக சர்வதேச மாநாட்டு மண்டபம் (ச.ஞா.ச.மா.ம) |
| CFL | - | கொம்பெக்ட் புளோரசண்ட் விளக்கு (கொ.பு.வி) |
| PAA | - | கருத்திட்டம் அங்கீகரிப்பு முகவராண்மை (க.அ.மு) |
| NRM&M | - | இயற்கை வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவு (இ.வ.மு.க.பி) |
| EM&A | - | சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் விழிப்புணர்வு (சு.மு.வி) |
| NWP | - | தேசிய ஈரநிலக் கொள்கை(தே.ஈ.கொ) |
| NWSC | - | தேசிய ஈரநில வழிநடத்தல் குழு (தே.ஈ.வ.கு) |
| DWLC | - | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் (வ.சீ.தி) |
| UDA | - | நகர அபிவிருத்தி அதிகாரசபை (ந.அ.அ) |
| ICASL | - | இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (இ.ப.க.நி) |
| SLLRDC | - | இலங்கை காணிமீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம்(இ.கா.அ.கூ) |
| GN | - | கிராம சேவையாளர்(கி.சே) |
| DS | - | பிரதேச செயளாலர்(பி.செ) |
| CCD | - | கரையோர பாதுகாப்பு திணைக்களம்(க.பா.தி) |
| MC | - | மாநகர சபை(மா.ச) |
| EE&A | - | சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு (சு.க.வி.பி) |
| EPP | - | சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்(சு.மு.நி.தி) |
| WED | - | உலக சுற்றாடல் தினம் (உ.சு.தி) |
| TRC | - | தொலைதொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு (தொ.ஒ.ஆ) |
| DELEC | - | மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழு(மா.சு.ச.அ.கு) |
| NWS&DB | - | தேசிய நீர் வழங்கள் வடிகால் அமைப்புச்சபை (தே.நீ.வ.அ.ச) |
| LGA | - | உள்ளூராட்ச்சி அதிகாரசபை(உ.அ) |
| MENR | - | சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சு(சு.இ.வ.அ) |
| MERE | - | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு(சு.பு.ச.அ) |
| PP | - | பிலிசறு கருத்திட்டம்(பி.க) |
| NSWMSC | - | தேசிய திண்மக் கழிவு முகாரமத்துவ ஆதவவு நிலையம் (தே.தி.க.மு.ஆ.நி) |
| KMC | - | குருணாகல் மாநகர சபை(கு.மா.ந.ச) |
| ICTAD | - | நிரிமாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் |
| EDCF | - | பொருளாதார அபிவிருத்தி கூட்டுறவு நிதியம்(பொ.அ.கூ.நி) |
| PPA | - | கருத்திட்ட தயாரிப்பு உதவியாளர்(க.தா.உ) |
| NPD | - | தேசிய திட்டமிடல் திணைக்களம் (தே.தி.தி) |
| ERD | - | வெளிவள திணைக்களம் (வெ.தி) |
| NSWMC | - | தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ கழிவு நிலையம்(தே.தி.க.மு.நி) |
| WPWMA | - | மேல்மாகாண கழிவு முகாமைத்துவ அதிகாரசபை (மே.மா.க.மு.ச) |
| CLG | - | உள்ளூராட்சி ஆணையாளர்(உ.ஆ) |
| BOQ | - | அளவுகள் பட்டியல்(அ.ப) |
| ISWM | - | ஒருங்கிணைந்த திண்மக்கழிவு முகாமைத்துவம்(ஒ.தி.மு) |

# அத்தியாயம். 1 : மத்திய சுற்றாடல் அதிகாரசபை

## 1.1.அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்ட மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது (ம.சு.அ) 2016 ஆம் ஆண்டில் முப்பத்து ஐந்து வருடங்களை பூர்த்திசெய்கின்றது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஆளுகையின் கீழ் இயங்கும் மத்திய சுற்றாடல் அதிகாரசபையபனது தேசிய சுற்றாடல் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பிரதான தாபனங்களில் ஒன்றாக செயற்படுகின்றது. ம.சு.அ யின் 2016 ஆம் ஆண்டிற்கு உரிய ஆண்டறிக்கையானது 09 மாகாண அலுவலகங்கள், 14 மாவட்ட அலுவலகங்கள் மற்றும் 2016 ஆம் ஆண்டில் மத்திய சுற்றாடல் அதிகார சபையால் நடைமுறைப்படுத்தப்பட்ட விஷேட கருத்திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய செயலாற்றுகையை உள்ளடக்குவதுடன் பொது நிதிகள் மற்றும் நன்கொடையாளர் நிதிகள்/மானியங்கள் ஆகியவற்றை பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பணிகள் பற்றிய முழு விபரங்களையும் வழங்கும் முகமாக ம.சு.அ யின் வெற்றிகள் தோல்விகள் ஆகியவை பற்றிய மதிப்பீடொன்றையும் உள்ளடக்குகின்றது.

## 1.2.குறிக்கோள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பரிந்துரையின் பிரகாரம், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டமானது 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் முறையே 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டம் மற்றும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் (திருத்தம்) சட்டம் ஆகியவறின் ஊடாக திருத்தப்பட்டுள்ளது.

1980 ஆம் ஆண்டின் தேசிய சுற்றாடல் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரங்களாவன (தத்துவங்கள்) பின்வருமாறு

- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை நடைமுறை படுத்துவதன் ஊடாக சுற்றாடலின் தரத்திற்கு ஆபத்தாகவும் அல்லது ஆபத்தை விளைவிக்கும் சாத்தியமுடைய கழிவு வகைகள், அவற்றில் அடங்கியுள்ள பகுதிகள், அவற்றின் தாக்கங்கள்,
- பரந்தளவில் வாடிக்கையாளர் தேவைகளுக்கு உகந்த சேவைகளை வழங்குவதன் மூலம் சுற்றாடலுடன் தொடர்புடைய தரவுகள் மற்றும் வெளிவீச்சு மற்றும் வீழ்படிவுகள் அல்லது ஏனைய மாசுபடுத்திகளின் மூலங்கள் ஆகியவற்றை சீராக்கி, பேணுவதுடன் கட்டுப்பாட்டையும் மேற்கொள்ளல்.
- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (சு.தா.ம) ஓர் கருவியாக பயன்படுத்தி முறையான சுற்றாடல் விளைவுகள் பற்றிய மதிப்பீட்டின் ஊடாக சுற்றுச்சூழலுக்கு உகந்த அபிவிருத்தி தலையீடுகளை உறுதி செய்வதன் மூலம் நாட்டிலுள்ள தேசிய வளங்களின் தளத்தை பாதுகாத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பில் விஷேடமாக பாடசாலை பிள்ளைகளின் பங்களிப்பை பெற்றுக்கொள்ளும் அதே வேளை பொது மக்களை ஊக்குவித்து அவர்களின் ஆதரவையும் பங்களிப்பையும் மேம்படுத்தி உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய சுற்றாடல்பிரச்சினைகள் தொடர்பில் மக்களின் விழிப்புணர்வை ஏற்படுத்தல்

தகவல்களை வழங்கும் தகவல் கேந்திர நிலையமாக செயற்படல்.

## 1.3. அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகள்

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகள் ஆகியவை தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது தற்சமயம் விசேடமாக கவனத்தை செலுத்தும் பிரதான பணிகள், அதிகாரங்கள் மற்றும் கடமைகளாவன பின்வருமாறு;

அ)தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளையும் அதன் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளையும் நிர்வகித்தல்.

ஆ)மாசடைதல் ஏற்படுவதற்கான காரணங்கள், இயல்புகள் மற்றும் அதன் அளவு பற்றிய ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை பொறுப்பேற்பதுடன் ஏனைய நபர்கள் அல்லது அமைப்புகளுக்கு அவ்வாறான ஆய்வுகள் மற்றும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு வழங்குதல்

இ)சுற்றாடல் தரவீழ்ச்சியுடன் தொடர்புடைய ஏதேனும் அம்சங்களுடன் சம்பந்தப்பட்ட ஆய்வை நடாத்துதல், மேம்படுத்தல் மற்றும் ஆய்வுகளுக்கு ஒத்துழைப்பு வழங்கல் அல்லது அவற்றின் (அவ்வம்சங்களின்) விளைவுகளை தடுத்தல் மற்றும் சுற்றாடலை பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அவசியமான கோட்பாடுகளை தயாரித்தல்.

ஈ)சுற்றாடலிள் உள்ள நன்மையளிக்கும் பயன்களை பாதுகாப்பதற்கான தரங்கள், கோட்பாடுகள் மற்றும் விதிமுறைகளை குறித்துரைத்தல்.

“குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகள்” எனக்குறிப்பிடடு வர்த்தமானி அறிவித்தல் விடவும் உரிமத்தின் அடிப்படையில் மற்றும் இச்சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்படக்கூடிய தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு

உ)சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய ஏதேனும் இயல்புடன் தொடர்புடைய அறிக்கைகள் மற்றும் தகவல்கள் பிரசுரித்தல்.

ஊ)சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மேம்பாடு தொடர்பில் பொதுமக்களுக்கு தகவல்கள் மற்றும் கல்வியை வழங்குதல்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு அதன் ஆரம்பத்திலிருந்தே 1988 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் திருத்தியமைக்கப்பட்ட தேசிய சுற்றாடல் சட்டத்திற்கிணங்க விரிவான ஒழுங்கமைப்பு அதிகாரங்கள் (தத்துவங்கள்) ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இத்திருத்தங்களுடன், மற்றவற்றிற்கு இடையில் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான அதிகாரங்களாவன பின்வருமாறு:

அ).அதிகாரசபையில் குறித்துரைக்கப்பட்ட தரங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு இணங்க ம.சு.அ வழங்கிய உரிமத்தின் கீழ் சுற்றாடல் மாசுபடுத்திகளை அகற்றுவதால் ஏற்படும் விளைவுகளுக்கு பரிகாரம் காணும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

ஆ).நடைமுறையாக்கத்தின் போது சுற்றாடலுக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய சில குறிப்பிட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் நிறைவேற்றுவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதீப்பீட்டிற்கு உட்படுத்தும் முகமாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

இ).சுற்றாடலுக்கு கழிவுகளை வெளியேற்றும், வீழ்படிவை தோற்றுவிக்கும் அல்லது இணங்கியவாறும் அல்லாத வகையில் எந்தவொரு குறித்துரைக்கப்பட்ட செயற்பாட்டையும் எந்தவொரு ஆளும் முன்னெடுக்கமாட்டார் என்பதை உறுதிசெய்வதற்கும் உள்ள அதிகாரங்கள். ஆகியனவாகும்.

1.4 அதிகார சபையின் உறுப்பினர்கள்

அதிமேதகு சனாதிபதி அவரகள் சுற்றாடல் அமைச்சருடன் கலந்தாலோசித்து நியமனம் செய்யும் மூன்று உறுப்பினர்களை இந்த அதிகாரசபை கொண்டுள்ளதுடன் அவர்களில் இரண்டு நபர்கள் சுற்றாடல் விடயத்தில் போதிய நிபுணத்துவத்தையும் தகுதிகளையும் கொண்டிருப்பர். ஏனைய உறுப்பினர்களில் ஒருவர் சுற்றாடல் முகாமைத்துவத்தில் போதிய நிருவாக திறன்களையும் அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும். மூன்று உறுப்பினர்களில் ஒருவர் அதிகாரசபையின் தலைவராக அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்படுகின்றார்.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தலைவராக பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி 2015.02.02 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டதுடன் திரு. அஜித் டி கொஸ்தா, கலாநிதி கே.ஹசித் அரவிந்த திசேரா மற்றும் திறைசேரி பிரதிநிதியான மிஸ். அனுசியாநாதன் ஆகியோர் முறையே 2015.02.09, 2015.01.30 மற்றும் 2015.03.04 ஆம் திகதிகளில் ம.சு.அ சபை உறுப்பினர்களாக அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சபையானது பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது;

பேராசிரியர் லால் மேர்வின் தர்மசிறி - தலைவர் ம.சு.அ

திரு.அஜத் டி கொஸ்தா - அதிகாரசபை உறுப்பினர

கலாநிதி கே.ஹசித் அரவிந்த திசேரா - அதிகாரசபை உறுப்பினர்

மிஸ்.ஆர்.அனுசியாநாதன்- திறைசேரி பிரதிநிதி

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகமான கே. எச். முத்துக்குட ஆராச்சி, தே.சு.அ வழங்கியுள்ள தத்துவங்களுக்கு இணங்க சபையின் செயலாளராக செயற்படுகின்றார். மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தில் சபையானது சுற்றாடல் முகாமைத்துவத்துடன் தொடர்புடைய சில முக்கிய பிரச்சினைகளுக்கு வழிக்காட்டல்களை வழங்கவும் அதனைத் தொடர்ந்து பணிப்புரை விடுக்கவுமென 11 கூட்டங்களை நடாத்தியுள்ளது.

## 1.5 சுற்றாடல் பேரவை

1.5.1 அறிமுகம்

1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் 7ஆம் பிரிவின் கீழ் திருத்தப்பட்டவாறு சுற்றாடல் பேரவையானது தாபிக்கப்பட்டது.

1.5.2 சுற்றாடல் பேரவையின் பிரதான வகிபாகம்

மேற்குறிப்பிட்ட சட்டத்தின் பிரகாரம் சுற்றாடல் பேரவையின் முக்கிய பணிகளாவன பின்வருமாறு.

(அ).அதிகாரசபையின் பொறுப்புக்கள், அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் தொடர்பில் பொதுவான ஆலோசனைகளை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கல்.

(ஆ).அதிகாரசபையால் பேரவைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட எதும் விடயம் தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கல்.

**சுற்றாடல் பேரவையின் கட்டமைப்பு**

1980ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க திருத்தத்தில் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் சுற்றாடல் பேரவையானது சுற்றாடல் அமைச்சினால் நியமிக்கப்பட்ட ஒரு தொகை உறுப்பினர்களை கொண்டுள்ளது.

2016 ஆம் ஆண்டில் 12 வது அமர்வானது பின்வருமாறு சுற்றாடல் பேரவையால் நடாத்தப்பட்டது.

### 1.5.4 12வது அமர்வு

கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி(2014) அமைச்சர் மற்றும் கௌரவ மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சர்(2015) ஆகியோரால் பின்வரும் உறுப்பினர்கள் சுற்றாடல் நியமிக்கப்பட்டனர்.

2016 ஒக்டோபரில் முடிவடைந்த 12 ஆம் அமர்வின் இறுதிவரை உறுப்புரிமையை பெற்றிருந்தவர்கள்

**அட்டவணை 1.1.சுற்றாடல் பேரவையின் உறுப்பியனர்கள்**

| | உறுப்பினரின பெயர் | பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சு |
|---|---|---|
| 1 | திரு.டபிள்யூ.பீ.எம்.ஜீ.ஆர். சான்த குமார முகந்திரம் | சிரேஸ்ட உதவிச் செயலாளர்(காணி)<br>காணி காணி அபிவிருத்தி அமைச்சு |
| 2 | திரு.என்.பீ.வீ.சீ.பியதிலக | மேலதிக.செயலாளர் (நிருவாகம் மற்றும் நிதி)<br>கமத்தொழில் அமைச்சு |
| 3 | திரு எம்.ஏ அல்ஹாம் | மேலதிக.செயலாளர் (நிருவாகம்)<br>கைத்தொழில் வாணிப அமைச்சு |
| 4 | மிஸ். சுபத்ரா வல்பொல | பணிப்பாளர் சமூக அபிவிருத்தி<br>கடற்றொழில நீரக வளமூல அபிவிருத்தி அமைச்சு |
| 5 | திரு. ஜே.ஜீ.எல். சுலக்சன ஜயவர்தன | பணிப்பாளர் (அபிவிருத்தி)<br>மின்சக்தி மீள்புத்தாக்க சக்தி அமைச்சு |
| | உறுப்பினரின பெயர் | பிரதிநிதித்துவம் செய்யும் அமைச்சு |
| 7 | கலாநிதி.சரத் அமுனுகம | பிரதிப் பணிப்பாளர் நாயகம்(பொது சுகாதார சேவை) |

| | | |
|---|---|---|
| | | சுகாதார அமைச்சு |
| 8 | திரு.மொண்டி ரணதுங்க | மேலதிக பணிப்பாளர் நாயகம்(கருத்திட்ட முகாமைத்துவம்)<br>இலங்கை மத்திய வங்கி |
| 9 | திரு. கே.எச்.முத்துகுட ஆராச்சி | பணிப்பாளர் நாயகம்<br>மத்திய சுற்றாடல் அதிகார சபை (செயலாளர்) |

அட்டவணை 1.2: சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய வல்லுநர்கள்

| | | |
|---|---|---|
| 1 | பேராசிரியர் டபிள்யூ.எம்.டி.பீ வண்ணிநாயக்க | முன்னாள் பல்கலைக்கழக பேராசிரியர்<br>சிரேஸ்ட மறைன் உயிரியலாளர் |
| 2 | கலாநிதி(மிஸ்)நிர்மலி பெலவத்த | தலைவர், தாவரவியல் திணைக்களம்,<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| 3 | கலாநிதி(மிஸ்) சுதீரா ரண்வல | சிரேஸ்ட விரிவுரையாளர், தாவர விஞ்ஞானம் திணைக்களம்<br>கொழும்பு பல்கலைக்கழகம் |
| 4 | திரு.ஜகத் குணவர்தன | சட்டத்தரனி/சூழலியலாளர்<br>**தலைவரா/சுற்றாடல் பேரவை** |

அட்டவணை 1.3: தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள்

| | | |
|---|---|---|
| 1 | திரு.நிவ்டன் குணரத்ன | முன்னாள் தலைவர்,சுயாதீன தொலைகாட்சி |
| 2 | திரு. சேயமன் விதானகே | நிகழ்ச்சி திட்ட ஒருங்கிணைப்பாளர்<br>ஐ.யு.சீ.என. - இலங்கை அலுவலகம் |
| 3 | திரு.டக்லஸ் திசேரா | பணிப்பாளர், காடோலனா நிகழ்ச்சி திட்டம்<br>சிறிய கடற்றொழில் சம்மேளனம் |
| 4 | திரு. திலக் காரியவசம் | தலைவர்,சுற்றாடல் பாதுகாப்பு நிதியம் |

## 15.5 இடம்பெற்ற கூட்டங்கள்

அட்டவணை 1.4. 2016ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் இடம்பெற்றன. அவற்றின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கூட்ட இலக்கம் | மாதம் | திகதி |
|---|---|---|
| 23காம் **கூட்டம்** | சனவரி | 21 |
| 24காம் **கூட்டம்** | பெப்ரவரி | 18 |
| 25 காம் **கூட்டம்** | மார்ச | 17 |
| 26காம் **கூட்டம்** | ஏப்பிரல | 22 |
| 27காம் **கூட்டம்** | மே | 19 |
| 28காம் **கூட்டம்** | யூன் | 23 |
| 29காம் **கூட்டம்** | யூலை | 21 |
| 30காம் **கூட்டம்** | ஆகஸ்ட் | 18 |
| 31காம் **கூட்டம்** | செப்டெம்பர் | 22 |
| 32காம் **கூட்டம்** | ஒக்டோபர் | 28 |

### 1.5.6. கூட்டங்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள்

- தலவிலவில் காணப்படும் “கிரல்ல மரத்திற்கு’’ பாதுகாப்பு அளித்தல்
- சட்டவிரோத சிறிய நீர் மின்னுற்பத்தி கருதிட்டத்தால் சிங்கராஜ வனத்திற்கு ஏற்படும் அழிவு
- காட்டில் ஆசிரமங்கள் அமைந்துள்ள இடங்களுக்கு பாதுகாப்பளித்தல்
- பல்வேறு அரசாங்க அமைப்புகள் மத்தியில் பிரச்சினைகள் மற்றும் முரண்பாடுகள் காணப்படும் வேளையில் பிரதான அரசாங்க நிறுவனமாக செயற்படல்
- சிறிய அளவிலான நீர் மின்சக்தி உற்பத்தி கருத்திட்டங்கள்
- மொறகல நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்
- கொஸ்குலான நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்
- மொறகொல்ல சிறு நீர்மின் உற்பத்தி கருத்திட்டத்தில் இருந்து கீரீன் லேப்கை இடமாற்றம் செய்வது தொடர்பான கலந்துரையாடல் இலங்கை மின்சார சபையால்
- நேசரப் கைத்தொழில் சாலையால் ஏற்படும் சுற்றாடல் சேதங்கள்
- யாழ்ப்பாணம் கடலேரிக்கு கழிவுகள் அகற்றப்படல் விடயம்
- துறை மக நகர அபிவிருத்தி கருத்திட்டம்
- ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே சரணாலய பிரதேசத்திற்கு உரித்தான ஈரநிலப்பகுதியில் விளையாட்டு மைதானம் அமைப்பதற்காக பத்தேகம பகுதியில் சட்டவிரோதமாக

மண்நிரப்பல்

- வலாவத்தை வதுரனவை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசமாக பாதுகாத்தல்
- முன்தலம மக்குதுடுவ பகுயில் மணல் அகழ்வு
- மன்னாரில் வளி மின் உற்பத்தி
- சாலபாவுரு கலலேரிப்பகுதியில் ஹோட்டல் கருத்திட்டத்தை நிர்மாணித்தல்
- ரூபவாஹினி நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒளிபரப்புதல்
- புத்தலத்தில் அமைந்துள்ள லிலியா வனத்தில் ஏற்பட்டவரும் சட்டவிரோதமாக சீரழிவு
- உத்தேச ருவன்புர அதிவேகப் பாதையில் அதைந்தள்ள வனத்திற்கு ஏற்படக்கூடிய அழிவு
- பொல்கொடை சார்ந்த சுற்றாடல் பிரச்சினைகள்
- எத்வெல்தொட சிறிய நீர்மின் உற்பத்தி கருத்திட்டம்
- வடமேல் சுற்றாடல் நியதிச்சிட்டத்துடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பற்றிய கலந்துரையாடல்

# அத்தியாயம் 2 :மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கடமைகளும் பொறுப்புகளும்

ம.சு.அ அதன் குறிக்கோள்களை அடைவதற்கு; மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அதன் நிறுவன கட்டமைப்பை நான்கு தொழில்நுட்ப பிரிவுகளுக்கு மையப்படுத்தி ஒழுங்கமைத்த விதம் கீழே பட்டியலிடப்பட்டுள்ளது.

- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு (சு.மா.க)
- சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீடு (சு.மு.ம)
- சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு
- மனிதவள அபிவிருத்தி, நிருவாகம் மற்றும் நிதி (மனிதவள மேம்பாடு, நிர்வாகம் மற்றும் நிதி)

இப்பிரிவுகளாவன சுற்றாடல் முகாமைத்துவ விடயத்தில் கனிசமான வருடங்கள் அனுபவத்தை கொண்டுள்ள கல்வித் தகுதியுடைய மற்றும் தொழிற்சார் ஆற்றல் வாய்ந்த பணியாட்களால் தலைமை வகிக்கப்படுகின்றன.

### சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுவதுடன் ஒவ்வொரு பிரிவுடன் தொடர்புடையவை பின்வருமாறு:

### சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு

- முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு இசைவான செயற்பாட்டை நடைமுறைபடுத்தல். (புதிய தளம் பற்றிய பரிந்துரைகள் மற்றும் சு.மா. உரிமங்களுக்காக)
- கருத்திட்ட அங்கீகரிப்பு செயற்பாட்டில் பங்கேற்றல்
- சுற்றாடல் மாசடைதல்/தொல்லை பற்றிய பொதுமக்கள் புகார்களை தீர்த்துவைத்தல்
- சுற்றாடல் மாசை கட்டப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வசதியளித்தல்
- நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு முன்னால் நிபுணத்துவ சாட்சிகளாக ஆஜராதல் மற்றும் பாராளுமன்ற குழுக்கள், நீதிமன்றங்கள் மற்றும் மனித உரிமை ஆணைக்குழு ஆகியவற்றிற்கு தொழில்நுட்ப அறிக்கைகள் வழங்கல்.
- பயனுறுதிமிக்க மாசுக் கட்டுப்பாட்டு செயற்பாட்டிற்கான புதிய மூலோபாயம்/கருவிகள் ஆகியவற்றை அறிமுகம் செய்தல்.

### கழிவு முகாமைதத்வ பிரிவு

- தீங்கு விளைவிக்கும் கழிவு முகாமைத்துவம் பறிறிய சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் ஆகியவற்றை அறிமுகம் செய்தலும் நடைமுறைபடுத்தலும்.
- திண்மக் கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதற்கான தொழில்நுட்ப உதவியை வழங்கல்.
- கழிவு முகாமைத்துவம் (க.மு) பற்றிய முன்னோடி கருத்திட்டங்களை திட்டமிட்டு நடைமுறைப்படுத்தல்.
- இணக்கப்பாடு பற்றிய வழமையான கண்காணிப்பில் ஈடுபடுதல்.
- கழிவு முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்தல்.
- பன்நாட்டு சுற்றாடல் உடன்படிக்கைகள் மற்றும் அவற்றின் கடப்பாடுகள் ஆகியவற்றை நடைமுறைபடுத்தல் (பேசல் உடன்படிக்கை மற்றும் ரொட்டர்டாம் உடன்படிக்கை).
- கைத்தொழில் நெருக்கடி முகாமைத்துவம்
- கைத்தொழில சார்ந்த இரசாயனப் பொருள் முகாமைத்துவம்.
- கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள்/ செயற்பாடுகளுக்கு சுற்றாடல் அங்கீகாரத்தை வழங்குவதல் தொடர்பில் உதவியளித்தல்.

- சட்ட நடவடிக்கை தொடர்வதற்கு தொழில்நுட்ப உதவியளித்தல்
- திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான முன்னோடி கருத்திட்டங்கள்
- பொதுமக்கள் புகார்களை கையாளல்.
- கழிவு முகாமைத்துவம் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு திட்டங்களை நடாத்துவதற்கு உதவியளித்தல்.

**வளித் தரம் மற்றும் ஆய்வுகூட சேவைகள் அலகு**

- ஏனைய பிரிவுகள்/ ம.சு.அ மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு பகுப்பாய்வு சேவைகள் வழங்கல்.
- சுற்றாடல் தரங்கள் பற்றிய இணக்கப்பாட்டை கண்காணித்தல்
- தெரிவு செய்யப்பட்ட பகுதிகளில் சுற்றுசூழல்நீர் மற்றும் வளி மீதான கண்காணிப்பை மேற்கொள்ளல்
- வளி, இரைச்சல், அதிர்வு மற்றும் நீரின் தரம் ஆகியவை தொடர்பில் சுற்றாடல் துறை ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகள் ஆகியவற்றை மேற்கொள்ளல்.
- வளித் தரம், நீர்த் தரம் மற்றும் இரைச்சல் பற்றிய ஒழுங்குவிதிகளை விருத்திசெய்தல்.

**சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீட்டு அலகு**

சுற்றாடல் முகாமைத்துவ மதிப்பீட்டு பிரிவின் கீழ் மூன்று பிரிவுகள் காணப்படுகின்றன.

**சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அலகு (சு.தா.ம)**

- ஆரம்பக்கட்ட சுற்றாடல் பரிசீலனை செயல்முறையை (ஆ.சு.ப.செ) நடைமுறைப்படுத்தல்
- சு.தா.ம செயற்பாட்டை நடைமுறைப்படுத்தல் மற்றும் இணக்கப்பாட்டை உறுதி செய்தல்
- கழிவு முகாமைத்துவத்துடன்தொடர்புடைய கருத்திட்டங்களை மேற்பார்வை செய்தல்.
- இணக்கப்பாட்டு கண்காணிப்பு
- ஏனைய நிறுவனங்களுக்கு கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய செயற்பாடுகள் பற்றிய தொழில்நுட்ப உள்ளீடுகளை வழங்கல்.

- சு.தா.ம /ஆ.சு.ப செயற்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறையாக்கல்.
- சு.தா.ம மற்றும் ஆ.சு.ம செயற்பாடுகள் பற்றிய வழிக்காட்டிகளை உருவாக்கல்.
- SEA செயற்பாட்டை அறிமுகம் செய்து நடைமுறையாக்கல்.

**இயற்கை வள முகாமைத்துவ அலகு**

- சு.தா.ம /ஆ.சு.ப. சாரா கருத்திட்டங்களுக்கு சுற்றாடல் அனுமதி வழங்கல்.
- இணக்கப்பாட்டு கண்காணிப்பை மேற்கொள்ளல்.
- இயற்கை வளங்களின் தரவீழ்ச்சி பற்றிய பொதுமக்கள் புகார்களை விசாரணை செய்தல்.
- இயற்கை வளங்கள் பாதுகாத்தல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடைமுறையாக்கல்.
- சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகளை பிரகடனப்படுத்தல்.
- கொள்கை அமுலாக்கம் தொடர்பான வழிகாட்டிகளை வழங்குதல்.

**ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு**

- புவியியல் தகவல் முறைமை தள தகவல் தயாரிப்பு
- சுற்றாடல் உணர்வுள்ள பிரதேசங்களில் கருத்திட்டம் முகாமைத்துவத்தை நடைமுறையாக்கல்

- மாவட்ட பக்கவுருக்கள் மற்றும் படங்கள் தயாரித்தல்
- சுற்றாடல் ஆராய்ச்சி ஒருங்கிணைவு மற்றும் முடிவுகளை பரப்புதல்

**சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு அலகு.**

- இலக்குக் குழுக்கள் மத்தியில் சுற்றாடல் கல்வி மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் ஊடாக மக்களுக்கு சுற்றாடல் தகவல்களை வழங்குதல் மற்றும் குழுத் தொடர்பாடல் ஆகியவற்றின் ஊடாக நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல்
- தேசிய மற்றும் பிரதேச மட்டங்களில் பயிற்ச்சிப் பட்டறை மற்றும் கண்காட்சிகள் ஆகியவற்றை நடாத்துதல்.
- பொது அரசு-சாரா நிறுவனங்களுக்கு ஆதரவு வழங்களும் அவற்றில் இருந்து ஆதரவை பெற்றுக் கொள்வதும்
- சுற்றாடல் தினத்தை நினைவுகூறல்.
- இயற்கை தள நிலையங்களை தாபித்து நடைமுறைப்படுத்தல்.

**தேசிய சுற்றாடல் தகவல் நிலையம்**

- சுற்றாடல் தகவல்களை சேகரிப்பதும் அபிவிருத்தி செய்வதும்.
- நூலக வலையமைப்பையும் ஏனைய நூலகங்களையும் ஒருங்கிணைத்தல்.
- அனைத்து தரப்பிரிவுகளையும் சார்ந்த தகவல் பயனாளிகளுக்கு நூலக ஆவணங்கள் மற்றும் தகவல் சேவையை வழங்கல்

**ஒளி ஒலிப் அலகு**

- ஒலி ஒளி உபகரண வசதிகளை நிகழ்ச்சி நிரல்களுக்கு வழங்கல்.
- ம.சு.அ மற்றும் சு.இ.வ.அ ஆகியவற்றின் விசேட விழாக்களுக்கு ஒளிபரப்பு வசதியை வழங்குதல்.
- கல்வி மற்றும் விழிப்புணர்வு நோக்கங்களுக்காக வீடியோ வசதியை வழங்குதல்.
- வீடியோ கிராபிக்ஸ் காட்சியமைப்பு வசதிகளை வழங்குதல்

**ம.வ.அ நிரிவாகம் மற்றும் நிதிப் அலகு**

மனிதவள அபிவிருத்தி, நிர்வாகம் மற்றும் நிதிப்பிரவு ஆகியன மனித வளங்கள் பிரிவு, நிரிவாகம் மற்றும் நிதிப்பரிவின் கீழ் செயற்படுகின்றன.

**மனித வளம் அபிவிருத்தி அலகு**

- ஒட்டுமொத்த மனிதவள திட்டமிடல்
- தேர்வு, ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு.
- தூண்டல் பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்
- தனிநபர் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமை
- தெரிவு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு (உள்ளூர் மற்றும் சர்வதேசம்) பயிற்ச்சித் தேவைகளை இனங்கண்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.
- ஊழியர்கள் குறைகளை கையாளல்
- ஒழுக்காற்று செயற்பாடுகள்
- மனித வளம் பற்றிய தரவுத்தளம்.

**நிருவாக அலகு**

- கொள்முதல், சுவீகரிப்பு மற்றும் மூலதனம்.
- சொத்துக்களின் பேணுகை
- சேவை உடன்படிக்கைகளை வழங்குவதும் புதுப்பித்தலும்
- காப்புறுதி வசதிகள் மற்றும் ஏற்பாட்டு ஆகியவற்றுக்கு ஆதரவு வழங்கல்
- கைத்தொழில் சுகாதாரம், பாதுகாப்பு மற்றும் நலவோன்புகை
- பொது நிருவாகம்.

**நிதி அலகு**

- வருடாந்த வரவு செலவுத்திட்டம் தயாரித்தலும் நிதிக்கணக்குகள் சமர்ப்பித்தலும்.
- இருதியான முன்னேற்ற அறிக்கைகள் மற்றும் மாதாந்த வரவு செலவுத்திட்ட கட்டுப்பாட்டு அறிக்கைகள் தயாரித்தல்.
- சம்பளம் மற்றும் சம்பளத்துடன் தொடர்புடைய அறிக்கை மற்றும் கொடுப்பனவு தயாரித்தல்.
- கருத்திட்ட கணக்குகள் பேணுகை.
- பயனுறுதியான கொடுப்பணவுகள்.

### சட்டப்பிரிவு

- தற்போதைய சட்டத்திற்கு (தேசிய சுற்றாடல் சட்டம்) திருத்தங்கள் தயாரித்தல் மற்றும் புதிய சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகள் வரைவுசெய்தல்.
- தே.சு.ச ஏற்பாடுகளை செயற்படுத்தலும் ஒழுங்குவிதிகளை வர்த்தமானியில் பிரசுரித்தலும்.
- தே.சு.ச பிரிவுகள் 12 மற்றும் 24 பீ இன் கீழ் பணிப்புரைகள் விடுத்தல்.
- சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இறத்துச் செய்தல், இடைநிறுத்தல் மற்றும் நிராகரித்தல்.
- குப்பை கூளம் பற்றிய 235 ஆம் பிரிவு அறிவித்தள்களை வெளியிடல்.
- சு.பா.உ நிபந்தனைகளை அங்கீகரித்தல் மற்றும் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகளை பரீசீலணை செய்தல்.
- ம.சு.அ பதிவு செய்த வழக்குகள், மற்றும் ம.சு.அ எதிரான வழக்குகள் ஆகியவை சார்பில் நீதிமன்றத்தில் ஆஜராதல்.
- விசாரணைகள் மற்றும் மேல் முறையீட்டு விசாரணைகள் தொடர்பில் அமைச்சுக்கு ஒத்துழைப்பு வழங்கல்.
- சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கும் முகமாக ஆவணங்கள் தயாரித்தல்.
- வளவாளர்களாக சுற்றாடல் சட்டம் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம் நடாத்துவதும் விழிப்புணர்வு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களில் பங்கேற்றலும்.
- சுற்றாடல் தொடர்பான சட்ட விடயங்கள் பற்றி ஏனைய பிரிவுகளுக்கும் நிறுவனங்களுக்கும் ஆலோசனை வழங்கல்.
- உடன்படிக்கைகள் வரைவும் அங்கீகாரம் வழங்கலும்.
- புகார்களை கையாள்வது தொடர்பில் பொலிஸ் திணைக்களத்துடன் ஒத்துழைத்தல்.

### திட்டமிடல் முகாமைத்து அலகு

- தளநிலை தரவு சேகரிப்பு, தேவையான தரவுகளின் வகை மற்றும் மூலகங்கள், மற்றும் தரவு சேகரிப்பு முறை ஆகியவற்றை விவரித்தல் மற்றும் தரவு மூலகங்களுடன் இணைத்தலும்.
- ம.சு.அ கூட்டிணைந்த திட்டத்தை வடிவமைத்தல்.
- ஒவ்வொரு கருத்திட்டப் பகுதி, வெளித்தரப்பு நிதியிடல் கருத்திட்டங்கள் மற்றும் மத்திய தர வேலைத்திட்டம் சார்ந்த ஏனைய தலையூடுகள் ஆகியவற்றுக்கு செயற்பாட்டுத் திட்டங்களை தயாரித்தல் மற்றும் மத்திய சுற்றாடல் அமைச்சின் கூட்டினை மற்றும் வருடாந்த திட்டங்கள் தயாரித்தல்.
- கண்காணிப்பு திட்டங்களை விருத்தி செய்தல்.
- பிரிவுகளுக்கு இடையில் மற்றும் மத்திய பிராந்தியங்களுக்கு இடையில் ஒருங்கிணைப்பை உறுதி செய்தல்.
- மதிப்பீடுகளை ஏற்பாடு செய்தல்.
- பல்வேறு மேற்பார்வை அமைப்புகளுக்கு அதாவது சு.தே.வ.அ, ERD, and MPD போன்றவை, அறிக்கையிடுவதற்காக முன்னேற்ற அறிக்கைகள் தயாரித்தல்.
- ம.சு.அ இன் ஆண்டறிக்கை தயாரித்தல்.
- ம.சு.அ இன் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்றம் குறித்து சர்வதேச

நன்கொடையாளர்கள், தனியார்துறை அமைப்புகள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் ஆகியோருக்கு அறிவித்தல்.

**புகார் அலகு**

- சுற்றாடல் தொடர்பான பிரச்சினைகள், சிக்கல்கள் மற்றும் அச்சுறுத்தல் மற்றும் சுற்றாடல் பாதிப்படைதல் பற்றிய புகார்களை பொதுமக்கள் நிறுவனங்கள் ஆகியவற்றிடமிருந்து பெற்றுக்கொள்ளல்.
- சிக்கல்களை சம்பந்தப்பட்ட அதிகாரசபைகளுக்கு ஆற்றுப்படுத்தி அவர்களுடன் ஒத்துழைத்தல்.

**உள்ளக கணக்காய்வு அலகு**

- கணக்கியல் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல்.
- நிதிசார் மற்றும் செயற்பாட்டு தகவல்களை பரீசீலணை செய்தல்.
- தாபனத்தின் நிதிசார் விடயங்கள் அல்லாத கட்டுப்பாட்டு உள்ளிட்ட பொருளாதாரம், வினைத்திறன், மற்றும் செயற்பாட்டின் பயனுறுதித் தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்யல்.
- சட்டங்கள், ஒழுங்குவிதி மற்றும் ஏனைய வெளித்தரப்பு தேவைகளுடான முகாமைத்துவ கொள்கைகள், மற்றும் பணிப்புரைகள் மற்றும் ஏனைய உள்ளக தேவைகளுடன் செயற்பாட்டு இணக்கப்பாட்டை மீளாய்வு செய்தல்.
- முகாமைத்துவத்தால் வேண்டப்பட்ட ஏதும் விடயங்கள் பற்றிய தற்காலிக விசாரணைகளை மேற்கொள்ளல்.

**மாகாண அலுவலகங்கள்**

- ஓரிடத்திற்கு மட்டுப்பட்ட தாக்கங்களையுடைய அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான ஆரம்ப சுற்றாடல் பரிசீலனை (ஆ.சு.ப).
- அமர்வு கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பரிந்துரைகள்.
- உள்ளூர் அதிகார சபைகளுக்கு ஒதுக்கப்பட்டவை தவிர்ந்த குறித்துரைத்த செயற்பாடுகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் தொடர்பான நடைமுறை.
- உள்ளூர் அதிகாரசபைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணிகளை ஒருங்கிணைத்து செயற்பாடுகளை கண்காணித்தலும் தேவையேற்படுமிடத்து தொழில்நுட்ப உதவியை வழங்கலும்.
- இயற்கை வள முகாமைத்துவத்திற்கான நிகழ்ச்சித்திட்டங்கள் நடைமுறைப்படுத்தல்.
- ம.சு.அ அங்கீகாரம் தேவைப்படும் ஆ.சு.ம/சு.தா.ம சாரா கருத்திட்டங்கள் (மாணிக்கல் அகழ்வு, காணி நிரப்பல், மரம் வெட்டல் போன்ற) பற்றிய விடயங்களை தீர்ப்பதற்கு உதவியளித்தல்.
- சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.
- பிராந்திய கூட்டங்கள் மற்றும் விழாக்களில் ம.சு.அ சார்பில் பங்கேற்று பிரதிநிதித்துவம் வழங்கல்.
- அரசாங்க நிறுவனங்கள், தொண்டர்அமைப்புகள், கைத்தொழில் அதிபர்கள், வர்த்தக சமுதாயம், பாடசாலைகள், இளைஞர் அணிகள், அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகிபோருடன்உப-தேசிய மட்டங்களில் ஒத்துழைத்தல்.
- மாகாண, பிரதேச மற்றும் கிராமிய மட்ட கருத்திட்டங்கள் மற்றும் பாடசாலை கருத்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறை

செய்தல், மீளாய்வு செய்தல் மற்றும் கண்காணித்தல்.

- விஷேடமாக குறிப்பிடப்பட்டுள்ள பிராந்திய தரவுத் தளத்தை அபிவிருத்தி செய்து இற்றைப்படுத்தி பேணுதல்.
- ம.சு.அ யின் 5 வருட வேலைத்திட்டத்திற்கு உட்பட்ட வகையில் வருடாந்த வேலைத்திட்டத்தை மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு விருத்தி செய்தல்.

**அதிகாரசபையின் செயலாற்றுகை**

2016 ஆம் ஆண்டில் இப்பிரிவுகள் ஒப்வொன்றினாலும் நிறைவேற்றப்பட்ட பணிகள் பின்வரும் அலகுகளில் சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

# அத்தியாயம் 3.0. சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

## 3.1 சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகு

### 3.1.1 தற்போதைய ஒழுங்குவிதிகளை பின்பற்றும் அதேவேளையில் தேசிய சுற்றாடல் சட்டத்தில் புதிய சட்ட ஏற்பாடுகளை ஏற்றுகொள்வதும் சுற்றாடல் தரம் பற்றிய ஒழுங்குவிதிகளை தொகுத்தல்

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு அலகின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் (சு.மா.பி) பிரதான பொருப்பானது மாசடைதலை தடுப்பதும் கட்டுப்படுத்துவதும் ஆகும். இந்த குறிக்கோளை எய்தும் வகையில், (சு.மா.அ) அதன் வழமையான செயற்பாடுகளையும் தொடர்கின்றதுடன் பிரதானமாக சில கைத்தொழில் நடவடிக்கைகளில் இருந்து ஏற்படும் சுற்றாடல் மாசடைதலை குறைத்து தடுத்து கட்டுப்படுத்துகின்ற புதிய முன்னெடுப்புக்களையும் மேற்கொள்கின்றது. இந்த பரிவின் செயற்பாடுகளானது இலகுவாக நடைமுறைப்படுத்தும் வகையில் 4 பிரதான விடயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இவ்விடய பரப்புக்களானது பின்வருமாறு

1. ஒழுங்குவிதி மற்றும் இணக்கப்பாட்டு கண்காணிப்பும்.
2. கொள்கை விருத்தியாக்கம்.
3. தொழில்நுட்ப அனுசரணை
4. மாசுக் கட்டுப்பாட்டிற்கான விஷேட நிகழ்ச்சித்திட்டங்கள்.

### 3.1.2. சுற்றாடல் தரம் பற்றிய ஒழுங்குவிதிகளை பயனுறுதியான முறையில் நடைமுறைப்படுத்தல்.

#### 3.1.2.1 சுற்றாடல் பாதுகாப்பு உரிமத் திட்டத்தை(சு.பா.உ) பயனுறுதியான முறையில் நடைமுறைபடுத்தல்.

குறித்துரைக்கப்பட்ட அனைத்து செயற்பாடுகளும், அவற்றால் சுற்றாடல் எந்தளவிற்கு மாசடைகின்றது என்பதற்கு இணங்க மூன்று வகையாக வர்த்தமானியில் பட்டியலிடப்பட்டுள்ளன. பட்டியலின் பகுதி 'அ' 80 உயர் மாசுபடுத்தும் செயற்பாடுகளையும், பகுதி 'பி' 33 நடுத்தர மாசுபடுத்தும் செயற்பாடுகளையும் மற்றும் பகுதி 'சீ' குறைந்த மாசுபடுத்தல் செயற்பாடுகளையும் கொண்டுள்ளன. 'ஏ' மற்றும் 'பீ' வகையான கைத்தொழில்களுக்கான சு.பா.உ வழங்கும் செயற்பாட்டின் நடைமுறையாக்கம் ம.சு.அ மாகாண அலுவலகங்களால் நடாத்தப்படுகின்றதுடன் பட்டியல் 'சீ' செயற்பாடுகளின் நடைமுறையாக்கல் தத்துவமானது உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு (உ.அ) கொடுக்கப்பட்டுள்ளது.

உயர் மாசுபடுத்தும் செயற்பாடகள் மற்றும் அவற்றின் உரிமங்கள் பற்றிய விபரங்களை உள்ளடக்கிய தரவுத் தளத்தை சு.மா.க பிரிவு பேணுகின்றது.

| வழங்கப்பட்ட சு.பா.உ | **2016** |
|---|---|
| புதிய சு.பா.உ கள் | 1,447 |
| சு.பா.உ கள் புதுப்பித்தல் | 2,899 |
| கண்காணிப்பு | 159 |

**அட்டவணை 3.1: சு.பா.உ விபரங்கள்**

முதலீட்டுச் சபை சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள மற்றும் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடுகளுக்கு சு.பா.உ வழங்குவதற்கான அதிகாரத்தை முதலீட்டுச் சபை கொண்டுள்ளது. சு.பா.உ வழங்குவதற்கு முன்னர் ம.சு.அ யிடமிருந்து இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே, முதலீட்டுச் சபையால் சு.பா.உ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக முதலீட்டுச் சபை சார்ந்த கைத்தொழில்களுக்கு இணக்கப்பாட்டை

வழங்குவதில் சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு முக்கியமான வகிபாகமொன்றை ஏற்கவேண்டியுள்ளது. சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்காகவும், முதலீட்டுச் சபையில் பதிவுசெய்யப்பட்ட செயற்பாடுகளுக்கான புதிய தளங்களுக்கும் சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவால் வழங்கப்பட்ட இணக்கப்பாடு.

**அட்டவணை 3.2: சு.மா.க பிரிவால் வழங்கப்பட்ட இணக்கப்பாடு**

பொது மக்களால் முன்வைக்கப்பட்ட புகார்கள் பற்றிய விசாரணை, கைத்தொழில் நடவடிக்கைகளால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மாசுக் கட்டுப்பாட்டு முறைமைகள் பற்றிய மதிப்பீடு (கழிவு நீர் பகுப்பாய்வு அறிக்கைகள், இரைச்சல் மற்றும் அதிர்வு அளவீடுகள் போன்றவைகளால்) என்பனவும் சு.மா.க பிரிவால் நிறைவேற்றப்படுகின்றன. ம.சு.அ யின் புகார் பிரிவு, தலைவர் மற்றும் பணிப்பாளர் நாயகத்தால் நேரடியாக அனுப்பப்பட்டதும், முதலீட்டுச் சபையால் அங்கீகரிக்கப்பட்டதுமான கைத்தொழிற் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய

| **வழங்கப்பட்ட இணக்கப்பாடுகள்** | **2016** |
|---|---|
| புதிய சு.பா.உ கள் | 40 |
| சு.பா.உ கள் புதுப்பித்தல் | 337 |
| ஏனைய கருத்திட்டங்களுகான புதிய அமைவிடங்கள் தொடர்பில் பரிந்துரைகள் | 99 |
| கைத்தொழிலகள் கண்காணிப்பு | 80 |

புகார்கள் பற்றிய விசாரணைகளை ம.சு.அ தொடர்ந்தும் முன்னெடுத்தது.

**அட்டவணை 3.3 : இந்த பிரிவால் கையாளப்பட்ட புகார்கள**

சு.தா.ம செயற்பாட்டின் கீழ் அங்கீகரிக்கப்பட்டதும் உயர் மாசடைத்தல் நடவடிக்கைகளைக் கொண்டதாக வர்த்தமானி அறிவித்தல் விடப்பட்டதும் முதலீட்டுச் சபையால் முகாமைத்துவம் செய்யப்பட்டு வருவதுமான 12 ஏற்றுமதி பதனிடல் வலயங்கள் காணப்படுகின்றன. எனவே, ஏற்றுமதி பதனிடல் வலயங்களிருந்து ஏற்படும் சுற்றாடல் மாசடைதலை கட்டுப்பாட்டிற்குள் வைக்க வேண்டிய பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபையை சார்ந்தது.

| **புகார்கள்** | மு.ச கைத்தொழிலகள | **மு.ச சாரா கைத்தொழில்கள்** |
|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்டவை | 25 | 03 |
| விசாரணை செய்தவை மற்றும் பரிகாரம் கண்டவை | 08 | 01 |
| சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை | 16 | 02 |

இந்த கைத்தொழில் வலையங்கள் சுற்றாடலுக்கு வெளியிடும் கழிவுகள் மற்றும் வீச்சுக்களை குறைக்கவும் கட்டுப்படுத்தவும் சு.பா.உ நடைமுறையை சு.மா.க பிரிவு முன்னெடுக்கின்றது. இந்த கைத்தொழில் வலயங்களில் மாசுக்கட்டுப்பாட்டு செயல்முறையை செயற்படுத்துவதற்கு முறையான கண்காணிப்பும் அவசியமாகின்றது. சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவானது மல்வத்த, ஹொரன, வதுபிட்டிவல, மீரிகம, அவிஸ்சாவெல, பியகம, கட்டுநாயக்க, மற்றும் கொக்கல ஆகிய பகுதிகளில முதலீட்டுச் சபையின் ஏற்றுமதி பதனிடல் வலயங்களை பரிசீலணை செய்துள்ளதுடன் மல்வத்த, ஹொரன, மற்றும் வதுபிட்டிவல ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு சுற்றாடல் நியமங்கள் மற்றும் தகவுத்திறன் ஆகியவற்றின் இணக்கப்பாட்டின் கீழ் 03 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கியுள்ளது.

**3.1.2.2.2 விரிவான கண்காணிப்பு திட்டத்தை பிராந்திய மாவட்ட அலுவலகங்களுடன் நடைமுறைபடுத்தல். நாடுதழுவியவாறு காணப்படும் உயர் மற்றும் மத்திய தர மாசுபடுததும் கைத்தொழில்களை கண்காணிப்பதற்காக விரிவானவொரு கண்காணிப்பு திட்டம் சு.மா.க பிரிவால் முன்னெடுக்கப்பட்டது.**

**அட்டவணை 3.4. கண்காணிக்கப்பட்ட கைத்தொழில்கள்**

| மாவட்டம் | கண்காணிக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை | மாவட்டம் | கண்காணிக்கப்பட்ட கைத்தொழில்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| அம்பாறை | 3 | கொழும்பு | 12 |
| கண்டி | 18 | காலி | 5 |
| கலுத்தரை | 17 | நுவரரெளியா | 6 |
| கம்பஹ | 16 | அனுராதபுரம் | 2 |
| மன்னார் | 2 | புத்தளம் | 2 |
| வவுனியா | 2 | பொரன்னறுவை | 29 |
| யாழ்பாணம் | 6 | அம்பாந்தோட்டை | 4 |
| மாத்தலை | 11 | மாத்தரை | 2 |
| குருனாகலை | 2 | பதுளை | 2 |
| மட்டக்களப்பு | 2 | மொனராகலை | 2 |
| இரத்தினபுரி | 6 | மொத்தம் | 159 |
| கேகாலை | 5 | | |
| திருகோணமலை | 3 | | |

### 3.1.3 சுற்றாடல் தரம் மற்றும் அவசரநிலை பதிலிருப்பு நடவடிக்கை ஆகியவற்றை மேப்படுத்தம் வகையில் பங்குதாரர்களை உற்சாகப்படுத்தல்.

சு.மா.க பிரிவின் உத்தியோகத்தர்கள் சு.தா.ம மற்றும் ஆ.சு.ம நடவடிக்ககைளின் கீழ் செயற்படும் கருத்திட்டங்களில் மாசு கட்டுப்பாட்டு அம்சங்களை மதிபீடுசெய்யும் நோக்கில் தொழில்நுட்ப குழுவின் உறுப்பினர்களாக பணியாற்றுகின்றனர். 2016ஆம் ஆண்டில் சு.மா.க பிரிவின் உத்தியோகத்தர்கள் மாசு கட்டுப்பாடு செயற்பாட்டில் தொழில்நுட்ப நிபுணத்துவத்தை வழங்குவதற்காக 30 தொழில்நுட்ப குழுக்களில் பங்கேற்றனர. ஆத்துடன் 15 கூட்டு பரிசோதணைகளும் மேற்கொள்ளப்பட்டன.

### 3.1.3.4 ஆய்வுகூடங்கள் மற்றும் ஆலோசனை தாபனங்கள் பதிவுசெய்தல்

சுற்றாடல் ஆலோசகர்கள் மற்றும் பகுப்பாய்வு ஆய்வுகூடங்களை பதிவு செய்யும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையில் இடம்பெற்ற வருடாந்த பதிவு நிகழ்ச்சித்திட்டமானது கைத்தொழில்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முகமாக சு.மா.க பிரிவால் மேற்கொள்ளப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டமாகும். நாடளாவிய வகையில் கைத்தொழிலதிபர்களுக்கு குறைந்த செலவினத்தில் உண்மையான சேவையை வழங்கி மாசு தணிப்பு மற்றும் இணக்கப்பாட்டு கண்காணிப்பு செயற்பாடுகளில் அவர்களை ஊக்குவிப்பதே இந்த துணிகர முயற்சியின் முக்கிய நோக்கமாகும. அதேவேளையில், ஆலோசகர்கள் மற்றும் ஆய்வுகூடங்கள் தங்கள் குறைபாடுகளை சீர்செய்து அறிவையும் இற்றைப்படுத்தக் கூடியதாக இருக்கும்

என்பதுடன் கிடைக்கக் கூடியதாகவுள்ள மிகவும் சிறந்த சேவையை போட்டி தன்மையுடன் வழங்கூடியவர்களாகவும் இருப்பர். 2016 ஆம் ஆண்டில் 32 ஆய்வுகூடங்களும் 53 ஆலோசகர்களும் பதிவுக்காக விண்ணப்பம் செய்திருந்தன/ செய்திருந்தனர். பரிசீலனை மற்றும் மதிப்பீட்டின் பின்னர் 28 ஆய்வுகூடங்களும் 51 ஆலோசகர்களும் அங்கீகர்க்கப்பட்ட ஆய்வுகூடங்களாகவும் ஆலோசகர்களாகவும் 2016 ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டனர். ஆய்வுகூடங்கள் மற்றும் ஆலோசகர்களை உள்ளடக்கிய பட்டியல் ம.சு.அ இணையத்தளத்திற்கு பதிவேற்றப்பட்டதுடன் அச்சிடப்பட்ட பட்டியல்களும் விநியோகிக்கப்பட்டன. 2016 ஆம் ஆண்டின் பதிவுகளுக்காக விண்ணப்பம் கோரும் 03 விளம்பரங்கள் ஆங்கிலம், சிங்களம், மற்றும் தமிழ் மொழிகளில் 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டு பகுதியில் வெளியிடப்பட்டன.

**3.1.3..5. "ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியே (EPZ's) உயர் மற்றும் நடுத்தர அளவில் மாசுப்படுத்தும் கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகள் தொடர்பான அமைவிடங்கள் பற்றி தீர்மானிக்கும் குழுவின்" கூட்டங்களை நடாத்தி புதிய கைத்தொழில்களின் அமைவிடங்களை தீர்மானிதிதல்.**

**3.1.3.7 சனாதிபதி சுற்றாடல் விருதுகள் / தேசிய பசுமை விருதுகள் ஆகிய நிகழ்சிச்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்.**

சுற்றாடல் பற்றிய கரிசனைகள் தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நடாத்தப்பட்ட ஒரேயொரு விருது வழங்கள் திட்டம் இதுவாகும். சுற்றாடலுடன் நிலைத்திருக்கக்கூடிய முறையில் இயங்கும் அரசாங்க மற்றும் தனியார்துறை நிறுவனங்களை இனங்கண்டு அவற்றை வெளியிடும் நோக்கில் இந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த விருது வழங்கள் திட்டமானது இலங்கை

**(உணர்திறனுள்ள பிதேசங்களில் தாபிக்கப்பட்டவை).**

இந்த குழுவானது ஏற்றுமதி பதனிடல் வலயங்களுக்கு வெளியே (EPZ's)உயர் மற்றும் நடுத்தர அளவில் மாசுபடுத்தும் கைத்தொழில்கள் மற்றும் கைத்தொழில் பேட்டைகளின் அமைவிடங்கள் பற்றி தீர்மானிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது. இக்குழுவானது சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவால் தாபிக்கப்பட்ட முக்கியமான தீர்மானம் மேற்கொள்ளும் குழுக்களில் ஒன்றாகும். இந்த குழுவானது முதலீட்டுச்சபை, தேசிய நீர்வழங்கள் வடிகாலமைப்புச் சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் ம.சு.அ ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. விஷேடமாக களனி ஆற்றில் சேரும் கைத்தொழில் கழிவுகளால் ஏற்படும் நீர் மாசடைதலை குறைப்பதே இக்குழுவின் பிரதான குறிக்கோளாகவுள்ளது. அதற்கு மேலதிகமாக உயர்ந்த அளவு கழிவு நீரை தோற்றுவிக்கும் களனி ஆற்று வடிநிலத்திற்கு வெளியில் உயர் மற்றும் நடுத்தர மாசுபடுத்தல் கைத்தொழில்களை அமைப்பது பற்றிய முன்மொழிவுகளை மதிப்பீடு செய்வதற்கான தொழில்நுட்ப வெளியீடுகளையும் இக்குழு வழங்குகின்றது. 2016 ஆம் ஆண்டில் 10 கூட்டங்கள் நடாத்தப்பட்டதுடன், 63 கருத்திட்டங்களும் மதீப்பீடு செய்யப்பட்டன.

சுற்றுச்சூழலில் மாசுக் கட்டுப்பாட்டையும் பசுமையாக்கத்தையும் ஏற்படுத்தும் சிறந்த நடைமுறைச் சாத்தியமான தெரிவுகளை பிரயோகிப்பதற்கூடிய போட்டித் தன்மையுடனான மன்றம் ஒன்றை வெவ்வேறு கைத்தொழில் துறைகளுக்கு இடையில் தோற்றுவிக்கின்றது.

கண்காணிப்பு அடிப்படையில் மாசுக் கட்டுப்பாட்டையும், தரங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் சார்ந்த இசைவான சுற்றாடல் முகாமைத்துவ முறைமையையும் கைத்தொழில் அதிபர்கள் மற்றும் சேவை வழங்குவோர் மத்தியில் ஊக்குவிப்பதன் ஊடாக அவற்றை மேம்படுத்தி சுற்றாடல் சிநேகபூர்வ

செயற்பாடுகள் மூலம் தூய்மையானதும் பசுமையானதுமான சுற்றாடலை அடைவதற்கான நிலையான தன்மையை பேணுவதே இத்திட்டத்தின் இலக்காகும். இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக விண்ணப்பங்கள் 10 கைத்தொழில் துறைகள், உள்ளூராட்சி அதிகார சபைகளின் கழிவு முகாமைத்துவ கருத்திட்டங்கள், நிலையான சக்தி கருத்திட்டங்கள், பொது ஊடகத்துறை, அரசாங்க நிறுவனங்கள், அரசு-சாரா நிறுவனங்கள், சுற்றாடல் நாவல் மற்றும் சிறுகதைகள் மற்றும் பாடசாலைகள் போன்றவை உட்பட 23 பிரதான துறைகளின் கீழ் கோரப்பட்டன. மொத்தமாக 470 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்று புகழ்பெற்ற நீதிபதிகள் குழாத்தின் மூலம் மதீப்பீடு செய்யப்பட்டன.

விருதுகள் வழங்கள் விழா அதிமேதகு சனாதிபதி, கௌரவ சுற்றாடல் அமைச்சர் மற்றும் புகழ்பெற்ற அதிதிகள் ஆகியோரின் தலைமையில் 2016, ஒக்டோபர் 18 ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் வெற்றிகரமாக நடைபெற்றது. கௌரவ சுற்றாடல அமைச்சர் மற்றும் ஏனைய புகழ்பெற்ற அதிதிகளும் பங்குபற்றினர்.

1600 ற்கும் மேற்பட்ட அதிதிகள் இவ்வைபத்தில் பங்கேற்றனர் .இந்த வைபவத்தில், 12 சனாதிபதி சுற்றாடல் விருதுகள், 03 ‘ஹரித்அபிமானி’ விருதுகள், 03 தங்க விருதுகள், 13 வெள்ளி விருதுகள், 16 வெண்கல விருதுகள் மற்றும் 18 திறமை(தகுதி) விருதுகள் என்பன இத்துறைகளின் செயலாற்றுகையை பாராட்டும் முகமாக வழங்கப்பட்டன.

### 3.1.3.8 இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சித்திட்டம்.

சரியான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உரிய வேளையில் தொடர்ச்சியான கண்காணிப்புடன் முன்னெடுக்க முடியுமாயின் அநேகமான இரசாயன அனர்த்தங்கள் அல்லது விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள முடியும். சர்வதேச நியமங்களின் கீழ் இரசாயன விபத்து தடுப்பு மற்றும் தயார்நிலை (CAPP). என்று பெயரிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் ஒன்று ஐ.நா.சு.தி தால் முன்னெடுக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில் பின்வரும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

1. மல்டிலெக் பெயிண்ட் கைத்தொழிற்சாலையின் முகாமைத்துவ மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.
2. இரசாயண விபத்து தவிர்ப்பு மற்றும் தயார்நிலை பற்றிய பயிற்சிப்பட்டறை மல்டிலெக் பெயிண்ட் கைத்தொழிற்சாலையில் இடம்பெற்றது.
3. இரசாயண கைத்தொழிற்சாலை சார்ந்த பரிசோதனை செயன்முறை பற்றிய பயிற்சிப்பட்டறை ம.சு.அ உத்தியோகத்தர்களுக்கு(களுத்தரை மாவட்டம்) நடாத்தப்பட்டது.
4. இரசாயண கைத்தொழிற்சாலை சார்ந்த பரிசோதனை செயன்முறை பற்றிய பயிற்சிப்பட்டறை ம.சு.அ உத்தியோகத்தர்களுக்கு (கொழும்பு மாவட்டம்) நடாத்தப்பட்டது.
5. கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் இரசாயண விபத்துகள் பற்றிய விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை அனுராதபுரம் மாவட்ட ம.சு.அ உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது.
6. சிரேஸ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்கள் மற்றும் சுற்றாடல் உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.

**பயிற்ச்சிகள் /பயிற்சிப்பட்டறை,கூட்டங்கள் மற்றும் முன்நிலைப்படுத்தல்கள்.**

இப்பிரிவின் பணிகள் மற்றும் பொறுப்புக்களை பயனுறுதியாக நடைமுறைபடுத்துவதற்கு அனுபவம், கண்டுபிடிப்புகள் மற்றும் அவசியமான அறிவு ஆகியவற்றை வெளிப்படுத்தும் பயிற்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மிகவும் முக்கியமான அங்கங்களாக விளங்குகின்றது. அந்த வகையில் சு.மா.க பிரிவானது பின்வரும் பயிற்சிகள், பயிற்சிப்பட்டறைகள், கூட்டங்கள் மற்றும் முன்னிலைப்படுத்தல் ஆகியவற்றை நடாத்தியது. கைத்தொழில் சமூகம் மற்றும் பொதுமக்களுக்கு மாசுடன் சம்பந்கப்பட்ட விடயங்களில் (இருபது) 20 முன்னிலைப் படுத்தல்கள்/விரிவுரைகள் 2016ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.

- சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு மாசுக்கட்டுப்பாடு சம்பந்தப்பட்ட 35 கூட்டங்கள் மற்றும் 14 பயிற்சிப்பட்டறைகளில் பங்குபற்றியது

**அட்டவணை 3.5: முன்னேற்றத்தின் சுருக்கம்: 2016-சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவு**

| செயற்பாடு | முன்னேற்றம் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| | பௌதீக | நிதிசார் | |
| **1.** சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (சு.பா..உ) திட்டத்தை நிறைவேற்றல்-முதலீட்டுச்சபை | | சு.மா.க பிரிவுக்கான பாதீட்டு ஒதுக்கீடு | |
| கைத்தொழிலுக்கான புதிய அமைவிடங்கள் பற்றிய பரிந்துரைகள் | 99 | | இயக்கச் செலவுகள் முதலீட்டுச் சபையால் பொறுப்பேற்கப் பட்டது |
| சு.பா..உ புதுப்பித்தலுக்கான இணக்கப்பாடு | 433 | | |
| புதிய சு.பா..உ களுக்கான இணக்கப்பாடு C | 59 | | |
| கண்காணிப்பு | 142 | | |
| **2. .** சுற்றாடல பாதுகாப்பு உரிமம் திட்டத்தை நிறைவேற்றல்- முதலீட்டுச்சபை சாரா | | | |
| | | 2016 ஆம் ஆண்டில் ரூபா750,000/= இந்த ஒதுக்கீட்டில் ரூபா750,000.00 சு.மா.க பிரிவால் உபயோகிக்கப் பட்டது | |
| புகார்கள் மு.ச சாரா பெறப்பட்டவை பரிசோதனை செய்யப்பட்டவை<br>ஆற்றுப்படுத்தப்பட்டவை<br>மு.ச பெறப்பட்டவை பரிசோதனை செய்யப்பட்டவை<br>ஆற்றுப்படுத்தப்பட்டவை | 50<br>12<br>38<br>59<br>58<br>20 | | |
| **3. ஆலோசகர்கள் பட்டியல் மற்றும் ஆய்வுகூடங்களின் பட்டியல் ஆகியவற்றை ஆண்டுக்கு ஒருமுறை மீளாய்வுக்கு உட்படுத்தி இற்றைப்படுத்தல்.** | | | |
| ஆய்வுகூட பதிவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 32 | | |
| ஆலோசகர்கள் பதிவுகளுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்கள் | 53 | | |
| தெரிவுசெய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் | 29 | | |
| தெரிவுசெய்யப்பட்ட ஆலோசகர்கள் | 46 | | |
| **4. H&M குழு** | | | |
| நடாத்தப்பட்ட கூட்டங்கள் | 10 | | |
| மதிப்பீட்டுக்கு உட்பட்ட கருத்திட்ட பிரேரணைகள் | 63 | | |
| **பரிந்துரைபக்கப்பட்டவை** | 47 | | |
| நிராகரிக்கப்பட்டவை | 16 | | |
| **5. தரமான சு.பா.உ இலக்கமிடும் முறைமையை கையாளல** | | | |
| வழங்கப்பட்ட “ஏ” வகை-புதிய சு.பா.உ கள் | 1791 | | |
| வழங்கப்பட்ட“ஏ” வகை புதுப்பித்தல்கள் | 2531 | | |

| செயற்பாடு | முன்னேற்றம் | | குறிப்புகள் |
|---|---|---|---|
| | பௌதீக | நிதிசார் | |
| **6. பயிற்ச்சிகள் / பட்டறைகள்** | | | |
| சு.மா.க பிரிவால் நடாத்தப்பட்ட முன்நிலைப்படுத்தல்கள்/ விரிவுரைகள் | **20** | | |
| நடாத்தப்பட்ட பயிற்ச்சிப் பட்டறைகள் | 12 | | |
| சு.மா.க பிரிவு பங்குபற்றிய கூட்டங்கள் | 40 | | |
| **7. சு.தா.ம தொழில்நுட்ப குழுக் கூட்டங்கள்** | 25 | | |
| **8. 1. தேசிய பச்சையம் விருதுநிகழ்ச்சித்திட்டம்** | | | செலவினங்கள் திறைசேரி நிதியத்தால் பொறுப்பேற்கப்பட்டன |
| தங்க விருதுகள் | 03 | | |
| வெள்ளி விருதுகள் | 13 | | |
| வென்கல விருதுகள் | 16 | | |
| சிறப்பு விருதுகள் | 18 | | |
| 2.சனாதிபதி சுற்றாடல் விருதுகள்: விருதுகள் | 12 | | |
| 3.ஹரிதாஅபிமானி விருதுகள்:(2 நபர்கள் வருகை தரவில்லை) | 3 | | |
| 4.ஹரித தருவோ: விருதுகள் | 9 | | |
| 5.சனாதிபதி பதக்கங்கள்(சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்): | 41 | | |
| 9. இரசாயண விபத்து தணிப்பு மற்றும் தயார்நிலை நிகழ்ச்சித்திட்ட பயிற்சிப்பட்டறைகள் | 6 | | |

### 3.2. ஆய்வுகூட சேவைகள் அலகு

### 3.2.1 வளிவள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு அலகு

வளிவள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு அலகானது ஆய்வுகூட சேவைகள் பிரிவின் பிரிவொன்றாக உள்ளதுடன் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு அலகின் கீழ் செயற்படுகின்றது. இந்த பிரிவினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் மற்றும் கடமைகள் ஆகியவற்றின் முன்னேற்றம் கீழே சுருக்கமாக கொடுக்கப்பட்டுள்ளது.

#### 3.2.1.1 ஒழுங்கமைப்பு தக்துவங்கள்- ஒழுங்குவிதியை தயாரித்தல், ஒழுங்குவிதிகள் திருத்தம், ஒழுங்குவிதிகள் நிர்வாகம்.

மூல உமிழ்வு கட்டுப்பாட்டு தரங்கள்

இலங்கையில் சூழல் வளியின் தரத்தை முகாமைத்துவம் செய்வதற்காக நிலையான மூலங்களில் இருந்து வெளியேற்றப்படும் உமிழ்வை கட்டுப்படுத்த வேண்டியது கட்டாயமாகும். அதன் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மூல உமிழ்வுவை கட்டுப்படுத்துவதற்கு ஒரு தொகுதி ஒழுங்குவிதிகளை நிறைவு செய்துள்ளதுடன் வர்த்தமானி வெளியீடும் நிருவையில் உள்ளது.

##### 3.2.1.1.2 1996ஆம் ஆண்டின் இலக்கம் 01ஆம் தேசிய சுற்றாடல் ஒழுங்குவிதிகளில் (இரைச்சல் கட்டுப்பாடு) திருத்தம் கொண்டுவரல்.

இரைச்சல் மாசானது பல பரிமாணங்களை உள்ளடக்குவதால் இரைச்சல் மாசு கட்டுப்பாட்டின் நவீன தேவைகளுக்கு பரிகாரம் காணும் வகையில் தற்போதைய இரைச்சல் ஒழுங்குவிதிகளில் திருத்தம் கொண்டவருவதற்கு ம.சு.அ தீர்மானித்துள்ளது. அதன் அடிப்படையில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு புதிய ஒழுங்குவிதிகளின் பரப்பெல்லையை தீர்மானிப்பதற்கு முடியும் என்பதுடன் ஒழுங்குவிதிகளில் திருத்தம் கொண்டுவரும் செயற்பாடானது தொடர்ந்து இடம்பெற்று வரும் நிலையில் அப்பணியானது 2017ஆம் ஆண்டில் முடிவுக்குவருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

#### 3.2.1.3 அதிவேக நெடுஞ்சாலை இரைச்சல் கட்டுப்பாட்டு ஒழுங்குவிதிகள்.

இலங்கையில் கட்டணம் செலுத்தும் அதிவேக நெடுஞ்சாலைகளில் இருந்து எழுப்பப்படும் இரைச்சலுக்கு பரிகாரம் காணும் வகையில் ம.சு.அ ஒழுங்குவிதிகளை கொண்ட தொகுதியொன்றை தாயாரித்துள்ளது தேசிய சுற்றாடல் (அதிவேக நெடுஞ்சாலை இரைச்சல்) ஒழுங்குவிதி. இந்த ஒழுங்குவிதியின் வர்த்தமானி வெளியீடு நிலுவையில் உள்ளது.

#### 3.2.1.4 பேஸ்லைன் ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேச உயர் அதிவேக நெடுஞ்சாலையின் இரைச்சல் மட்டத்திங்கான வழிகாட்டிகள்.

பேஸ்லைன் ஊடாக நிர்மாணிக்கப்படவுள்ள உத்தேச உயர் நெடுஞ்சாலையில் இருந்து எழுப்பபடும் உத்தேச இரைச்சல் மட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் உயர் நெடுஞ்சாலையை திட்டமிடல் மற்றும் வடிவமைத்தல் வேளையில் பின்பற்றவேண்டிய வழிகாட்டியொன்றை ம.சு.அ தயாரித்துள்ளது.

#### 3.2.1.5 அரசாங்க பேருந்துகளில் எழுப்பப்படும் இரைச்சலுக்கான பரிகாரம் காணல்.

அரசாங்க பேருந்துகளில் எழுப்பப்படும் இரைச்சல் தொடர்பில் பொது மக்களால் முன்வைக்கப்படும் புகார்களுக்கு பரிகாரம் காணும் நோக்கில் ம.சு.அ யால் மாதிரி ஆய்வொன்று செய்யப்பட்டது. பொது மக்கள் பேருந்துகளில் எழுப்பப்படும் இரைச்சல் மட்டத்தை கண்டறிவதற்கு கிட்டத்தட்ட 100 பேருந்துகள் ஆய்வில் உள்ளடக்கப்பட்டன. இந்த ஆய்வின் முடிவுகளை அடிப்படையாகக் கொண்டு சம்பந்தப்பட்ட முகவாரண்மைகளை வழிநடத்தி இப்பிரச்சினைக்கு பரி காரம் காண்பதற்கு பொறிமுறையொன்றை அமைக்க ம.சு.அ தீர்மானித்தள்ளது.

#### 3.2.1.6 வாகனங்களின் ஒலிப்பான் இரைச்சல் ஒழுங்குவிதிகள் நடைமுறைபடுத்தல்.

வாகன ஒலிப்பான் இரைச்சல் மற்றும் ஒழுங்குவிதிகளை நடைமுறைபடுத்துவதில் மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் அசமந்தப்போக்கு ஆகியயை தொடர்பில் பொதுமக்கள் புகார் தெரிவித்ததால்; அத்தகைய ஒழுங்குவிதிகளை நடைமுறைபடுத்தவதில் அரசாங்க நிறுவனம் மக்களின் எதிர்பார்புக்கு இசைவாக இல்லாததால், மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது கிட்டத்தட்ட 300 வாகனங்களை உள்ளடக்கியவாறு வாகன ஒலிப்பான் இரைச்சலை அளவிடுவதற்காக ஆறு(6) பாதைவழி பரிசோதனை அமர்வுகளை நடாத்தி அதன் ஊடாக ஒழுங்குவிதிகளை நடைமுறைபடுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்தது. மத்திய சற்றாடல் அதிகாரசபையானது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஒத்துழைப்புடன் இப்பிரச்சினைக்கு பரிகாரம் காணும் வகையில் அதிமேதகு சனாதிபதியின் செயலாளர் தலைமையில் மன்றமொன்றை தாபிக்க முன்னெடுப்பொன்றை எடுத்துள்ளது.

### 3.2.2.சுற்றாடல் தரம் பற்றிய தரவு சேகரிப்பு-- சுற்றுச்சூழல் வளியின் தரத்தை கண்காணித்தல்.

கொழும்பு கோட்டை கண்காணிப்பு நிலையத்தால் சல்பர் டையொக்சைட் ($SO_2$) மற்றும் நைட்ரிஜன் டையொக்சைட் ($NO_2$) ஆகிய வளிமாசை கண்டறிவதற்கு ஈர இரசாயண முறையை பயன்படுத்தி கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொளள்பட்டது. 2016ஆம் ஆண்டில் வளி வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவுக்கு டையொக்சைட் ($SO_2$) நைட்ரிஜன் டையொக்சைட் ($NO_2$ மாதிரிகள் 63 றை சேகரித்து பகுப்பாய்வு செய்வதற்கு இயலுமாக இருக்கும். மேலும் கொழும்பு கோட்டையில் தாபிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அமைவிடங்கள் புதுப்பிக்கப்பட்டதுடன் இரண்டு வளித்தர (ம்) பகுப்பாய்விகளும் வழங்கப்பட்டன. அத்துடன் இரண்டு பகுப்பாய்விகளை ஆரம்பித்து வைப்பதற்கான உட்கட்டமைப்பு மற்றும் தானியக்க கண்காணிப்பு ஆகியன 2017ஆம் ஆண்டின் பெப்ரவரி மாதத்தில் நிறைவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 3.2.4. 2016 ஆண்டில் தொழில்நுட்ப ஆலோசனை/உதவி செயற்பாடு

**ஆட்டவணை 3.6 : தொழில்நுட்ப ஆலோசனை/உதவி செயற்பாடு**

| இல | தொழில்நுட்ப ஆலோசனை/உதவி செயற்பாட்டின் வகை | வழங்கிய சேவை |
|---|---|---|
| 1.1 | சு.தா.ம /ஆ.சு.ம பற்றிய தொழில்நுட்ப மதிப்பீட்டு குழு | 12 |
| 1.2 | உள்ளக கொள்முதல் செயன்முறைக்கு உதவியளித்தல் | 08 |
| 1.3 | ஏனைய தாபனங்களால் நியமிப்பர்ாட்ட தொழில்நுட்ப குழுக்களுக்கு பணியாற்றல் | 03 |
| 1.4 | கைத்தொழில்கள், கருத்திட்ட ஆதரவாளர்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவர்களிடமிருந்து பெற்ற தொழில்நுட்ப பிரேரணைகளை மதிபீடுசெய்தல் | 09 |
| 1.5 | சு.பா.உ கையாளும் செயன்முறையில் தொழில்நுட்ப உதவியளித்தல் | 21 |
| 3.6 | சு.தா.ம /ஆ.சு.ம நடாத்துவதற்கான பேஸ்லைன் தரவுகளை கண்காணித்தல் | 03 |
| 3.7 | தொழில்நுட்ப மற்றும் மண்றங்கள் | 12 |
| 3.8 | தொழில்நுட்ப அறிக்கை தயாரித்தல் | 03 |
| 3.9 | ஆளுமை கட்டியமெழுப்பல் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வளவாலர்களாக செயற்படல் | 17 |
| 3.10 | அறிவாளிகளுக்கு குறுகிய-கால உள்ளக பயிற்சி நிகழ்ச்சிதிட்டம் மற்றும் வேலையுடனான பயிற்சி | 03 |
| 3.11 | நீதிமன்றங்களில் நிபுணத்துவ சாட்சியை வழங்கள் | 08 |

**3.2.5. கருத்திட்ட எண்ணக்கரு அபிவிருத்தியும் கருத்திட்டங்கள் நடைமுறையாக்கமும்.**

மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது "புனருட்தைய" கீழ் நாட்டிற்குள் உள்ள வளியின் தரம் பற்றிய உண்மையான நிலையை உறுதிசெய்யும் முகமாக முன்மொழிவொன்றை தயாரித்தது. அதனைத்தொடர்ந்து சனாதிபதி செயலகம் ரூபா 61 மில்லியன் பெறுமதியில் மூன்று வருட கருத்திட்டம் ஒன்றை மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு வழங்கியது. மு.சு.அ அத்திட்டத்தின் முதல் வருட செயற்பாடுகளை வெற்றிகரமாக செய்து முடித்தது. இந்த கருத்திட்டமானது ரூபா 7 மில்லியன் மதிப்பீட்டில் நாட்டின் உள்ளக வளியின் தரத்தை அளவீடு செய்வதற்கான கருவியை வழங்குவதன் ஊடாக வளி வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவை பலப்படுத்துகின்றது.

**3.2.6 புகார்களை கையாளல் விடயத்தில் தொழில் நுட்ப உதவியையும் இணக்கப்பாட்டை பரிசோதித்தல் விடயத்தில் ஒத்துழைப்பையும் வழங்கல்.**

வளி வளம் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கல், புகார்களை விசாரித்தல், வர்தக அடிப்படையிலான முறையான கண்காணிப்பு மற்றும் சட்ட தேவைகள் ஆகியவற்றுக்காக வளி தரம் மற்றும் இரைசல் மட்டம் ஆகியவை தொடர்பில் இணக்கப்பாடு கண்காணிப்பு அறிக்கைகளை வழங்குவதில் ஈடுபடுகின்றது.

**அட்டவணை 3.7 : அளவீடுகள் ஊடாக வழங்கிய சேவைகள்**

| **இல** | **அளவீடுகள் மூலமாக வழங்கிய சேவைகள்** | | **வழங்கிய சேவைகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| 4.1 | இரைசல் மட்ட அளவீடுகள் | பகல் வேளையில் | 108 |
| 4.2 | | பகல் மற்றும் இரவு வேளையில் | 46 |
| 4.3 | தடைசெய்யப்பட்ட துணிக்கைகளின் மொத்த அளவீடு | | 18 |
| 4.4 | அசுபஸ்டஸ் இழை(பைபர்) | | 10 |
| 4.5 | சம்பவங்களின் அடிப்படையில் வளித்தர அளவீடுகள் | | 03 |
| 4.6 | குறித்துரைக்கப்படாத அளவீடகள் | | 04 |

### 3.2.7. மாலே நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேசிய நிறைவேற்று முகவராண்மையாக செயற்படல்

வளி மாசடைதலை கட்டுப்படுத்தல் மற்றும் தவிர்த்தல் ஆகியவற்றின் மூலம் தென் ஆசியாவில் ஏற்படக்கூடிய அதன் சாத்தியமான எல்லை கடந்த விளைவுகள் பற்றிய மாலே(மாலைத்தீவு) பிரகடனத்தின் செயற்பாடுகளை நடைமுறைபடுத்தும் தேசிய நடைமுறையாக்கல் முகவராக மத்திய சுற்றாடல் அதிகாரசபை செயற்படுகின்றது. வளிவள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரிவானது எல்லை-கடந்த வளி மாசடைதலை கண்காணிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தை அனுராதபுரத்திலுள்ள தொரமடலாவ பகுதியில் முன்னெடுக்கின்றது

**அட்டவணை 3.8 : எல்லை-கடந்த வளி மாசு கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டம்**

| **இல** | **விபரம்** | **பரிசோதனை செய்யப்பட்ட சாராமாறி** | | |
|---|---|---|---|---|
| | | $SO_2$ | $NO_2$ | $PM_{10}$ |
| 7.1 | **தொரமடலாவ கண்காணிப்பு அமைவிடத்தில் வளி தர சாராமாறிகளை கண்காணித்தல்** | 40 | 40 | 41 |

இந்தியா, புது டில்லியில் மாலே செயலகத்தால் நடாத்தப்பட்ட ஐந்தாவது செயலணி கூட்டத்தில் ம.சு.அ பங்குபற்றியதுடன் முனைப்பான பங்களிப்பையும் செய்தது. இலங்கையானது அரசாங்கங்களுக்கு இடையிலான (IG 15). கூட்டத்தை நடாத்தும் நாடு என்பதால் இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது மாலே பிரகடணத்தின் பதினைந்தாவது அரசாங்கங்களுக்கு இடையிலான கூட்டத்தை (IG15) மாலே செயலகத்துடன் இணைந்து 2016 ஒக்டோபர் மாதத்தில் கொழும்பில் ஒழுங்கமைத்தது.

**3.2.8.சுற்றாடல் அளவீடுகள் ஊடாக வருமானம் ஈட்டும் சேவைகளை தோற்றுவித்தல்.**

வளி வள முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரவானது அளவீடுகள் ஊடாக சேவைகளை வழங்கி ரூபா 2,641,127.34 வை 2016 ஆம் ஆண்டில் ஈட்டியது. பெரும்பாலும், அளவீடுகளில் அரைவாசியானது கட்டணம் அறவிடாமல் நிறைவேற்றப்பட்டது.

**3.2.2 நீர் தரம் கண்காணிப்பு அலகு**

**3.2.2.1 கைத்தொழில் மாசை கண்காணித்து துகாமைத்துவம் செய்தல்**

சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் என்பது தேசிய சுற்றாடல் அதிகாரசபை ஏற்பாடுகளின் கீழ் வரும் ஒழுங்கமைப்புக் கருவியாகும். சு.பா.உ அவசியப்படும் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளானவை வர்த்ததமானியின் ‘‘ஏ’’, ‘‘பி’’ மற்றும் ‘‘சீ’’ பகுதிகளின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ளதுடன் இவை மத்திய சுற்றாடல் அதிகார சபையிடம் இருந்து சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தை(சு.பா.உ) பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றன. .மத்திய சுற்றாடல் அதிகார சபையின் (ம.சு.அ) சுற்றாடல் மாசுக்கட்டுப்பாட்டு பிரிவிற்கு உரித்தான (சு.மா.க) நீர் தரம் கண்காணிக்கும் ஆய்வுகூடத்திற்கு ஒட்டுமொத்த நிறுவனத்திற்குமான பகுப்பாய்வு சேவைகளை வழங்கும் பொறுப்பானது அதன் ஆரம்ப காலம் தொடக்கம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. நாடு பூராகவும் கைத்தொழில் கழிவுகளின் தரத்தை கண்காணித்து கைத்தொழில் கழிவுகள் மற்றும் மேற்பரப்பு நீர் பற்றிய பகுப்பாய்வு அறிக்கைகள் சமர்பிப்பதன் மூலம் ஒட்டு மொத்த நாட்டினதும் நீர் நிலைகளை முகாமைத்துவம் செய்து பேணிவருவதே இதன் பிரதான பணியாகும்.

2016 ஆம் ஆண்டில்,1363 நீர் மற்றும் கழிவுநீர் மாதிரிகளை சேகரிக்கவும் பல்வேறு மாறாசாரிகள் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யவும் இந்த ஆய்வுகூடத்திற்கு இயலுமாக இருந்தது இந்த மாதிரிகளானவை சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தொடர்பில் சேகரிக்கப்பட்ட கைத்தொழில் கழிவுகள், வர்த்தக அடிப்படையில் சேகர்க்கப்பட்ட கழிவுகள், வழமையான கண்காணிப்பு மற்றும் சட்டத் தேவைகளுக்காக சேகரிக்கப்பட்ட கழிவுகள, மற்றும் பல்வேறு நீர் நிலைகளிலிருந்து சேகர்க்கப்பட்ட மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் மாதிரிகள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இக்காலத்தில் ஒட்டு மொத்த நாட்டிலும் கைத் தொழிலசார் கழிவுகளை சேகரிக்கும் நோக்கில் கைத்தொழில் துறைகளின் மீதான பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த மாதிரிகள் பொதுவாக கீழே கொடுக்கப்பட்டுள்ள பல்வேறு தேவைகளுக்காக

| மாதிரியின் நோக்கம் | மாதிரிகளின் எண்ணிக்கை |
|---|---|
| சு.பா.உ | 66 |
| சட்டம் | 20 |
| புகார்கள் | 83 |
| கண்காணிப்பு | 239 |
| ஏனையவை | 210 |
| வர்த்தக கைத்தொழில் கழிவுகள் | 745 |
| மொத்தம் | 1363 |

சேகரிக்கப்பட்டன.

**அட்டவணை 3.9: 2016ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்டகைத்தொழில் கழிவு மாதிரிகள்**




**உரு3-1 : ம.சு.அ எல்லா ஆய்வுகூடங்களினதும் முன்னேற்றம்-2016**




**உரு 3-2 : 2016 இல் பல்வேறு மாறாசாரிலிகளுக்காக மாகாண ஆய்வுகூடங்களிலால் சேகரிக்கப்பட்ட மாதிரிகள்.**




உரு **3-3 :** 2016 ஆம் ஆண்டில் வர்த்தக பரிசோதனை மூலம் ம.சு.அ ஆய்வுகூடய்கள் ஈட்டிய வருமானம்

### 3.2.2.2 ஆய்வுகூட அங்கீகார நிகழ்ச்கித்திட்டம்

இந்த ஆய்வுகூடத்திற்கு 2016ஆம் ஆண்டில் ISO 17025 அங்கீகார நிகழ்ச்சித்திட்டம் சம்பந்தப்பட்ட அனைத்து ஆவணங்களையும் தயாரிக்கக்கூடியதாக இருக்கும். கையேடுகள் பற்றிய தரத்தை இறுதிசெய்தல் மற்றும் பதினைந்து செயற்பாடுகளுக்கான பதினைந்து செயன்முறை கையேடுகள் தயாரித்தல் ஆகியன ஆவணப்படுத்தப்பட்டன. நடைமுறையாக்க செயற்பாட்டின் சில ஆரம்பிக்கப்பட்டன. ஆரம்பிக்கப்பட்ட இச்செயற்பாடுகளானவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான பரிசோதனை தொடர்பான தரக்கட்டுப்பாடு மற்றும் தர உத்தரவாதம் அகியவற்றை உள்ளடக்குகின்றது. மேலும், ISO 17025 இற்கு கிணங்க ஒட்டு மொத்த முகாமைத்துவம் மற்றும் தொழில்நுட்ப தேவைகளின் குறைபாடுகளை இனங்காணும் வகையில் தணிக்கை சுழற்சியொன்றும் மேற்கொள்ளப்பட்டது. 2016ஆம் ஆண்டில் ஆய்வுகூட பணியாட்களுக்கு ISO 17025 பற்றிய பல பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டன.

## 3.2.2.3 நீர் தர கண்காணிப்பு அலகால் மேற்கொள்ளப்பட்ட ஏனைளய நடவடிக்கைகள்.

### 3.2.2.3.1 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தில் பங்கேற்றல்.

2016ஆம் ஆண்டில் ஆய்வுகூட பணியாளர்களால் நீர் மாசடைதல் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை பொதுமக்களின் பல்வேறு தரப்பினர் மத்தியில் முன்னெடுக்கக் கூடியதாக இருந்தது. மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சால் பவித்ரா கங்கா நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மூன்று விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு நடாத்தப்பட்டன. ஆய்வுகூடத்தின் பணியாட்களால் நீர் தரம் பற்றிய பரிசோதனை மற்றும் விளக்கக்காட்சிகள் அகியவற்றை மேற்கொண்டு முனைப்புடன் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்க முடிந்தது. ஆய்வுகூடத்தின் பணியாட்களால் மொறட்டுவை பல்கலைக்கழகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க நீர் தரம் பகுப்பாய்வு பற்றிய ஒரு நாள் ஆய்வுகூட பயிற்சி சர்வதேச மாணவர்களுககு நடாத்தப்பட்டது. நீர் மற்றும் கழிவு நீர் பரிசோதனை பற்றிய செய்முறை பயிற்சி சர்வதேச மாணவர்களுககு வழங்கப்பட்டது.

### 3.2.2.3.2 ஏனைய நடவடிக்கைகள்

இந்த ஆண்டின் போது அதிவேகப் பாதை கருத்திட்டம், திண்மக்ழிவு கருத்திட்டம், கைத்தொழில் பேட்டை தரிப்பிட கருத்திட்டம், தொகுப்பு கூட்டங்கள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் அகியன பற்றிய பல சு.தா.ம பரிசோதனைகளை ஆய்வுக்கூடத்தால் நடாத்துவதற்கு முடிந்தது. ஆய்வுக்கூட பணியாட்கள் சுற்றாடல் ஆய்வுக்கூடங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் பற்றிய மதிப்பீட்டில் ஈடுபட்டனர். இவை பதிவ செய்யப்பட்ட ஆய்வுகூடங்கள் மற்றும் ஆலோசனை சேவைகள் ஆகியவற்றுக்காக சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரவால் நடாத்தப்பட்டன.

## 3.2.2.4 நாட்டிலுள்ள பாரிய நீர் நிலைகள் கண்காணிப்பு செயற்பாட்டின் முன்னேற்றம்.

**மேற்பரப்பு நீர் தரம் பற்றிய கண்காணிப்பு**

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் பல நீர் தர கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன. கைத்தொழில் நீர் தரம் பற்றிய கண்காணிப்பு மற்றும் களனி நதி, மாஓயா, பென்தொட, மற்றும் தடுகம் ஓயா ஆகியவற்றின் மேற்பரப்பு நீரின் தரக் கண்காணிப்பு ஆகியவை மாதாந்தம் மேற்கொள்ளப்படுகின்றன. 2016 ஆம் ஆண்டில் பணியாள் பற்றாக்குறையால் அனைத்து கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களையும் நிறைவேற்ற முடியாடல் போனது. களனி கங்கை தொடர்பான மாதிரிகளின் அமைவிடங்கள் மற்றும் பரிசோதனை சாராமாறிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையானது விஸ்தரிக்கப்பட்டன. பின்வரும் அட்டவணை தேர்ந்தெடுக்கப்பட்ட நீர் நிலைகளின் கண்டுபிடிப்புகளை விபரிக்கின்றது.

**களனி கங்கை**

2016ஆம் ஆண்டில், களனி கங்கையின் மேல் நீர் பரப்பு வரையிலான மாதரிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது. அத்துடன் ஆறு மேலதிக சாராமாறிகள் மாதிரி அமைவிடங்களுக்கு உள்ளடக்கப்பட்டன. இவை ஆற்று நீரில் உள்ளடங்கியுள்ள மொத்த கடின சல்பேட் அமோனியா நிறம், மொத்த தடைசெய்யப்பட்ட திண்மங்கள் மற்றும் எண்ணெய் மற்றும் கிரீஸ் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இந்த சாராமாறிகள் சுற்றுசசூழல் நீர்த்தர நியமங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை காட்டாது. கரைந்துள்ள ஒட்சிசன், கலங்கல் அளவு மற்றும் மின் கடத்தும் திறன் ஆகியவற்றை தவிர்ந்த எல்லா சாராமாறிகளும் வருடம் முழுவதும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை காட்டாதென்பதுடன் எப்போதும் ம.சு.அ யால் முன்மொழியப்பட்ட சுற்றுச்சூமல் நீர்தர நியமங்களுக்கு உள்ளேயே காணப்படும்.

அதிகமான மாணிக்ககல் அகழ்வு செயற்பாடுகள் காரணமாக ஆற்றின் கீழ் மட்டத்தில் குறிப்பிடத்தக்க அளவு EC உயர்வை அவதானிக்க முடியாது. ஏனெனில் இச்செயற்பாடு ஆற்றின் படுகையை தாழ்துகின்றதுடன் அதனூடாக கடல் நீர் உப்பிரவேசிக்கான அனுசரனையை வழங்கி மின் கடத்தும் திறனை அதிகரிகின்றது. பல சந்தர்ப்பங்களில் கைத்தொழில் கழிவுகளும் இதற்கு பங்களிகை வழங்குகின்றன.

ஆண்டு தோரும் மறைமுக மூல மாசுக்களும் குறிப்பிடத்தக்க பங்களிப்பை செய்கின்றன. மண்ணரிப்பு தாக்கம், ஆற்றுப் படுகையில் உள்ள தாவரங்கள் (மறைப்பு) அழிக்கப்படல் என்பவற்றை ஆற்றின் கலங்கல்தன்மை காட்டுகின்றது. அதேவேளை பல்வேறு வகையான ஆற்றங்கரை அபிவிருத்தி பணிகள் மற்றும் மணல் அகழ்வு நடவடிக்கைகள் ஆகியவற்றை ஆண்டு தோரும் காணக்கூடியதாக உள்ளது.

**மாஓயா**

பௌதீக சாராமாறிகள் ஊடாக குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இல்லை. உயர்ந்த சாராமாறி மலத்தால் மாசடைந்த பகுதிகளை காட்டியது. அனைத்து மாதிரி அமைவிடங்களிலும் ஓரளவு கலங்கல் தன்மை காணப்பட்டது. இவை விசேட வீட்டு கழிவுகள், நகர கழிவு நீர் ஓட்டம் போன்ற மறைமுக மூலங்களை பிரதிபடுத்துகின்றன.

**பென்தொடை கங்கை**

பென்தொட்டை ஆற்றின் தெரிவுசெய்யப்பட்ட அமைவிடங்கள் எல்லாவற்றிலும் நுண்ணுயிரியல் மாசு கலந்திருந்தமை மூலம் அந்நீரில் உயர்ந்த மட்டத்தில் கழிவு நீர் கலந்திருந்தமையை கண்டறியப்பட்டது. இந்த நிலைமையை ஆண்டு முழுவதும் அவதானிக்கக்கூடியதாகவும் இருந்தது. நீரின் கலங்கல் தனமையானது எப்போதும் உத்தேச சுற்றுச்சூழல் நீர்தர அளவைவிட அதிகமாகவே காணப்பட்டது.

**தடுகம்ஓயா**

2016 ஆண்டில் பண்யாட்கள் பற்றாக்குறை காரணமாக ஆய்வுகூடத்தால் தடுகம்ஓயா நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக செய்து முடிக்க முடியாதிருந்தது.

## 3.3 கழிவு முகாமைத்துவ பிரிவு

மத்திய சுற்றாடல் அதிகார சபையினது (ம.சு.அ) சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவின் (சு.மா.க) கழிவு முகாமைத்துவ (க.மு.பி) பிரிவுக்கு பின்வரும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன:

(அ) அபாயகர கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புபட்ட ஒழுங்கு விதிகளை நடைமுறைப்படுத்தல்.

(ஆ) சர்வதேச உடன்படிக்கைகளுக்கு இணங்க செயற்படல்

(இ) 2016 ஆம் ஆண்டின் செயற்திட்டத்தில் இணங்காணப்பட்ட அபாயகர கழிவு மற்றும் திண்மக்கழிவு முகாமைத்துவத்துடன் தொடர்புடைய அவசியமான கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல்.

### 3.3.1 இலங்கையில் அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை நடைமுறைப்படுத்தல்.

அபாயகர கழிவு முகாமைத்துவ ஒழுங்குவிதிகளை (2008.02.01 ஆம் திகதி 1534/18 இலக்க அதிவிஷேட வர்தமானி அறிவித்தலின் மூலம் 2008 ஆம் ஆண்டின் இலக்கம 01) நடைமுறைப்படுத்துவதில் ஒரு பகுதியாக 2016 ஆம் ஆண்டில் 153 உரிமங்கள் வழங்கப்பட்டன. மேலும், பிராந்திய அமைப்புக்கு தொழில்நுட்ப உதவியளிக்கும் முகமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் மேல், மத்திய மற்றும் வட மேற்கு மாகாண அலுவலகங்களின் உத்தியோகத்தர்களுக்கு உயிர்-மருத்துவ கழிவு முகாமைத்துவம் பற்றிய இரண்டு தொழில்நுட்ப பயிற்ச்சிப்பட்டறைகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

### 3.3.2 பேசல் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்தல். 3.3.2.1

**கைத்தொழில்களுக்காக பேசல் உடன்படிக்கையின் 'B' பட்டியலில் பட்டியலிடப்பட்ட கழிவுப்பொருட்களின் இறக்குமதி**

இலங்கை 1992.08.28 ஆம் திகதி எல்லைக்கடந்த அபாயகர கழிவு நகர்வு பற்றிய பேசல் உடன்படிக்கைக்கும் (பே.உ) அவற்றை அகற்றுவதற்கும் ஒப்புதலை அளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து பேசல் உடன்படிக்கைக்கான தகுதிவாய்ந்த அதிகார சபையாக மத்திய சுற்றாடல் அதிகார சபையானது நியமிக்கப்பட்டது. சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சின் கீழ் செயற்படும் பேசல் உடன்படிக்கையை நடைமுறை படுத்துவதற்கான தேசிய ஒருங்கிணைப்புக் குழுவானது(தே.ஒ.கு) நாட்டில் அபாயகர-கழிவு முகாமைத்துவத்தின் தொழில்நுட்ப அம்சங்களுடன் தொடர்புடைய விடயங்கள் பற்றிய திடமான தீர்மானகளை மேற்கொள்வதில் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு உதவியளிப்பதற்காக தொழில் நுட்ப நிபுணத்துவ குழுவை நியமித்துள்ளது. ம.சு.அ யால் தலைமைவகிக்கப்படும் தொழில்நுட்ப குழுவானது பேசல் பட்டியல் 'பீ' யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப்பொருட்களை மூலப் பொருட்களாக இறக்குமதி செய்வதற்கான பரிந்துரைகளையும் சமர்ப்பிக்கின்றது. (பேசல் உடன்படிக்கையின் பட்டியல் 'ஏ'யில் பட்டியலிடப்பட்டுள்ள கழிவுப் பொருட்களின் இறக்குமதியானது அமைச்சரவையால் மேற்கொள்ளப்பட்ட தீர்மாணத்தின் அடிப்படையில் தடைசெய்யப்பட்டு உள்ளது. அபாயகர இரசாயணப்பபொருட்கள் மற்றும் அபாயகர கழிவுப் பொருட்களையும் நாட்டிற்குள் இறக்குமதி செய்தல் தொடர்பான ஒழுங்குவிதியானது இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரகாரம் 2013 யூன் 05ஆம் திகதிய 1813/14 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இந்த ஒழுங்குவிதிகளை நடைமுறையாக்கம் செய்யும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக 2016ஆம் ஆண்டில் 185 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன.

**3.3.2.2 அபாயகர-கழிவுகளின் எல்லை கடந்த நகர்வு**

ம.சு.அ யானது பேசல் உடன்படிக்கையை இலங்கையில் நடைமுறைப்படுத்தும் தகுதிவாய்ந்த அதிகாரசபை என்ற வகையில், 2016 ஆம் ஆண்டில் 08 வழியிடைப்பயணத்திற்கும், பேசல் உடன்படிக்கை பட்டியல் 'ஏ' யில் பட்டியலிடப்பட்ட 10 கழிவுப் பொருட்களின் ஏற்றுமதிக்கும் (எல்லைக்கடந்த நகர்வு) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

**3.3.2.3 இரசாயனப் பொருள் முகாமைத்துவம்**

இரசாயணப் பொருட்களின் முகாமைத்துவத்தை நடைமுறையாக்கம் செய்யும் செயற்பாட்டின் ஒரு பகுதியாக இரசாயணப்பொருட்களை கழஞ்சியப்படுத்தும் வகையில் 43 பரிந்துரைகள் வழங்கப்பட்டதுடன் சில குறிப்பிட்ட இரசாயணப்பொருட்கள் இறக்குமதிக்கும் 169 ஒப்புதல்கள் வழங்கப்பட்டன. இரசாயனப் பொருட்களின் முகாமைத்தவம் தொடர்பில் தேசிய இரசாயண பக்கவுருவானது செயற்திட்டத்தடன் தயாரிக்கப்பட்டது.

**3.3.3 ரொடர்டாம் உடன்படிக்கை நடைமுறையாக்கம்**

2016 ஆம் ஆண்டின் போது இரசாயணப் பொருட்கள் இறக்குமதி தொடர்பில் ஐந்து முன்-ஒப்புதல்கள் வெளியிடப்பட்டதுடன் இரசாயண முகாமைத்துவத்தவம் சம்பந்தமான கைத்தொழில் இரசாயணப் பொருட்களுக்காக மூன்று தொழில்நுட்ப ஆலோசனை கூட்டங்களும் நடைபெற்றன. இதற்கிணங்க அசுபஸ்டஸ் இறக்குமதி மற்றும் பாவனையை கட்டுப்படுத்தம் வகையில் அமைச்சரவை பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டது. அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அசுபஸ்டஸ் முகாமைத்தவம் தொடர்பில்

நிபுணத்துவ குழுவொன்று நியமிக்கப்பட்டது.

**ஸ்டொக்ஹோம் உடன்படிக்கையை நடைமுறையாக்கல்**

தேசிய நடைமுறையாக்கத் திட்டம் (NIPs) மற்றும் தொடர்ச்சியான சேதன மாசுபடுத்திகள் பொருட்பதிவேடுகள் (POP) தயாரிப்புக்கான பங்களிப்பானது தொழில்நுட்ப உள்ளீடுகள் சார்பில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு வழங்குவது தொடர்பில் பங்களிப்பு செய்யப்பட்டது.

**3.3.4.2 பொலிதீன்,பிலாஸ்டிக் மற்றும்இலத்திணியல் இல்லாதொழித்தல் பற்றிய தேசிய வாரம்**

மத்திய சுற்றடல் அதிகாரசபையானது வீட்டு மட்டத்தில் குவிந்துள்ள இலத்திரணியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பில் பொது மக்களின் கவனத்தை ஈர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து இலத்திரணியல் கழிவு, பிலாஸ்டிக் மற்றும் பொலிதீன் இல்லாதொழித்தல் தேசிய வாரத்தை மேதகு சனாதிபதி மைத்திபால சிறிசேன அவர்களின் தலைமையில் 2016 ஒக்டோபர் 24 ஆம் திகதியில் இருந்து 2016 ஒக்டோபர் 30ஆம் திகதி வரை முன்னெடுத்தது. இந்த தேசிய வாரத்தின் போது கிட்டத்தட்ட 427 தொன் இலத்திணியல் கழிவு மற்றும் 80.000 அலகுகள் கொம்பெக்ட் புலொரசன்ட் மின் குழில்கள் ஆகியவை கைவிடல் நிகழ்வுகளில் சேகரிக்கப்பட்டன. இந்த நிகழ்வை நிறைவேற்றியதன் மூலம் சேகரிக்கப்பட்ட இலத்திரணியல் கழிவு மற்றும் சீ.எப்.எல் மின்குழில்கள் ஆகியவற்றை சுற்றாடல் நேயமிக்க முகாமைத்தவ பொறிமுறைக்கு அனுப்புவதற்கான வழிசமைக்கப்பட்டது.இந்த கழிவுகளில் ஒரு மின்குமிழானது 2-5 மெர்க்கரி வீதம் தன்னகத்தே கொண்டிருப்பதால் 80.000 அலகையும் மீள்சுழற்ச்சி முறைக்கு வழிசமைத்தமையானது பாரியவொரு வெற்றியாகும்.

**3.3.4 இலத்திரணியல் கழிவு முகாமைத்துவம்**

**3.3.4.1 "புனருட்டைய" நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இலத்திரணியல் மற்றும் மின் கழிவு முகாமைத்துவம்.**

"புனருட்டைய" நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் இலத்தரிணியல்-கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நான்கு மில்லியன் பாதீட்டு ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றுள்ளது. "புனருட்டைய" திட்டத்தின் கீழ் இலத்திணியல்-கழிவு முகாமைத்துவத்திற்காக இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.






உரு **3-4 :** பொலிதீன் பிலாஸ்டிக் மற்றும் இ-கழிவுகள் கைவிடல் தேசிய வாரத்தின் போது இடம்பெற்ற நிகழ்வுகள்

### 3.3.4..3 முறைவாரா இலத்திரணியல் கழிவு சேகரிப்பாளர்களை நெறிப்படுத்தல்

நாட்டின் இலத்திணியல் கழிவு முகாமைத்துவ முறையை கவனத்தில் எடுக்கும் வேளையில் இம்முறைமையானது முறைசார் மற்றும் முறைசார துறையை சார்ந்த சேகரிப்பாளர்கள் மத்தியில் இயங்குவதை காணலாம். ஒரு கனிசமான அளவு இலத்திரணியல்-கழிவானது தொடர்ந்தும் முறைசாரா துறையால் சேகரிக்கப்பட்டு பிரிக்கப்படுகின்றது. ,இந்த செயன்முறைகள் தீங்கை விளைவிப்பதாக உள்ளதால் அவை சுகாதாரம் மற்றும் சுற்றாடல் மீது பெரும் சுகாதார மற்றும் சுற்றாடல் தாக்கத்தை செலுத்தும் சாத்தியத்தை கொண்டுள்ளது.





˙.உரு 3-5 : முறைசாரா கழிவு சேகரிப்பாளர்களுக்குழிப்புணர்வு பயிற்சி பட்டறை

### 3.3.4.4 இலங்கையில் இலத்திரணியல் மற்றும் மின்சாதன கழிவு முகாமைத்துவம் பற்றிய நிலைமை அறிக்கை

இந்த சூழ்நிவையை விளங்கிக்கொண்ட கழிவு முகாமைத்வ பிரிவானது இலத்திரணியல் கழிவை சேகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள முறைசாரா துறையை நெறிப்படுத்தும் முன்னெடுப்பை மேற்கொண்டுள்ளது. இந்த முன்னெடுப்பின் முதற் கட்டமாக அச்சு ஊடகத்தின் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டு முறைசாரா துறை தாபனங்களை பதிவுசெய்யும் பொறிமுறையொன்றுக்கு வழிசமைக்கப்பட்டது.

முறைசாரா துறையில் ஈடுபட்டுள்ள மக்களை விழிப்பூட்டும் முகமாக கழிவு மகாமைத்துவ பிரிவானது தொழில்நுட்ப வல்லுநர்களின் பங்கேற்புடன் பயிற்சிப்பட்டறை ஒன்றை நடாத்தியது.

இலங்கையில் தற்சமயம் 208ஆம் ஆண்டில் நடைமுறைபடுத்தப்பட்ட தேசிய திட்டத்தை தவிர இலத்திரணியல் மற்றும் மின்சாதன கழிவு உற்பத்தி மற்றும் வாழ்கைமுறை முகாமைத்துவம் பற்றிய விரிவானதொரு தரவுத்தளம் காணப்படவில்லை. எனவே இலத்திரணியல் கழிவு உற்பத்தியின் பரிமாணம் மற்றும் ஓட்டம் ஆகியவை பற்றிய தெளிவான வியக்கம் காணப்படவில்லை. ஆண்டகளுக்கு முன்னர் மேற்கொள்ளலப்பட்ட ஒரு சில ஆய்வுகளின் அரைகுறையான மதிப்பீடொன்றே காணப்படுகின்றது. தரவுத் தளமொன்று மற்றும் நம்பத்தகுந்த தகவல்கள் காணப்படாமை பாரிய குறைபாடாக உள்ளதுடன் இலத்திரணியல் கழிவு முகாமைத்துவ முறையை திட்டமிடும் செய்பாடு மற்றும் இலத்திரணியல் மற்றும் மின்சாதன கழிவு முகாமைத்தவ வசதிகளை ஏற்படுத்தவதில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆகையால் நாட்டில் இலத்திரணியல் கழிவு சம்பந்தப்பட்ட முகாமைத்துவ செயற்பாடுகள் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றை மேற்கொள்வதற்கு ஒழுங்கான அனுசரனையை வழங்கமுடியாதுள்ளது.

மேலும், இலத்திரணியல் கழிவு முகாமைத்துவம் பற்றிய தற்போதைய நடவடிக்கைகள் மற்றும் மூலோபாயங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் மத்தியில் கரிசனையொன்று (கவலை) காணப்படுகின்றது. இந்த தேவைக்கு பரிகாரம் காணும் வகையிலான ஆய்வொன்றை மேற்கொள்ளும் நோக்கில் ஆர்வமுள்ள ஆலோசகர்களிடம் இருந்து ஆர்வ வெளிப்பாட்டை ம.சு.அ கோரியுள்ளது.

கேள்விப்பத்தர செயன்முறைக்கு இசைவாக இந்த ஆய்வை மேற்கொள்ள வரையறுக்கப்பட்ட ஈ.எல்.எம் கன்சல்டண்ட் (தனியார்) 6/10, ரஜமாவிஹார வீதி, பிடகோட்டே ஆலோசனை முகவராண்மையாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அவர்கள இறுதி அறிக்கையை நிறைவுசெய்து ம.சு.அ க்கு சமர்ப்பித்துள்ளனர். இந்த ஆய்வின் பிரகாரம் இலத்திரணியல் கழிவின் வெளியேற்றமானது நான்கு மடங்கால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய 2010ஆம் ஆண்டில் வருடத்திற்கு 10,000 மெற்றிக் தொன்னாக காணன்பட்ட இ-கழிவு 2030ஆம் ஆண்டில் 43,000 மெற்றிக் தொன்னாக அதிகரிக்கும். அத்துடன் கணனி இ-கழிவானது படிப்படியாக அதிகரித்தவரும் அதே வேளையில் 2030 ஆண்டளவில் ஆதிக்கம் செலுத்தும் கழிவுப் பகுதியாக(6067 மெற்றிக் தொன்) இருக்கும் சாத்தியமுள்ளது. இது இவ்வாறு இருக்கையில் இலங்கை சந்தையானது ஏற்கனவே நிறைவாகவுள்ளதன் காரணமாக 2030ஆம் ஆண்டில 5732 மெற்றிக் தொன்னளவு குறைந்து செல்லும் வளச்சியை தொலைகாட்சி காட்டுகின்றது.

### 3.3.5 விழிப்புணர்வு சாதனங்கள தயாரிப்பு

கழிவு முகாமைத்தவம் பற்றிய சிற்றேடுகளின் பிரதிகள் 18000 ஆங்கியம் மற்றும் சிங்கள மொழிகளில் விழிப்பூட்டும் சாதணங்களாக தயாரிக்கப்பட்டன.

### 3.3.6 மெல்லிய பொலிதீன் ஒழுங்கு விதியை நடைமுறைபடுத்தல்;

20 மைக்ரோன் தடிப்புள்ள அல்லது அதற்கு குறைவான எவ்விதமான பொலிதீன் மற்றும் பொலிதீன் சார்ந்த உற்பத்தி வகைகளின் வர்த்தகம், மற்றும் பாவணையானது கௌரவ சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் 2006ஆம் ஆண்டின் ஒக்டோபர் 10ஆம் திகதிய ஆம் 1466.ஃ5 இலக்க அதிவிசேட வர்த்தமானி வெளியீட்டின் மூலம் தடைசெய்யப்பட்டுள்ளன.

பொலிதீன தடிப்பை அளக்கும் முகமாக பொலிதீன் அளவுமானிகள் கொள்வனவு நடவடிக்கைகள் ம.சு.அ பிராந்திய அலுவலகங்கள் ஊடாக மேற˙கொள்ளப்பட்டன.இந்த ஆண்டில் கழிவு முகாத்துவ பிரிவு மற்றும் பிராந்திய அலுவலகங்கள் நாடு பூராவும் 946 சுற்றி வலைப்புகளை மேற்கொண்டு இந்த ஒழுங˙கு விதியை மீறிய 80 விற்பனையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்துள்ளது.

### 3.3.7 ஒருங்கிணைந்த பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் முகாத்துவ கருத்திட்டம்

அதிமேதகு சனாதிபதியின் பணிப்புரையின் பிரகாரம் மற்றும் “புனருட்டைய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் முகாமைத்துவ கருத்திட்டத்திற்காக ம.சு.அ கழிவு முகாத்துவ பிரிவுக்கு 37 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் முகாமைத்துவ கருத்திட்டத்திற்கு இணங்க பின்வரும் நடவடிக்கைகள் இந்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்டன.

I. நாட்டில் பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் பாவனையை கட்டுப்படுத்தும் முகமாகவும் சுற்றாடல் சிநேகபூர்வ உற்பத்திகளை அறிமகப் படுத்தவும் அமைச்சரவை சுற்று நிரூபமகொன்றை சமர்ப்பித்தல்

II. பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் ஆகியோரை ம.சு.அ யில் பதிவு செய்வதற்காக பத்திரிகை விளம்பரம் வெளிளிடல்

III. பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் சேகரிப்பாளர்கள் மற்றும் மீள்சுழற்சியாளர்களை ம.சு.அ யில் பதிவு செய்வதற்காக பத்திரிகை விளம்பரமொன்று பிரசுகரிக்கப்பட்டது

IV. பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் முகாத்துவத்துடன் சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் பங்கேற்றலுடன் வழி நடத்தல் குழுவொன்றை தாபித்தல மற்றும் பிலாஸ்டிக் முகாமைத்துவம் தொடர்பில் வழி நடத்தல் குழு கூட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்கள நடாத்தல்

V. உக்கக்கூடிய பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் உக்காத பிலாஸ்டிக் பொருட்களுக்குப் பதிலாக உள்ளூர் மூலப்பொருட்களை பாவித்து மாற்றுவழி உற்பத்திகளை உற்பத்திசெய்வோர் சம்பந்தமான தகவல்கள் பெற்றுக்கொள்வதற்காக பத்திரிகை விளம்பரம் வெளியிடப்பட்டது..

VI. உக்கக்கூடிய பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் மற்றும் உக்காத பிலாஸ்டிக் பொருட்களுக்குப் பதிலாக உள்ளூர் மூலப்பொருட்களை பாவித்து மாற்றுவழி உற்பத்திகளை மேற்கொள்வதற்கான நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

VII. உக்காத பிலாஸ்டிக் வகைகளுக்குப் பதிலாக உள்ளூரில் உற்பத்தி செய்யக்கூடிய சுற்றாடல் சிநேகபூர்வ

உள்ளூர் உற்பத்திகளை அறிமுகம் செய்யவும் அவற்றை மேம்படுததவும் அத்தகைய உற்பத்திகளில் ஈடுபடுவோரிடம் நேரடியான தொடர்புகளை பேணும் அரசாங்க நிறுவனங்களை சேர்ந்த உயர் உத்தியோகத்தர்களுடன் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

VIII. இலங்கை தேசிய கைப்பனிப்பொருள் பேரவையின் ஒத்துழைப்புடன் சுற்றாடல் சிநேகபூர்வ உற்பத்திகள் கண்காட்சியொன்று நடாததப்பட்டது..

IX. திண்மக் கழிவு முகாமைத்தவ திட்டமொன்று தயாரிக்கப்பட்டு 2016 செப்டெம்பர் 16ஆம் திகதி ஆரம்பமான பத்தக கண்காட்சியின் போது நடைமுறை படுத்தப்பட்டது.

X. அறிகயைிடும் காலத்தின் போது செயற்திட்டம் மற்றும் பிராந்திய சுற்றிவலைப்பு திட்டம் என்பன தயாரிக்கப்பட்டதுடன் சுற்றிவலைப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், முன்மொழியப்பட்ட முன்னெடுப்பின் கீழ் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுங்குவிதிகளுடன் முதலாவது கட்டத்தில் லண்ச் சீட்ஸ் மற்றும் பொலிதீன் பைகள் (சிலிசிலி பேக்)ஆகியவற்றின் பாவனை தடைசெய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து பொது வைபவங்களின் போது அலங்காரத்திற்காக பயன்படுத்தப்பட்டு வந்த பொலிதீன் பாவனை மற்றும் பொலிஸ்ட்ரின் லண்ச் பெட்டிகள் போன்றவற்றின் பாவனை மீதான தடை விதிக்கப்பட்டதுடன் அதேவேைளையில் உக்கக்கூடிய பிலாஸ்டிக் சந்தையில் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றீடாக சுற்றாடல் சினேகபூர்வ மற்றும் உக்கக்கூடியதுமான பொருருட்கள் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

# 4.0. சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதீப்பீட்டு அலகு

## 4.1. சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயற்பாட்டை நிறைவேற்றல்

### 4.1.1குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான சு.தா.ம செயன்முறையை நிர்வகித்தல்.

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டுப் அலகானது கருத்திட்டங்களால் தோற்றுவிக்கப்படும் பாதகமான சுற்றாடல் தாக்கங்களை தணிக்கும் முகமாக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயற்பாட்டை நிர்வாகம் செய்யும் அதனது பாரிய ஒழுங்கமைப்புப் பணியை குறித்துரைக்கப்பட்ட அனைத்து கருத்திட்டங்கள் தொடர்பிலும் தொடர்ச்சியாக முன்னெடுத்தது. இந்த செயற்பாடானது எதிர்கால பயன் மற்றும் தொழில்நுட்பம் பற்றிய மதிப்பீட்டு கூட்டங்களை கூட்டுதல், சு.தா.ம அறிக்கைகள் பற்றிய ஆய்வெல்லை (ToR) வரைவு, சு.தா.ம அறிக்கைகளை மதீப்பீடு செய்தல், மற்றும் பொதுமக்கள் பங்கேற்கும் செயற்பாட்டிற்கு அனுசரணை வழங்குதல் மற்றும் அதனைத் தொடர்ந்து ஒப்புதலளித்தல் மற்றும் கருத்திட்ட கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

2016ஆம் ஆண்டில், தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு IV சீ யின் கீழ் ஒப்புதல் அவசியமான மொத்த கருத்திட்டங்கள் 76 சு.தா.ம ஒழுங்குவிதிகளின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டன. அதனைத்தொடர்ந்து 18 கருத்திட்டங்களுக்குசுற்றாடல் தாக்கமதிப்பீட்டுப் பிரிவால் ஒப்புதல் அளிக்கப்பட்டதுடன் 03 கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் நிராகரிக்கப்பட்டது. 51 கருத்திட்டங்களுக்கான ஒப்புதல்கள் நிலுவையில் வைக்கப்பட்டன.

சு.தா.ம தேவையாகவுள்ள சில கருத்திட்டங்கள் தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் சு.தா.ம செயன்முறையை நிர்வாகம் செய்வதற்காக நியமிக்கப்பட்ட கருத்திட்ட அங்கீகாரமளிக்கும் முகவாரண்மைகளுக்கு (க.அ.மு). ஆற்றுப்படுத்தப்பட்டன. இருப்பினும் இந்த முகவராண்மைகள் தீர்மானம் மேற்கொள்ளும் முன்னர் ம.சு.அ யின் இணக்கப்பாட்டை பெறவேண்டும்.

ஆட்டவணை **4.1:** ம.சு.அ யின் சு.தா.ம பிரிவால் சு.தா.ம / ஆ.சு.ம கீழ் அறிக்கையிடும் போதான காலத்தில் அங்கீகர்க்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்

| **இல** | **கருத்திட்டப் பெயர்** | **சு.தா.ம /ஆ.சு.ம** |
|---|---|---|
| 1. | முன்மொழியப்பட்டுள்ள வடமேல் மாகாண கால்வாய் கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 2. | முன்மொழியப்பட்டுள்ள சம்பூர் 2 x 250 MW நிலக்கரி மின்உற்பத்தி கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 3. | மேல் எலஹர கால்வாய் கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 4. | 2வது புதய களனி பாலம் கருத்திட்டத்திங்கான துணை சுற்றாடல் தாக்க மதிப்பீடு இலங்கை அணுச்சக்தி சபையின் சேமிப்பு வசதியை தங்போது காணப்படும் அமைவிடத்தில் கட்டமைப்பை வலுப்படுத்துவதன் ஊடாக தக்கவைத்துக்கொள்ளல் | **சு.தா.ம** |
| 5. | கடவத்தை முதல் தம்புல்லை வரையில் மத்திய அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 6. | முன்னெமாழியப்பட்டுள்ள பஸ்நாகொட நீர்தேக்க கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 7. | முன்னெமாழியப்பட்டுள்ள உப்புத்தன்மை தடுப்பு அம்பத்தலை களனி கங்கையில்(அங்கீகாரம் நீடிப்பு) | **சு.தா.ம** |
| 8. | சியபலாண்டுவை வத்தேகம் மற்றும் மடுகம பிரதேசங்களில் ஒருங்கிணைக்கப்பட்ட சீனி கைத்தொழில் கருத்திட்டம் | **சு.தா.ம** |
| **இல** | **கருத்திட்டப் பெயர்** | **சு.தா.ம /ஆ.சு.ம** |

| | | |
|---|---|---|
| 9. | நிர்மாணத்துறை கைத்தொழிலுக்காக கரவலபிடியவில் கரைக்கு அப்பாலான மணல் அகழ்வு | **சு.தா.ம** |
| 10. | மாஓயா மற்றும் பொல்கஹவெல நீர்நிலைக்கு குறுக்கே மூழ்கியவாறான அணை நிர்மாணம் (அங்கீகாரம் நீடிப்பு) | **ஆ.சு.ம** |
| 11. | நடுக்குடாவில் இருந்து மன்னாருக்கு முன்மொழியப்பட்டுள்ள 220 கிலோ வாட் மின் பரிமாற்ற கருத்திட்டம் | **ஆ.சு.ம** |
| 12. | தரநியகலை மாலிபொடயில் ரண்வெலஓயா நுண் நீரி மின்னுற்பத்தி கருத்திட்டம் R | **ஆ.சு.ம** |
| 13. | மாஹா ஓயா லன்சிகமவில் கரையோர வளங்கள் முகாமைத்தவ திட்டத்திற்கான முன்மொழியப்பட்டுள்ள கரைக்கு அப்பாலான மணல் அகழ்வு(அங்கீகாரம் நீடிப்பு) | **ஆ.சு.ம** |
| 14. | முன்மொழியப்பட்டுள்ள கீழ் உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத் முன்மொழியப்பட்டுள்ள திட்டம், முன்மொழியப்பட்டுள்ள தல்பிடிகல நீர்தேக்க கருத்திட்டம்(அங்கீகாரம் நீடிப்பு) | **ஆ.சு.ம** |
| 15. | வீரவெலவில் முன்மொழியப்பட்டுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல்(அங்கீகாரம் நீடிப்பு) | **ஆ.சு.ம** |
| 16. | தெண் அதிவேக நெடுஞ்சாலைக்காக ஹம்பாந்தோட்டை அன்தரவேவகெலயில் முன்மொழியப்பட்டுள்ள கிறவல் மண் அகழ்வு கருததிட்டம் | **ஆ.சு.ம** |
| 17. | கட்டுநாயக்க ஏற்றுமதி பதனிடல் வலயத்தின் கட்டம் (IV) (Lot No. 131) முன்மொழியப்பட்டுள்ள இலத்திரணியல் கழிவு சுத்திகரிப்பு நிலையம் | **ஆ.சு.ம** |
| 18. | தரனியகலவில் முன்மொழியப்பட்டுள்ள மாலிபொட நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | **ஆ.சு.ம** |

**அட்டவணை 4.2 : சு.தா.ம / ஆ.சு.ம ஒழுங்குவிதிகளுக்கு அமைய அறிக்கையிடும் போதான காலத்தில் அங்கீகர்க்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்**

| **இல** | **கருத்திட்டப் பெயர்** | **சு.தா.ம /ஆ.சு.ம** |
|---|---|---|
| 1. | மேட்ரோ கொழும்பு திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | **சு.தா.ம** |
| 2. | பெத்தகும்புரவில் பிண்ணகல நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | **ஆ.சு.ம** |
| 3. | கொத்மலையில் குபல்லொலுவ நுண் நீர் மின் உற்பத்தி நிலையம் கருத்திட்டம் | **ஆ.சு.ம** |

அட்டவணை 4.3 : ம.சு.அ இணக்கப்பாடுடன் க.அ.மு கயால் அங்கீகர்க்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்

| **இல** | **கருத்திட்டப் பெயர்** | **சு.தா.ம /ஆ.சு.ம** |
|---|---|---|
| 1. | கொழும்பு துறைமுக நகரம் அபிவிருத்தி கருத்திட்டம் க.அ.மு- கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வள முகாமைத்தவ திணைக்களம் | **சு.தா.ம** |
| 2. | முன்மொழியப்பட்டுள்ள சோபியா கொழும்பு நகர ஹோட்டல் இல. 295/295ஏ காலி வீதி கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03 க.அ.மு-நகர அபிவிருத்தி அதிகாரசபை | **சு.தா.ம** |
| 3. | முன்மொழியப்பட்டுள்ள கலப்பு பயன்பாட்டு அபிவிருத்தி சிலே வைலண்ட் க.அ.மு-நகர அபிவிருத்தி அதிகாரசபை | **ஆ.சு.ம** |
| 4. | திக்கல நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் க.அ.மு மகாவலி அதிகாரசபை - இலங்கை | **ஆ.சு.ம** |
| 5. | கிருள்ள நுண் நீர் உற்பத்தி கருத்திட்டம் க.அ.மு- மகாவலி அதிகாரசபை - இலங்கை | **ஆ.சு.ம** |
| 6. | ஹன்கந்த நுன் நீர் உற்பத்தி கருத்திட்டம் க.அ.மு- மகாவலி அதிகாரசபை - இலங்கை | **ஆ.சு.ம** |

**அட்டவணை 4.4 : சு.தா.ம ஒழுங்குவிதிகளின் கீழ் சு.தா.ம பிரிவால் செயன்முறைப்படுத்தப்படும் கருத்திட்டங்களின் பட்டியல்.**

| இல | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம /ஆ.சு.ம |
|---|---|---|
| 1. | போகாஹென புலத்சிங்களவில் நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 2. | முன்மொழியப்பட்டுள்ள கழிவில் இருந்து சக்தி கருத்திட்டம் தொம்பேஇ கம்பஹா மாவட்டம் | சு.தா.ம |
| 3. | பதுளையில் புதிய உ்ள்ளூர் விமான நிலையம் நிர்மாணம் | சு.தா.ம |
| 4. | மட்டக்களப்பில் தோல் பதனிடல் மற்றும் தோல் பொருட்கள் உற்பத்தி கைத்தொழில் தொகுியை அமைப்பதற்கான முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டம் | சு.தா.ம |
| 5. | கண்டி ஹன்தானயில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச யோகா தியானம் மற்றும் ஆயர்வேத நிலையம் | சு.தா.ம |
| 6. | காலி ஹீன்பண்தலவில் முன்மொழியப்பட்டுள்ள கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | சு.தா.ம |
| 7. | தெண் அத்வேக நெடுஞ்சாலையை மாத்தறையில் இருந்து மத்தலை வரை விஸ்தரிப்பு கருத்திட்டத்திற்கான தன்தெனியா அருகில் முன்மொழியப்பட்டுள்ள இடைமாறல் அமைவிடத்தை மாற்றுவதற்கான துணை சு.தா.ம | சு.தா.ம |
| 8. | கன்தளை சீனி உள்பத்திச் சாலையை புதுப்பிக்க முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டம் | சு.தா.ம |
| 9. | மேட்ரோ கொழும்பு திண்ம கழிவு முகாமைத்தவ கருத்திட்டம்- அரக்குளாவில் மாற்று அமைவிடம் | |
| 10. | புத்தளத்தில் முன்மொழிப்பட்டுள்ள உள்ளூர் விமான நிலையம் | சு.தா.ம |
| 11. | முன்மொழிப்பட்டுள்ள மரம் பிரித்தெடுத்தல்(பைனஸ்) மற்றும் துரியங் பயிற்செய்கை கருத்திட்டம் பஸ்பாகே கோரல நாவலபிடிய(ஹைபோட் தோட்டம்) | சு.தா.ம |
| 12. | 297, கட்டுகஸ்தொட கண்டியில் சுப்பர் சென்டர் மற்றும் கூட்டாதன தொகுதி கருத்திட்டம் | சு.தா.ம |
| 13. | பொத்துஹெரயில் இருந்து கலகெதர(பகுதி 3) வரையில் முன்மொழியப்பட்டுள்ள மத்திய அதிவேக நெடுஞ்சாலை | சு.தா.ம |
| 14. | பேராதெனியா கன்னொருவ வீதியில் கலப்பு அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 15. | முன்மொழியப்பட்டுள்ள சபரகமுவ அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம் | சு.தா.ம |
| 16. | கண்டி, குருதெணியாவில் முன்மொழியப்பட்டுள்ள கிராண்ட் பெலஸ் 200 அறைகள் கொண்ட ஐந்து நட்சத்திர ஹோட்டல் | சு.தா.ம |

| இல | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம<br>ஆ.சு.ம |
|---|---|---|
| 17. | நாரலகஹவத்தை மற்றும் அரக்கோட்டே ரேகாவ மேற்கு தங்காலை முன்மொழியப்பட்டுள்ள வன் இலவன் ஆயர்வேத ரெசோட் ஹோட்டல் | சு.தா.ம |
| 18. | கிருளப்பனை சந்தியில் இருந்து மெலிபன் சந்திவரையில் பேஸ்லைன் பாதையை விஸ்தரித்தல் | சு.தா.ம |
| 19. | தம்புல்லையில் இருந்து ராஜகிரிய வரை உயர் அதிவேக நெடுஞ்சாலை | சு.தா.ம |
| 20. | ஜாஎல, ஏக்கலயில் முன்மொழியப்பட்ட அரை-பொறியியளாக்கப்பட்ட கழிவு அகற்றல் அமைவிடம் | சு.தா.ம |
| 21. | நீர் விநியோக கருத்திட்டம் கட்டம் IV- மாத்தறை | சு.தா.ம |
| 22. | முன்மொழியப்பட்டுள்ள யாழ்பாண நகர கழிவு நீர் தொகுதி | சு.தா.ம |
| 23. | அம்பலகமுவயில் முன்மொழியப்பட்டுள்ள புலத்கம நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 24. | குருனாகலை தொடக்கம் ஹபரனை வரையிலான புகையிரத விஸ்தரிப்பு கருத்திட்டம் | சு.தா.ம |
| 25. | முன்மொழியப்பட்டுள்ள சீதாவக கங்கா நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 26. | கண்டி குண்டசாலையில் முன்மொழியப்பட்டுள்ள நிலாசெவன வீடமைப்பு கருத்திட்டம் | சு.தா.ம |
| 27. | ஹம்பாந்தோட்டையில் 10 மில்லியன் MTPA எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை அமைப்பதற்கான கருத்திட்டம் | சு.தா.ம |
| 28. | மதுருஓயா வலது கரை அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 29. | ஹொரணை பேர்த் தோட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள ஏற்றுமதி பதனிடல் வலயம்- II,(மீளமைக்கப்பட்ட கருத்திட்டம்) | சு.தா.ம |
| 30. | சூரயவெவயில் முன்மொழியப்பட்டுள்ள முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் | சு.தா.ம |
| 31. | நாவலபிட்டிய ஹபொட் தோட்டத்தில் தேயிலை பயிற்செய்கை, மந்தை வளர்ப்பு மற்றும் கலப்பு பயிர்செய்கைக்காக முன்மொழியப்பட்டுள்ள மரம் தரிக்கும் (பைணஸ்) கருத்திட்டம் | சு.தா.ம |
| 32. | ஸ்ரீஜயவர்தனபுர கோட்டேயில் கழிவு நீர் அகற்றும் கருத்திட்டம் | சு.தா.ம |
| 33. | வெளிச்சுற்று அதிவேக நெடுஞ்சாலையை மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்கு இணைப்பதற்கான கடவத்தை இடமாறல் | சு.தா.ம |
| 34. | கலு கங்கையில் முன்மொழியப்பட்டுள்ள உப்புநீர் அணை | சு.தா.ம |
| 35. | துறைமுக நகர அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக கெரவலபிட்டியவில் கடற் கரைக்கு அப்பால் மணல் அகழ்வு கருத்திட்ட துணை சு.தா.ம | சு.தா.ம |
| 36. | சிறிய அளவிலான கமக்காரர் சார் பிபிலை சீனி-மின்- பால் பண்ணை ஒருங்கிணைந்த கருத்திட்டம். வரையறுக்கப்பட்ட சீனி கைத்தொழில்சாலை | சு.தா.ம |

| இல | கருத்திட்டத்தின் பெயர் | சு.தா.ம ஆ.சு.ம |
|---|---|---|
| 37. | நுவரெலியா மாநகர சபைக்கான நகர அபிவிருத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 38. | முன்மொழியப்பட்டுள்ள கீழ் கொஸ்கம நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | சு.தா.ம |
| 39. | முன்மொழியப்பட்டுள்ள மாலிபொட நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் ( 2MW) | ஆ.சு.ம |
| 41. | முன்மொழியப்பட்டுள்ள சனக்மா நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 41. | மேதடம்பரவில் முன்மொழியப்பட்டுள்ள நாரம்பனாவ நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம | ஆ.சு.ம |
| 42. | கந்தளாயில் முன்மொழியப்பட்டுள்ள கொரொக்ஓயா பனாவ நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம; | ஆ.சு.ம |
| 43. | பலாங்கொடையில் மேல் சமனலவெவ நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம | ஆ.சு.ம |
| 44. | வீரவெலவில் முன்மொழியப்பட்ட பணியாள் கிராமத்திற்காக துணை ஆ.சு.ம | ஆ.சு.ம |
| 45. | பதுலை மாவட்டத்தில் கனேகல நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 46. | பதுலை மாவட்டத்தின் ஹாலிஎலயில் நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 47. | லொக்கல்ஓயா நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 48. | நுவரெலியா மாவட்டத்தின் ஹல்கருன் ஓயா நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 49. | ஹம்பாந்தோட்டையில் கெட்டன்வெவயில் முன்மொழியப்பட்டுள்ள பருத்தி மற்றும் சோயா பீன் பயிர்செய்கை மற்றும் பதனிடல் தொகுதி | ஆ.சு.ம |
| 50. | பதுலை, ஹாலிஎல்லை நெலுவையில் முன்மொழியப்பட்டுள்ள பல்லகெட்டுவை நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |
| 51. | காலி நெலுவையில் முன்மொழியப்பட்டுள்ள மேல் நெலுவை நுண் நீர் மின் உற்பத்தி கருத்திட்டம் | ஆ.சு.ம |

மேற்படி கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக சிக்கலான சுற்றாடல் பிரச்சினைகளை உள்ளடக்காத தெரிவுசெய்த குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான ஆ.சு.ம செயன்முறை நடைமுறையாக்கமானது ம.சு.அ யின் மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டங்களை வகைப்படுத்தல் செயற்பாட்டில் சு.தா.ம பிரிவானது மாகாண அலுவலகங்களுடன் நெருக்கமாக பணியாற்றியது. அத்துடன் அவசியமான உதவியும் ஒத்துழைப்பும் அவசியமான வேளைகளில் வழங்கப்பட்டன. ம.சு.அ யின் சு.தா.ம பிரிவானது ஏனைய அங்கீகாரம் வழங்கும் முகவராண்மைகள் அவற்றிக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட கருத்திட்டங்களுக்கு சு.தா.ம செயன்முறையை நடைமுறை செய்யும் வகையில் வெற்றிக்கு அவசியமான தொழில்நுட்ப உதவியையும் வழங்கியது.

### 4.1.2 அங்கீகரிக்கப்பட்ட சு.தா.ம/ஆ.சு.ம கருத்திட்டங்களை கண்காணித்தல்

ம.சு.அ யின் சு.தா.ம பிரிவானது அங்கீகாரத்தின் பிரகாரம் இருக்கவேண்டிய இணக்கப்பாட்டை உறுதிசெய்யும் முகமாக ஏற்கனவே அங்கீரிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மீதான முறையான இணக்கப்பாட்டு கண்காணிப்பை தொடர்ந்தும் முன்னெடுத்தது. இக்காலத்தில் பின்வரும் கருத்திட்டங்கள் ஒழுங்கான கூட்டங்கள் மற்றும் கள விஜயங்கள் ஊடாக முறையாக கண்காணிக்கப்பட்டன.

அட்டவணை 4.5 : இக்காலத்தில் கண்காணிக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல்

| இல | கருத்திட்டத்தின் பெயர் |
|---|---|
| 1. | காலி கொக்கலையில் சூழல்நேய 5 நட்சத்திர விலா ஓய்வுவிடுதி கருத்திட்டம் |
| 2. | பொல்பிடிய- பன்னியபிடிய 230 KV மின் பிமாற்ற லைன் |
| 3. | வேளிச்சுற்று அதிவேக நெடுஞ்சாலை கருத்திட்டம்-கட்டம் III (கடவத்தை-கெரவலபிட்டிய) |
| 4. | மாத்தறைஸ்ரீகதிர்காமம் புகையிரதப்பாதை விஸ்தரிப்பு கருத்திட்டம் -கட்டம். I |
| 5. | துல்கரியாவில் மாஸ் பெப்ரிக் பூங்கா |
| 6. | புரோட்லேண்ட் நீரி மின்உற்பத்தி கருத்திட்டம் |
| 7. | ஏத்தமல்ல எல்ல நுண் நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் |
| 8. | நூய கங்க நுண் நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் |
| 9. | உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம் |
| 10. | முனாகொல நுண் நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் |
| 11. | அனுராதபுரம் ஓயமடுவ எமல்சன் எக்ஸ்புலோசிவ் உற்பத்தி கைத்தொழிற்சாலை |
| 12. | மாவநான நுண் நீர்மின் உற்பத்தி கருத்திட்டம் |
| 13. | முாத்தறை முதல் மத்தலை வரையிலான தெண் அதிவேக நெடுஞ்சாலை விரிவாக்கம் கருத்திட்டம் |
| 14. | யுன்ஓயா நீர்தேக்கம் கருத்திட்டம் |
| 15. | மன்னார் முதல் வவுனியா வரை அனுராதபுரம் வழியாக முன்மொழியப்பட்டுள்ள 132 kV மின் பரிமாற்று லைன |
| 16. | வீரவிலயில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் |
| 17. | அடபாகேயில கலாதுஓயா நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 18. | இலுக்பெலஸ்ச நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 19. | கேஹெல்கமு ஓயா நுண் நீர் மின் ஊற்பத்தி நிலைய கருத்திட்டம்- கட்டம் - II |
| 20 | குபரகல நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 21 | தும்புலு ஓயா நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 22 | கண்டி நகர கழிவு நீர் முகாமைத்தவ கருத்திட்டம் |
| 23 | வவுனியா மாவட்டத்தில் பெருஆறுக்கு குறுக்கே நீர்தேக்கமொன்றில் இருந்து மேற்பரப்பு நீர பிரித்தெடுத்தல் |
| 24 | அரநாயக்காவில் அசுபினி எல்ல நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 25 | அரநாயக்க தியன்வெல நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 26 | காலி மல்காபன கொக்கலயில் சூழல்நேய ஐந்து நட்சத்திர விலா கருததிட்டம் |
| இல | கருத்திட்டத்தின் பெயர் |

| | |
|---|---|
| 27 | முன்மொழியப்பட்டுள்ள கொழும்பு நகர அபிவிருத்தி கருத்திட்டம் |
| 28 | மோரபிடிய நுண் நீர் மின் உற்பத்தி நிலைய கருத்திட்டம் |
| 29 | இல்51/2, ஸ்ரீமத கந்தாவத்தை மாவத்த கண்டியில் முன்மொழியப்பட்டுள்ள கூட்டாதன வகை அப்பாட்ஸ்மன்ட் தொகுதி |
| 30. | மத்தலை முதல் அம்பாந்தோட்டை வரையில் அதிவேக நெடுஞ்சாலை |
| 31. | முன்மொழியப்பட்டுள்ள கலுகங்க நீர்த்தேக்கம் மற்றும் கமத்தொழில் விஸ்தரிப்பு கருத்திட்டம் |
| 32. | முன்மொழியப்பட்டுள்ள மொரகாகந்த நீர்தேக்க கருத்திட்டம் |

**4.1.3 தற்போதைய சு.தா.ம சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் செயன்முறைகள் ஆகியவற்றை சுமூகமான நடைமுறைக்கு கொண்டுவரும் முகமாக நெறிப்படுத்தி மேம்படுத்தல்**

சட்ட வரைஞர் மற்றும் ம.சு.அ யின் சட்ட ஆலோசகர்கள் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் அடிப்படையில் சு.தா.ம ஒழுங்குவிதிகள்,குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் மற்றும் கருத்திட்டம் அங்கீகரிக்கும் முகவராண்மைகளின் பட்டியல் ஆகியவற்றில் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு அவசியமான நடவடிக்கைகளை சு.தா.ம பிரிவு மேற்கொண்டது. கருத்திட்ட முன்மொழிவாளர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு சுற்றாடல் முகாமைத்துவ திட்டம் உள்ளடங்களாக கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கான புதிய ஏற்பாடுகள் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு(சு.தா.ம) ஒழுங்குவிதிகளில் உள்ளடக்கப்பட்டன. குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களின் பட்டியல் மற்றும் கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் முகவராண்மைகளின் பட்டியல் ஆகியன பங்காரர் முகவாரண்மைகள் மற்றும் ம.சு.அ மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் கரிசனைகளையும் உள்ளடக்கியவாறு திருத்தப்பட்டன.. இந்த ஆவணங்கள் மேலதிக நடவடிக்கைக்காக சட்ட வரைஞர்
திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

**4.1.4 ம.சு.அ பணியாளர்கள் மற்றும் சு.தா.ம பணியார்களிகன் ஆற்றலை மேம்படுத்தல்**

அறிக்கையிடப்பட்ட காலத்தின் போது சு.தா.ம பிரிவு நடாத்திய பல பயிற்சிப்பட்டறைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

(அ) பேராசிரியர் தேவக வீரகோன் தலைமையில் நிபுணத்துவ குழுவொன்றினால் இ-ஓட்டம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் கண்டுபிடிப்புகள் பற்றிய விடயங்களை கலந்துரையாடும் முகமாக ம.சு.அ உத்தியோகத்தர்கள மற்றும் கருத்திட்ட ஆங்கீகாரமளிக்கும் முகவராண்மைகளுக்கு பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது. சு-ஓட்டத்தை தீர்மானித்தல் தொடர்பில் அணைகள்/தடுப்புகள் ஆகியவற்றால் பேணப்படவேண்டியவை பற்றிய வழிகாட்டிகள் மற்றும் நியமங்களை ஆராய்வதே இதன் முக்கிய நோக்கமாகும்.

(ஆ) வட வத்திய,ஊவா மற்றும் மத்திய மாகாணங்கள் மற்றும் ம.சு.அ கம்பஹ மாவட்ட அலுவலகம் ஆகியவற்றை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு சு.தா.ம/ ஆ.சு.ம சம்பந்தமான விடயங்கள் பற்றிய நான்கு செயலமர்வுகள் /பயிற்சிப்பட்டறைகள்

(இ) சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் சு.தா.ம செயன்முறை பற்றிய பயிற்சிப்பட்டறை ஒன்று வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தின் உத்திளோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது.

(ஈ) சு.தா.ம பிரிவின் உத்தியோகத்தர்களுக்கு ஆய்வு எல்லை (ToR) தயாரிப்பு பற்றிய பயிற்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது.

(உ) ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் ம.சு.அ மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட முகவராண்மைகள் ஆகியவற்றை சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு சுற்றாடல் முகாமைத்தவ திட்டம் தயாரிப்பது பற்றிய இரண்டு நாள் பயிற்சிப்பட்டறை நடாத்தப்பட்டது.

### 4.1.5 மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு நடைமுறையாக்கம் (SEA)

#### 4.1.5.1 மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டு(மூ.சு.ம) ஏற்பாடுகளில் உள்ளடக்கும் முகமாக தே.சு.சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவருதல்.

தேசிய சுற்றாடல் சட்டத்தில் மூ.சு.ம பற்றிய புதிய ஏற்பாட்டை உள்ளடக்கும் ஒப்புதலை அமைச்சரையிடம் இருந்து பெறுவதற்கு அமைச்சரவை நிருபமொன்று தயாரிக்கப்பட்டு சுற்றாடல் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

#### 4.1.5.2 மேல் பிராந்தியத்திய மாநகர திடத்திற்கான மூ.சு.ம

சு.தா.ம பிரிவானது மேற்கு பிராந்திய பெருநகர திட்ட கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் மேற்கு பிராந்திய பெருநகர திட்டத்திற்கு மூலோபாய சுற்றாடல் மதிப்பீட்டை மேற்கொள்ளும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. இந்த ஆய்வுக்கான ஆய்வெல்லை வரைவுக்கு சு.தா.ம.பிரிவானது ஒத்துழைப்பை வழங்கியது. தற்போது இந்த மூலோபாய சுற்றாடல் மதிப்பீடானது (மூ.சு.ம) ஆலோசனை குழுவொன்றால் நடாத்தப்பட்டுள்ளதுடன் வரைவு அறிக்கையானது சு.தா.ம பிரிவால் மீளாய்வுக்கு உட்படுத்தப்பட்டு கருத்துக்கள்/ அவதானிப்புகளுடன் இறுதிசெய்வதற்காக மேற்கு பிராந்திய பெருநகர் திடடமிடல் கருத்திட்டததிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

#### 4.1.5.3 இலங்கையில் நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் நீர்பாசன அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றிக்கான மூலோபாய சுற்றாடல் மதிப்பீடு(மூ.சு.ம)

சு.தா.ம பிரிவானது நீர்பாசன நீர் வளங்கள் அமைச்சின் ஒத்துழைப்புடன் நீர் வளங்கள் முகாமைத்துவம் மற்றும் நீர்பாசன அபிவிருத்தி திட்டம் ஆகியவற்றிக்கான மூ.சு.ம ஒன்றை முன்னெடுப்பதற்கான முன்னெடுப்பை ஆரம்பித்தது மூ.சு.ம ஆய்வுக்கான ஆய்வெல்லையை இறுத்திப்படுத்துவதற்கான தொழில் நுட்ப உதவியை ம.சு.அ வழங்கியதுடன் ஒப்பந்தத்தை வழங்குவதற்கு பொருத்தமான ஆலோசனை முகவரை தெரிவுசெய்வாற்கான கூட்டங்களிலும் பங்கேற்றது. இந்த ஆய்வானது தற்சமயம் இடம்பெறும் நிலையில் காணப்படுகின்றது.

### 4.1.6 ஏனைய செயற்பாடுகள்

#### 4.1.6.1 சனாதிபதி சுற்றாடல் விருது நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல்

சு.தா.ம பிரிவானது சிறந்த சுற்றாடல் சிநேகபூர்வ நிறுவனம் (பெரிய மற்றும் சிறிய அளவு) மற்றும் சிறந்த மீள் புத்தாக்க சக்தி கருத்திட்டம் ஆகியவற்றை தெரிவு செய்தல் செயற்பாட்டின் ஊடாக அதன் பயனுறுதியான பங்களிப்பை வழங்கியது. சு.தா.ம பிரிவின் உத்தியோகத்தர்கள் விண்ணப்ப படிவங்கள்,மற்றும் புள்ளி வழங்கும் திட்டம் தயாரித்தல், விண்ணப்பங்களை சரிபார்த்தல் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் சம்பந்தமாக கள விஜயங்களில் ஈடுபடல் ஆகிய நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

#### 4.1.6.2 ஐ.நா- காடழிப்பு மற்றும் சீரழிப்பில் இருந்து உமிழ்வை குறைத்தல் . நிகழ்ச்சித்திட்டத்திற்கு பங்களிப்பு செய்தல் (UN REDD)

காடழிப்பு மற்றும் காடுகள் சீரழ்ப்பு காரணங்களுக்கு பயனுறுதியான முறையில் பரிகாரம் காணும் வகையில ஐ.நா- காடழிப்பு மற்றும் சீரழிப்பில் இருந்து உமிழ்வை குறைத்தல் + நிகழ்ச்சித்திட்டதால் நடாத்தப்பட்ட

இலங்கைக்கான தேசிய காடழிப்பு மற்றும் சீரழிப்பில் இருந்து உமிழ்வை குறைத்தல் +மூலோபாயம் நிகழ்ச்சித்திட்டத்திற்கு சு.தா.ம பிரிவானது முனைப்புடன் பங்கேற்றது. மூலோபய அபிவிருத்தியானது நடைமுறையாக்கம் பற்றிய விரிவானவொரு மூலோபாய செயற்திட்டத்தை அடையும் வகையில் பல தொடரான பயிற்ச்சிப்பட்டறைகள் மற்றும் இடை நிறப்பு ஆய்வுகள் ஆகியவற்றுடன் பல பங்குதாரர்களையும் உள்ளடக்கி இருந்தது. தற்போதைய சு.தா.ம மற்றும் மூ.சு.ம செயன்முறையை பலப்படுத்தவதற்கான தேவை வலியுறுத்தப்பட்டது. அதன் பிரகாரம் சு.தா.ம மற்றும் மூ.சு.ம செயன்முறைகள் ஆகியவற்றின் திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமும் காடழிப்பு மற்றும் சீரழிப்பில் இருந்து உமிழ்வை குறைத்தல் + நிகழ்ச்சித்திட்டதில் உள்ளடக்கப்பட்டது.

### 4.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு அலகு

ம.சு.அ சம்பந்தப்பட்ட ஏனைய அரச முகவராண்மைகளுடன் ஒருங்கிணைந்து நாட்டின் இயற்கை வளங்களை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பை கொண்டுள்ளது. இந்த ஒருங்கிணைப்பானது இயற்கை வளங்கள் முகாமைத்துவம மற்றும் கண்காணிப்பு பிரிவின் ஊடாகவே மேற்கொள்ளப்படுகின்றது. ஆகையால் இந்த பிரவானது இயற்கை வளங்கள் மகாமைத்துவம் தொடர்பான பல நடவடிக்ககைளில் ஈடுபடுகின்றது.

தேசிய வளங்கள் முகாமைததுவம் தொடர்பில் ஓழுங்குவிதிகளை வகுத்தல் வழிகாட்டிகளை தயாரித்தல், சுற்றாடல் பாதுகாப்பு பகுதிகள் என்ற வகையில் பிரகடனம் செய்யப்பட்டுள்ள பிரதேசங்களில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்கான கருத்திட்ட அங்கீகாரமளிப்பு செயற்பாட்டை நடைமுறைபடுத்தல், தேசிய ஈரநில செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்தல் ஆகியன இந்த பிரிவால் மேற்கொள்ளப்படும் பிரதான நடவடிக்கைகளாக கருதலாம். இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய தகவல் சாதனங்கள், மொடுள்ஸ் மற்றும் கையேடுகள் தயாரித்தல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்கள் சார்ந்த சாதனங்கள் தயாரித்தல் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களென பிரகடனம் செய்யப்பட்ட பிதேசங்களுக்கு முகாமைத்தவ திட்டங்கள் தயாரித்தல அகியனவும் இந்த பிரிவால் முன்னெடுக்கப்படும் முக்கிளமான நடவடிக்கைகள் அகும்.2016ஆம் ஆண்டின் போது பின்வரும் நடவடிக்கைகள் இயற்கை வளங்கள் முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு பிரவால் முன்னெடுக்கப்பட்டன.

#### 4.2.1 இயற்கை வளங்கள முகாமைத்தவம்

##### 4.2.1.1 இயற்கை வளங்கள முகாமைத்தவம் பற்றிய முகவராண்மைகளுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு கூட்டங்கள்

**(**அ) அகழ்வு குழிகளை வளப்படுத்தல் மற்றும் முறையாக அபிவிருத்தி செய்யப்பட்ட நடவடிக்கைகளுக்காக வழிகாட்டிகள் தயாரித்தல் பற்றிய ஐந்து கூட்டங்கள் 2016ஆம் ஆண்டில் இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தில் ஈடுபட்டள்ள சம்பந்தப்பட்ட பங்குதார முகவராண்மைகளுக்கு நடாத்தப்பட்டு உள்ளன. அகழிவு குழிகள் வளப்படுத்தல் பற்றிய வழிகாட்டிகளின் இறுதி வரைவு.

(ஆ) உயிரியக்க கொதிகலனுக்கு மரத்தை எரிபொருளாக பயன்படுத்தல், நிர்மாணப் பகுதிகளில் மண், சேறு மற்றும் கழிவுப்பொருட்கள் கழுவுதல் மூலம் மணல் பிரித்தெடுத்தல் ஆகியவற்றிக்கு சுற்றாடல் பரிந்துரைகள் மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் வேளையில் பின்பற்ற வேண்டிய வழிகாட்டிகள் ம.சு.அ உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்டு ம.சு.அ மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மத்தியில் விநியோகிக்கப்பட்டன.



(இ) நீதிமன்றத்தால் விடுக்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் கட்டான பிரதேசத்தில் கைவிடப்பட்டிருந்த அகழ்வு குழிகளில் இடம்பெற்றுவரும். வளப்படுத்தல் நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. மஹாஓயா மணல் அகழ்வுகான முகாமைத்துவ திட்டம் தயாரிப்பது தொடர்பில் புவிசிசரித்திரவியல் சுரங்கப் பணியகத்தால் நடாத்தப்பட்ட பல கூட்டங்களில் பங்கேற்று அறிக்கை வரைவு மேற்கொள்ளப்பட்டது. மணல் அகழ்வில் ஈடுபடுவோர் மற்றும் மணல் அகழ்வு நிறுவனங்களுக்கு அனுமதி /அங்கீகாரம் வழங்கும் நிறுவனங்கள் பின்பற்றவேண்டிய பொருத்தமான வழிகாட்டிகளை அபிவிருத்தி செய்யும் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகளை இனங்காணல் ஆகிய நோக்கங்களுக்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவின் கீழ் மாகாவலி ஆற்றின் வழியாக அமைந்த வில்கமுவ பிரதேசசெயலகப் பிரிவில் மணல் அகழ்வு ஆய்வு நடாத்தப்பட்டது.

(ஈ). புத்தளம் மாவட்டத்தில் முந்தல் பகுதியில் இயற்கை மணல் குன்றுகளை பிரிதெடுத்தலுடன் தொடர்புடைய பிரச்சினைகளை கண்காணிக்க புவிச்சரிதவியல் சுரங்கப் பணியகத்தால் ஒழுங்கமைக்கப்பட்ட கூட்டு பரிசோதனையில் பங்குபற்றியதுடன் அவதானிப்புகளும் கருத்துக்களும் புவிச்சரிதவியல் சுரங்கப் பணயகத்திற்கு வழங்கப்பட்டன.

### 4.2.1.2 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் பற்றிய தகவல், துண்டுப்பிரசுரம் மற்றும் வழிகாட்டிகள்

(அ) இயந்கை வளங்கள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் பற்றிய அறிவை பொது மக்கள்,பாடசாலை சமூகம் மற்றும் பங்தாரர் முகவராண்மைகள் ஆகியோர் மத்தியல் மேம்படுத்தும் நோக்கில் சதுப்பு நிலம், நீர்வீழ்ச்சிப் பகுதிகள் மற்றும் ஈர நிலங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பு பற்றிய மூன்று துண்டுப்பிரசுரங்கள் தயாரிக்கப்பட்டன.

.




உரு 4-1: இயற்கை வளங்கள டுகததமைததவ துண்டுப் பிரசுரங்கள்

### 4.2.1.3 விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

(அ).உள்ளூர் அதிகார சபைகளின் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ம.ச.அ பிரதேச உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு மூன்று விழ்பபுணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்தலை, கொழும்பு மற்றும் கம்பஹ மாவட்டங்களில் நடாததப்பட்டன. மண் நிரப்புதல் செயற்பாடுகள் மற்றும் வதிவிட தேவைகளுக்கான காணி உப பிரிவு ஆகியவற்றுக்கு சுற்றாடல் பரிந்துரைகள் வழங்கும் வேளையில் அவர்கள் பின்பற்றவேண்டிய முறையான செயள்முறை பற்றிய வழிப்புணர்வை அவர்களுகக வழங்கி அத்தகைய கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலம் சுற்றாடலுக்கு ஏற்படும் தாக்கத்தை குறைப்பதே இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

(ஆ) சுகாதார அமைச்சின் வேண்டுகோளுக்கு இணஙக பயிலுநர் பொது சுகாதார பர்சோதகர்களுக்கு "இயற்கை வளங்கள் முகாமைத்துவத்தின் முக்கியத்துவம்" பற்றிய சுற்றாடல் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்ட மொன்று சுகாதார அமைச்சின் பயிற்சி நிலையத்தில் நடந்தது.

(இ) தேசிய தொழிற்பயிற்சி அதிகாரசபை பயிலுநர்கள், நிர்வாக பொது சகாதார பரிசோதகர்களுகு ஒழுங்கமைக்கப்பட்ட டிப்ளோமா, சுகாதார அமைச்சு, கொமர்சல் வங்கி, கொத்தலாவை பாதுகாப்பு அகடமியின் வைத்திய மாணவர்கள், ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் ஒழுங்கமைக்கப்பட்ட "தேசிய கண்காட்சி மற்றும் பிசினஸ் கிலினிக்" மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் பற்றிய சான்றிதழ் பாடநெறி போன்ற ஏனைய நிறுவனங்களால் நடாத்தப்பட்ட பயிற்சிப்பட்டறை மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் வளவாலர்களாக பங்குகற்றிமை.

### 4.2.1.4. நீர் நிலைகள்/நீரேந்தும் பகுதிகளின் பாதுகாப்பு

#### 4.2.1.4.1 நீர் வீழ்ச்சிகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்துப் பகுதிகள் பாதுகாப்பு பற்றிய கொள்கை

நீரத்தாரைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீரேந்துப் பகுதிகள் ஆகியவற்றை பாதுகாக்கும் தேசியக் கொள்கையின் பிரகாரம் நீர் வளங்கள் /நீரேந்துப் பகுதிகள் தொடர்பில் தயரிக்கப்பட்ட பட்டியலின் பிரகாரம் இனங்காணப்பட்ட பொருத்தமான பிரதேசங்களை சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்கள் என்று பிரகடனம் செய்வதற்கு ம.சு.அ நடவடிக்கை எடுத்தது. நீரேந்துப்பகுதிகளின் சீரழிவு பற்றிய பொது மக்கள் மற்றும் அரசு-சாரா நிறுவனங்கள் ஆகியோரின் புகார்களை தொடர்ந்து பல பரிசோதனைகள் இடம்பெற்றதுடன் அதனைத் தொடர்ந்து அத்தகைய நடவடிக்கைகளை நிறுத்தவதற்கு செயற்பட்டது.



#### 4.2.1.4.2 ஹொரணை இங்பிரியா பிரதேச செயலக பிரிவு பிரதேசங்களில் நீர் வளங்களை பாதுகாத்தல்

இனங்காணப்பட்ட நீரோடைகள், நீர்த்தேக்கங்கள் மற்றும் இங்கிரிய பிரதேச செயலக பிரதேசத்தின் கிட்டிய நீரேந்துப்பகுதிகள் ஆகியவற்றுக்கான பாதுகாப்பு மற்றும் முகாமைத்தவ திட்டம் தயாரித்தல் செயற்பாடானது இங்கிரிய பிரதேச செயலக அலுவலகத்தின் ஒத்துழைப்புடன் நிறைவடைந்தது. இதற்கு சமாந்தரமாக இங்கிரிய மற்றும் ஹொரண பிரதேச செயலகங்களில் நீரேந்துப்பகுதி பாதுகாப்பு மற்றம் மகாமைத்துவ குழுக்கள் இந்த பிரிவின் வழிகாட்டிகளுக்கு அமைவாக தாபிக்கப்பட்டது.

#### 4.2.1.4.3 பதுளை மாவட்டத்தில் நீரேந்துப்பகுதி பாதுகாப்பு

பதுலை மாவட்டத்தில் அமைந்துள்ள தேயிலைத் தோட்டங்களில் காணப்படும் 1148 ஹெக்ரேயர் (1675 காணித் துண்டுகள்) பரப்பளவில் அமைந்துள்ள நீரேந்துப் பகுதிகள் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளன.

முதலாவது கட்டத்தில் ஹாலிஎல்லை பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள நீரேந்துப் பகுதிகள் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்யப்படவுள்ளன. இந்த பகுதிகளின் எல்லைகள் காணி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் ஜீ.பி.எஸ் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் அளவிடப்பட்டன. வர்த்தமானி அறிவித்தலின் இறுதி வரைவு தயாரிக்கப்பட்டது



#### 4.2.1.4.4 இலங்கையில் நீர்வீழ்ச்சிகளை பேணல்

நீர்வீழ்ச்சிகள் மீதான நேரடியான மற்றும் மறைமுக அச்சுறுத்தல் மற்றும் தாக்கங்களை கருத்திற்கொண்டு நீர் வீழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்ட நுண் நீர் மின் உற்பத்தி செய்யும் கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்காமல் இருப்பதற்கு மேற்கொண்ட கொள்கைத தீரமானத்தின் பிரகாரம் 547 நீர் வீழ்ச்சிகளை உள்ளடக்கிய பட்டியல் ஒன்று

தயாரிக்கப்பட்டதுடன் அவற்றை தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 24 சீ யின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடனம் செய்வதற்கு சபையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. மேலும், இந்த பட்டியலானது நுண் நீர் மின் உற்பத்தி பொறித்தொகுதியைக் கொண்ட நீர் வீழ்ச்சிகள் மற்றும் நுண் நீர் மின் உற்பத்தி பொறித்தொகுதியை கொண்டிராத வீழ்ச்சிகளை என்பதன் அடிப்படையில் இரண்டு வகுப்புகளாக வகைப்படுத்தி வர்தமானியில் உள்ளக்கப்படும் நோக்கில் இற்றைப்படுத்தப்படுகின்றது.



**4.2.1.5 இயற்கை வளங்கள் முகாமைத்துவம் தொடர்பில் அரசாங்க மற்றும் அரசு-சாரா முகவராண்மைகளுக்கு தொழில்நுட்ப வழிகாட்டல்களை வழங்கல்.**

இந்த பிரிவின் உத்தியோகத்தர்கள் ம.சு அ யை பிரதிநிதித்தவம் செய்து நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கப் பணியகம், தேசிய நீரக வள மூளங்கள் அபிவிருத்தி அதிகாரசபை, மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, உயிர்கோலம் பற்றிய தேசிய விஞ்ஞான மன்றத்தின் குழு மற்றும் தொழில்நுட்ப மதிபீட்டுக் குழுக்கள், தேசிய வழிநடத்தல் குழுக்கள் மற்றும் பாராளுமன்ற ஆலோசனை குழுக் கூட்டங்கள் போன்ற அரசாங்க நிறுவனங்களின் திட்டமிடல் குழுக் கூட்டங்கள், தொழில்நுட்ப மதிப்பீட்டு குழக் கூட்டங்கள் ஆகியவற்றில் பங்பேற்று இயற்கை வளங்கள் பேணல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய தொழில்நுட்ப ஒத்துழைப்பை பல்வேறு கூட்டங்கள் மற்றும் குழுக்கள் மற்றும் பயிச்சிப்பட்டறைகள் ஆகியவற்றை நடாத்தினர். 2016 ஆம் ஆண்டில் உத்தியோகத்தர்கள் நூற்று இருபதுக்கும் மேற்பட்ட அத்தகைய கூட்டங்களில் பங்கேற்றனர். சுற்றாடல் கரிசனை தொடர்பாக பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிறுவனங்கள் ஆகியவற்றால் அனுப்பப்பட்டிருந்த அமைச்சரை பத்திரத்திற்கான கருத்துக்கள்/அவதானிப்புகள், அறிக்கைகள்,முகாமைத்துவ திட்டங்கள் என்பன சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டன.



### 4.2.2 சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களை(சு.பா.பி) பிரகடனம் செய்தலும் முகாமைத்துவம் செய்தலும்.

#### 4.2.2.1 பிரகடனம் செய்யப்பட்ட சு.பா.பி முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு

#### 4.2.2.1.1 பொல்கொடை சு.பா.பி-(வர்த்தமானி இல1634/23 திகதி-2009/12/30)

பொல்கொடை சு.பா.பி வர்த்தமானி அறிவித்தல் சம்பந்தப் பட்ட முகவராண்மைகளின் பங்கேற்புடன் திருத்தப்பட்டதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கருத்த்துக்கள் மற்றும் அவதானிப்புகள் கிடைக்கப்பெற்றவுடன் இறுதியாக்கப்படும். பொல்கொடை சு.பா.பி எல்லைகள் அளவிடும் பணியானமு இடம் பெறுகின்றது. பண்டாரகம பிரதேச செயலக அளவிடும் பணியானது நிறைவடைந்துள்ளது.

நீர் நிலைகள் ஓதுக்கத்தினுள் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகள் தொடர்பான நீதிமன்ற தீர்மானத்தின் பிரகாரம் கெஸ்பாவை பிரதேச செயலாளரின் வேண்டுகோளுக்கு ஆற்றங்கரை வழியே இணங்க எல்லை அடையாளமிடும் பணி நிறைவேற்றப்பட்டது.

பொல்கொட சு.பா.பி வளவில் இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகளை கண்காணிக்க பன்னிரெண்டு(1 2)கண்காணிப்பு பரிசோதனைகள் நிறைவேற்றப்பட்டு அவற்றிக்கு எதிரான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

#### 4.2.2.1.2 முத்துராஜவெல சு.பா.பி (வர்த்தமானி இல - 1466/26-திகதி-2006/10/13)

சு.பா.பி வளவை கண்காணிப்பதற்காக இரண்டு கண்காணிப்பு பரிசோதனைகள் இடம்பெற்றன. சு.பா.பி வளவிற்குள் முன்மொழியப்பட்ட கழிவு-சக்தி சம்பந்தப்பட்ட கருத்திட்டம் நிராகரிக்கப்பட்டது.

#### 4.2.2.1.3 தலன்கம தாங்கி சு.பா.பி - வர்த்தமானி இல1487/10 திகதி-2007/03/05)

தலன்கம சு.பா.பி பற்றிய இரண்டு விழிப்பூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் பங்தாரர் முகவராண்மை உத்தியோகத்தர்களுக்கு நடாத்தப்பட்டது. இந்த சு.பா.பி நிலைத்திருக்கும் தன்மை தொடர்பில் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளுடன் முகாமைத்துவ திட்டம் மறுசீரமைக்கப்பட்டது. இந்த சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் காணப்படும் சட்டவிரோத நிர்மாணங்கள் தொடர்பில் கண்காணிப்பு பரிசோதனைகள் ஐந்து இடம்பெற்றுள்ளதுடன் இந்த நடவடிக்கைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசத்திற்குள் இடம்பெறும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு முடிவுகட்டும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் கண்காணிப்பு குழுக் கூட்டம் ஒன்று இடம்பெற்றது. மாதிவெலை கிழக்கில் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்திற்கான சுற்றாடல் ஒப்புதல் வழங்கப்பட்டது. (தலன்கம மற்றும் அவேரிஹென குளங்கள் மேம்பாடு) தலன்கம சு.பா.பி தில் நடைமுறைபடுத்தப் படவுள்ள திலைமாற்றம் திட்டம் பகுதி-1 மாநகரங்கள் மற்றும் மேற்கு பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்கு வழங்கப்பட்டது. சுற்றாடல் ஒப்புதல் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து கருத்திட்ட நடைமுறையாக்கம் கண்காணிப்பு ஆரம்பமானது. சம்பந்தப்பட்ட எல்லா முகவராண்மைகளின் பங்கேற்புடன் கண்காணிப்பு கூட்டம் ஒன்றும் கண்காணிப்பு பரிசோதனை கூட்டம் ஒன்றும் இடம்பெற்றன.



**4.2.2.1.4 கிரகரி வாவி சு.பா.பி – (வர்த்தமானி இல:- 1487/10-திகதி -2007/03/05)**

2016 ஆண்டின் போதான திருவிழாக்கால த்தில் கிரகரி வாவியின் முக்கியத்தும் பற்றிய விசேட துண்டுப்பிரலரம் ஒன்று தாரிக்கப்பட்டது. 90.000 திற்கும் மேற்பட்ட விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வெளிநாட்டுப சுற்றுளா பயணிகள் மத்தியில் திருவிழா காலத்தில் விநியோகிகப்பட்டன.

இரண்டு கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டங்களும் இந்த விழாக்காலத்தின் போது இடம்பெற்றன. ஒரு கருத்திட்டத்திற்கான ஒப்புதல் வழங்கப்பட்டது. மேல் வாவிப் பாதை பகுதி வழியே – கிரகரி வாவி சு.பா.பி கருத்திட்டத்தின் கட்டம்-iv இன் அபிவிருத்தி பற்றிய மூன்று பரிசோதனைகள் இடம்பெற்றன.



**4.2.2.1.5 மொனராகல மலைத் தொடர் (மொனராகலை)-(வர்தமானி இல:-1560.˙.26 -திகதி -2008.8.01)**



பரிசோதனை கண்காணிப்பு ஒன்றும் முகாமைத்தவ குழுக் கூட்டம் ஒன்றும் நடாத்தப்பட்டன. முகாமைத்தவ குழுவால் பின்பற்றவேண்டிய வழிகாட்டிகள் தயாரிக்கப்பட்டன. ஐந்து கருத்திட்ட முன்மொழிவுகள் கிடைக்கக்பெற்றன. அவற்றுள் இரண்டு அங்கீகரிக்கப்பட்டதுடன் ஒன்று நிராகரிக்கப்பட்டது. இரண்டு கருத்திட்டங்கள் பரிசீணையில் உள்ளன. மரகல்லை நகரத்தை பிரித்துக்காட்டும் வகையில் சு.பா.பி வளவின் மறுசீரமைக்கப்பட்ட எலலை கம்பங்கள் நாட்டல் நிறைவடைந்தது.

**4.2.2..6 வலவேவத்தை-வதுரண(வர்ததமானி இல 1598/21-திகதி:- 2009.04.24)**

புலத்சிங்கள பிரதேச செயலக அலுவலக உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று நடாத்தப்பட்டது. சட்ட வல்லுநர் திரு. ஜகத் குணவர்தனா அவர்களால் விசேட விரிவுரையொன்று நடாத்தப்பட்டது.



### 4.2.3. உக்குவெலை (மாத்தலை) பண்சல்ஹெனவில் முன்மொழியப்பட்ட சு.பா.பி களின் நிலை

**4.2.3.1 பன்சல்ஹேன உக்குவலை (மாத்தலை)**

வரைவு வர்த்தமான அறிவித்தல் அங்கீகாரம் பெறுவதற்காள சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. சு.பா.பி பற்றிய துண்டுப் பிரசுரமொன்று வரைவு செய்யப்பட்டது.

**4.2.3.2 வராதென்ன-ஹிக்கடுவ(கண்டி)**

வரைவு வர்தமானி அறிவித்தல் இறுதிப்படுத்தப் பட்டுள்ளதுடன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் கைகொப்பத்திற்காக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சுக்கு அனுப்பி

வைக்கப்பட்டுள்ளது.



4.2.3.3 **கின்ஓயா(வென்னப்புவ)**

இரண்டு பங்குதாரர் ஆசோசனை கூட்டங்கள் மற்றும் கின் ஓயாவ பரிசோதனை செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டன. வர்த்தமானி அறிவித்தல் வரைவும் நிறைவடைந்தது.

பிரகடனம் செய்யப்பவுள்ள கின்ஓயா வழியில் இடம்பெறும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பில் இரண்ட கண்காணிப்பு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.



**4.2.3.4 கெப்பிதிகொல்லாவ நீர் ஊற்று மற்றும் கோனுமறியாவ நீர் குமிழி**

சம்பந்தப்பட்ட முகவராண்மைகளுடனான ஆரம்ப கள-பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. ஆய்வு அறிக்கை தயாரிக்கப்படுகின்றது. அளவை திணைக்களத்தின் ஒத்துழைப்புடன் திட்டத்தை தயாரிக்குமாறு கெப்பத்தி கொல்லாவ பிரதேச செயலாளர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்.

**4.2.3.5 முன்மொழியப்பட்டுள்ள கோரகுளம் சு.பா.பி**

மன்னார் மாவட்டத்தில் முன்மொழியப்பட்டுள்ள கோரகுளம் சு.பா.பி பற்றிய ஆரம்ப கூட்டம் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது. முன்மொழியப்பட்டுள்ள பிரதேசமானது வன சீவாராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தால் ஏற்கனவே பிரகடனம் செய்யப்பட்டுள்தாக கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

**4.2.4 ஈர நில முகாமைத்துவம்**

**4.2.4..1 தேசிய ஈர நில முகாமைத்துவ வழிநடத்தல் கூட்டங்கள்**

தேசிய ஈரநில முகாதைத்துவ வழிநடத்தல் குழுக் கூட்டமொன்று மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரின் தலைமையில் இடம்பெற்றதுடன் தேசிய ஈர நில கொள்ளை மற்றும் மூலோபாயங்களில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறு ஒலி முகாமைத்தவம் மற்றும் ஈர நிலங்கள் பேணுகை பற்றிய பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. தற்போதைய தேசிய ஈர நில கொள்கை மற்றும் மூலோபாயங்களை மீளாய்வு செய்யும் பொறுப்பு உயிர் பல்வகைத்தன்மை செயலகதிற்கு வழங்கப்பட்டது. இலங்கை காணி மீட்டல் அபிவிருத்தி கூட்டுத்தாபனதால் கொழும்பு பெருநகர பிரதேசத்திற்கு தயாரிக்கப்பட்ட ஈரரநில் மூலோபாய தட்டம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதுடன் தே.நீ.க. கூ தாபனத்தனால் அங்கீகரிக்கப்பட்டது. மீட்டல் நடவடிக்கையை நிறுத்தி பெருநகர கொழும்பு நகர ஈரநிலஙடகளை பேணவுமென இலங்கை காணி மீட்டல் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் ம.சு.அ

ஆகியவற்றால் தயாரக்கப்பட்ட இணை அமைச்சவை பத்திரம் அங்கீகரிக்கப்பட்டு மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மற்றும் பெருநகரம் மற்றும் மேல் பிராந்திய அபிவிருத்தி அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்பட்டன.

#### 4.2.4.2 “தெத்பிம் அசிரய” பற்றிய கை நூல்

“தெத்பிம் அசிரய” பற்றிய கைநூலானது மீளாய்வு செய்யப்பட்டு நடப்பு தகவல்களுடன் பிரசுரிக்கப்பட்டது. இந்த கைநூல் மாணவர்களுக்கு மேலதிக வாசிப்பு நூலாக கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்டது.





உரு 4-2 : சித்திர போட்டி

#### 4.2.4.3 உலக ஈரநிலத் தினம்- 2016

உலக ஈரநிலத் தினமானது ஆண்டுதோரும் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெறுகின்றது. அதனடிப்படையில் “எமது எதிர்காலத்திற்கான ஈரநிலம்-நிலையான வாழ்வாதாரம்” என்பது 2016 ஆம் ஆண்டிற்கான தொனிப்பொருளாக காணப்பட்டது. உலக ஈரநிலத் தினத்தை நினைவு கூறும் தேசிய நிகழ்ச்சித்திட்டம் 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி காக்காபல்லிய ரம்பொட சிறிய கடற்றொழில் ஒன்றியம் பம்பலவில் நடைபெற்றது. அதிமேதகு சனாதிபதி மற்றும் பிரதேசத்தை சேர்ந்த உள்ளூராட்சி அதிகாரசபை உத்தியோகத்தர்கள், பல அமைச்சரவை அமைச்சர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சமுகமளித்தனர்

##### 4.2.4.3.1 பிரதான நிகழ்வுகள்

**i. சித்தரப் போட்டி**

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது வன சீவராசியக் பாதகாப்பு திணைக்களம் மற்றும் கல்வி அமைச்சு அகியவற்றின் ஒத்துழைப்புடன் ஈரநிலம் சம்பந்தமகன “தெத்பிம் சிதுவம் -2016” சித்திரப் போட்டியை ஒழுங்கு நாடளாவிய ரீதியில் செய்தன. போட்டியின் இலக்குக் குழுக்களாக 1-11 வரையிலான தரங்களைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன் திறந்த போட்டிக்கு வயது வரையறுக்கப்படவில்லை. இந்த நிகழ்வுக்கான அனுசரணையை ஹட்டன் நெசனல் வங்கி மற்றும சிறிய கடற்றொழில் ஒண்றியம், இலங்கை ஜலானி மற்றும் வரையறுக்கப்பட்ட விஜய நிவுஸ் பேப்பர்ஸ் லிமட் ஆகியன இணைந்து வழங்கின. இந்த போட்டிகள் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் இடம்பெற்றன. பங்குபற்றிய அனைத்து 130 போட்டியாளர்களுக்கும் பெறுமதியான புத்தகத் தொகுதி மற்றும் சிற்றேடுகள் பரிசாக வழங்கப்பட்டன. (சிற்றேடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, தேசிய கட்டிட ஆராய்ச்சி தாபனம், புவிச்சரிதவியல் ஆய்வு சுரங்கப் பணியகம் போன்றவற்றில் இருந்து பெறப்பட்டன).

வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களமாகது ஒவ்வொரு பிரிவிலும் 1 வது இடத்தை பெற்ற வெற்றியாளர்களுக்கு தேசிய பூங்காவில் அமைந்துள்ள எந்தவொரு பங்களாவிலும் ஓர் இரவை கழிக்கும் இலவச அனுமதி சீட்டுக்கள் வழங்கப்பட்டன. இறுதியான 33 வெற்றியாளர்கள்

மத்தியில் ( ஒவ்வொரு குழுவில் இருந்தும் மூன்று வெற்றியாளர்கள்) பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இறுதி வட்டத்திற்கு தெரிவான பாடசாலை மாணவர்களுக்கு பணம் வைப்பீடுசெய்யப்பட்ட சேமிப்பு புத்தகமொன்று வழங்கப்பட்டது.

### ii) வினாவிடை போட்டி

ஈரநிலத் தினத்தற்கு முன்னர் ஈரநிலங்கள் தொடர்பான பல்வேறு தலைப்புகள்/பிரச்சினைகள் சார்ந்த ஒரு தொடர் கட்டுறைகள்(பத்து கட்டுறைகள்) இரண்ட கிழமைகளுக்கு ஒருமுறை விஜய பத்திரிகையால் பிரசுரிக்கப்படடன.

### iii) நான்கு ஞாபகார்த்த முத்திரைகள் வெளியிடுதல்

இலங்கையில் பிரகடனம் செய்யப்பட்ட நான்கு *RAMSAR* ஈரநிலங்கள் குறித்துக்காட்டும் ஆரு (06) தபால் முத்திரைகள் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்திள் கூட்டுப் பங்களிப்புடன் வெளியிடப்பட்டன.

மேலும், உலக ஈரநிலத்தினம் சம்பந்தப்பட்ட ஞாபகார்த்த 17 நிகழ்ச்சித்திட்டங்கள் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களிலும் ம.சு.அ யால் நடாத்தப்பட்டன.

ஆதனைத் தொடர்ந்து இந்த கட்டுறைகள் சார்ந்த வினாவிடை போட்டியொன்று நடாத்தப்பட்டது

ஒவ்வொரு வாரமும் மூன்று வெற்றியாளர்கள் தேர்க்தெடுக்கப்பட்டு பெறுமதிமிக்க வெகுமதிகள் வழங்கப்பட்டன.




### 4.2.5.1 விசேட கருத்திட்டங்கள்

### 4.2.5.1 "சுற்றாடல் உணர்வுமிக்க பிரதேசங்களில் சூழல்கட்டமைப்பு சேவைகளின் உயிர்பல்வகைத்தன்மை பேணல் மற்றும் ஆதாரத்தை மேம்படுத்தல்" கருத்திட்டம்- கலாஓயா ஆற்றுப்படுகை- மாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு.

மேற்படி கருத்திட்டத்தின் கீழ் தொடர்பாடல் மூலோபாய செயற் திட்டம் தயாரிக்கப்பட்டது .புத்தளம், மற்றும் அனுராதபுரம் மாவட்ட பிரதேச செயலகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர் கூட்டங்களில் இடம்பெற்ற இரண்டு ஆலோசனை பயிற்ச்சிப் பட்டறைகளை தொடர்ந்து இந்த திட்டம் தயாரிக்கப்பட்டது.



**4.2.5.2 வெளிஓயா நீதேந்துப்பகுதி பாதுகாப்பு கருத்திட்டம்**

வெளிஓயா துணை நீர்ப்பிடிப்புக்கான காணிப் பயன்பாட்டு வலயமிடல் திட்டம் தயாரிப்பு கானி பயன்பாட்டு கொள்கை திட்டமிடல் திணைக்களத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கபப்பட்டது. இந்த வரைபடங்கள் சுற்றாடல் உணர்வுமிக்க பிரதேசங்களை இனங்காண்பதற்கு தயாரிக்கப்பட்டு பின்னர் அப்பிரதேசங்கள் சுற்றாடல் பாதுகாப்பு பிரதேசங்களாக பிரகடணம் செய்வதற்கான இனங்காணப்படும்







உரு**4-3** : சமூக கட்டமைப்பு பாதிப்பு சாத்தியக்கூறு வரைபடங்கள்

**4.2.5.3 களனி கங்கை படுகை பேணுகை மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம்.**

களனி ஆற்றுப் படுகை வழியில் படுகையின் இயற்கை வள பக்கவுரு உடனான முகாமைத்துவம் மற்றும் பேணுகை தொடர்பான பிரதான திட்டத்தின் இறுதி அறிக்கை, வரைபடத்தின் சுருக்கப்பதிப்பு, நான்கு தொழில்நுட்ப பத்திரங்கள் உள்ளடக்கிய ஏ அன்ட டி மற்றும் மூன்று செயடதிப் பத்திரிகை கட்டுறைகள் அகியன ஆலோசகரால் சமர்ப்பிக்கப்பட்டன். கிடைக்கக்கூடியதாக உள்ள இணையப் பக்கம் வடிவமைக்கப்படும் நிலையில் உள்ளது. களனி கங்கையை பாதுகாப்பது பற்றிய துண்டுப் பிரசரமொன்று தயாரிக்க்பபட்டதுடன் களனி அற்றுப்படுகையின் முக்கியத்துவம் தொடர்பில் பொது மக்களை விழிப்பூட்டும் 2000 பிரிதிகள் அச்சிடப்பட்டன. இரண்டு பாடசாலை வழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் நீர் சபையின் ஒத்துழைப்புடன் நடாத்தப்பட்டது.

.



**www.iucnsrilanka.org/wp** இன் கீழ்



உரு **4-4 :** களனி ஆற்றுப்படுகையின் அமைவிடம்

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்படவுள்ள கருத்திட்டத்தின் முன்மொழிவு செயற்திட்டம் மற்றும் வரைவு அமைச்சரவை நிருபம் என்பன சுற்றாடல் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது. முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்திம் பற்றிய இரண்டு கூட்டங்கள் சுற்றாடல் அமைச்சுடன் இடம்பெற்றதுடன் இரண்டு கூட்டங்கள் தேசிய திட்டமிடல் திணைக்களத்திலும் இடம்பெற்றன.

## 4.3 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகு

ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் முக்கிய இலக்குகாளவன:

சுற்றாடல் சீரழிவு அம்சங்கள் அல்லது அத்தயை அம்சங்களை தடுத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடைய ஆராய்ச்சி/ஆய்வுகள்/அளவைகள் ஆகியவற்றை நடாத்தல், மேம்படுத்தல், அனுசரணை வழங்கல், மற்றும் அத்தகைய தகவல்களை பரவச்செய்தல் மற்றும் புவியியல் தகவல் முறைமை(GIS) மற்றும் தொலை உணர்வு தொழில்நுட்பம் (RS) ஆகியவற்றின் பிரயோகித்தல் ஊடாக இலங்கையின் இயற்கை வழங்களின் நிலையான முகாமைத்துவத்தை உறுதிசெய்தல. ஆதற்கிணங்க ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு பின்வரும் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது.

### 4.3.1 மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு பொருத்தமான ஆராய்ச்சி/கற்கைகள அளவைகள ஆகியவற்றை ஆரம்பித்தல் / மேம்படுத்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

#### 4.3.1.1 ஆராய்ச்சி தரவுத்தளத்தை அபிவிருத்தி செய்தல்.

இந்த விடயம் தொடர்பில் ம.சு.அ யின் சிரேஸ்ட முகாமைத்துவத்துடன் கலந்துரையாடல் இடம்பெற்றதுடன் ம.சு.அ தகவல் நிலையத்தில் பேணப்பட்டுவரும் ஆராய்ச்சி தரவுத் தளத்தை ம.சு.அ யின் சு-கலஞ்சியத்துடன் கூட்டிணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.

#### 4.3.1.2 ஆராயச்சி ஆலோசனை குழு(ஆ.ஆ.கு)

மூலோபாய வழிகாட்டி மற்றும் ஆலோசனைகளை ஆராய்ச்சி அபிவிருத்தி ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அலகுக்கு வழங்குவதற்காக தாபிக்கப்பட்டுள்ள ஆராய்ச்சி ஆலோசனை குழுவின் மூன்று கூட்டங்கள் இடம்பெற்றன.

இனங்காணப்பட்ட சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் ம.சு.அ உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட 18 முன்மொழிவுகளில் ம.சு.அ யின் ஆணைக்கு பொருத்தமாகவிருந்த 7 முன்மொழிவுகள் ஆராய்ச்சி ஆலோசனை குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்டன.

பின்வரும் ஐந்து ஆராய்ச்சி மன்மொழிவுகளுக்கு ஆரம்ப நிதியிடல்(ஒவ்வொரு ஆராய்ச்சி கற்கையின் மொத்த பாதீட்டில் 25 சதவீதம்) மேற்கொள்ளப்பட்டது.

i கம்பஹ மாவட்டத்தின் நீர்த்தேக்க மாசுபாட்டின் பாதிப்புத்தன்மை மற்றும் ஏற்புத்திறன் ஆகியவற்றை DRASTIC முறையை பாவித்து மதிப்பிடல்

ii கற்சுரங்க நடவடிக்கைகள் காரணமாக தாவரங்களுக்கு ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்தல். களுத்தறை மாவட்டத்திலி தொடன்கொட பிரதேச செயலகத்தின் விடய ஆய்வு

iii கலு கங்கையில் அமைந்துள்ள கெத்தன குடிநீர் நிலையில் உப்பு நீர் ஊடுறுவலின் பாதிப்பு

iv கொழும்பு வெள்ள தடுப்பு பிரதேசத்தில் ஊடுரவும் , *Annona glabra* தாவரத்தை மிகையாக நிறியோகித்தல்

v தென் அதிவேக நெடுஞ்சாரலயில் ஊடுருவும் அந்நிய வகையான தாவரங்களின் *Dillenia surffruticosa* பரவலில் ஏற்பட்டுவரும் மாற்றம்

#### 4.3.1.3 ம.சு.அ யின் உத்தியோகத்தர்களைக் கொண்ட மாற்று-விடயப்பரப்பு ஆராயச்சி குழு

ம.சு.அ உத்தியோகத்தர்களைக் கொண்ட மாற்று-விடயப்பரப்பு ஆராய்ச்சி குழுவொன்று தாபிக்கப்பட்டது. எழுத்தாக்கம் மற்றும் முன்மொழிவுகள் வகுத்தல் பற்றிய திறன்களை மேம்படுத்தவதற்காக பயிற்ச்சிப்பட்டறை ஒன்று 2016 யூன் 16ஆம் திகதியில் ம.சு.அ யில் நடாத்தப்பட்டது.

### 4.3.1.4 ம.சு.அ யின் ஆணைக்கு இனங்க ஆராயச்சி முன்னுரிமை பிரதேசங்களை இனங்காணல்

ஆராயச்சி முன்னுரிமை பிரதேசங்களை இனங்காணல் வேளைகளில் பின்பற்ற வேண்டிய செயன்முறைகள் பற்றிய கலந்துரையாடல் ஆராய்ச்சி ஆலோசனை கூட்டங்களில் இடம்பெற்றது. ம.சு.அ யின் ஆணைக்கு இனங்க ஆராயச்சி முன்னுரிமை பிரதேசங்களை இனங்காணப்பட வேண்டுமென தீர்மானிக்கப்பட்டது. தற்போதைய சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் சிக்கல்களை ஆகியவற்றை கண்டறிவதற்காக பயிற்ச்சிப்பட்டறை ஒன்றை நடாத்துவதற்கான வரைவு திட்டமொன்று அபிவிருத்தி செயய்ப்பட்டது

### 4.3.1.5 கலுகங்கை ஆற்றுப்படுகை முகாமைத்துவம் செய்வதற்கான ஒருங்கிணைந்த மாதிரியொன்று

சர்வதேச நீர் முகாமைத்துவ நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் கருத்திட்ட முன்மொழிவு ஒன்று அபிவிருத்தி செய்யப்படும் கட்டத்தில் உள்ளது. கலுகங்கை ஆற்றுப்படுகையின் நிலையான முகாமைத்துவத்திற்கான சரிசமனான மாதரியொன்றை அபிவிருத்தி செய்வதே இந்த கருத்திட்டத்தின் பிரதான நோக்கமாக உள்ளது.

.

### 4.3.1.6 பனை எண்ணெய் பயிற்செய்கையால் நிலத்தடி நீர்தளத்திற்கு ஏற்படும் தாக்கங்கள்

பேராதெனியா பல்கலைக்கழகத்தின் மண்- விஞ்ஞானம் மற்றும் பயிர்-விஞ்ஞான பீடத்தின ஒத்துழைப்படன் பனை எண்ணெய் பயிரச்செய்கையின் பின்னர் நிலத்தடி நீர் தளத்திற்கு ஏற்படும் தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்கு ஆராய்ச்சி முன்மொழிவொன்று அபிவிருத்தி செய்யப்பட்டது. இந்த ஆய்வை 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.3.1.7 தொலை உணர்வு மற்றம் புவியியல் தகவல் முறைமை தொழில்நுட்ப பிரயோகத்தின் மூலம் (RS) மத்திய மாகாணத்தில் சீரழிந்துள்ள காணிகளை இனங்காணல்.

நுவரெலியா மற்றும் கண்டி மாவட்டங்களில் சீரழந்துள்ள காணிகள் பற்றிய விபரங்கள் கள மாதிரிகள் மற்றும் தொலை உணர்வு தொழில்நுட்பம் ஆகியவற்றின் பயன்பாட்டின் ஊடாக இனங்காணப்பட்டுள்ளன. இரண்டு மாவட்டங்களின் ஒவ்வொரு பிரதேச செயலக பிரிவுகளிலும் காணப்படும் சீரழிந்துள்ள காணிகளை கணக்கிட லேண்செட் OLI செயற்கைகோள் படங்கள் பயன்படுத்தப்பட்டன. மாத்தலை மாவட்டத்தை அளவைசெய்யும் செய்பாடு 2017ஆம் ஆண்டிற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கண்டி மாவட்டத்திலுள்ள சீரழிந்துள்ள காணிகளை RS மற்றும் GIS தொழில் நுட்பத்தின் மூலம் இனங்காண்பது தொடர்பில் ஆராய்ச்சி பத்திரமொன்று தேசிய விஞ்ஞான மண்றத்தின் வருடாந்த ஆராய்ச்சி உச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டது.

.




உரு **4-5 :** கண்டி மாவட்டத்தின் சீரழிந்துள்ள காணிகள்




உரு **4-6 :** நுவரெலியா மாவட்டத்தின் சீரழிந்துள்ள காணிகள்

#### 4.3.1.8 சுற்றாடல் முகாமைத்துவம்




**மற்றும் திட்டமிடல் பற்றிய கையேடு – 2016**

உரு **4-7 : சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய கையேடு**

சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் பற்றிய கையேடு -2016 மத்திய சுற்றாடல் அதிகார சபையால் ஒழுங்கமைக்கப்பட்ட முகாமைத்தவம் மற்றும் திட்டமிடல் -2015 பற்றிய கருத்தரங்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆராய்ச்சி பத்திரங்களை உள்ளடக்கியவாறு அச்சிடப்பட்டது.

### 4.3.2 சுற்றாடல் முகாமைத்தவம் தொடர்பில் புவி - தகவலியல் பிரயோகம்

4.3.2.1 சுற்றாடல் தகவல் முறைமை சார்ந்த GIS அபிவிருத்தி

இது நாட்டின் மத்திய சுற்றாடல் தரவுத்தளமாக. செயற்படுவதுடன் சுற்றாடல் திட்டமிடல் மற்றும் முகாமைத்தவத்தவம்,கண்காணிப்பு, பகுப்பாய்வு மற்றும் கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கான பொருத்தமான இடங்களை இனங்காணல்.



அனர்த்த தயார்நிலை திட்டங்கள் தயாரித்தல் மற்றும் இலங்கையில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல் ஆகிய செயற்பாடுகள் தொடர்பில் உதவியளிக்கின்றது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவானது இதனை தொடர்ச்சியாக இற்றைபடுத்துகின்றது. பின்வரும் தரவு அட்டைகள் மற்றும் தகவல்கள் தரவுத்தளத்திற்கு சேர்க்கப்பட்டது.

1:10,000 இடவியல் தரவுகள் (நிலப்பரப்பு, தகவல் நிர்வாகம், காணிப்பயன்பாடு, வீதி, நீர்வளவியல், மற்றம் கட்டிட அடுக்ககள்)

63-பிபிலை, 64- திருக்கோவில், 69- பதுளை
70- மொனராகலை, 71-பொத்தவில், 77-புத்தல,78
பனாம, 83-கதிர்காமம்

**4.3.2.1.குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள் பற்றிய புவி-இடஞ்சார் குறிப்பு தரவுத்தளத்தை இற்றைப்படுத்தல்**

குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள் பற்றிய புவி-இடஞ்சார் குறிப்பு தரவுத்தளமானது மாதந்தோரும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவால் இற்றைப்படுத்தப் படுகின்றது. இதற்கிணங்க 2016 ஆம் ஆண்டின் இறுதியில் காணப்பட்ட உயர்( ஏ-வகை), நடுத்தரம்(பீ வகை) மற்றும் குறைந்த(சீ வகை) மாசு படுத்தம் கைத்தொழில்களின் மொத்த எண்ணிக்கையானது கிட்டத்தட்ட முறையே 11,427 , 10,706 மற்றும் 23904 ஆகும். இந்த தரவுகள் மாசு கட்டுப்பாடு பொறிமுறைகள் மற்றும் புதிய கைத்தொழில்களின் அமைவிடங்கள் ஆகியவற்றை நடைமுறைபடுத்த மிகவும் பிரயோசனமாகவள்ளது.




| | Province | Total | A | B | C | BOI |
|---|---|---|---|---|---|---|
| 1 | Western | 13908 | 4707 | 3392 | 5118 | 691 |
| 2 | Southern | 6945 | 1269 | 1631 | 3960 | 85 |
| 3 | Eastern | 3940 | 734 | 936 | 2221 | 49 |
| 4 | Uva | 3745 | 656 | 502 | 2566 | 21 |
| 5 | Central | 5690 | 1151 | 968 | 3483 | 88 |
| 6 | North Central | 3370 | 785 | 711 | 1838 | 36 |
| 7 | Sabaragamuwa | 5156 | 1065 | 1387 | 2655 | 49 |
| 8 | Northern | 3625 | 721 | 825 | 2063 | 16 |
| 9 | North Western | 693 | 339 | 354 | 0 | 0 |
| | **Total** | **47,072** | **11,427** | **10,706** | **23,904** | **1,035** |

உரு 4-8 :2016 ஆம் ஆண்டு இறுதியின் போது நாட்டில் காணப்பட்ட மாசு படுத்தும் கைத்தொழில்களின் பரம்பல்

அட்டவணை 4.6 : இலங்கையில் குறித்துரைக்கப்பட்ட கைத்தொழில்கள்-2016

| | மாகாணம் | மாவட்டம் | மொத்த A , B, C & மு.ச கைத்தொழில்கள் | மொத்த "A" | மொத்த "B" | மொத்த "C" | மொத்த மு.ச கைத்தொழில்கள |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | மேல் | கொழும்பு | 5841 | 2210 | 1407 | 1976 | 248 |
| | | கம்பஹா | 5409 | 1774 | 1348 | 1977 | 310 |
| | | கலுத்தரை | 2658 | 723 | 637 | 1165 | 133 |
| 2 | தெண் | காலி | 2504 | 511 | 837 | 1124 | 32 |
| | | மாத்தறை | 2106 | 410 | 505 | 1168 | 23 |
| | | அம்பாந்தோட்டை | 2335 | 348 | 289 | 1668 | 30 |
| 3 | கிழக்கு | திருகோணமலை | 898 | 241 | 199 | 439 | 19 |
| | | அம்பாறை | 1864 | 299 | 388 | 1159 | 18 |
| | | மட்டக்களப்பு | 1178 | 194 | 349 | 623 | 12 |
| 4 | ஊவா | பதுலை | 1818 | 367 | 274 | 1169 | 8 |
| | | மொனராகலை | 1927 | 289 | 228 | 1397 | 13 |
| 5 | மத்திய | கண்டி | 3671 | 685 | 589 | 2347 | 50 |
| | | மாத்தலை | 1266 | 305 | 242 | 697 | 22 |
| | | நு-எலியா | 753 | 161 | 137 | 439 | 16 |
| 6 | வட மத்திய | அனுராதபுரம் | 2530 | 586 | 446 | 1473 | 25 |
| | | பொலன்னறுவை | 840 | 199 | 265 | 365 | 11 |
| 7 | சபரகமுவ | இரத்தினபுரி | 2900 | 561 | 699 | 1617 | 23 |
| | | கேகாலை | 2256 | 504 | 688 | 1038 | 26 |
| 8 | வடக்கு | யாழ்ப்பாணம் | 1812 | 366 | 340 | 1102 | 4 |
| | | மன்னார் | 450 | 101 | 118 | 228 | 3 |
| | | வவுனியா | 441 | 124 | 75 | 236 | 6 |
| | | கிளிநொச்சி | 509 | 56 | 176 | 275 | 2 |
| | | முல்லைதீவு | 413 | 74 | 116 | 222 | 1 |
| 9 | வடமேல் | குருணாகல் | 554 | 253 | 301 | 0 | 0 |
| | | புத்தளம் | 139 | 86 | 53 | 0 | 0 |
| | மொத்தம் | | 47,072 | 11,427 | 10,706 | 23,904 | 1,035 |
| | ஒவ்வொரு வகையின் % | | | 24 | 23 | 51 | 2 |

#### 4.3.2.3 மாவட்ட வளங்கள் பற்றிய டிஜிடல் சுருகக்குறிப்பு குறுவட்டுக்கள் தயாரித்தலும் பதிவிடலும்

டிஜிடல் மாவட்ட வளங்கள் பக்கவுருவானது சுற்றாடலுடன் தொடர்புடைய தகவல்கள் மற்றும் சமூக பொருளாதார தரவுகளை பிரதேச செயலக மட்டத்திலும் கொண்டுள்ளது. அறிக்கையிடப்படும் காலத்தின் போது இரத்தினபுரி, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்ட வயங்கள் பற்றிய பக்கவுருக்கள் தயாரிக்கப்பட்டதுடன் அவற்றை குறுவட்டு வடிவில் பதிவதற்காக அனுப்பப்பட்டது.




உரு4-9 : சுற்றாடல் வளங்கள் பக்கவுருக்கள் முகப்பு







பக்கங்கள் ,
இரத்தினபுரி, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி ஆகிய மாவட்ட சுற்றாடல் வயங்கள் பற்றிய பக்கவுருக்களின் முகப்பு-பக்கங்கள

**4.3.2.4ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவு/தலைமை அலுவலகம் மற்றும் பிராந்திய அலுலகம் ஆகியவற்றின் உத்தியோகத்தர்களுக்கு புவி—தகவலியல் பற்றிய அபிவிருத்தி ஆற்றல் கட்டியெழுப்பல்**

I. தெண், ஊவா, வட மத்திய, சபரகமுவ, வடக்கு மற்றும் கிழக்கக மாகாண அலுவலக உத்தியோகத் தர்கள் மற்றும் அம்பாறை, களுத்தரை, மாத்தறை, ஹம்பாந் தோட்டை மற்றும் கேகாலை மாவட்டங்களின் அலுலக உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு குகோபல் பொசிசனிங் சிஸ்டம் மற்றும் கூகுள் ஏர்த் புரோ பயிற்சி நிகழ்ச்சித்தட்டம் ஆகியவை நடாத்தப்பட்டன.

II. ஆராய்ச்சி மற்றும் அபிவித்திப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஆர்க GIS ஆன்லைன்( இணையத்தளம் சார் ஜீ. அய்.எஸ்) பயிற்சியை 2016 பெப்ரவரி 29ஆம் திகதி பின்பற்றினர்.

III. ஆராய்ச்சி மற்றும் அபிவித்திப் பிரிவு முகாமைத்துவ உதவியார்கள் ஆர்க் புவித் தகவல் முறைமை (GIS) மென்பொருள் மற்றும் அதன் பயன்பாடு ஆகியவற்றில் 2016 மே 24ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையறுக்கப்பட்ட சொலுசன்ஸ் தனியார் நிறுவனத்தில் வறை பயிற்றுவிக்கப்பட்டனர்.

**4.3.2.5 புவித் தகவல் முறைமை (GIS)சேவைகள் வேண்டுகோளின் அடிப்படையில் பின்வரும் சேவைகள் வழங்கப்பட்டன.**

➢ தெரிவுசெய்யப்பட்ட கருத்திட்டப் பகுதியொன்றில் அல்லது அதனைச் சுற்றியுள்ள பகுதியில் அமைந்துள்ள சுற்றாடல் உணர்வுமிக்க பிரதேசங்கள், காணிப் பயன்பாடு /காணி உள்ளடக்கம் ஆகியவற்றை இனங்காணல்

➢ தெரிவு செய்யப்பட்ட அமைவிடத்தின் சுற்றாடல் உணர்வுமிக்க பிரதேச வரைபடங்கள் தயாரித்தல்

➢ காணிப்பயன்பாடு/ காணி உள்ளடக்க வரைபங்கள்

- செயற்கைகோள் உருவ பகுப்பாய்வு
- உலகளாவிய இடவாக்க அமைவிடங்களை பெற்றுக்கொள்ளல்
- வரைபட டிஜிடலாக்கம் மற்றும் வகைப்படுத்தல்
- வரைபடங்கள் ஸ்கானிங் செய்தல் மற்றும் அச்சிடல்.

**(அ) வெளித்தரப்பு வேண்டுகோள்கள்**

வெளித்தரப்பு வேண்டுகோள்கள் 105 கவனத்தில்எடுக்கப்பட்டு வழங்கிய சேவைகளுக்கு ரூபா204,169.20 அறவிடப்பட்டது.

(ஆ) **ம.சு.அ மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றுக்கான் GIS சேவைகள்.**

ம.சு.அ உள்ளக வேண்டுகோள்கள் 57 நிறைவேற்றப்பட்டன

# அத்தியாயம் 5 : சட்ட அலகு

***"ஒருவருக்கொருவர் உயிர் வாழ்வதற்காக சுற்றுச் சூழலை மேம்படுத்தும் வகையில் சுற்றாடல் பற்றிய விழிப்புணர்வை ஒழுங்கமைத்து உருவாக்குவதற்காக"***

## 5.1 தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை

சட்டப்பிரிவானது, பணிப்பாளர் நாயத்தின் நேரடியான மேற்பார்வையின் கீழ், 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழான ஏற்பாடுகள் மற்றும் ஒழுங்குவிதிகளை திருத்தப்பட்டவாறு செயற்படுத்துவதற்கு உதவியளிக்கின்றது. இச் சட்டத்தின் கீழ் வழக்காட்டல் செயற்பாடுகளுக்கு அனுசரனை வழங்குவதே இப்பிரிவின் தன்னிலையான பணியாகும். சட்டப் பிரிவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு;

2016 ஆம் ஆண்டில், சட்டப்பிரிவானது பல எண்ணிக்கையான வழக்குகளை தொடுத்தும், இறுதிப்படுத்தியும் உள்ளது. அதற்கிணங்க, சட்டப் பிரிவால் நுற்று அருபத்தொன்பது (169) வழக்குகள் கையாளப்பட்டுள்ளதுடன் அவை ம.சு.அ க்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குககையும் ம.சு.அ யால் தொடுக்கப்பட்ட வழக்குகளையும உள்ளடக்குகின்றன. 2016 ஆம் ஆண்டில் என்பத்து இரண்டு(82) வழக்குகளுக்கு அதிகமான வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டுள்ளன.

அத்தகைய வழக்குகளில் இருந்து திரட்டிய மொத்த தண்டப் பணம் ரூபா. 904,166/-.

## 5.2 தேசிய சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பில் மேல் மாகாணத்தின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட அறுபத்தாறு (66) வழக்குகள் மேல் மாகாணத்தில் நிலுவையில் இருந்தன. கிட்டத்தட்ட முப்பத்து நான்கு(34) வழக்குகள் கொழும்பு மாவட்டத்தில் நிலுவையில் இருந்தன. அவற்றில் மூன்று (03) வழக்குகள் மவுட்லெவேனியா நீதிவான் நீதி மன்றத்திலும் ஆறு(06) வழக்குகள் கெஸ்பேவ நீதிவான் நீதி மன்றத்திலும் மூன்று(03) வழக்குகள் அவிசாவலை நீதிவான் நீதி மன்றத்திலும் மூன்று(03) வழக்குகள் கன்கொடவில நீதிவான் நீதி மன்றத்திலும் ஒரு (01) மொறட்டுவை நீதிவான் நீதி மன்றத்திலும் ஏழு (07) கடுவெல நீதிவான் நீதி மன்றத ஒரு(01) ஹோமாகம நீதிவான் நீதி மன்றத்திலும் மற்றும் பத்து(10) வழக்குகள் கொழும்பு நீதிவான் நீதி மன்றத்திலும் நிலுவையில் வையில் இருந்தன.

2016ஆம் ஆண்டில், கம்பஹ மாவட்டத்தில் அருபத்தாறு (26) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஒன்று(1) கம்பஹ நீதிவான் நீதி மன்றம், எட்டு(08) வழக்குகள் நீர்கொழும்பு நீதிவான் நீதி மன்றம், மூன்று(03) வழக்கு வத்தலை நீதிவான் நீதி மன்றம், ஒன்பது(09) வழக்குகள் மஹார நீதிவான் நீதி மன்றம், மற்றும் ஜந்து(05) வழக்குகள் மினுவாங்கொடை நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றில் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஆறு(06) வழக்ககள் 2016 ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்துள்ளன.

மேலும், 2016ஆம் ஆண்டில் களுத்தரை மாவட்டத்தில் ஆறு (06) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் மூன்று (03) வழக்குகள் களுத்தரை நீதிவான் நீதி மன்றத்திலும், ஒரு(01 வழக்கு மதுகமை நீதிவான் நீதி மன்றத்திலும், மற்றும் இரண்டு(02) வழக்குகள் பானதுறை நீதிவான் நீதி மன்றத்திலும் நிலுவையில் இருந்தன.

## 5.3 தேசிய சுற்றாடல் சட்டம் அமுலாக்குவது தொடர்பில் மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை

மத்திய மாகாணத்தில் கிட்டத்தட்ட நாற்பத்தெட்டு (48) வழக்குகள் நிலுவையில் இருந்தன. ..அவற்றுள் பதினைந்து (15) வழக்குகள் கண்டி நீதிவான் நீதிமன்றத்திலும், ஆறு (06) வழக்குகள் கம்பொல நீதிவான் நீதிமன்றத்திலும், ஒரு(01) வழக்கு நாவலபிடிய நீதிவான் நீதி மன்றத்திலும், ஜந்து(05) வழக்குகள் வலபனே நீதிவான் நீதிமன்றத்திலும், இரண்டு(02) வழக்குகள் ஹெல்பொட நீதிவான் நீதிமன்றத்திலும், ஏழு(7) வழக்குகள் தெல்தெனியா

நீதிவான் நீதிமன்றத்திலும், மூன்று(03) வழக்குகள் பன்வில நீதிவான் நீதிமன்றத்திலும், ஒரு(01) வழக்கு மையன்கனை நீதிவான் நீதிமன்றத்திலும், மூன்று(03) வழக்குகள் மாத்தலை நீதிவான் நீதிமன்றத்திலும், இரண்டு (02) வழக்குகள் தம்புள்ள நீதிவான் நீதிமன்றத்திலும், மற்றும் மூன்று(03) வழக்குகள் ஹட்டன் நீதிவான் நீதிமன்றத்திலும், நிலுவையில் இருந்தன. 2016 ஆம் ஆண்டில் இருபத்து இரண்டு(22) புதிய வழக்குகள் மத்திய மாகாணத்தில் தொடுக்கப்பட்டன. அவற்றுள், இருபத்து ஏழு(27) வழக்குகள் 2016ஆம் ஆண்டில் முடிவுக்கு வந்தன

## 5.4 தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் ஊவா மாகாணத்தின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில், ஊவா மாகாணத்தில் பதினெட்டு (18) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் எட்டு (08) வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டவை ஆகும். அவை வெளிமடை நீதிவான் நீதிமன்றம், பண்டாரவளை நீதிவான் நீதிமன்றம், வெல்லவாய நீதிவான் நீதி மன்றம் மஹியங்களை நீதிவான் நீதி மன்றம் ஆகியவற்றில் இடம்பெற்றன. அவற்றுள் பத்து(10) வழக்குகள் 2016ஆம் ஆண்டில் நிறைவுக்கு கொண்டுவரப்பட்டன.

## 5.5 தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் தென் மாகாணத்தின் செயலாற்றுகை

2016ஆம் ஆண்டில், தென் மாகாணத்தில் பதின்நான்கு (14) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவை பலபிடியா, ஹம்பாந்தோட்டை, காலி, மாத்தறை மற்றும் அன்கனுகொல்பெலஸ்ஸ ஆகிய நீதிவான் நீதி மன்றங்கள் மற்றும் மேல் நீதிமன்றங்களில் இடம்பெற்றன.

அவற்றுள் எட்டு(8) வழக்குகள் புதிதாக தொடுக்கப்பட்டவை. 2016 ஆம் ஆண்டில் எட்டு(08) வழக்குகள் முடிவுக்கு வந்தன.

## 5.6 தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் கிழக்கு மாகாணத்தின் செயலாற்றுகை

2016ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தல் ஒன்பது (09) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவற்றுள் ஒரு வழக்கு(01) அம்பாறை நீதிவான் நீதிமன்றத்திலும், ஐந்து (05) வழக்குகள் திருகோணமலை நீதிவான் நீதிமன்றத்திலும் மற்றும் மூன்று(03) வழக்குகள் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்திலும் இடம்பெற்றன. அவற்றுள் இரண்டு (02) வழக்குகள் நிறைவுக்கு வந்தன.

## 5.7 தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் சப்ரகமுவ மாகாணத்தின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில், சப்ரகமுவ மாகாணத்தில் பண்னிரண்டு(12) வழக்குகள் நிலுவையில் இருந்தன அவற்றுள் பன்னிரண்டு (12) வழக்குகள் 2016ஆம் ஆண்டில் புதிதாக தொடுக்கப்பட்டவையாகும்.

எட்டு (08)) வழக்கு இரத்தினபுரி நீதிவான் நீதிமன்றத்திலும், ஒரு (01) வழக்கு மாவனெல்ல நீதிவான் நீதிமன்றத்திலும் மற்றும் மூன்று (03) ) வழக்குகள் ருவான்வெல்லை நீதிவான் நீதிமன்றத்திலும் இடம்பெற்றன. அவற்றுள் ஐந்து(05) வழக்குகள் அதே ஆண்டில் நிறைவுக்கு வந்தன.

## 5.8 தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் வட-மத்திய மாகாணத்தின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில், வட-மத்திய மாகாணத்தில் பன்னிரண்டு (12) வழக்குகள் நிலுவையில் இருந்தன. அவை அனுராதபுரம் நீதிவான் நீதி மன்றம், தபுத்தேகம நீதிவான் நீதிமன்றம் மற்றும் ,இன்குருகொட நீதிவான் நீதிமன்றம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. அவற்றுள் ஒன்பது (09) வழக்குகள் 2016ஆம் ஆண்டில் நிறைவுக்கு வந்தன.

## 5.9 தேசிய சுற்றாடல் சட்டத்தை (தே.சு.ச) செயற்படுத்தல் தொடர்பில் வட-மேல் மாகாணத்தின் செயலாற்றுகை

2016 ஆம் ஆண்டில், வட-மேல் மாகாணத்தில் ஐந்து (05) வழக்குகள் நிலுவையில் இருந்தன ஒரு(01) வழக்கு குளியாபிட்டிய நீதிவான் நீதிமன்றத்திலும், இரண்டு வழக்ககள் (02) புத்தளம் நீதிவான் நீதிமன்றத்திலும் மற்றும் இரண்டு (02) வழக்குகள் குளியாபிட்டிய மேல் நீதி மன்றத்திலும் இடம்பெற்றன

## 5.10 மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு

### எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள்

2016ஆம் ஆண்டில் ம.சு.அ எதிராக ஜம்பத்தொன்பது(59) வழக்குகள் நீதிவான் நீதி மன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், மேல் நீதி மன்றங்கள், உயர் நீதிமன்றம் மற்றும் மேல்முறையீட்டு நீதி மன்றம் ஆகியவற்றில் நிலுவையில் இருந்தன.

சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் உயர்நீதிமன்றம், மேல் முறையீட்டு நீதிமன்றம், மேல் நீதிமன்றம், மாவட்ட நீதிமன்றம் மற்றும் நீதிவான்
நீதிமன்றம் ஆகியவற்றில் மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழுக்குகளில் கலந்து கொள்வர். மேலும், சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் நீதிமன்றங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டியுள்ள ஆவணங்களை வரைவு செய்வதில் ஈடுபட்டதுடன் ஆலோசனைகளிலும் பங்குபற்றினர்.

## 5.11 தேசிய சுற்றாடல் சட்ட ஏற்பாடுகளை செயற்படுத்துவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையால் குறித்துரைக்கப்பட்டுள்ள நியமங்களை உறுதி செய்யும் வகையில் பல கைத்தொழிற்சாலைகள் சுத்திகரிப்பு தொகுதிகளை நிர்மாணம் செய்து முடித்துள்ளன. மேலும், பல கைத்தொழிற்சாலைகள் தே.சு.ச கீழ் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒலி மட்ட நியமங்களுடன் இணங்கி செயற்பட்டதுடன் சட்டத் தேவைகளுடனும் இணங்கி செயற்பட்டதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை பெற்றுக்கொண்டனர்

### 5.12 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இரத்துச் செய்தல்,மறுத்தல் மற்றும் இடைநிறுத்தல்/காரணக் கடிதங்களை காண்பித்தல்

கைத்தொழில்களால் தோற்றுவிக்கப்படும் சுற்றாடல் தொல்லைகளை கருத்தில் எடுத்த மத்திய சுற்றாடல் அதிகாரசபையானது இருபத்தைந்து(25) கைத்தொழில்களுக்கு வழங்கிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதுடன், சு.பா.உ வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்து என்பத்தொன்பது (77) கடிதங்களை அனுப்பியும் உள்ளது

மேலும், சட்டப் அலகிடமிருந்து அவசியமான அறிவுறுத்தல்களை பெற்று பகுப்பாய்வு அறிக்கைகள், இரைச்சல்(ஒலி) அளவீட்டு பரிசோதனை அறிக்கை, மற்றும் ஆய்வு அறிக்கைகள் ஆகியவற்றை சமர்ப்பிக்கும் வகையில் பல கோவைகள் ம.சு.அ யின் சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு(சு.மா.க), மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் மற்றும் ம.சு.அ ஆய்வுகூடம் ஆகியவற்றிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

### 5.13 பிரிவு 24பீ பணிப்புரைகள்

தே.சு.ச ஏற்பாடுகளை மீறிச் செயற்பட்டமை காரணமாக பிரிவு 24பீ பணிப்புரைகள் இரண்டை (02) சட்ட அலகு அனுப்பியுள்ளது

### 5.14 சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களின் நிபந்தனைகள்

சட்ட அலகின் மாகாண அலுவலகங்கள், மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றை சேர்ந்த சட்ட உத்தியோகத்தர்கள்/உதவிச் சட்ட உத்தியோகத்தர்கள் ஆகியோரால் புதிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள்(சு.பா.உ) வழங்குவது தொடர்பில் சு.பா.உ பற்றிய நிபந்தனைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

### 5.15 மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் இடம் பெற்ற மேல் முறையீட்டு விசாரனைகள்

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரினால் நடாத்தப்பட்ட அறுபத்தாறு(66) மேல் முறையீட்டு விசாரணைகளில் சட்டத்துறை பிரிவின் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 5.16 நொத்தாரிசு பணி

மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கான கருத்திட்டங்கள் மற்றும் குத்தகை ஒப்பந்தங்கள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் பல்வேறு தொழில்நுட்ப விடயங்கள் பற்றிய பல்வேறு சேவைகளை ஆலோசகர்களிடமிருந்து பெற்றுக்கொள்வது சம்பந்தமாக பல குத்தகை உடன்படிக்கைகளை தயாரித்து அவற்றின் சட்டத்தன்மையையும் சட்டப் அலகு பரிசோதனை செய்தது.

### 5.17 கூட்டங்கள்

சுற்றாடல் விடயங்கள் தொடர்பாக இடம்பெற்ற நூற்று இருபது கூட்டங்களில் சட்டப் பிரிவை சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்

### 5.18 புகார்கள்

பொதுமக்கள், உள்ளூராட்சி அதிகாரசபைகள், பிரதேச செயலக அலுவலகங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் ஆகியவற்றில் இருந்து அனுப்பப்பட்ட மாசுபடுதல் மற்றும் தொல்லைகள் சம்பந்தமான புகார்கள் சட்டப்பிரிவால் கையாளப்பட்டுள்ளது.

### 5.19 ஆலோசனைகள்.

ம.சு.அ ற்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்குகள் பற்றிய ஆட்சேபனைகள், பதில்கள் மற்றும் ம.சு.அ யால் தொடுக்கப்பட்ட வழக்குகள் சம்பந்தப்பட்ட நீதிமன்ற விசாரனைகள் சம்பந்தப்பட்ட ஆடசேபனைகள், பதில்கள் மற்றும் எழுத்து மூலமான சமர்ப்பனங்கள் ஆகியவற்றை தயாரிக்கும் முகமாக சட்டத்துறை தலைமை அதிபதியின் திணைக்களத்தில் இடம் பெற்ற முப்பது (30) ஆலோசனை கூட்டங்களில் சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 5.20 ஆலோசனைகள்.

2016 ஆம் ஆண்டில் சுற்றாடல் பற்றிய விடயங்கள் மற்றும் ஏனைய சம்பந்தப்பட்ட விடயங்கள் பற்றிய ஐந்து(05)) ஆலோசனைகள் பல உள்ளூராட்சி அதிகாரசபைகள், தனி நபர்கள் மற்றும் ம.சு.அ யின்

ஏனைய பிரிவுகள் ஆகியவற்றிற்கு வழங்கப்பபட்டன.

### 5.21 சட்ட அறிவித்தல்கள்.

சுற்றாடல் மாசடைவதற்கு காரணமாக இருந்த நூற்று ஆறு (106) கைத்தொழில்களுக்கு சட்ட அறிவித்தல்கள் அனுப்பப்பட்டன.

### 5.22 பரிசோதனை அறிக்கைகள்

நீதிமன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கும் வகையில், ம.சு.அ அலுவலர்களால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகள் பற்றிய பரிசோதனை அறிக்கைகள் பலவற்றை சட்டப் பிரிவைச் சேர்ந்த அலுவலர்கள் அங்கீகரித்து தற்சமயம் அவை மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சில் இடம் பெறவுள்ள மேல்முறையீட்டு விசாரணைகளுக்காக சமர்ப்பிக்கப்படவுள்ளன.

### 5.23 விழிப்புணர்வு

தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய சட்டங்கள் பற்றி ஏனைய நிறுவனங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் ஆகியோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக இடம்பெற்ற இருபத்து நான்கு(24) விழிப்புணர்வு நிகழ்ச்சிநிரல்களில் ம.சு.அ அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும்,சட்ட மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக மாணவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் ஒழுங்கு விதிகள் பற்றி சட்டப்பிரிவு அலுவலர்களால் அவர்களுக்கு விழிப்பூட்டப்பட்டது

### 5.24 மனித உரிமைகள் பற்றிய விசாரணைகள்

மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இடம்பெற்ற பல விசாரணைகளில் சட்டப்பிரிவை சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டதுடன், சுற்றாடல் விடயங்கள் மற்றும் மனித வளங்கள் பற்றிய பிரச்சினைகள் பற்றிய அறிக்கைகள் உட்பட பல அறிக்கைகளை தயாரித்து சரிபார்த்துடன் அவற்றை இறுதிப்படுத்தினர்.

### 5.25 தேசிய சுற்றாடல் சட்டத்திற்கான திருத்தங்கள்

ம.சு.அ யின் சட்டப் பிரிவானது ‘‘மாசுபடுத்துபவர் கொள்கைக்கு விலை கொடுக்கின்றார்’’ போன்ற புதிய எண்ணக்கருவை அறிமுகம் செய்யும் நோக்கில் சுமை அடிப்படையிலான உரிமங்கள் திட்டம் மற்றும் ஈரநிலம் மற்றும் அபாயகர கழிவுகள் பற்றிய அத்தியாயங்களை முன்மொழியப்படவுள்ள தே.சு.ச திருத்தங்களுக்கு அறிமுகம் செய்வதன் ஊடாக தண்டணை ஏற்பாடுகளை மேம்படுத்தல் பற்றிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. முன்மொழியப்பட்டுள்ள புதிய திருத்தங்கள் உள்ளடங்கிய அமைச்சரவை பத்திரம் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது.

.

# அத்தியாயம்- 6 சுற்றாடல் கல்வி வழிப்புணர்வு அலகு(சு.க.வி.அ)

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு அலகானது 1984ஆம் ஆண்டு முதல் சுற்றாடலின் பேண்தகைமையை நிலைநிறுத்தும் வகையில் இலங்கையின் அடிமட்டங்கள் தொடக்கம் பல்வேறு இலக்குக் குழுக்களுக்கு பரந்த அளவிலான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகளை நிறைவேற்றி வருகின்றது.

வளிமண்டல் பற்றிய அறிவை பொதுமக்களுக்கு பகிர்ந்து சுற்றாடலை பேணவும் சுற்றாடல் சிநேகபூர்வ முகாமைத்துவ செயற்பாட்டை ஏற்படுத்தும் முகமாக அவர்களின் முனைப்பான பங்களிப்பை பெற்றுக்கொள்வது சுற்றாடல் மற்றும் விழிப்புணர்வு அலகின் பிரதான நோக்கமாகும.2016ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின் பிரகாரம் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் திறைசேரி மற்றும் ஏனைய நிதிகளின் கீழ் இயங்குகின்றன.

1. திறைசேரி நிதியக்தின் கீழ் நிகழ்ச்சித்திட்டங்கள்
2. ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள

இந்த அத்தியாயத்தின் கீழ் திறைசேரி நிதியக்தின் கீழான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பில் கலந்துரை யாடப்படுகின்ற அதேவேகையில் பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் ம.சு.அ யால் நடைமுறைபடுத்தப்படும் கருத்திட்டங்களின் கீழ் கலந்துரையாடப்படுகின்றது

### 6.1.இப்பிரிவால் மேற்கொள்ளப்படும் முக்கிய நடவடிக்கைகள்

### 6.1.1 சுற்றாடல் செய்திக் கடிதம்

தேசிய மட்டத்திலில் ஆறு மாதங்கள் அடிப்படையில பிரசுரிக்கப்படும் சுற்றாடல் செய்திக் கடிதம் சம்பந்தப்பட்ட நறுவனங்களுக்கு தபார் மூலம் அனுப்பி வைக்கப்படுகின்றன. 2016ஆம் ஆண்டில் இரண்டு தொகுதிகள் ஊடக பிரிவால் வெளியிடப்பட்டுள்ளன.

### 6.1.2 உற்பத்தி கண்காட்சிகள் ஒழுங்கமைத்தல்

சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவான கண்காட்சிகளில் பங்குபற்றுகின்றது. இந்த நடவடிக்கை மூலம் . சு.க.வி .பிரிவானது விழிப்புணர்வை ஏற்படுத்தவும் சுற்றாடல் தொடர்பான அறிவை பரப்பவும் எதிர்பார்க்கின்றது. அத்துடன் சத்திவாய்ந்த செய்தி பரப்பும் கருவிகளான மாதிரிகள், சுவரொட்டிகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் கண்காட்சிப்படுத்தி பல்வேறு சுற்றாடல் பிரச்சினைகளை மகிழ்சுயுடன் கையாள்கின்றது.

இந்த நடவடிக்கையின் கீழ் சுற்றாடல் கல்வி விழிப்புணர்வு பிரிவானது சுற்றாடல் தொடர்பான செய்திகளை பரப்புவதற்காக துண்டப் பிரசுரங்கள்,மற்றும் சுவரொட்டிகளை பாடசாலைகள் ,அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் அரசு-சாரா நிறுவனங்களுக்கு வழங்குகின்றது.

2016 ஆம் அண்டில் சு.க.வி.பி பின்வரும் கண்காட்சி நிமழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றியது.

- மூன்று நாள் கண்காட்சிகளின் எண்ணிக்கை -11
- இரண்டு நாள் கண்காட்சிகளின் எண்ணிக்கை -14
- ஒரு நாள் கண்காட்சிகளின் எண்ணிக்கை -12

### 6.1.3 நடைமுறைச் சாத்திய நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்றல் அமர்வு-நேச்சர் பீல்ட் சென்றர்ஸ்

ம.சு.அ யின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது பல்வேறு இலக்குக் குழுக்களின் சுற்றாடல் சார்ந்த உணர்வுகளை மேம்படுத்தும் வகையிலான பல்வேறு சுற்றாடல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக நேச்சர் பீலட் நிலையங்களுக்கு காலாண்டுக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் நிதியளிக்கின்றது. மாகாண அலுவலகங்கள் மற்றும் சு.க.வி பிரிவின் கீழ் இயங்கும் நான்கு நேச்சர் பீல்ட் நிலைய நடவடிக்கைகள் பின்வருமாறு:

ஆட்டவணை 6.1: நேச்சர் பீல்ட் நிலையங்கள்

| இல | நே.பீ..நி | மாகாண அலுவலகம் | விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ரூமாசலை | தெண் மாகாண அலுவலகம் | 11 |
| 2 | குண்டசாரலை | மத்திய மாகாண அலுவலகம் | 09 |
| 3 | கேகாலை | சபரகமுவ மாகாண அலுவலகம் | இயங்க வில்லை |
| 4 | அத்திடிய | ம.சு.அ சு.க.வி பிரிவு | 14 |

**6.1.4 சமகால பிரச்சினைகள் மற்றிய கல்வி மற்றும் வழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்தல்-ம.சு.அ கேட்போர்கூடம்**

பல்வேறு இலுக்கு குழுக்கள் மத்தியில் சுற்றாடல் பற்றிய உணர்வை கட்டியெழுப்பும் நோக்கில் பாடசாலை பிள்ளைகள் மற்றும் பல்வேறு பங்குதாரர்களக்கு கல்வி மற்றும் வழிப்புணர்வு

நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. விரிவுரைகளின். தலைப்புகள் சுற்றாடலுடன் நேரடியான தொடர்பை கொண்டிருந்ததுடன் விரிவுரை விடயங்கள் பாடசாலை பாடவிதானத்ததுடன் மிகவும் நெருங்கியவாறு அமைந்திருந்தன. 2016ஆம் ஆண்டில் சம்பந்தப்பட்ட சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய 11 நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளன.

### 6.1.5 தற்கால வழிப்புணர்வு நிகழ்ச்சித்தட்டங்கள் டெங்கு

டெங்கு நோயானது பொது மக்கள் சுகாதாரத்தில் கடுமையான தாக்கத்தை செலுத்துகின்றது. டெங்கு நோய் பரவலை சுற்றாடல் முகாமைத்துவத்குவ நடவடிக்கைகள் மூலம் கட்டுப்படுத்தலாம். ஆகையால், டெங்கு தடுப்பு பற்றிய நிகழ்ச்சித்திட்டங்கள் டெண்சில் கொப்பேகடுவை மாவத்தை மற்றும் குணவர்தன மாவத்தை ஆகிய பிரதேசங்களில் மாதாந்த அடிப்படையில் நடாத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளில் பல்வேறு அரசாங்க மற்றும் அரசு-சாரா பங்குதாரர்கள் பங்கேற்றனர். 2016 நவம்பர் 22ஆம் திகதி டெங்கு தடுப்பு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று டெண்சில்கொப்பேகடுவ மாவத்தை மற்றும் குணவர்தன மாவத்தை ஆகிய பிரதேசங்களில் 90 பங்கேற்பாளர்களுடன் நடாத்தப்பட்டுள்ளது.

### 6.1.6.சுற்றாடல் வழிப்புணர்வு நிகழ்ச்சித திட்டங்களை கலாசார நிகழ்வுகள் இடம்பெறும் வேளைகளில் நடாத்தல்.

நுற்றாடல் முண்ணோடிகள் பல்வேறு கலாசார நிகழ்வுகளில் பங்கேற்று சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் பேணுகை தொடர்பில் சுற்றாடல் சிநேகபூர்வ முறையில் பின்பற்றவேண்டிய திண்ம கழிவு அகற்றல் நடைமுறைகள் பற்றிய வழிப்புணர்வை பொது மக்களுக்கு, விசேடமாக யாத்ரீகர்களுக்கு வழங்கினர்.

மாகாண மற்றும் மாவட்ட அலுவலகங்களின் ஒத்துழைப்படன் கல்லி மற்றும் விழிப்புணர்வு பிரிவானது 2016ஆம் ஆண்டில் இடம்பெற்ற தலவில புனித அன்னம்மாள் தேவாலயம், கண்டி எசல பெரஹெரா, கதிர்காமம் எசல பெரஹெரா மற்றும் அனுராதபுரம் பொசொன் பண்டிகை ஆகிய காலாசார விழரக்களை ஓருங்கிணைப்பதற்கான நிதியை வழங்கியது.

### 6.1.6 உலக சுற்றாடல் தினம்

உலக சுற்றாடல் தினத்தை கொண்டாடும் முகமாக ஓவ்வொரு வருடமும் அந்தந்த வருடத்திற்குரிய சுற்றாடல் தினக் கருப்பொருளில் பல்வேறு நடவடிக்கைகள் ஒழுங்கமைக்கப் படுகின்றன.

2016 ஆம் ஆண்டில், இந்த நிகழ்வானது மேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் “வனசீவராசிகள் சார்ந்த சட்டவிரோத வர்த்தகத்திற்கு எதிரான போராட்டம்” என்ற கருப்பொருளின் கீழ் யூன் 05ஆம் திகதி மாத்தலையில் இடம்பெற்றது. அவ்வாண்டின் உலக சுற்றாடல் தினமானது மத்திய சுற்றாடல் அதிகார சபையின் கீழ் மாகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சால் ஒழுங்கமைக்கப்பட்ட

இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பின்வரும் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

**1.** மாத்தலை மாவட்டத்தைச் சேர்ந்த மூன்று பாடசாலைகளில் விழிப்புணர்வு நிகம்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன. (ஸ்ரீநாக தேசிய பாடசரலை, நாவுல/ அம்பான மகா வித்தியாளயம், நாவலை / நாலன்த தேசிய பாடசாலை, மாத்தலை)

**2.** மாத்தலை மாவட்ட பாடசாலைகளில் 25 நாற்று மேடைகள் ஆரம்பிக்கப்பட்டன.

**3.** மாத்தலை மாவட்டத்தில் 49 பாடசாலை சுற்றாடல் கருத்திட்டங்கள் நடாத்தப்பட்டன.

### 6.1.7 தேசிய மரநடுகை நிகழ்ச்சித்திட்டம்

மர நடுகைத் திட்டமானது சுத்தமானதும் பசுமையானதுமான சுற்றாடல் ஒன்றை நோக்கிய பயணத்தை ஊக்குவித்தது. 2016ஆம் ஆண்டில் தேசிய மர நடுகை நிகழ்ச்சித்திட்டமானது மாதாந்த அடிப்படையில் பல்வேறு கருப்பொருளிக் அடிப்படையில் வித்தியாசமாக புதிய முறையில் நடாத்தப்பட்டது. அந்த மாதம் “வனரோபா”. முர நடுகை மாதமென பெயரிடப்பட்டது.

கொடுக்கப்பட்ட நிகழ்ச்சிநிரலின் படி “துரு கபரு-அபி நிரதுரு” என்பதன் கீழ் மத்திய சுற்றாடல் அத்கார சபை “வன சிசு சரன” பாடசாலை மர நடுகை நிகழ்ச்சித்திட்டததை நடாத்தியது.

பின்வரும் மூன்று நிகழ்ச்சித்திட்டங்கள் இந்த கருப்பொருளின் கீழ் நடாத்தப்பட்டன.

நாடலாவிய ரீதியில் 10,000 பாடசாலைகள் 3 தாவரங்கள் வீதம் நாட்டின

- மூன்று தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் பாடசாலைக்கு 50 தாவரங்கள் வீதம் 1150 நாட்டப்பட்டன.

- சன்குவார் தோட்டம் புசல்லாவயில் 16000 தாவரங்கள் நாட்டப்பட்டன.

**6.1.8 இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகத்தின் பயனுறுதியான பாவனை (ஊடகப்பிரிவு)**

சுற்றாடல் தொடர்பான செய்திகளை பரப்புவதற்கு பயன்படுத்தக்கூடிய சக்திவாய்ந்த கருவியே ஊடகமாகும். ஆகையால், சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் கீழ் ஊடகப்பிரிவு என்ற தனியான பிரிவொன்று தாபிக்கப்பட்டது. சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவின் ஊடகப்பிரிவால் இலத்திரனியல் மற்றும் அச்சிடல் ஊடகத்தின் பயனுறுதியான பாவனை இடம்பெறுகின்றது.

2016 ஆம் ஆண்டில் ஊடகக் பிரிவால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வருமாறு:

**6.1.9 ஊடக நிகழ்ச்சித்திட்டங்கள்**

**1. சோபாகெத வானொலி நிகழ்ச்சித்திட்டம்**

சுற்றாடல் பிரச்சினைகள் பற்றிய பொது மக்கள் விழிப்புணர்வை மேம்படுத்தும் நோக்கில் இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் *சோபாகெத (Sobaketha)* வானொலி நிகழ்ச்சி எப்.எம் 94.3/ எப்.எம் 94.5 அலை வரிசையில் ஒலிபரப்பப்பட்டது. இந்த நிகழ்ச்சியானது ஒவ்வொரு வியாழக்கிழமையும் பி.ப 6.30 மணிக்கு ஒலிபரப்பப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சுற்றாடல் தொடர்பான கேள்வியொன்றுக்கான பதிலை கேட்போரிடம் இருந்து பெறுவதன் ஊடாக நிகழ்ச்சி பற்றிய பின்னூட்டல் பெறப்பட்டது. ஒவ்வொரு மாதமும் மூன்று வெற்றியாளர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சியானது கேட்போரிடையே பெறும் வரவேற்பை பெற்றுள்ளமை பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற பதில்களின் அடிப்படையில் தெரியவந்தது.2016 ஆம் ஆண்டில் 40 சோபாகெத வானொலி நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்படன.

**2. ரூபவாஹினி கலந்துரையாடல்**

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம், சுயாதீன தொலைகாட்சி வலையமைப்பு, இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனம், சுவர்ணவாஹினி, சிரச மற்றும் தெறன ஆகிய ஊடகங்கள் ஊடாக 20 விசேட நிகழ்சிகள் மற்றும் ரூபவாஹினி/ வானொலி கலந்துரையாடல்கள் ஒலி ஒளிபரப்பப்பட்டன.

**3.மிஸ்டர் கிரீன் மீள் உற்பத்தி**

2016, ஆண்டில் 40 மிஸ்டர் கிரீன் DVD விநியோகிக்கப்பட்டன.

**4.விருது உள்ளடங்கிய CD விநியோகிக்கப்பட்டன**

2016 ஆண்டில் ஊடகப் பிரிவானது 36 குறுவட்டுக்களை (CDs) அரசம மற்றும் தனியார் நிறுவனங்கள், பாடசாலைகள் மற்றும் வேண்டுகோள் முன்வைத்த வெளித்தரப்பினர் ஆகியோருக்கு விநியோகித்தனர்

அட்டவணை 6.2: அச்சு ஊடக வெளியீடுகள் இணைய பதிவேற்றங்கள்

| அச்சு ஊடக வெளியீடுகளின் எண்ணிக்கை | இணைய பதிவேற்றங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 60 | 51 |

**5.சன்ஹித நூல் விநியோகம்**

பதினேழு (17) சுவரொட்டிப் புத்தகங்கள் ,25 கவிதை புத்தகங்கள் மற்றும் 25 சிறு கதை புத்தகங்கள் ஆகியவற்றை விநியோகித்தது.

**6.நிகழ்ச்சி உள்ளடக செயற்பாடு**

ம.சு.அ யின் குறிக்கோள்களுக்கு அமைவாக இடம்பெறும் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றை ஒலி-ஒளி பிரிவானது விரிவான முறையில் உள்ளடக்குகின்றது.

ஒலி-ஒளி பிரிவானது தனது கடமையின் நிமித்தம் 99 நிகழ்வுகளை 2016 ஆம் ஆண்டில் உள்ளடக்கியுள்ளது.

**7.தினசரி பத்திரிகைகள் மூலம் சுற்றாடல் பிரச்சனைகளை பரப்புதல்**

இது ஊடகப் பிரிவு கையாண்ட மற்றுமொறு பணியாகும். தினசரி பத்திரிகையில் பிரசுரமான சுற்றாடல் பற்றிய ஒவ்வொரு பிரச்சினையும் சம்பந்தப்பட்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளன. 2016, ஆம் ஆண்டில் 1108 பத்திரிகை செய்திகள் பரப்பப்பட்டன.

**8.செய்திகள் மற்றும் அச்சுஊடக வெளியீடு**

ஊடகத்தின் ஊடாக சமுதாயமொன்றின் விரிவான பகுதியினரை வழிப்பூட்ட முடியும். ஆகையால், மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அதன் செய்திகள்,கட்டுறைகள் மற்றும் செயற்பாடுகளை வானொலி, தொலைக்காட்சி, செய்திப் பதிரிகைகள் மற்றும் இணையத் தளம் ஆகியவற்றின் ஊடாக வெளியிடுகின்றது. அதனடிப்பயில் செய்தி வெளியிடகள் ,இணைய பதிவேற்றங்கள் மற்றும் ஊடக ஏற்பாடுகள் அகியவற்றின் எண்ணிக்கை கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

**6.1.10 நில்வனபெத மற்றும் சோபகெத டி.வி.டி விநியோகம்**

2014ஆம் ஆண்டில், நில்வனபெத "சுற்றாடல் பாடல்"ஆரம்பிக்கப்பட்டது. 2016 ஆம் ஆண்டில் அத்தகைய இறுவட்டுக்களை அரச/தனியார் நிறுவனங்கள், பிராந்திய அமைப்புகள், பாடசாலைகள் மற்றும் வேண்டுகோள் விடுத்த வெளித்தரப்பினர் மத்தியில் விநியோகம் செய்தல் பிரதான பணியாகக் காணப்பட்டது. இருபத்தைந்து (25) நில்வனபெத இறுவட்டுக்களும் நூற்று இருபத்து நான்கு (124) டி.வி.டி க்களும் விநியோகம் செய்யப்பட்டுள்ளன.






உரு 6-1 :நில்வனபெத மற்றும் சோபகெத

**1. சுற்றாடல் சார்ந்த பாடல்களை காட்சிப்படுத்தல்**

வீடியோ ஒன்று நிறைவடைந்துள்ளது.

**2. அரசு-சாரா தாபனங்கள் பதிவு**

அரசு-சாரா தாபனங்களை பதிவு செய்யும் பணியானது ஊடக பிரிவின் தனித்துவமான வகிபாகமாக காணப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில் 28 அரசு-சாரா தாபனங்கள் பதிவுசெய்யப்பட்டன.

**3. சுவசர தகசலாவ நிகழச்சி அதிசுத்தமானதும் பசுமையான சுற்றாடலையும் கொண்டுள்ள பாடசாலை தெரிவு செய்தல்.**

பாடசாலை முறைமையில் சிறந்த சூழலை தாபித்தல் தொடர்பில் பாடசாலை மாணவர்களை சுற்றாடல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல் இத்த நிகழ்ச்சியின் பிரதான நோக்கமாகும்.

2016, ஆம் ஆண்டில் 75 பாடசாலைகள் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்டன.

### 6.1.1.1 பாடசாலை நூலகங்களை தாபித்தல்

சு.க.வி பிரிவின் ஐந்து ஆண்டு செயற்திட்டத்தின் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட வசதிகளுடன் சுற்றாடல் முன்னோடி சிகழ்ச்சித்திட்டத்தை முன்னெடுக்கும் 5 பாடசாலை நூலகங்கள் தேசிய சுற்றாடல் தகவல் நிலையத்தால் தெரிவுசெய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட பாடசாலை நூலகங்களின் சுற்றாடல் பிரிவின் அபிவிருத்தியானது பின்வரும் மாவட்டங்களில் முன்னெடுக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நூல்கள், சஞ்சிகைகள், சுவதொட்டிகள் துண்டுப்பிரசுரங்கள் மற்றும் ஏனைய சாதனங்கள் போன்ற நூலக உபகரனங்கள் 1.5 மில்லியன் பெறுமதியில் வழங்கப்பட்டது.

அட்டவணை 6.3: பாடசாலை நூலகங்கள் தாபித்தல்

| இல: | பாடசாலையின் பெயர் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | வெல்லாவெலி கலைமகள் வித்தியாலளம் | மட்டக்களப்பு |
| 2 | அபகஹஹெென மகா வித்தியாலளம் | ஹம்பாந்தோட்டை |
| 3 | சுமன சமன் மகா வித்தியாலளம் | இரத்தினபுரி |
| 4 | திப்பிட்டிய கணிஸ்ட பாசாலை | கண்டி |
| 5 | மதுரங்குளிய மகா வித்தியாலளம் | புத்தளம் |



உரு 6-2: பாடசாலை நூலகங்கள் தாபித்தல்

### 6.1.12 நூலக கையிருப்பின் அபிவிருத்தி

177 சுற்றாடல் புத்தகங்கள், 10 சுற்றாடல் பத்திரிககைகள் மற்றும் ஹாட் டிஸ்க் ஒன்று விலைக்கு வாங்கப்பட்டன. 205 புத்தகங்கள் கையகப்படுத்தப்பட்டு வகைப்படுத்தப்பட்டதுடன் 285 சஞ்சிகைகள் நூலக கையிருப்புடன் சேர்க்கப்பட்டன.

**6.1.13 ஆவணமயமாக்கல் சேவை மற்றும் வழிப்படுத்தல் பணி**

**1.** தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் பின்வருவனவற்றை பேணுகின்றது



- நூலக புத்தக பட்டியலுக்கான ம.சு.அ தரவுத்தளம்
- பத்திரிகை மற்றும் சஞ்சிகை ஆக்கங்களுக்கான IND தரவுத்தளம்.

**4.** வெளியிடப்பட்டன.

**6.1.14 சுற்றாடல் தகவல் பரிமாற்றம்**

- தேசிய சுற்றாடல் தகவல் நிலையம் 5105 பயனாளிகளுக்கும் அத்திடிய மற்றும் ரூமசலா நேச்சர்ஸ் சென்டரைச் சேர்ந்த 2538 பயணாளிகளுக்கும் சுற்றாடல் செய்திகளை பெற்றுக்கொள்வாற்கான அனுசரணையை

**6.1.15 நூலக வலைப்பிண்ணல் நடவடிக்கைகள்**

- தென்கிழக்காசிய (HELLIS) சுதாதார விஞ்ஞான நூலக வலையமைப்பு/இலங்கை நூலகச் சங்கம் (SLLA) /இலங்கை விஞ்ஞான தொழில்நுட்ப தகவல் நிலையம்(SLSTIC)/ கமத்தொழில் தகவல் வலையமைப்பு

2016 ஆம் அண்டில் 1075 தரவுகளை பதிவேற்றம் செய்துள்ளதுடன் அவற்றை பேணுகின்றது.

- சு.தா.ம /ஆ.சு.ம அறிக்கைகளுக்கான சு.தா.ம /ஆ.சு.ம தரவுத்தளம்
- ம.சு.அ வெளியீடுகளுக்கான இ.கலஞ்சியம்

**2.** இவ்வாண்டில் ம.சு.அ வெளியீடுகளை உள்ளடக்கிய இ-கலஞ்சியம் இணையத் தளத்திற்கு இணைக்கப்பட்டதுடன். 10,400 தரவுகளும் பதிவேற்றப்பட்டன. 160 பத்திரிகை கோப்புகள் வெளி ஹாட் டிஸ்கக்கில் பிரதியிடப்பட்டது(1991-2013)

**3.** "தற்போதைய உள்ளடக்கம்" மற்றும் நான்கு சுற்றாடல் செய்தி பத்திரிகை சுட்டெண்கள் பற்றிய ஆறு சுற்றாடல் சஞ்சிகைகள் ம.சு.அ பணியாளர்களுக்கு

வழங்கியுள்ளது. அத்துடன் ம.சு.அ உத்தியோகத்தர்கள் மத்தியில் 3600 நூல்கள் மற்றும் பருவ அதழ்களையும் விநியோகித்துள்ளது.

- பலுகஸ்தமன சேவாமுக்தா கன்துர மகா வித்தியாலயத்திற்கு அறுபது கைநூல்களும் துண்டுப்பிரசுரங்களும் நன்கொடையாக வழங்கப்பட்டன.

(AGRINET) நூலக வலையமைப்புகளுடன் தகவல் வேண்டுகோள்களை கையாளல்.

- 11 நூலகக்கூட்டங்கள் மற்றும் பயிற்ச்சிப்பட்டறைகளில் பங்கேற்றல்.
- கமத்தொழில் தகவல் வலையமைப்பு தரவை (CARP) ஒட்டோவா நூலகத்திற்கும் (UCAT) உயர் கற்பித்தலுக்கான பல்கலைக்கழக நிலையத் தரவை தேசிய நூலகத்திற்கும் அனுப்புதல்.

### 6.2 ஏனைய செயற்பாடுகள்

### 1. “ஹரித தருவோ” நிகழ்ச்சி

அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்களின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற சர்வதேச செயலமர்வு மற்றும் கண்காட்சிக்கு சமாந்தரமாக “ஹரித தருவோ” நிகழ்ச்சியானது 2016 ஒக்டோபர் 17 முதல் 2016 ஒக்டோபர் 19 வரை இடம்பெற்றது அதேவேளையில் சித்திரம், கட்டுரை மற்றும் பேச்சு போட்டிகளும் நாடலாவிய ரீதியில் நடாத்தப்பட்டன.
இதற்கு சமாந்தரமாக சுற்றாடல் கல்வி மற்றும் வழிப்புணர்வு பிரிவால் சிங்களம் தமிழ் மற்றும் ஆங்கிள மொழிகளில் இரண்டு சுற்றுக்களின் கீழ் பேச்சு போட்டிகள் நடாத்தப்பட்டன.

மேற்படி போட்டிகளில் அகில இலங்கை ரீதியில் வெற்றியீட்டிய வெற்றியாளர்களுக்கு மேற்படி நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்பட்டன. போட்டியின் ஊடாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்கள் கண்காட்சியில் வைக்கப்பட்டதுடன் ம.சு.அ இணையத்தளத்திலும் பதிவேற்றப்பட்டன..

### 2. புணருட்தைய நிகழ்ச்சி

சுற்றாடல் முன்னோடிகளின் அறிவு,திறன் மற்றும் மனப்பாங்கை மேம்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று 114 பங்கேற்பாளர்களுடன் 2016 ஒக்டோபர் 18 ஆம் திகதி இடம்பெற்றது. குதுவ-சிங்கராஜ வனத்திற்கான கள விஜயமொன்று 134 பங்கேற்பாளர்களுடன் 2016 நவம்பர் 3 ஆம் திகதி முதல் 4ஆம் திகதி வரையிஇடம்பெற்றது.

# அத்தியாயம் 7 : திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு அலகு

சம்பந்தப்பட்ட பிரிவுகள், அலகுகள், மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் ஆலோசனையுடன் தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் அதிகாரமளிக்கப்பட்டுள்ள கடமைகள் மற்றும் பொறுப்புகள் ஆகிவற்றின் வரையறைகக்குள் பல்வேறு செயற்பாட்டுத் திட்டங்களை வகுப்பதும் அவற்றை நிறைவேற்றுவதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை தாபிக்கப்பட்டதன் நோக்கங்களை அடைவதே திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவின் முக்கிய பொறுப்புக்களாக உள்ளது.

இச்செயற்பாடானது அரசாங்கத்தின் சுற்றாடல் துறைக்கு முன்னுரிமை அளிக்க உதவியதுடன் வரவு செலவு திட்டத்திலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு தனியார் துறையில் முதலீட்டு திட்டங்களை விருத்தி செய்வதற்கும் அல்லது வழிநடத்துவதற்கும் வழிசமைத்ததுள்ளதுடன் சர்வதேச நிதி மற்றும் அபிவிருத்திசார்ந்த ஆதரவை முறையாக அணிதிரட்டவும் வழிசமைத்துள்ளது.

வெளித்தரப்பு மூலம் நிதியுதவி அளிக்கப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் ம.சு.அ யின் வருடாந்த திட்டங்களின் அடிப்படையில் அமைந்த ஏனைய தலையீடுகள் ஆகியவற்றின் சுற்றாடல் துறைச்சார்ந்த ஒவ்வொரு கருப்பொருற் பரப்பிற்கும் பல்வேறு செயற்திட்டங்கள் விருத்தி செய்யப்பட்டதுடன் அவை மத்திய அரசாங்கத்தின் அமைப்பான தலைமை அலுவலகத்தினாலும் பிராந்திய மட்டத்தில் மாகாண அலுவலகங்களாலும் நடைமுறை படுத்தப்படுகின்றன.

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவானது ம.சு.அ யின்–2018 ஆண்டுக்கான கூட்டிணைந்த திட்டத்தின் அடிப்படையில் அமைந்த பல்வேறு செயற்திட்டங்களை வகுத்தல், கண்காணிப்பு திட்டமிடல் மற்றும் உரிய காலத்திற்குறிய இயக்க செயற்பாடுகள் ஆகிய செயற்பாடுகளுக்கு தலைமை வகித்தது. இப்பிரிவானது மேற்படி திட்டங்களை ஒருங்கிணைத்து அனுசரணை வழங்கி அவற்றை நடைமுறைபடுத்தல், சம்பந்தப்பட்ட அதிகார சபைகளுக்கு வெளியீடுகளை உரியகாலத்தில் வழங்குதல் மற்றும் இப்பரிவின் செயற்பாடுகள் பற்றிய ஒவ்வொரு அம்சங்களின் முன்னேற்ற அறிக்கையை வெளியிடுதல் ஆகியவற்றுக்கு பொறுப்பாகவுள்ளது.

அதிகாரசபையின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து கண்காணிப்பது தொடர்பில் பொருத்தமான முறைமையொன்றுக்கு வழிசமைக்கும் வகையில் பிரதான விடயங்கள் பற்றிய பிரச்சினைகளை பிராந்திய மட்டத்தில் ஒரே மேடையில் கலந்துரையாடும் முகமாக தனித்தனியான கூட்டங்கள் மாதத்தில் ஒருமுறை ம.சு.அ யின் முகாமைத்துவம் மற்றும் மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஒழுங்கமைக்கப்பட்டன.

### 7..1 மாகாண அலுவலகங்களுடன் ஒருங்கிணைப்பு

மாகாண அலுவலகங்கள் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நிர்வாகம் மற்றும் சுற்றாடல் பிரச்சினைகள் தொடர்பில் தலைமையகம் மற்றும் மாகாண அலுவல்கள் ஆகியவற்றுக்கு இடையில் திட்டமிடல் முகாமைத்துவ பிரிவின் அனுசரணையை உள்ளடக்கும் சுற்றாடல் பிரச்சினைகளை ஒத்திசைவாக்குவதற்கு நிருவாக ஏற்பாடொன்றின் அடிப்படையிலான ஒருங்கிணைப்புப் பொறிமுறையொன்று இருக்க வேண்டும். மேலும், திட்டமிடல் மற்றும் முகாமைத்துவ பிரிவானது செயற்திட்ட அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு பற்றிய கருத்திட்ட முன்மொழிவுகளை பெற்-றுக்கொள்ளல் மற்றும் அவற்றை நிறைவேற்றல் ஆகியவற்றுடன் தொடர்புடைய விடயங்களை ஒருங்கிணைக்கவும் வேண்டியுள்ளது.

கம்பஹா, கலுத்தறை, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, மட்டக்களப்பு, நுவரெலியா, மாத்தலை, மொனறாகலை (புத்தல) இரத்தினபுரி, பொலன்னறுவை, மட்டக்களப்பு, அம்பாறை, கிளிநொச்சி, வவுனியா. முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளடங்களாக 15 மாவட்ட அலுவலகங்கள் காணப்படுகின்றதுடன் இவை 2015ஆம் ஆண்டில் செயற்பட்டன.

## 7.2 பாராளுமன்ற ஆலோசனைக் குழு

2016 ஆம் ஆண்டில் பல்வேறு பிரச்சினைகள் பற்றிய ஏராளமான புகார்கள் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு கிடைத்தன. அத்தகைய புகார்கள் சம்பந்தப்பட்ட பிரிவுகள்/மாகாண அலுவலகங்கள் ஆகியவற்றுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டதுடன் அவை பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டன. அறிக்கைகள் சுற்றாடல் அமைச்சின் ஊடாக பாராளுமன்ற ஆலோசனைக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன. இந்த அறிக்கைகள் கௌரவ சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சர் தலைமை வகித்த இந்த பாராமன்ற ஆலோசனைக் குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்கேற்றலுடன் கலந்துரையாடப்பட்டன.

## 7.3 சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்கான தரவுத்தளம் பேணுகை மற்றும் இற்றைபடுத்தல்(பீ வகை)

சுற்றாடல் பாதுகாப்பு உரிமமானது தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஒழுங்கமைப்பு கருவியாக செயற்பட்டு கைத்தொழில் நடவடிக்கைகள் காரணமாக ஏற்படும் சுற்றாடல் மாசடைத்தலை கட்டுப்படுத்துகின்றது.

2008.01.25 ஆம் திகதிய 1533/ 16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் கீழ் வெளியிடப்பட்டு,"ஏ" உயர் மாசடைதல்,

"பீ" நடுத்தர மாசடைதல் மற்றும் "சீ" குறைந்தளவு மாசடைதல் என்ற வகையில் குறித்துரைக்கப்பட்டு பட்டியலிடப்பட்டள்ள அனைத்து நடவடிக்கைகளுக்கும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கவேண்டியது கட்டாயமாகும்.

ம.சு.அ யின் சுற்றாடல் மாசுக் கட்டுப்பாட்டு பிரிவானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்திற்கான தரவுக்தளம் ஒன்றை பேணிவருகின்றது- (ஏ வகை) அவ்வாறான தரவுத்தளம் ஒன்றை (பீ வகை) சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் தொடர்பிலும் பேணவேண்டியது அவசியமாகும். ஆகையால், திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு பிரிவானது ம.சு.அ யின் மாகாண அலுவலகத்தால் வழங்கப்பட்ட "பீ" வகையின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (பி வகை) ஒன்றின் பிரதியை சேகரித்தது.

சு.பா.உ ற்கான தரவுக்தளத்தை பேணுவதுடன்அதனை மாதாந்தம் இற்றைப்படுத்தியும் உள்ளது.மேலும், சுருக்க புள்ளிவிபர அறிக்கைகளை தேவைக்கேற்பவாறு மாதாந்தம், காலாண்டுக்கு ஒருமுறை மற்றும் வருடாந்தம் என்ற அடிப்படையில் உருவாக்குகின்றது. இந்த தரவுத்தளமானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் பற்றிய எதிர்கால தீர்மானங்களை மேற்கொள்ளவும் எதிர்வுகூறல்களை விடுக்கவும் மிகவும் அவசியமாகவுள்ளது. 2016ஆம் ஆண்டின் இறுதிவரையில் 11,837 (ஏ வகை) சு.பா.உ தரவுகள் மற்றும் 1663,(பீ வகை) சு.பா.உ தரவுகளும் 2016ஆம் ஆண்டின் தரவுத்தளத்திற்கு பதிவேற்றப்பட்டுள்ளன.

## 7.4 மேற்பார்வை குழு

சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை (சு.தா.ம) நடைமுறைபடுத்துவன் ஊடாகவும் கைத்தொழில்களுக்கு சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை (சு.பா.உ) வழங்குவதன் ஊடாகவும் தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் தனது ஒழுங்கமைப்பு அதிகாரத்தை ம.சு.அ பயன்படுத்துகின்றது. மேலும், சு.தா.ம அல்லது ஆ.சு.ம ஆகியன அவசியமற்ற புதிய கைத்தொழில் அமைவிடங்கள் மற்றும் இயற்கை வளங்கள் சம்பந்தப்பட்ட கருத்திட்டங்களின் புதிய அமைவிடங்கள் பற்றிய பரிந்துரை விடுத்தல் செயற்பாட்டின் ஊடாக ம.சு.அ விடுவித்தது. பாரிய கருத்திட்டங்கள் தொடர்பான சு.தா.ம செயல்முறை மற்றும் "ஏ" வகைக் கைத்தொழில் கருத் திட்டங்களுக்கான சு.பா.உ தவிர்ந்த மேற்குறிப்பிட்ட நடைமுறைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட மாகாண மற்றும் மாவட்ட

அலுவலகங்களால் முன்னெடுக்கப்படுகின்றன. தலைமையகம், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவை அனைத்தும் ஒரே சீரான நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்ற முக்கிய விடயம் விளங்கியுள்ளது தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமையவே சு.தா.ம மற்றும் சு.பா.உ பற்றிய நடைமுறைகள் பின்பற்றப்படுவதால் விண்ணப்பங்களை வகைப்படுத்துவதற்கான நேரகாலம், கருத்திட்ட உரிமையாளர்களால் சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆவணங்களின் தேவை, கருத்திட்ட உரிமையாளர்களால் செலுத்தப்படவேண்டிய கட்டணம் ஆகியவை நாடு பூராகவும் ஒரே விதமாக அமையவேண்டும்.

இதனை கருத்திற் கொண்டு, தலைவர் ஒருவரால் வழிநடத்தப்படும் மேற்பார்வைக் குழவொன்று தாபிக்கப்பட்டது.

இந்த குழுவானது பணிப்பாளர் நாயகம் மற்றும் சு.மா.க மற்றும் சு.மு.ம பிரிவுகளின் பிரதி பணிப்பாளர் நாயகங்கள் மற்றும் சு.மா.க, தே.வ.மு, சு.தா.ம, சட்டம், கழிவு முகாமைத்துவ பிரிவுகளின் பணிப்பாளர்கள் மேல், மத்திய, சப்ரகமுவ, தென், கிழக்கு ஆகிய மாகாணங்களின் மாகாண பணிப்பாளர்கள்/ஊவா, வடமத்திய மற்றும் வட மாகாணங்களுக்கு பொறுப்பான அதிகாரிகள் ஆகியோரரை உள்ளடக்கியுள்ளது.

இந்த குழுவானது இரண்டு கிழமைகளுக்கு ஒரு முறை கூடியதுடன் அனைத்து சு.தா.ம, ஆ.சு.ம அங்கீகாரங்கள், 'ஏ' வகை கைத்தொழில்களை தாபிப்பதற்கான புதிய அமைவிட பரிந்துரைகள், புதிய'ஏ' வகை சு.பா.உ கள் முதலீட்டுச் சபைக்கான புதிய சு.பா.உ கள் மற்றும் அமைவிட பரிந்துரைகள் ஆகியவை பிரதி பணிப்பாளர் நாயகத்தால் அல்லது தலைமை அலுவலகத்தின் பணிப்பாளர்கள் அல்லது சம்பந்தப்பட்ட மாகாண அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகள் ஆகியோரின் ஒப்புதல் பெறப்படுவதற்கு முன்னர் இந்த குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டன.

2016 ஆம் ஆணடில் அவ்வாறான கூட்டங்கள் 12 இடம்பெற்றதுடன் திட்டமிடல் கண்காணிப்பு பிரிவானது இப்பணியின் ஒருங்கிணைப்பு மற்றும் செயலகப்பணி ஆகிவை அனைத்தையும் மேற்கொண்டது.

**கூட்டங்கள்**

திட்டமிடல் மற்றும் கண்காணிப்பு குழுவானது பல்வேறு கூட்டங்களை ஒருங்கிணைப்பு செய்ததுடன் முக்கிய வகிபாகத்தையும் வழங்கியது.

## 7.6 கருத்திட்ட ஒருங்கிணைப்பு, கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் அறிக்கையிடல்

நிகழ்ச்சித் திட்ட இலக்குகளை அடைதல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட நிதியின் உச்ச பயனை பெறுதல் ஆகிய நோக்கங்களின் அடிப்படையில் திரைசேரி நிதி உதவியுடனான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பின்வரும் இயக்கச் செயற்பாடுகள் இப்பிரிவால் ஒருங்கிணைக்கப்பட்டதுடன் அனுசரணையும் வழங்கப்பட்டது

### 7.6.1 திரைசேரி நிதி உதவியுடனான நிகழ்ச்சித்திட்டங்கள்

- பிலிசறு நிகழ்ச்சித்திட்டம் (ரூபா 190 மில்லியன்.)
- ம.சு.அ ஆய்வுகூடம் மேம்பாடு (ரூபா 30 மில்லியன்.)
- பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம; (ரூபா 20 மில்லியன்.)

### 7.6.2 வெளிநாட்டு நிதியுதவித் திட்டம்

- பாரிய நீர் நிலைகளின் நீரின் தரத்தை கண்காணித்தல் (ஜெய்கா கருத்திட்டம்) (இலங்கை அரசு – 5 மில்லியன், ஜெய்கா – 26.5 மில்லியன்)
- பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியளிப்பு (EDCF) கழிவு அகற்றல் இடவசதிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம்(இலங்கை அரசு – 26 மில்லியன்/கொரியா – 160 மில்லியன்)

EDCF விளக்கம்: பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் நிதியுதவி. இந்த கருத்திட்டத்திற்கு ரூபா 186 மில்லியன் ஒதுக்கியுள்ளது (160 மில்லியன் – வெளிநாடு, 26மில்லியன–உள்ளூர்)

# அத்தியாயம் 8 : புகார் அலகு

மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தலைவரால் தலைமைத்துவம் செய்யப்படும் முகாமைத்துவ குழுவின் கண்காணிப்பின் கீழ் பிரிவுகள், அலகுகள், மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியன புகார்கள் கையாளும் செயற்பாட்டை முன்னெடுத்து வருகின்றன. 2016 ஆம் ஆண்டின் அடைவு மட்டமானது கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன. ஆயினும் எதிர்பார்க்கப்படும் நிதித் தடைகள் காரணமாக ம.த்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு புகார்-கையாளல் முறைமையை புதிய இணைய அடிப்படையிலான புகார் கையாளல் மென்பொருள் முறையை தாபித்து இற்றைப்படுத்த முடியாத நிலைமை ஏற்படும

அட்டவணை **8.1** பொது மக்கள் புகார்களை கையாள்தல் தொடர்பில் பிரிவுகள்,மாகாண அலுவலகங்கள், மற்றும் மாவட்ட அலுவலகங்கள் மத்தியில் பொறுப்புக்களை பகிர்வு செய்தல் பற்றிய சுருக்கம்- 2016 :

| | பிரிவு / அலுவலகம் | | கிடைக்கப்பெற்ற புகார்கள் | | தீர்வுகாணப்பட்ட புகார்கள் | |
|---|---|---|---|---|---|---|
| | | | No. | % | No. | % |
| 1. | மேல் மாகாணம் | கொழும்பு மாவட்டம் | 499 | 33.2 | 314 | 63 |
| | | கம்பஹ மாவட்டம | 431 | | 171 | 38 |
| | | களுத்தரை மாவட்டம் | 447 | 16.0 | 163 | 38 |
| 2. | தென் மாகாணம் | காலி மாவட்டம் | 143 | 11.3 | 124 | 87 |
| | | மாத்தறை மாவட்டம் | 123 | | 57 | 46 |
| | | ஆம்பாந்தோட்டை மாவட்டம் | 51 | | 31 | 61 |
| 3. | ஊவா மாகாணம் | பதுளை மாவட்டம் | 83 | 5.5 | 68 | 82 |
| | | மோனராகலை மாவட்டம் | 71 | | 64 | 90 |
| 4. | வட மேல் மாகாணம் | | 129 | 4.6 | 45 | 35 |
| 5. | சபரகமுவ மாகாணம் | இரத்தினபுரி மாவட்டம் | 280 | 18.6 | 204 | 73 |
| | | கேகாலை மாவட்டம் | 241 | | 124 | 51 |
| 6. | வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் மாவட்டம் | 46 | 2.3 | 25 | 54 |
| | | பொலன்னறுவை மாவட்டம் | 19 | | 6 | 32 |
| 7. | மத்திய மாகாணம் | கண்டி / நுவரெளியா மாவட்டங்கள் | 105 | 4.6 | 21 | 20 |
| | | மாத்தலை மாவட்டம் | 25 | | 4 | 16 |
| 8. | கிழக்கு மாகாணம் | திருகோணமலை மாவட்டம் | 15 | 1.1 | 3 | 33 |
| | | அம்பாறை மாவட்டம் | 11 | | 0 | 0 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | மட்டக்களப்பு மாவட்டம் | 5 | | 1 | 20 |
| 9. | வட மாகாணம் | | 14 | 0.5 | 5 | 36 |
| 10. | சுற்றாடல் மாசு கண்காணிப்பு பிரிவு | | 28 | 1.0 | 20 | 71 |
| 11. | கழிவு மகாமைத்துவ பிரிவு | | 3 | 0.1 | 0 | 0 |
| 12. | சுற்றாடல் தாக்க மதிப்பீடு பிரிவு | | 27 | 1.0 | 19 | 70 |
| 13. | இயற்கை வளங்கள் முகாமைத்துவ பிரிவு | | 6 | 0.2 | 4 | 66 |
| | மொத்தம் | | 2,802 | 100.0 | 1473 | 53 |

**பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் மத்தியில் புகார்களின் பகிர்வு- 2016**




உரு **8-1**: **பிரிவுகள் மற்றும் மாகாண அலுவலகங்கள் மத்தியில் புகார்களின் பகிர்வு- 2016**

***குறிப்பு*** - (1). மொத்த புகார்களின் எண்ணிக்கை: 2,802 (2). சதவீதம் பெறுமதிகள் முழு எண்ணுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது

(3).2017.01.13 இல் உள்ளவாறு ம.சு.அ யின் சம்பந்தப்பட்ட பிரிவுகள் மற்றும் அலுவலகங்களால் தரவேற்றம் செய்யப்பட்ட மேற்படி அட்டவணையின் தரவுகள் மற்றும் விளக்கப்படத்தில் குறிக்கப்பட்டுள்ள தரவுகள் என்பன புகார்கள் கையாளும் மென்பொருளால் அட்டவணைப்படுத்தப்பட்டன. #2,802

| | | | |
|---|---|---|---|
| WP-G | : கம்பஹா அலுவலகம் | EPC | : சுற்றாடல் மாசு கட்டுப்பாட்டு பிரிவு |
| SUP | : தெண் மாகாணம் | WM | : கழிவு முகாமைத்துவ பிரிவு |
| NCP | : வட மத்திய மாகாணம் | NRM | : இயற்கை வள முகாமைத்துவ பிரிவு |
| NW | : வடமேல் மாகாணம் | EIA | : சுற்றாடல் தாக்க மதிபீட்டு பிரிவு |
| SAP | : சப்ரகமுவ மாகாணம் | CP | : மத்திய மாகாணம் |

EP : கிழக்கு மாகாணம் NP : வட மாகாணம்

WP-C&K : கொழும்பு களுத்தறை உத்தியோகத்தர்கள்

**ம.சு.அ பிரிவுகள் மாகாண அலுவலகங்கள் பெற்றுக் கொண்ட புகார்கள் மறும் தீர்க்கப்பட்ட புகார்களும்**



















Received
Resolved
In progress
#130
81%
19%
140
120
100
80
60
40
20
0
முன்னேற்றம்- ம.மா


Received
Resolved
In progress
#31
87%
13%
35
30
25
20
15
10
5
0
முன்னேற்றம்- கி மா


Received
Rsolved
In progress
#36
61%
39%
40
35
30
25
15
10
5
0
முன்னேற்றம் வ்மா


Received
Resolved
In progress
#28
71%
29%
30
25
20
15
10
5
0


Received
Resolved
In progress
#27
70%
30%
30
25
20
15
10
5
0
முன்னேற்றம்- சு.தா.ம


Received
Resolved
In progress
#3
100%
00%
3.5
3
2.5
2
1.5
1
0.5
0
முன்னேற்றம் க. மு







உரு **8-2:** ம.சு.அ பிரிவுகள் மாகாண அலுவலகங்கள் பெற்றுக் கொண்ட புகார்கள் மறும் தீர்க்கப்பட்ட புகார்களும்

# அத்தியாயம்- 9 தகவல் தொழில்நுட்ப அலகு

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இணையத்தளம், மின்னஞ்சல் சேவை, உள்ளூர் வலையமைப்பு, தரவுத்தளம் மற்றும் கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் உள்ளிட்ட தகவல் தொழில்நுட்ப வளங்களின் இயக்கச்செயற்பாடு மற்றும் பேணுகை ஆகியவற்றிக்கு பொறுப்பாக தகவல் தொழில்நுட்பபப் அலகு செயற்படுகினறது.

**பணிகள்**

- சேவர்கள் மற்றும் உள்ளூர் வலையமைப்பு உட்பட தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பை பேணல
- அதிகாரசபையின் தகவல் தொழில்நுட்ப பாதுகாப்பை முகாமைத்துவம் செய்தல்
- ம.சு.அ இணையத்தளத்தை அபிவிருத்தி செய்து அதனைப் பேணல்.
- ம.சு.அ தேவைகளை ஈடுசெய்யும் தனிப்பயனாக்கப்பட்ட தகவல் முறைமையை அபிவிருத்தி செய்தல
- மென்பொருள் மற்றும் வன்பொருள் வர்த்தகர்களின் தொடர்பை ஒருங்கிணைப்பு செய்தல் தகவல் தொழில்நுட்ப கருத்திட்ட முகாமைத்துவம்
- மத்திய சுந்நாடல் அதிகார சபைக்கான நீறுவக மின்னஞ்சல் சேவையை முகாமைத்துவம் செய்தல்
- வன்பொருள் மற்றும் மென்பொருள் பிரயோகம் மற்றும் பயனாளி மட்ட இயக்க முறைமை முகாதைத்துவம்
- ம.சு.அ பணியாட்களுக்கு செயலமர்வு பயிற்சப்பட்டறை ஆகிவற்றை நடாத்தல்
- தகவல் தொழில்நுட்ப கருமபீடத்தை பேணல்

**சாதனைகள்**

ஜாவா ஈ.ஈநிறுவக பிரயோகத்தைபயன்படுத்தி உள்ளக முறைமையை அபிவிருத்திசெய்தல்

DBMS

- வைத்திய காப்புறுதி உரிமைகோரல் முறைமை.
- உத்தியோகத்தர்களின் தொலைபேசி கொடுப்பணவு முறைமை.
- EIASYS: சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு முறைமை.
- EPL SYSTEM – சு.பா.உ முறைமை – சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் (செயற்பாட்டில் உள்ளது)
- ஓன்லைன் கொடுப்பணவு முறைமை

இந்த முறைமையானது முழுமையான இணையம் சார்ந்த பணிகளை வழங்குகின்றது. இது உள்ளக தேவைகளுக்காக நடைமுறைபடுத்தப்பட்டது இங்கு பயன்படுத்தப்பட்ட பிரதான தொழில்நுட்பமானது J2EE என்டர்பிரைஸ் அப்பிகேசன், நெட்பீம்ஸ் 7.0, உடனான MY SQL-சேர்வர், ப்ரைம்பேஸ், 3.4 மற்றும் அபோட் போட்டோசொப் CS 8.0 ஆகியவையாகும்

- வைத்திய காப்புறுதி உரிமைகோரல் முறைமை

ம.சு.அ பணியாட்களுக்கு பயனர்- சிநேகபூர்வ மற்றும் பயனுறுதியான வைத்திய காப்புறுதி உரிமைகோரல் முறைமையொன்றுக்கு அனுசரணை வழங்குவது இந்த முறைமையின் பிரதான நோக்கங்கள் ஆகும். தலைமை அலுவலக ஊழியர்கள் மற்றும் மாகாண மற்றும் மாவட்ட பணியாட்கள் ஆகிய இரண்டு தரப்பினரும் அதனால் நன்மையடைகின்றனர். இதுவொரு இணைய பிரயோகமாகும். இந்த முறையை பயன்படுத்தி ஊழியர்கள் அவர்களது தனிப்பட்ட வைத்திய காப்புறுதி விபரங்களை பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது.

- உத்தியோகத்தர்களின் தொலைபேசி கொடப்பனவு முறைமை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் நிறைவேற்று அதிகாரிகளின் தொலைபேசி பட்டியல்களை பேணவும் அவர்களின் மாதாந்த

- EIASYS:சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு முறைமை

இந்த முறைமையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் (ம.சு.அ) நிறைவேற்றப்படும் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு செயல்முறையுடன் தொடர்புடைய தகவல் முகாமைத்துவம் மீது கவனத்தை செலுத்துகின்றது. இதனை ம.சு.அ யின் அனைத்து மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக அணுகலாம்

- EPL SYSTEM – சு.தா.ம முறைமை – சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் முறைமை (செயல் வடிவம் பெறும் நிலையில் உள்ளது

இந்த முறைமையானதுமத்திய சுற்றாடல் அதிகாரசபையால் (ம.சு.அ) நிறைவேற்றப்படும் சுற்றாடல் தாக்க உரிமம் (சு.தா.உ) நடைமுறையை முகாமைத்துவம் செய்யக்கூடிய இணைய அடிப்படையிலான முறைமையை வழங்குகின்றது. இதனை ம.சு.அ யின் அனைத்து மாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஊடாக அணுகலாம்.

- ஒன்லைன் கொடுப்பணவு முறைமை-சு.பா.உ களுக்கானது.

இந்த முறைமையானது சு.பா.உ வாடிக்கயைாளர்களுக்கு 24 மணித்தியாள ஒன்லைன் கொடுப்பணவு வசதியை

**ம.சு.அ இணையத்தளத்தை இற்றைப்படுத்தல்**

ம.சு.அ இணையத்தளத்தின் நிர்வாகப்பணியை செயற்படுத்தல். செய்திகள், நிகழ்வுகள், கட்டுரைகள், தகவல்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வேறு ஏதும் பணிகளை இற்றைபடுத்துவதன் ஊடாக ,ம.சு.அ இணையத்தளத்தை முகாமைத்துவம் செய்து தொடர்ச்சியான பேணுகையை முன்னெடுக்கின்றது.

கொடுப்பனவுகளை முகாமைத்துவம் செய்வதற்குமான இணைய அடிப்படையிலான முறைமை.

வழங்குகின்றது. இந்த முறைமையானது தகவல் தொழில்நட்பவியல் முகவரண்மையின் ஒத்துழைப்புடன் ம.சு.அ யால் அபிவிருத்திசெய்யப்பட்டது. எந்தவொரு சு.பா.உ உரிமையாளரும் இந்த இணையவழிக்கு பிரவேசித்து ஒரு URL கீழ் அனைத்து கொடுக்கல் வாங்கல்கள்களையும் மேற்கொள்ளலாம். ஆத்துடன் பதிவு செய்யப்பட்டுள்ள வாடிக்கையாளர்கள் புதுப்பித்தல்களையும் ஏனைய அறிவித்தல்களையும் ஈமெயில் வடிவில் பெறலாம் Al

ரேசனல் யுனிபைட் முறைமை(RUP) ,இந்த முறைமையானது அபிவிருத்திசெய்யப்பட்ட செய்முறையை பயன்படுத்துகின்றதுடன் இதற்காக பயன்படுத்தப்பட்ட பிரதான தொழில்நுட்பமானது J2EE என்டர்பிரைஸ் அப்பிகேசன், நெட்பீம்ஸ் IDE 7.0, MY SQL-சேர்வர், ப்ரைம்பேஸ், 3.4 மற்றும் அபோட் போட்டோசொப் CS 8.0 ஆகியவையாகும். இந்த முறைமையானது அபிவிருத்தி ஆயுள் வட்டத்தின் அனைத்து கட்டங்களிலும் முனைப்புடன் ஈடுபட்டது.

- ம.சு.அ புகார் முகாமைத்துவ முறைமையை பேணல்.

கொழும்பு பல்கலைக்கழகத்தினால் வடிவமைக்கப்பட்ட தற்போதைய புகார் முறைமையானது ஒரு ஸ்டேன்ட எலோன் பிரயோகமாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது. ஆகையால், அனைத்து தாபித்தல் மற்றும் பேணுகை பணிகளை தகவல் தொழில்நுட்ப பிரிவே செய்கின்றது.

- சேன்ட் இயக்க முறைமை மீதான ZIMBRA கட்டமைப்பு சேவரை (கொமியுனிடி எடிசன்) தாபித்து கட்டமைத்தல் மற்றும் ம.சு.அ மின்னஞ்சல் சேவையை பேணல்
- வன்பொருள மற்றும் மென்பொருள்
- பல்வேறு கணனிப் பிரச்சினைகளை இனங்காணல்.
- கணனி பாதுகாப்பு நடவடிக்கைகளை வடிவமைத்தல்.
- கணனி வலை அமைப்புகளை கட்டடைத்தல்.
- அமைவிடம் அல்லது தொலைபேசி அல்லது மின்னஞ்சல் மூலம் தொழில்நுட்ட உதவிகளை வழங்குதல்.
- தகவல் தொழில்நுட்ப பிரிவை விரிவுபடுத்தி அதனை மேம்படுத்தல்

தற்போதைய தகவல் தொழில்நுட்ப பிரிவின் வரையறுக்கப்பட்ட இடவசதியை பணிபாளர் அறை, சேர்வர் அறை ஆகிய பல்வேறு பகுதிகளை கணனி பழுதுபார்க்கும் அறையொன்றுடன் விரிவுபடுத்தலாம. முன்னர் அனைத்து பணிகளும் வரையறுக்கப்பட்ட இடவசதியிலேயே இடம்பெற்றன. ஆகையால் இச்செயற்பாடு இப்பிரிவின் உற்பத்தி திறன்னை பாதிப்புக்கு உள்ளாக்குகின்றது.

முறைமையை தாபித்தல்

- உபகரணங்களை பேணல் அல்லது பழுதுபார்த்தல் (கணனி, பிரின்டர், போட்டோ கொப்பியர்,பீ.எஸ்)

- சேர்வர் அறை

முன்னர் தகவல் தொழில்நட்ப பிரிவானது சேர்வர்அறையின்றி செயற்பட்டது. எல்லா சேர்வர்களும் கணனி பழுதுபார்த்தல் கணனி மென்பொருள் தாபித்தல் போன்ற ஏனைய பலநோக்கு பணிகளும் இடம்பெற்ற வரையறுக்கப்பட்ட பகுதியிலேயே தாபிக்கப்பட்டிருந்தன. இந்த பிரிவை விரிவாக்கம் செய்வதன் ஊடாக அனைத்து சேர்வர்களையும் பரிந்துரைக்கப்பட்ட நிலையில் வெவ்வேறான அறைகளில் வைப்பதற்கு இயலுமாக இருக்கும் (இந்த சேர்வர் அறையானது இன்னும் அபிவிருத்தி செய்யப்படும் நிலையிலுள்ளது). இந்த சேர்வர் அறையானது மவுன்டபல் ரெக் சேவர்களையும் உள்ளூர் சேர்வர்களையும் ஒன்லைன் முறையையும் UPS கொண்டிருக்கும். மேலும், தகவல் தொழில்நுட்ப பிரிவின் சேவைகளை மேலும இற்றைப்படுத்தி பேணுவதற்கு கொழும்பு பல்கலைகழகத்தின் ஆலோசனைச் சேவைகள் அவசியமாகவுள்ளது.

# அத்தியாளம் 10 : உள்ளக கணக்காய்வு அலகு

உள்ளக கணக்காய்வுப் பிரவானது மத்திய சுற்றாடல் அதிகாரசபை தலைவரின் தலைமையின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதுடன் அதன் கடமைகள் மற்றும் பணிகள் அதிகாரசபையின் தலைவரால் தீர்மானிக்கப்படுகின்றன. கணக்காய்வு பிரிவால் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வு விசாரணைகளில் இருந்து பெறப்பட்ட நிதிசார் மற்றும் நிதி-சாரா செயற்பாடுகள் பற்றிய அவதானிப்புகள் மற்றும் கண்டுபிடிப்புகள் நேரடியாக தலைவருக்கு அறிக்கையிடப்படுவதுடன் ஒட்டு மொத்த மேற்பார்வையும் தலைவராலேயே கையாளப்படுகின்றன.

## 10.1 உள்ளக கணக்காய்வு அலகின் கடமைகளும் அவற்றின் பரப்பெல்லையும்

- கணக்கீட்டு மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு செயன்முறை மீளாய்வு
- நிதிசார் மற்றும் இயக்க தகவல்களை விசாரணை செய்தல்
- பொருளாதார பயனுறுதித்தன்மை மற்றும் இயக்கப் பணிகளின் உற்பத்தித் திறன் மற்றும் தாபனத்தின் நிதிசார் மற்றும் நிதிசாரா கட்டுப்பாடு ஆகியவற்றின் மீளாய்வு
- உள்ளக மற்றும் வெளி ஒழுங்குவிதிகள் முகாமைத்துவ கொள்கைகள்,மற்றும் வழிகாட்டிகள் இயங்குகின்றனவா என்பதை பரிசீலனைசெய்தல்
- முகாமைத்துவத்தால் முறையாக ஒப்படைக்கப்பட்ட விசாரணைகள் பற்றிய விசேட பரிசீலனை

## 10.2 கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்டங்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின்கணக்காய்வு முகாமைத்துவ குழுவானது 1999 நவம்பர் 19ஆம் திகதிய PF/PE 3 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு இணங்க தாபிக்கப்பட்டது. இந்த குழு திறைசேரியின் பிரதிநிதிகளால் தலைமை வகிகப்படுவதுடன் காலாண்டுக்கு முறைமுறை என்ற அடிப்படையில் கூடுகின்றது.

2016 ஆம் ஆண்டில் நிதி திட்டமிடல் அமைச்சின் உதவிப் பணிப்பாளரான திருமதி அனுசியாநாதன் தலைமையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நான்கு இடம்பெற்றன.
இந்த கூட்டங்களில் ம.சு.அ தலைவர், பணிப்பாளர் நாயகம்,பிரதி பணிப்பாளர் நாயகம்(ம.வ,நிரிவாகம் மற்றும் நிதி),பணிப்பாளர் (இயக்கசெயற்பாடுகள் மற்றும் திட்டமிடல்), கலந்துரையாடல் விடயங்களுடன் சம்பந்தப்பட்ட பணிப்பாளர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள்,
ஊதவி கணக்காய்வாளர் நாயகம் மற்றும் கணக்காய்வாளர்தலைமை அதிபதியின் கணக்காய்வு அத்தியட்சகர், மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர், ஆகியோர் கலந்துகொண்டனர். ம.சு.அ உள்ளக கணக்காய்வாளர் குழுவின் ஏற்பாட்டாளரா கடமையாற்றுகின்றார். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அவதானிப்புகள் அவசியமான நடவடிக்கைகளுக்காக அதிகார சபையின் பணிப்பாளர் சபைக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**10.3. 2016 ஆம் ஆண்டின் கணக்காய்வு அறிக்கையில் இருந்து எழுந்த பின்வரும் விடயங்களுக்கு விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது**

1. பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களின் உற்பத்தித் திறன மற்றும் கடமை பங்கீடு பற்றிய பரிசோதனை

2. அதிகார சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட புகார்கள் தொடர்பில் மாகாண அலுவலகங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் சுற்றாடல் பற்றிய புகார்களை பதிவுசெய்வதற்காக மாகாண அலுவலகங்களில் தாபிக்கப்பட்ட கணனி தரவுத் தளத்தின் இயக்கச்செயற்பாடு

3. அதிகார சபையின் சுற்றாடல் உரிமங்கள் விநியோகம் மற்றும் கைத்தொழில்கள் மீதான தரவு தளத்தின் இநற்றைபடுத்தல் செயற்பாட்டை பரிசோதனை செய்தல

4. ஆரம்ப சுற்றாடல் மதிப்பீடு பற்றிய பரிந்துரைகள் வழங்குவதில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தல்

5. அதிகார சபையின் கொள்முதல் செயன்முறைகளில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பில் கவனம் செலுத்தல்

6. நிர்வாகம் மற்றும் ஏனைய உள்ளக கட்டுக்பாட்டு செயலன்முறையின் பலவீனங்களை சுட்டிக்காட்டல்

7. விசேட விசாரணைகள் மூலம் இனங்காணப்பட்ட உள்ளக கட்டுப்பாட்டு முறைமையை அனுப்பி வைத்தல்

# அத்தியாயம் 11 : ம.சு.அ யை பன்முகப்படுத்தல்

### 11.1 ம.சு.அ யின் மாகாண அலுவலகஙகளுக்கு அதிகாரங்களை பகிர்தளித்தல்

தேசிய நியமங்கள், தகவுதிறன்கள் மற்றும் வழிகாட்டல்கள் ஆகியவற்றை எல்லா முகவராண்மைகளுக்கும் தாபனங்களுக்கும் வழங்கும் தேசிய மட்டத்திலான மத்திய முகவராண்மையாக மத்திய சுற்றாடல் அதிகாரசபை (ம.சு.அ) காணப்படுவதால் பிராந்திய மட்டத்தில் அதன் செயற்பாடுகளை முன்னெடுக்க சுற்றாடல் பிராந்தியமயமாக்கல் நிகழ்ச்சித்திட்டமானது மத்திய மாகாணம் மற்றும் தென் மாகாணம் ஆகியவற்றில் இரண்டு பிராந்திய அலுவலகங்களுடன் 2002 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேற்படி பிராந்திய அலுவலகங்களை தாபித்ததன் பின்னர், மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் செயற்பாடுகளின் செயலாற்றுகை தொடர்பில் சிறந்தவொரு ஒழுங்கமைப்பு மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு ஆகியவை சம்பந்தமான பணிகளை உறுதிசெய்யும் முகமாக ஒவ்வொரு மாகாணத்திலும் பிராந்திய அலுவலகங்களை தாபித்து இந்த பிராந்திய மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை விஸ்தரிக்க மத்திய சுற்றாடல் அதிகாரசபை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் அடிபடையில் தேசிய சுற்றாடல் சட்டத்தின் சில தத்துவங்கள் ம.சு.அ யின் சார்பில் நிறைவேற்றும் முகமாக ம.சு.அ யின் மாகாண அலுவலகங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

### 11.2 உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு அதகாரங்களை பகிர்தளித்தல்

1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அதன் பன்முகப்படுத்தல் மூலோபாயத்தை பயன்படுத்தி அதன் தத்துவங்கள் மற்றும் பணிகளை எனைய முகவராண்கைளுக்கு ஒப்படைத்து அதன் சேவைகளை தேசிள மட்டத்தில் முன்னேடுப்பதற்கான ஏற்பாட்டை கொண்டுள்ளது.

தேசிய சுற்றாடல் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசகையானது அதன் அதிகாரங்கள் மற்றும் தத்துவங்களை எந்தவொரு அரசாங்க திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச்சட்ட சபை, உள்ளூர் அதிகாரசபை அல்லலு எந்தபொரு உத்தியோகத்தருக்கும் வழங்குவதற்பான ஏற்பாட்டை கொண்டுள்ளது.

1993 ஆம் ஆண்டில் இந்த பிரிவிக் கீழ் ம.சு.அ யின் சில அதிகாரங்களை உள்ளூர் அத்கார சபைக்கு ஒப்படைப்பதற்கான நடவடிக்கை ம.சு.அ யால் மேற்கொள்ளப்பட்டது. அதிகார பரவலாக்க கட்டளையானது

1994.01.01 ஆம் திகதியில் இருந்து நடைமுறைக்கு வருமாறு இந்த அதிகாரப் பரவலாக்க கட்டளை பிறப்பிக்கப்பட்டதுடன் அனைத்து மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள் ஆகியவற்றுக்கு 45 குறித்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை வழங்கள் உட்பட சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் பாதுகாப்பு பணிகள் பன்னிரெண்டின் (12) அதிகாரங்கள் சுற்றாடல் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டன.

2000.11.22 ஆம் திகதிய 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையை இரத்துச் செய்வதற்கென 2008 ஆம் ஆண்டில் 2008.01.25 ஆம் திகதிய 1533/16 ஆம் இலக்க வர்த்தமானி பத்திரிகையொன்று வெளியிடப்பட்டது. இந்த புதிய வர்த்தமானி ஒழுங்குவிதியின் கீழ்,சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்கள் (சு.பா.உ) பெறவேண்டிய மூன்று வகைகள் காணப்பட்டன, அவற்றுள் குறித்துரைக்கப்பட்ட 25 நடவடிக்கைகள் ஒப்பீட்டு ரீதியில் குறைந்தளவு மாசுபடுத்தல் “சீ” வகையைச் சேர்ந்த கைத்தொழில்கள் என்பதால் சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை(சு.பா.உ) ம.சு.அ சார்பில் வழங்கும் அதிகாரம் உள்ளூர் அதிகாரசபைகளுக்கு 2008 ஆம் ஆண்டில் மீண்டும் வழங்கப்பட்டது.

## 11.3. மாவட்ட மட்டத்தில் சுற்றாடல் சட்டத்தை அமுலாக்கும் குழு

சுற்றாடல் விடயங்களை ஒருங்கிணைப்பதற்கென ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட மட்டத்தில் மாவட்ட சுற்றாடல் சட்ட அமுலாக்கல் குழு என்று அழைக்கப்படும் நிருவாக ஒழுங்கமைப்பொன்று 1995 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக மாவட்டச் செயலாளர் பணியாற்றியதுடன் மாவட்ட சுற்றாடல் சட்டத்தை அமுல்படுத்தும் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பின்வருவோர் செணற்பட்டனர்;

- மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்
- சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்
- மாவட்ட வன பரிபாலன அதிகாரி
- மாகாண உள்ளுராட்சி ஆணையாளர்
- மாவட்ட வனசீவராசிகள் திணைக்களத் தலைவர்
- மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலாளர்கள்
- மாவட்டத்தில் உள்ள உள்ளுர் அதிகாரசபைகளின் தலைவர்கள்
- மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற தாபனத்தின் பிரதிநிதி
- செயலாளராக மாவட்ட சுற்றாடல் அதிகாரி
- வேரு எந்தவொரு பிரதிநிதியும் குழுவிற்கு ஒத்துழைப்பை தரலாம்

  பொலீஸ், சுகாதார சேவைகள் திணைக்களம், வன பரிபாலன திணைக்களம் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகள் ஆகிய சம்பந்தப்பட்ட முகவராண்மைகள் சுற்றாடல் குறறங்களுடன் தொடர்புடைய சட்டத்தை அமுல்படுத்துவதற்கான அனுசரணையை வழங்கும் விடயங்களை ஒருங்கிணைப்பதே மாவட்ட சுற்றாடல் சட்ட அமுல்படுத்தல் குழுவினது பிரதான பணியாகும்

. சுற்றாடல் விடயங்கள் பற்றி பொது மக்களிடம் இருந்து பெற்ற புகார்களை பற்றிய மேல்முறையீடுகளை பரிசீலனைக்கு எடுபபது இந்த குழுவின் மற்றொரு பணியாகும்

ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட செயலாளரின் தலைமையின் கீழ் இந்த குழுக்கள் மாதாந்தம் இடம்பெற்றன.

# அத்தியாயம் 12 : ம.சு அ பிராந்தியமயமாக்கல் நகழ்ச்சித்திட்டம்

## 12.1 அறிமுகம்

சுற்றாடல் பாதுகாப்பு செயற்பாட்டின் பிரதான ஒழுங்கமைப்பு நிகழ்ச்சிதட்டமானது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் வழங்கும் செயள்முறையாகும். இந்த செயன்முறையை நிறைவேற்றும் பொறுப்பானது மாகாண அலுவலகங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது கழிவு அகற்றல், வளி வெளிவீச்சுகள், இரைச்சல், மற்றும் அதிர்வு ஆகியவை மீதான நியமங்கள் மற்றும் விதிகள் பொதுவாக குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் பற்றிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமத்தின் ஊடாக விதிக்கப்படுகின்றன. கைத்தொழில் கழிவுகள் தொடர்பில் இலங்கையின் தற்போதைய நிலைமையை மீளாய்வு செய்யும் வேளையில் பாரிய மாசடைதல் செயற்பாடானது பெரும்பாலும் தற்போதைய சுற்றாடல் ஒழுங்குவிதிகள் அமுலுக்கு வருவதற்கு முன்னர் தாபிக்கப்பட்ட இரண்டு அல்லது மூன்று தசாப்தங்கள் பழமையான கைத்தொழில்களில் இருந்தே தோன்றுகின்றது என்பதை வெளிப்டையாக அவதானிக்கலாம். கைத்தொழில் கழிவுகள் பொதுவாக அன்மையில் காணப்படும் ஆறுகள், குளங்கள் மற்றும் கடல் போன்ற நீர் நிலைகளில் தான் (சுத்திகரிக்கப்பட்ட முறையில் அல்லது சுத்திகரிக்கப்படாது) அகற்றப்படுகின்றன. தேசிய நீர் வழங்கள் மற்றும் வடிகாலமைப்பு சபையானது பொதுவாக பொது மக்களுக்கு அவசியமான நீரின் தேவையைக்கு ஈடுகொடுக்கும் வகையில் ஆற்று நீரையே பயன்படுத்துகின்றது. ஆகையால், நீர் நிலைகள் மீது அகற்றப்படும் கழிவானது பாரிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது. இச்செயற்பாட்டால் மேற்பரப்பு நீர் மாசடைகின்ற அதேவேளையில் நிலத்தடி நீரும் மாசடைந்து பொது மக்களின் குடிநீர் வளங்களை வெகுவாக பாதிக்கின்றது.

கழிவை சுற்றாடலுக்கு அகற்றுதல் தொடர்பில் காணப்படும் நியமங்களால் நிலத்தடி நீர் நிரப்புதல் மற்றும் பாதுகாப்பு ஆகியன உள்ளடக்கப்படவில்லை

வழங்கப்பட்டுள்ள சு.பா.உ களின் கீழ் வரும் குறித்துரைக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் சட்டரீதியான கட்டுப்பட்டுப்பாடகளுக்கு உட்பட்டுள்ளன. ஆகையால், ஏதும் குற்றங்கள் அல்லது மீறல்கள் இடம்பெறுமாயின் அவை சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் தண்டணைக்குறிய குற்றங்களாகும். குறித்துரைக்கப்பட்ட பெரும்பாலான செயற்பாடுகள் மேல் மாகாணத்தின் புவியியல் எல்லைக்கு உட்பட்ட பிரதேசத்திலேயே தாபிக்கப்பட்டுள்ளன.
மத்திய சுற்றாடல் அதிகார சபையில் கிடைக்க்கூடியதாகவள்ள புள்ளிவிபரங்களின் அடிப்படையில் குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகளில் 37% மான செயற்பாடுகள் (உயர் மற்றும் நடுத்தர அளவில் மாசுபடுத்தும் செயற்பாடுகள்) மேல் மாகாணத்திலேயே தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை மத்திய மாகாணத்தில் 10% மாகவும் தெண் மாகாணத்தில் 13% மாகவும் காணப்படுகின்றது. விஞ்சிய 40% மான குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் ஏனைய மாகாணங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. இந்த நிலைமை மத்திய மாகாணத்தில் 10% மாகவும் தெண் மாகாணத்தில் 13% மாகவும் காணப்படுகின்றது. விஞ்சிய 40% மான குறித்துரைக்கப்பட்ட செயற்பாடுகள் ஏனைய மாகாணங்களில் தாபிக்கப்பட்டுள்ளன. ஆவை அறையே; சபரகமுவ,கிழக்கு, வட மத்திய, ஊவா, வடக்கு மற்றும் வட மேல் மாகாணம் ஆகியவையாகும். ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பிரிவின் வழிகாட்டலுடன் மாவட்ட சுற்றாடல் அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தொழில்கள் பற்றிய ஆய்வானது ஒவ்வொரு மாகாணத்திலும் தாபிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் சரியான எண்ணிக்கையை காட்டுகின்றது.

ஒரு செயற்பாட்டிற்கு வழங்கப்பட்ட சுற்றாடல் பாதுகாப்பு உரிமமானது புதுப்பிக்கத்தக்கது. கைத்தொழில் செயற்பாடொன்று உரிமத்தில் காணப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக காணப்படவில்லை

என்பது கண்டுபிடிக்கப்பட்டால் வழமையாக உரிமத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் மேல் முறையீட்டுவிசாரணை முடிவடைந்ததும் சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சின் செயலாளரின் தீர்மானத்திற்கு அமையவாக சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

12.2 சு.தா.ம செயள்முறை

சு.தா.ம செயள்முறையின் நடைமுறையாக்கம் பற்றிய முன்னேற்றத்தை பின்வருமாறு விளக்கலாம்:
அட்டவணை12.1: சு.தா.ம செயள்முறையின் பிராந்திய மட்ட நடைமுறையாக்கம்

| மாகாணம் | மாவட்டம் | வழுங்கிய சு.பா.உ எண்ணிக்கை | | | | | | புதுப்பித்த சு.பா.உ எண்ணிக்கை | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2014** | | **2015** | | **2016** | | **2014** | | **2015** | | **2016** | |
| | | **"A”** | **"B"** | **"A”** | **"B"** | **"A”** | **"B"** | **"A”** | **"B"** | **"A”** | **"B"** | **"A”** | **"B"** |
| மே.மா | கொழும்பு | 525 | 341 | 311 | 218 | 219 | 91 | 932 | 226 | 834 | 181 | 1392 | 170 |
| | கம்பஹ | 305 | 315 | 231 | 161 | 226 | 83 | 407 | 40 | 716 | 115 | 598 | 160 |
| | களுத்தரை | 168 | 112 | 147 | 91 | 61 | 46 | 350 | 102 | 282 | 65 | 335 | 91 |
| ம.மா | கண்டி | 195 | 146 | 80 | 44 | 39 | 40 | 186 | 66 | 404 | 71 | 321 | 57 |
| | மாத்தலை | 118 | 29 | 46 | 24 | 21 | 13 | 77 | 20 | 204 | 52 | 181 | 47 |
| | நுவரெலியா | 25 | 38 | 06 | 10 | 04 | 02 | 54 | 9 | 41 | 04 | 65 | 02 |
| தெ.மா | காலி | 125 | 135 | 50 | 60 | 32 | 64 | 178 | 56 | 161 | 74 | 246 | 65 |
| | மாத்தறை | 131 | 77 | 15 | 17 | 36 | 54 | 156 | 36 | 167 | 101 | 327 | 92 |
| | அ.தோட்டை | 95 | 68 | 19 | 36 | 48 | 44 | 92 | 26 | 184 | 30 | 174 | 29 |
| ம..மா | கேகாலை | 108 | 202 | 109 | 101 | 42 | 67 | 76 | 50 | 348 | 95 | 218 | 70 |
| | இரத் ச தினபுரி | 141 | 199 | 107 | 99 | 67 | 100 | 61 | 49 | 267 | 73 | 417 | 78 |
| வ.ம.மா | அ.புரம் | 169 | 51 | 119 | 16 | 89 | 30 | 167 | 62 | 181 | 19 | 213 | 38 |
| | பொலன்னறுவை | 119 | 105 | 09 | 08 | 22 | 21 | 26 | 8 | 99 | 14 | 86 | 31 |
| கி.மா | திருகோணமலை | 104 | 45 | 08 | 22 | 31 | 17 | 29 | 11 | 127 | 49 | 147 | 23 |
| | அம்பாறை | 170 | 140 | 10 | 15 | 40 | 24 | 25 | 39 | 110 | 54 | 293 | 59 |
| | மட்டக்களப்பு | 116 | 117 | 13 | 19 | 05 | 17 | 27 | 26 | 98 | 42 | 122 | 65 |
| ஊ.மா | பதுளை | 145 | 50 | 21 | 31 | 39 | 40 | 62 | 19 | 151 | 34 | 193 | 25 |
| | மொனராகலை | 90 | 74 | 14 | 19 | 17 | 30 | 35 | 17 | 99 | 23 | 184 | 17 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 138 | 76 | 25 | 11 | 47 | 44 | 73 | 30 | 106 | 11 | 226 | 31 |
| | கிளிநொச்சி | 27 | 125 | 16 | 14 | 05 | 13 | 1 | 0 | 15 | 0 | 49 | 06 |
| | முல்லைதீவு | 31 | 40 | 0 | 18 | 10 | 07 | 11 | 0 | 11 | 0 | 36 | 0 |
| | வவுனியா | 57 | 15 | 0 | 0 | 14 | 19 | 33 | 11 | 0 | 0 | 70 | 0 |
| | மன்னார் | 67 | 106 | 59 | 80 | 20 | 12 | 3 | 1 | 31 | 05 | 33 | 1 |
| | குருணாகல் | 5 | 7 | 107 | 136 | 72 | 75 | 0 | | 0 | 01 | 40 | 20 |
| | புத்தளம் | 1 | 2 | 27 | 24 | 34 | 16 | 0 | | 01 | 01 | 09 | 3 |
| மொத்தம் | | 3175 | 2615 | 1549 | 1274 | 1240 | 969 | 3061 | 904 | 4637 | 1114 | 5975 | 1180 |

2016 ஆம் ஆண்டு காலப்பகுதியின்போது 1,240 “ஏ” வகுதிக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும் (சு.பா.உ.), 969 “பீ” வகுதிக்குரிய (சு.பா.உ) உரிமங்களும் புதிதாக வழங்கப்பட்டன. அதேவேளையில் 5,975 “ஏ” வகுதிக்குரிய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களும் (சு.பா.உ.) 1180 “பீ” வகுதிக்குரிய சு.பா. உரிமங்களும் புதுப்பிக்கப்பட்டன.

## 12.3 புதிய கைத்தொழில்களுக்கென சுற்றாடல் விதப்புரைகளை (சிபாரிசுகளை) வழங்குதல்.

புதிய கைத்தொழில் அமைவிடங்களை ஆய்வு செய்வதன் ஊடாக மத்திய சுற்றாடல் அதிகார சபையானது பல நன்மைகளை அடைகின்றது. இச்செயற்பாட்டின் மூலம் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அத்தகைய கைத்தொழில் அமைவிடங்கள் பொருத்தமற்ற இடங்களில் தாபிபக்கப்படுவதில்லை என்பதை உறுதிசெய்கின்றது. இருப்பினும் கடந்த காலங்களில் கைத்தொழில்கள் பொருத்தமே இல்லாத இடங்களில் தாபிக்கப்பட்டிருந்ததுடன் அத்தகைய கைத்தொழில்கள் மூலம் கைத்தொழில்களுக்கும் அண்டைய குடியிருப்பாளர்களுக்கும் பாரிய பிரச்சினைகளை ஏற்பட்டன.

இருப்பினும் 2000 ஆண்டில் இருந்து ம.சு.அ வரையறுக்கப்பட்ட எணணிக்கையிலான(80) உயர் மாசுபடுத்தும் செயற்பாடுகளுக்கே அமைவிட தடைநீக்கத்தை வழங்குகின்றது. ஆயினும், இந்த எண்ணிக்கையானது பிராந்திய அலுவலகங்கள் தாபிக்கப்பட்டதை அடுத்து அதிகரித்தது. பிராந்திய அலுவலகங்களால் புதிய கைத்தொழில் அமைவிடங்களுக்கான பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

.பின்வரும் அட்டவனை 2014 முதல் 2016 ஆம் ஆண்டு வரையில் வழங்கப்பட்ட புதிய கைத்தொழில்களுக்கான சுற்றாடல் பரிந்துரைகளை காட்டுகின்றது அதற்கமைய பெரும்பான்மையான வேண்டுகோள்கள் மேல் மாகாணம், கண்டி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்கள் ஆகியவற்றில் இருந்து கிடைக்கப்பெற்றன.

அட்டவணை **12.2:** புதிய கைத்தொழில்கள் அமைவிடங்களுக்கு பரிந்துரைகள்

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | வழங்கப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2014 | 2015 | 2016 | 2014 | 2015 | 2016 | 2014 | 2015 | 2016 |
| மே.மா | கொழும்பு | 141 | 163 | 153 | 94 | 175 | 104 | 0 | 0 | 0 |
| | கம்பஹ | 199 | 176 | 202 | 11 | 45 | 136 | 0 | 01 | 5 |
| | களுத்தரை | 97 | 169 | 205 | 72 | 82 | 118 | 4 | 06 | 9 |
| ம.மா | கண்டி | 76 | 86 | 121 | 49 | 46 | 66 | 6 | 04 | 11 |
| | மாத்தலை | 51 | 81 | 93 | 54 | 48 | 53 | 3 | 0 | 05 |
| | நுவரெலியா | 12 | 05 | 15 | 9 | 03 | 04 | 0 | 0 | 0 |
| தே.மா | காலி | 98 | 76 | 112 | 75 | 67 | 67 | 6 | 06 | 14 |
| | மாத்தறை | 65 | 40 | 63 | 64 | 29 | 32 | 8 | 07 | 06 |
| | அம்பாந்தோட்டை | 35 | 33 | 67 | 20 | 17 | 48 | 0 | 03 | 05 |

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | வழங்கப்பட்ட ஒப்புதல்களின் எண்ணிக்கை | | | நிராகரிக்கப்பட்டவைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2014 | 2015 | 2016 | | | 2014 | 2015 | 2016 | |
| ச.மா | கேகாலை | 73 | 98 | 138 | 60 | 59 | 62 | 1 | 01 | 03 |
| | இரத்தினபுரி | 40 | 77 | 118 | 53 | 44 | 118 | 0 | 0 | 34 |
| வ.ம. மா | அனுராதபுரம் | 78 | 79 | 128 | 25 | 26 | 65 | 4 | 01 | 02 |
| | பொலன்னறுவை | 34 | 29 | 33 | 9 | 13 | 13 | 0 | 0 | 07 |
| கி.மா | திருகோணமலை | 18 | 14 | 04 | 17 | 14 | 08 | 3 | 0 | 0 |
| | அம்பாறை | 18 | 33 | 34 | 23 | 38 | 35 | 5 | 01 | 0 |
| | மட்டக்களப்பு | 69 | 72 | 76 | 82 | 49 | 63 | 0 | 02 | 0 |
| ஊ.மா | பதுளை | 63 | 37 | 70 | 32 | 32 | 45 | 7 | 05 | 02 |
| | மொனறாகலை | 32 | 42 | 62 | 28 | 25 | 51 | 0 | 01 | 01 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 72 | 74 | 58 | 47 | 35 | 32 | 0 | 02 | 0 |
| | கிளிநொச்சி | 66 | 124 | 111 | 60 | 110 | 85 | 0 | 04 | 02 |
| | முல்லைத்தீவு | 145 | 67 | 83 | 136 | 66 | 71 | 0 | 0 | 0 |
| | மன்னார் | 17 | 16 | 26 | 16 | 16 | 20 | 0 | 0 | 01 |
| | வவுனியா | 40 | 34 | 53 | 27 | 17 | 39 | 1 | 0 | 0 |
| வ.மே.மா | குருணாகல் | 23 | 214 | 188 | 10 | 194 | 182 | 0 | 01 | 02 |
| | புத்தளம் | 22 | 38 | 78 | 7 | 28 | 41 | 0 | 0 | 03 |
| மொத்தம் | | 1584 | 1877 | 2291 | 1080 | 1278 | 1558 | 48 | 45 | 112 |

2016 ஆம்ஆண்டின் போது, 2,291 புதிய கைத்தொழில்கள் அவர்களின் புதிய தொழில் முனைப்புக்கு ஒப்புதலை கேட்டு விண்ணப்பித்தன. அவற்றுள் 1,558 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டதுடன் 112 விண்ணப்பங்கள் ஒப்புதலை பெறுவதற்கான தேவைகளை கொண்டிராத காரணத்தால் நிராகரிக்கப்பட்டன.

**12.4 சுற்றாடல் மாசு/ தொல்லைகள் மற்றும் இயற்கை வளங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுதல் பற்றிய பொதுமக்களின் புகார்களுக்கு தீர்வுகாணல்**

2016 ஆம் ஆண்டில் கைத்தொழில்கள் பற்றிய புகார்கள் 2,120 மற்றும் இயங்கை வளங்கள முகாமைத்துவம் பற்றிய 549 புகார்களுமாக மொத்தமாக 2,579 புகார்கள் மாகாண அலுவலகங்களால் கையாளப்பட்டன

கைத்தொழில் செயற்பாடுகள் மற்றும் ஏனைய

அபிவிருத்திச் செயற்பாடுகள், மற்றும் இயற்கை வளங்கள் சுரண்டப்படல் ஆகியவை மூலம் பொதுமக்களுக்கு தோற்றுவிக்கப்பட்ட மாசடைதல்/தொல்லைகள் பற்றிய புகார்களுக்கு மாகாண அலுவலகங்கள் நிவாரணமளித்தன. கிடக்கப்பெற்ற புகார்கள் ஒழுங்காக விசாரணை செய்யப்பட்டதுடன் தணிப்பு நடவடிகடகைகளும் பர்ந்துரைக்கப்பட்டன. சில விடயங்கள் பற்றிய புகார்கள் அவசியமான நடவடிககைகள் எடுக்கும் வகையில் அத்தகைய நடவடிக்கைக்கு பொறுப்பாக உள்ள நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

அட்டவயை **12.3: 2016**ஆம் ஆண்டில் கையாளப்பட்ட புகார்கள்

| மாவட்டம் | கிடைக்கப்பெற்ற புகார்களின் எண்ணிக்கை | | தீர்வு காணப்பட்ட புகார்களின் எண்ணிக்கை | | ஏனைய நிறுவனங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டவை |
|---|---|---|---|---|---|
| | EPC | NRM | EPC | NRM | |
| கொழும்பு | 501 | 22 | 0 | 0 | 0 |
| கம்பஹ | 393 | 53 | 57 | 08 | 24 |
| களுத்தரை | 335 | 66 | 11 | 03 | 14 |
| கண்டி | 103 | 51 | 38 | 18 | 41 |
| மாத்தலை | 16 | 02 | 02 | 02 | 01 |
| நுவரெலியா | 07 | 01 | 02 | 02 | 01 |
| காலி | 87 | 48 | 58 | 39 | 24 |
| மாத்தறை | 115 | 29 | 06 | 03 | 07 |
| அம்பாந்தோட்டை | 47 | 01 | 13 | 0 | 01 |
| கேகாலை | 168 | 61 | 79 | 33 | 0 |
| இரத்தினபுரி | 79 | 138 | 39 | 54 | 18 |
| அனுராதபுரம | 58 | 01 | 10 | 1 | 0 |
| பொலன்னறுலை | 1 | 0 | 0 | 0 | 0 |
| திருகோணமலை | 10 | 0 | 3 | 0 | 0 |
| அம்பாறை | 13 | 02 | 3 | 0 | 0 |
| மட்டக்களப்பு | 15 | 02 | 4 | 2 | 0 |
| மன்னார் | 2 | 1 | 1 | 0 | 0 |
| வவுனியா | 3 | 0 | 1 | 0 | 1 |
| பதுளை | 26 | 38 | 7 | 15 | 0 |
| மொனறாகலை | 29 | 20 | 17 | 10 | 3 |
| யாழ்ப்பாணம் | 38 | 01 | 19 | 03 | 9 |
| கிளிநொச்சி | 06 | 06 | 0 | 03 | 4 |
| முல்லைத்தீவு | 01 | 01 | 01 | 01 | 0 |
| குருணாகல் | 51 | 02 | 26 | 01 | 0 |
| புத்தளம் | 16 | 03 | 06 | 01 | 0 |
| மொத்தம் | 2,120 | 549 | 403 | 199 | 148 |

## 12.5 ISO 14000 நியமங்களின் கீழ் கைத்தொழில்களுக்கான சான்றிதழ் அளிப்புக்கு WPO வினது பங்களிப்பு

கைத்தொழில்களுக்கு ISO 14000 சான்றிதழ்கள் வழங்கும் முகமாக SLSI விற்கு அவசியமான தொழில் நுட்ப மற்றும் சட்ட விடயங்களில் நிபுணத்துவ அறிவை வழங்கி WPO உதவியளிக்கின்றது.

## 12.6 சுற்றாடல் முகாமைத்துவம்

### 12.6.1 ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை(IEE)

1993 ஆம் ஆண்டில் இருந்து அனைத்து பாரிய அபிவிருத்தி கருத்திட்டங்களும் நடைமுறைபடுத்தவதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன. சு.தா.ம/ஆ.சு.ம ஆகியவை அவசியப்படும் "குறித்துரைக்கப்பட்ட கருத்திட்டங்களாவன" ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேற்பட்ட உட்கட்டமைப்பை உடைய அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் கைத்தொழில் பேட்டை அபிவிருத்திகள் ஆகியவற்றை உள்ளடக்கும் கருத்திட்டங்களாகும்.

சு.தா.ம/ஆ.சு.ம மதிப்பீட்டு செயன்முறையானது பாரிய கருத்திட்டங்களால் அபிவிருத்தி மீது செலுத்தப்படும் தாக்கங்கள் எல்லாவற்றையும் இனங்கண்டு அவற்றுக்கு எதிராக ஆரம்பக்கட்டத்திலேயே தணிப்புநடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் உறுதிசெய்கின்றது.

கருத்திட்ட திட்டமிடல் காலத்தின் ஆரம்ப கட்டத்தில் அவ்வாறான நடவடிக்கைகளை கருத்திட்ட உரிமையாளர்கள் திட்டமிட்டு கருத்திட்டங்களில் கூட்டிணைப்பதற்கான வாய்ப்பை இந்த செயற்பாடானது இலகுவாக்குகின்றது.

கருத்திட்டங்களின் குறிப்பிடத்தக்க சுற்றாடல் தாக்கங்களை தணிப்பதன் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மாகாண அலுவலகங்கள் ஆரம்ப சுற்றாடல் பரிசோதனைகளை(ஆ.சு.ப) மேற்கொள்ளும் அதேவேளையில் ம.சு.அ யின் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு பிரிவானது சுற்றாடல் தாக்க மதிப்பீட்டையும்(சு.தா.ம) மேற்கொள்கின்றது. ஆ.சு.ம கீழ் செயன்முறையிலுள்ள கருத்திட்டங்களின் விபரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

அட்டவணை **12.4:** சு.தா.ம பிரிவால் EIA/IEE ஓழுங்குவிதிகளின் கீழ் 2015ஆம் ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின்
பட்டியல்

| மாகாணம | மாவட்டம் | விண்ணப்பங்களின் எண்ணிக்கை | | | ஓப்புதல் அளிக்கப்பட்டவை | | | நிராகரிக்கப்பட்வைகளின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | **2014** | **2015** | **2016** | **2014** | **2015** | **2016** | **2014** | **2015** | **2016** |
| மே.மா | கொழும்பு | 1 | 03 | 02 | 0 | 0 | 1 | | 0 | 0 |
| | கம்பஹா | 0 | 38 | 67 | 0 | 04 | 0 | | 01 | 1 |
| | களுத்தரை | 3 | 19 | 03 | 2 | 02 | 0 | | 0 | 0 |
| தெ.மா | காலி | 10 | 04 | 0 | 2 | 07 | 0 | 1 | 01 | 0 |
| | மாத்தறை | 0 | 02 | 2 | 4 | 02 | 1 | | 0 | 0 |
| | அம்பாந்தோட்டை | 1 | 03 | 1 | 2 | 03 | 0 | | 0 | 0 |
| ம.மா | கண்டி | 81 | 78 | 110 | 70 | 67 | 84 | 5 | 02 | 9 |
| | மாத்தலை | 7 | 5 | 16 | 15 | 14 | 6 | | 0 | 0 |
| | நுவரெலியா | 78 | 64 | 41 | 89 | 76 | 10 | | 17 | 1 |
| ச.மா | கேகாலை | 7 | 1 | 7 | 4 | 06 | 1 | | 0 | 0 |
| | இரத்தினபுரி | 4 | 4 | 19 | 3 | 04 | 6 | | 0 | 1 |
| ஊ.மா | பதுளை | 99 | 103 | 225 | 69 | 135 | 120 | | 02 | 19 |
| | மொனறாகலை | 6 | 02 | 06 | 5 | 02 | 2 | | 0 | 0 |
| கி.மா | திருகோணமலை | 8 | 0 | 12 | 9 | 02 | 3 | | 0 | 0 |
| | அம்பாறை | 0 | 1 | 0 | 0 | 0 | 2 | | 0 | 0 |
| | மட்டக்களப்பு | 0 | 4 | 0 | 0 | 02 | 0 | | 0 | 0 |
| வ.ம.மா | அனுராதபுரம் | 2 | 3 | 5 | 0 | 0 | 0 | | 0 | 0 |
| | பொலன்னறுவை | 2 | 6 | 7 | 0 | 0 | 3 | | 0 | 0 |
| வ.மே மா | குருனாகல் | | | 0 | | | 0 | | | 0 |
| | புத்தளம் | | | 1 | | | 0 | | | 0 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 0 | 2 | 15 | 0 | 02 | 19 | | 0 | 6 |
| | கிளிநொச்சி | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 | 0 |
| | முல்லைத்தீவு | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | | 0 | 0 |
| | மன்னார் | 0 | 0 | 3 | 0 | 0 | 2 | | 0 | 0 |
| | வவுனியா | 0 | 0 | 8 | 0 | 0 | 3 | | 0 | 0 |
| மொத்தம் | | 309 | 342 | 550 | 272 | 328 | 263 | 6 | 23 | 37 |

2016ஆம் ஆண்டில், 550 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றன. சென்ற வருட விண்ணப்பங்கள் உட்பட 263 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட அதேவேளை 37 விண்ணப்பங்கள் நியமங்களுக்கு இசைவாக காணப்படாமையினால் நிராகரிக்கப்பட்டன.(சென்ற வருட விண்ணப்பங்கள் உட்பட)

### 12.6.2 குறித்துரைக்கப்படாத செயற்பாடுகளுக்கு சுற்றாடல் பரிந்துரைகள் வழங்கல்

தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் குறித்துரைக்கப்படாத கருத்திட்டங்களுக்கான சுற்றாடல் தடை-நீக்க ஏற்பாடுகள் மாகாண அலுவலகங்களுக்கு வழங்கப்படுகின்றமையால் அவற்றுக்கு ஆ.சு.ம/சு.தா.ம அவசியம் இல்லை. மேம்பாட்டாளர்களின். அபிவிருத்தியாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பல்வேறு குறித்துரைக்கப்படாத கருத்திட்டங்களின் பாதகமான சுற்றாடல் தாக்கங்களைக் தணிக்கும் நோக்கில் நிபந்தனைகளுடனான சுற்றாடல் தடை நீக்கங்கள் வழங்கப்படுகின்றன

அதன் பிரகாரம், இவ்வருடத்தின்போது ஹோட்டல் கருத்திட்டங்கள், காணி நிரப்பல், தொலைத்தொடர்பு கோபுரங்கள், அகழ்வு நடவடிக்கைகள், நிலங்களைத் துண்டாக்கல் போன்ற இதர கருத்திட்டங்களுக்கான 5,276 (சென்ற வருட விண்ணப்பங்கள் உட்பட)

கைத்தொழில்களுக்கு அமைவிட தடைநீக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன

அட்டவணை12.5: 2016 ஆம் ஆண்டில் குறித்துரைக்காத- செயற்பாடுகளுகான பரிந்துரைகளின் பட்டியல்

| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஒப்புதல் வழங்கப்பட்டவை | நிராகரிப்புகளின் எண்ணிகைகை | இணக்கப்பாட்டு கண்காணிப்பு |
|---|---|---|---|---|---|
| மே.மா | கொழும்பு | 121 | 139 | 0 | 0 |
| | கம்பஹ | 375 | 253 | 0 | 0 |
| | களுத்தரை | 533 | 475 | 12 | 0 |
| தெ.மா | காலி | 147 | 136 | 6 | 0 |
| | மாத்தறை | 84 | 120 | 0 | 2 |
| | அம்பாந்தோட்டை | 142 | 116 | 9 | 2 |
| மாகாணம் | மாவட்டம் | கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஒப்புதல் வழங்கப்பட்டவை | நிராகரிப்புகளின் எண்ணிகைகை | இணக்கப்பாட்டு கண்காணிப்பு |
| ம.மா | கண்டி | 83 | 497 | 1 | 5 |
| | மாத்தலை | 96 | 649 | 3 | 0 |
| | நுவரெலியா | 08 | 66 | 0 | 5 |
| ச.மா | கேகாலை | 06 | 168 | 0 | 2 |
| | இரத்தினபுரி | 18 | 386 | 0 | 0 |
| ஊ.மா | பதுளை | 880 | 772 | 1 | 5 |
| | மொனறாகலை | 447 | 299 | 0 | 6 |
| கி.மா | திருகோணமலை | 679 | 675 | 0 | 0 |
| | அம்பாறை | 245 | 198 | 0 | 0 |
| | மட்டக்களப்பு | 118 | 182 | 8 | 3 |
| வ.ம.மா | அனுராதபுரம் | 339 | 108 | 0 | 2 |
| | பொலன்னறுவை | 50 | 64 | 0 | 0 |
| வ.மா | யாழ்ப்பாணம் | 45 | 15 | 1 | 0 |
| | கிளிநொச்சி | 30 | 15 | 0 | 0 |
| | முல்லைத்தீவு | 334 | 253 | 0 | 0 |
| | மன்னார் | 21 | 201 | 0 | 1 |
| | வவுனியா | 03 | 37 | 0 | 0 |
| வ.மே.மா | குருணாகலை | 88 | 274 | 1 | 3 |
| | புத்தளம் | 22 | 193 | 6 | 2 |
| மொத்தம் | | 4914 | 6291 | 48 | |

மேற்படி அட்டவணை 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட அவ்வாறான பரிந்துரைகளின் விபரங்களை காட்டுகின்றது.

# அத்தியாயம் 13 : ம.சு.அ யால் நிறைவேற்றப்பட்ட விசேட கருத்திட்டங்கள்

## 13.1 “பிலிசறு” தேசிய திண்மக் கழிவு முகாமைத்தவ கருத்திட்டம்

### 13.1.1 அறிமுகம்

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துவம் (தி.க.மு) தொடர்பான ஒட்டு மொத்த பொறுப்பும் சட்டரீதியாக இயற்றப்பட்ட சட்டங்களின் கீழ் உள்ளூராட்ச்சி அதிகாரசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. தி.ண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான அதிகாரங்கள் மாநகரசபை கட்டளைச் சட்டம், நகரசபை கட்டளைச் சட்டம் மற்றும் பிரேதேச சபைச்சட்டம் ஆகியவற்றின் மூலம் வழங்கப்பட்டுள்ளன. அநேகமான உள்ளூராட்ச்சி அதிகாரசபைகள் அவற்றின் ஆளுகையின் கீழ் வரும் பௌதீக வளங்களை மேம்படுத்துவது தொடர்பில் அதிகளவு கவனத்தை செலுத்தும் அதேவேளையில் தி.ண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய பிரச்சினை தொடர்பான அவற்றின் கரிசனை ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

### 13.1.2 பிளிசறு கருத்திட்டத்தை தாபித்தல்

‘பிலிசறு’ நிகழ்ச்சித்திட்டம்- இலங்கையில் திண்ம கழிவை முகாமைத்துவம் செய்வதற்கான தேசிய அனுகுமுறையொன்று,- பிலிசறு கருத்திட்டத்தை தாபித்தல்’ என்று தலைப்பிடப்பட்ட சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை நிருபத்திற்கிணங்க அமைச்சரவையால் 2008 டிசம்பர் 19 ஆம் திகதி வழங்கப்பட்ட அங்கீகாரத்தை தொடர்ந்து 2008, சனவரி 1 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு ‘பிலிசறு’ தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் ம.சு.அ யில் தாபிக்கப்பட்டது.

2013 யூலை 21ஆம் திகிதிய அமைச்சரவை தீர்மானத்ததை தொடர்ந்து பிலிசறு கருத்திட்டத்தின் IIஆம் கட்டத்திற்காக 2014- 2018 ஆம் ஆண்டு வரையிலான ஐந்து வருட கருத்திட்ட நீடிப்பு அமைச்சரவையால் வழங்கப்பட்டது

### 13.1.3 தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ கொள்கை

பிலிசறு முன்னெடுப்பின் ஓர் பகுதியாக, சுற்றாடல் இயற்கை வளங்கள் அமைச்சானது திண்ம கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையொன்றை ஒக்டோபர் 2007 இல் வடிவமைக்க நடவடிக்கை எடுத்துள்ளதுடன் திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையை நடைமுறைபடுத்தும் வகையில் புதிய தேசிய கழிவு முகாமைத்துவ மூலோபாயங்களை வரைவு செய்துள்ளது.

தற்சமயம், சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் பொருத்தமான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறைக்கு கொண்டுவரும் வகையில் மூலோபாயங்களை செயற்பாடுகளாக பரிமாற்றம் செய்ய வேண்டிய தேவையும் அதனைத்தொடர்ந்து அவற்றை நடைமுறைக்கு கொண்டுவருவதற்கு உள்ளுராட்சி அதிகாரசபைகளின் முழுமையான ஈடுபாட்டையும் ஒத்துழைப்பையும் பெறவேண்டிய அவசரமான தேவையொன்றும் எழுந்துள்ளது.

பிலிசறு நிகழ்ச்சித்திட்டமானது மூலோபாயங்களை செயற்பாடாக பரிமாற்றம் செய்வதில் இத்தகைய சவால்களை எதிர்கொள்கின்றது.

### 13.1.4 நோக்கங்கள்

பிலிசறு நிகழ்ச்சித்திட்டத்தில் ஐந்து பிரதான நோக்கங்கள் காணப்படுகின்றன.

- திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய தேசிய கொள்கையொன்றை விருத்தி செய்தல்
- தி.க.மு பற்றிய தேசிய மூலோபாயம் ஒன்றை விருத்தி செய்தல்.
- அனைத்து பங்குதாரர்களுக்கும் பயிற்சி மற்றும் திறன் கட்டியெழுப்பல் உள்ளடங்கலான தி.க.மு பற்றிய பயனுறுதியான கல்வி மற்றும் விழிப்புணர்வை வழங்கள்.
- திண்மக் கழிவு முகாமைத்துவம் பற்றிய கருத்திட்டங்கள்/நிகழ்ச்சித்திட்டங்களை நடைமுறை செய்வது தொடர்பில் அனுசரணையை உள்ளூராட்சி அதிகாரசபைக்களுக்கு வழங்கல்
- பயனுறுதியான சட்ட அமுலாக்களை மேம்படுத்துவதற்கான சட்ட மறுசீரமைப்பை மேற்கொள்ளல்

பங்குதாரர்கள் முகம் கொடுக்கும் தற்போதைய திண்ம கழிவு பிரச்சினைகள் மற்றும் சிக்கல்கள், நாட்டின் ஒட்டுமொத்த திண்மக் கழிவு மேம்பாடு, துரிதமான சுத்திகரிப்பு மற்றும் எச்சங்களை சுற்றாடல் சிநேக-பூர்வ முறையில் அகற்றல் போன்ற பாரிய சிக்கல்கள் கருத்திற் கொண்டே இந்த நோக்கங்கள் வடிவமைக்கப்பட்டன.

### 13.1.5 கருத்திட்டத்தின் நோக்கெல்லை

இதன் அடிப்படையில் திண்மக்கழிவானது வீட்டுக் கழிவுகள், வர்த்தகக் கழிவுகள், சந்தை கழிவுகள், நிறுவனங்களின் கழிவுகள் மற்றும் சில கைததொழில் கழிவுகள் மற்றும் உள்ளூராட்ச்சி அதிகாரசபையின் ஆளுகையின் கீழ் வரும் இடங்களில் இருந்து தோற்றுவிக்கப்படும் கழிவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

பிலிசறு கருத்திட்டத்தின் பரப்பெல்லையானது பொதுவாக பின்வரும் முக்கிய நடவடிக்கைகளை உள்ளடக்குகின்றுத

- உள்ளூராட்சி அதிகாரசபைகளினால் திண்மக்கழிவு அகற்றல் பற்றிய தகவல்கள் சேகரிப்பு
- கருத்திட்ட முன்மொழிவுகள் மதிப்பீடுசெய்தல்
- கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டமானது ஊடக பிரச்சாரங்கள் மூலம் உள்ளூராட்ச்சி அதிகாரசபை மட்டங்களில் நடாத்தப்படுகின்ற அதேவேளையில் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகை மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஆகியவற்றை உபயோகித்து விசேடமாக கழிவு வகைப்படுத்தல் மற்றும் சுற்றாடல்-சிநேபூர்வ முறையிலான கழிவு அகற்றல் பற்றிய வழிப்பூட்டும் நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
- தொழில்நுட்ப ஆதரவு, நிறுவன மேம்பாடு மற்றும் திறன் கட்டியெழுப்பல்.
- உலோகம், பிலாஸ்டிக், கண்ணாடி, மற்றும் காகித கழிவுகள், ஆகியவற்றுக்கான சேகர்ப்பு வலையமைப்பை தாபித்து மீள்சுழற்சியை கட்டமைப்பை மேம்படுத்தல்.
- உள்ளூராட்சி அதிகார சபை மட்டத்தில் செயற்கைப் பசளை பொறித் தொகுதிகளை தாபித்தல்.
- கழிவு எச்சங்களை அகற்றுவதற்கான சுகாதாரமான குப்பை நிரப்பு அமைவிடங்களை குறைந்த செலவில் நிர்மாணித்தல்
- வீட்டில் சேதனப்பசளை தயாரிப்பு செயற்பாடடை ஊக்குவித்தல்
- முறையற்ற திண்மக் கழிவு முகாமைத்துவ (தி.க.மு) நடைமுறைகளை தொடர்ந்தும் பின்பற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகளை கண்காணித்தலும் அவற்றிக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுத்தலும்.

- பிலிசறு கருத்திட்டமானது இறுதியில் முறையான தி.க.மு நடைமுறைகளை பின்பற்றாத உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு எதிராக அதன் இறுதி நடவடிக்கையான சட்ட நடவடிக்கை எடுக்கும் நடவடிக்கையை ஆரம்பிக்கும்.

### 13.1.6 பிலிசறு செயற்திட்டம்

பிலிசறு கருத்திட்டத்தில் இதுவரையில் நிறைவேற்றப்பட்ட பல கூட்டிணைதிட்டங்களுக்கு (2008-2010, 2011-2013 மற்றும் 2014-2018) மேலதிகமாக, சம்பந்தப்பட்ட வருடங்களுக்கான வருடாந்த செயற்திட்டங்களும் தயாரிக்கப்படுகின்றன. அதற்கிணங்க, சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வகையில் வரவு செலவுத் திட்டத்தின் அனைத்து செயற்பாடுகளும் நிறைவேற்றப்படும் வகையில் 2016 ஆம் ஆண்டின் பிலிசறு செயற்திட்டம் தயாரிக்கப்பட்டது.

இருப்பினும், நடைமுறையாக்கத்தின் வேளையில் எதிர்கொள்ளப்பட்ட மாற்றங்களை அவ்வப்போது சீராக்கும் முகமாக இச்செயற்திட்டம் பல திருத்தங்களுக்கு உட்பட்டது. அவ்வாறான மாற்றங்களின் தேவைக்கிணங்க, தேசிய பிலிசறு பீடம்/ ம.சு.அ முகாமைத்துவ சபை ஆகியவற்றின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

### 13.1.7.பிலிசறு கருத்தட்டத்தின் முன்னேற்றம்

#### 13.1.7.1 முறையான கழிவு முகாமைத்துவ வசதிகளுக்கான ஏற்பாடு- உள்ளூராட்சீ அதிகாரசபைகளில் கூட்டுப்பசளை பொறித்தொகுதிகளை தாபித்தல்

திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கான தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை நாடிவரும் உள்ளூர் அதிகாரசபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களின்( இராணுவத்தளம் மற்றும் கல்வி நிறுவனங்கள் போன்ற) கருத்திட்ட முன்மொழிவுகளை பிலிசறு கருத்திட்டம் மதிப்பீட்டுக்கு உட்படுத்துகின்றது. கழிவு சுத்திகரிப்பு மற்றும் வகைப்படுத்தல் ஆகியவற்றுக்கு இட்டுச்செல்லும் ஒரு இடைக்கால வழிமுறையாக சிறிய மற்றும் நடுத்தர கூட்டுப்பசளை கருத்திட்டங்களை நிர்மாணித்து நடைமுறைபடுத்து பிலிசறு கருத்திட்டத்தின் முதன்மையானவொரு செயற்பாடாகும். உதவிக்கான வேண்டுகோள்கள் கழிவின் அளவு மற்றும் உட்கட்டமைப்பு வசதி தேவைகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுவதுடன் அவசியமான ஆவணங்கள் மற்றும் ஒப்புதல்கள் என்பன உத்தரவாதம் அளித்தவருக்கு உதவியை அளிக்கும் முகமாக பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

பிலிசறு கருத்திட்டத்தால் நிதியுதவி அளிக்கப்படும் எந்தவொரு கருத்திட்டத்தினதும் திட்டமிடல் மற்றும் நடைமுறையாக்கம் செயறடபாட்டின் வேளையில் பின்பற்றப்படும் பிரதாக நடவடிக்கைகள் பின்வருமாறு

- எண்ணக்கரு அபிவிருத்தி
- கருதிட்ட முன்மொழிவு தயாரித்தல்
- சுற்றாடல் அனுமதியை பெற்றுக்கொள்ளல்
- உள்ளூராட்சி அதிகாரசபையின் ஒப்புதலை பெற்றுக்கொள்ளல்
- சம்பந்தப்பட்ட காணிக்குரிய மண் பரிசோதனை மற்றும் ஏனைய பரிசோதனை அறிக்கைகளை பெற்றுக்கொள்ளல்
- எல்லை அளவையை நிறைவுசெய்தல்
- வடிவமைத்தல்(அனைத்து கட்டிடங்களின் திட்டமிடல் மற்றும ் வடிவமைப்பு)
- உடன்படிக்கை தயாரிப்பு
- உடன்படிக்கை கைச்சாத்திடல்
- கேள்விப்பத்திர நடைமுறை நிறைவுசெய்தல்
- நிர்மாணப்பணியை ஆரம்பித்தல்
- கண்காணிப்பு மற்றும் முன்னேற்ற மீளாய்வு
- அமைவிடத்தை கையளித்தல்

## 13.1.7.2 அனைத்து கூட்டுப்பசளை அமைவிடங்களினதும் நிலைமை 2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு

மேற்படி அனைத்து சேதனப்பசளை அமைவிடங்களும் கீழுள்ள கண்காணிப்பு விளக்கப்படத்தில் காட்டப்பட்டுள்ளதைப் போல் வகைப்படுத்தப்பட்டு உள்ளதுடன் அவற்றின் இயக்கச்செயற்பாடு 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் செயற்பட்ட விதத்தையும் இப்படம் ஒப்பீட்டளவிலும் காட்டுகின்றது. சேதனப்பசளை உற்பத்தியானது இடம்பெறும் வகையில் வெற்றிகரமான சூழலொன்றை தோற்றுவிக்கவும் அவை முகம் கொடுத்த பிரச்சினைகளை தீர்ப்பதற்கான ஆதரவை வழங்கவும் பிலிசறு கருத்திட்ட குழுவால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளே இந்த வெற்றிக்கு வழிசமைத்துள்ளன.

2008 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து 2017ஆம் ஆண்டின் இறுதி வரையில் பிலிசறு கருத்திட்டத்தால் 136 உள்ளூராட்ச்சி அதிகாரசபைகள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களை (இராணுவத் தளங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள்) உள்ளடக்கியவாறு 133 சேதனப்பசளை அமைவிடங்கள் தாபிக்கப்பட்டுள்ளன. சில சேதனப்பசளை அமைவிடங்களின் நிர்மாணப் பணிகள் 2009,2010,2011, மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டாலும் பிலிசறு கருத்திட்டமானது அதன் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவிகளை தற்போதைய வசதிகளை பேணும் வகையில் அல்லது மேம்படுத்தும் வகையில் தொடர்ந்தும் வழங்கியது.

அட்டவணை 13.1: கூட்டுப்பசளை அமைவிட கண்காணிப்பு விளக்கப்படம் - 2016

| மாகாணம் | மாவட்டம் | 2016 ஆம் ஆண்டில் | கூட்டுப்பசளை உற்பத்தி திருப்திரமானது | கூட்டுப்பசளை உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றது | நிர்மாணம் நிறைவு ஆனால் எற்பத்தி ஆரம்பிக்க வில்லை | நிர்மாணப்பணிகள் நிறைவடைய வில்லை | சிக்கலான பிரச்சினை களுடன் செயலிலந்துள்ள அமைவிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ.ம.மா | அனுராதபுரம் | 2016ஆரம்பத்தில் | 7 | 2 | 4 | 3 | 1 | 17 |

| மாகாணம் | மாவட்டம் | **2016 ஆம் ஆண்டில்** | **கூட்டுப்பசளை உற்பத்தி திருப்திரமானது** | **கூட்டுப்பசளை உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றது** | **நிர்மாணம் நிறைவு ஆனால் எற்பத்தி ஆரம்பிக்கவில்லை** | **நிர்மாணப்பணிகள் நிறைவடையவில்லை** | **சிக்கலான பிரச்சினைகளுடன் செயலிலந்துள்ள அமைவிடங்கள்** | **மொத்தம்** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 ஆண்டின் இறுதியில் | 14 | | | 3 | 1 | 18 |
| | பொலன்னறுவை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 1 | | | 1 | | 2 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 1 | 1 | | 1 | | 3 |
| தே.மா | காலி | 20162016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 6 | 3 | | | | 9 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | | | 5 | 9 |
| | மாத்தறை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 7 | | 1 | 1 | | 9 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 9 | | | | 1 | 10 |
| | ஹம்பாந்தோட்டை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 7 | | | 2 | | 9 |
| | | 2016 ஆண்டின் இறுதியில் | 8 | | | | 1 | 9 |
| ம.மா | நுவரெலியா | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 1 | 1 | | | | 2 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 2 | | | | | 2 |
| | கண்டி | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 2 | 2 | | | | 4 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | | | | 4 |

| மாகாணம் | மாவட்டம் | **2016 ஆம் ஆண்டில்** | கூட்டுப்பசளை உற்பத்தி திருப்திரமானது | கூட்டுப்பசளை உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றது | நிர்மாணம் நிறைவு ஆனால் எற்பத்தி ஆரம்பிக்கவில்லை | நிர்மாணப்பணிகள் நிறைவடையவில்லை | சிக்கலான பிரச்சினைகளுடன் செயலிலந்துள்ள அமைவிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மாத்தலை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 4 | | | | | 4 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | | | | 4 |
| ச.மா | இரத்தினபுரி | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 1 | | | 2 | 1 | 4 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 2 | | | 1 | 2 | 5 |
| | கேகாலை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 5 | 1 | | | | 6 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 5 | | | | 1 | 6 |
| மே.மா | கொழும்பு | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 4 | | | | 1 | 5 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | | 1 | 1 | 6 |
| | கம்பஹ | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 8 | | 1 | | | 9 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 10 | | | | | 10 |
| | களுத்தரை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 7 | | | | | 7 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 7 | | | | | 7 |
| ஊ.மா | பதுளை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 3 | 1 | | 1 | | 5 |

| மாகாணம் | மாவட்டம் | **2016 ஆம் ஆண்டில்** | கூட்டுப்பசளை உற்பத்தி திருப்திரமானது | கூட்டுப்பசளை உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றது | நிர்மாணம் நிறைவு ஆனால் எற்பத்தி ஆரம்பிக்கவில்லை | நிர்மாணப்பணிகள் நிறைவடையவில்லை | சிக்கலான பிரச்சினைகளுடன் செயலிலந்துள்ள அமைவிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | | 1 | | 5 |
| | மொனராகலை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 1 | | 1 | | | 2 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 2 | | | 0 | 1 | 3 |
| கிமா | அம்பாறை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 3 | 1 | | 2 | | 6 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | 1 | 1 | | 6 |
| | மட்டக்களப்பு | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 1 | | | | | 1 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 1 | | | | | 1 |
| | திருகோணமலை | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | | | | 1 | | 1 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | | | | 1 | | 1 |
| வ.மே மா | குருநாகல் | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில | 12 | 4 | | | | 16 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 16 | | | | | 16 |
| | புத்தளம் | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 3 | 1 | | 1 | | 5 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 4 | | | 1 | | 5 |

| மாகாணம் | மாவட்டம் | 2016 ஆம் ஆண்டில் | கூட்டுப்பசளை உற்பத்தி திருப்திரமானது | கூட்டுப்பசளை உற்பத்தி பொதுவாக இடம்பெறுகின்றது | நிர்மாணம் நிறைவு ஆனால் எற்பத்தி ஆரம்பிக்கவில்லை | நிர்மாணப்பணிகள் நிறைவடையவில்லை | சிக்கலான பிரச்சினைகளுடன் செயலிலந்துள்ள அமைவிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| வ.மா | யாழ்பாணம் | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 2 | | 1 | | | 3 |
| | | 2016 ஆண்டின் இறுதியில | 3 | | | | | 3 |
| மொத்த முன்னேற்றம் | | 2016ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் | 85 | 16 | 8 | 14 | 3 | 126 |
| | | 2016 ஆண்டின் இறுதியில் | 108 | 1 | 1 | 10 | 13 | 133 |

மேற்படி விளக்கப்படத்தின் இறுதியில் 2016 ஆம் ஆண்டின் மொத்த முன்னேற்றததை ஆரம்பத்தில் மற்றும் இறுதியில் செயற்பட்ட விதத்தையும் ஒப்பீட்டளவிலும் காட்டுகின்றது

### 13.1.7.3 மாவட்ட மட்டத்திலான கூட்டுப்பசளை அமைவிடங்கள்

#### நெறிப்படுத்தல் அமர்வுகள்

இரத்தினபுரி, மாத்தலை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் முறையே 17/03/2016, 05/06/2016 மற்றும் 21/10/2016 திகதிகளில் திட்டமிடப்பட்டு இடம்பெற்ற புனருத்தைய தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் மாவட்ட சுற்றாடல் உச்சி மாநாட்டில் அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேன பங்கேற்றார். இங்கு உரையாற்றிய சனாதிபதி அவர்கள் தேசிய தேசிய முக்கியத்துவத்தின் அடிப்படையில் இந்த கூட்டுப்பசளை அமைவிடங்களை பேணும் செயற்பாட்டை நெறிப்படுத்தி அதனை சிறந்த செயற்பாட்டு நிலைக்கு இட்டுச்செல்லுமாறு ஆலோசனை வழங்கினார்.

அதற்கமைய ஐந்து கூட்டுப்பசளை அமைவிட நெறிப்படுத்தல் அமர்வுகள் மாகாண / மாவட்ட மட்டங்களில் நடாத்தப்பட்டதுடன் இந்த அமர்வுகளின் போது சில பிரதான நடைமுறை பிரச்சினைகள் உள்ளூர் அதிகார சபைகளின் செயலாளர்கள் /ஆணையாளர்களால் எழுப்பப்பட்டன. மாகாண மட்டத்தில் நடாத்தப்பட்ட கூட்டுப்பசளை அமைவிட நெறிப்படுத்தல் மீளாய்வு அமர்வுகளை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

அட்டவணை **13.2 :** மாவட்ட நெறிப்படுத்தல் அமர்வுகள்**/** முன்னேற்ற மீளாய்வு அமர்வுகள் பற்றிய விபரங்கள்

| இல | மாகாணம்/ மாவட்டம் | இடம் | அமர்வின் திகதி | பங்குற்றியோரின் வகை | பங்குற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 1 | மத்திய மாகாணம் அனுராதபுரம் / பொலன்னறுவை | கேட்போர்கூட – ம்-மாகாண பிரதம அமைச்சு | 15.09.2016 | தலைவர் – ம.சு.அ<br>உள்ளூராட்சி அதிகாரசபை<br>பிரதி முகாமையாளர் – பிலிசறு<br>உ.ப – ம.சு.அ<br>DO – உள்ளூராட்சி அதிகாரசபை அலுவலக செயலாளர்கள் மேற்பார்வையாளர்கள்<br>பொது சுகாதார பரிசோதகர்கள்<br>விடய உத்தியோகத்தர்கள்<br>˙ தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள | 156 |
| 2 | கிழக்கு மாகாணம் திருகோணமலை | குலகொட்டம் மண்டபம்- திருகோணமலை நகர சபை<br>– | 05.09.2016 | பி..ப.நா(க.மு)<br>உள்ளூராட்சி அதிகாரசபை அலுவலக பொறியியலாளர்<br>பணிப்பாளர்<br>,<br>மேற்பார்வையாளர்கள்<br>பொது சுகாதார பரிசோதகர்கள்<br>விடய உத்தியோகத்தர்கள<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 80 |
| 3 | தெண் மாகாணம் காலி, மாத்தறை, ஹம்பாந்தோட்டை | வெலிகம நகர சபை | 25.04.2016 | தலைவர – ம.சு.அ<br>பி..ப.நா(க.மு) செயலாளர்கள்<br>மேற்பார்வையாளர்கள் பொது சுகாதார பரிசோதகர்கள் விடய உத்தியோகத்தர்கள் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 249 |

| இல | மாகாணம்/ மாவட்டம் | இடம் | அமர்வின் திகதி | பங்குற்றியோரின் வகை | பங்குற்றியோரின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 4 | மத்திய மாகாணம கண்டி | நவயலதென்ன மாகாண பயிற்சி நிலையம் | 08.02.2016 | தலைவர் – ம.சு.அ<br>PD – பிலிசறு<br>பணிப்பாளர்கள்(மத்திய மாகாணம் வடமேல் மாகாணம் -ம.சு.அ)<br>செயலாளர்கள்<br>மேற்பார்வையாளர்கள்<br>பொது சுகாதார பரிசோதகர்கள்<br>விடய உத்தியோகத்தர்கள<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 201 |
| 5 | வட மேல் மாகாணம் குருனாகல் புத்தளம் | கேட்போர்கூடம் – குருனாகல் மாநகர சபை | 06.10.2016 | பி..ப.நா(க.மு)<br>DD – பிலிசறு செயலாளர்கள்<br>மேற்பார்வையாளர்கள்<br>பொது சுகாதார பரிசோதகர்கள்<br>விடய உத்தியோகத்தர்கள<br>தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் | 7 |

**13.1.7.4 தற்போது காணப்படும் சிறிய-அளவிலான கூட்டுப்பசளை தொகுதிகளுக்கு அவசியப்படும் மேம்பாடுகளுக்கான ஏற்பாடுகள்,**

**2016ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட புதிய கூட்டுப்பசளை அமைவிடங்கள் மற்றும் ஏனைய தி.க.மு ஏய்பாடுகள்**

2016 ஆம் ஆண்டளவில் உள்ளூராட்ச்சி அதிகாரசபைகள் பிலிசறு கருத்திட்டத்திடம் இருந்து ஒத்துழைப்பையும் நிதியுதவியையும் பெற்றுக்கொள்ளும் வகையில் அடிக்கடி வேண்டுகோள்களை விடுத்தன. 2016 ஆம் அண்டின் செயற்திட்டத்தின் அடிப்படையில் திறைசேரியிடம் இருந்து 600 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்கான மேண்டுகொள் முன்வைக்கப்பட்ட போதும் ரூபா.190.00 மில்லியன் நிதியே கிடைக்கப்பெற்றது

அவசியமான சூழ்நிலையை மீளாய்வு செய்யும் நோக்கில் சேதனப்பசளை தொகுதிகள் தாபிக்கப்பட்டு இருந்த சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபைகளை அந்தந்த மாகாணங்களின் உள்ளூராட்சி அதிகாரசபை ஆணையாளர் ஊடாக வரவழைத்து மேல் குறிப்பட்டவாறு மாவட்ட-அடிப்படையிலான அமர்வுகள் நடாத்தப்பட்டன. 2016ஆம் ஆண்டிலல் பின்வரும் அட்டவணையில்

காணப்படும் மாகாணங்கள் உள்ளடக்கப்பட்டதுடன் மேண்டுகோள்கள் மற்றும் அளவைப்பட்டியள்கள் உள்ளூராட்சி அதிகாரசபை பொறியியலாளரின் ஒப்புதலுடன் பெற்றுக்கொள்ளப்பட்டன. காணி விடுவிப்பு மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளின் அர்ப்பணிப்பு மற்றும் 2016ஆம் ஆண்டிற்குரிய செயற்திட்டத்தின் கீழ் கிடைக்கக்கூடியதாக உளள் நிதி ஆகியவற்றின் அடிப்படையில் 06 புதிய கூட்டுப்பசளை சேதனப்பசளை தொகுதிகள் 03 உயிர்வாயு பொறித்தொகுதிகள், 01 செலவு குறைந்த எரியூட்டி, 03 பிலாஸ்டிக் மீள்சுழற்சி நிலையங்கள, மற்றும் 02 பிலாஸ்டிக் பொலிதீன் கழிவு கலஞ்சியங்கள் ஆகியவற்றுக்கு நிதியளிக்கப்பட்டு உள்ளூராட்சி அதிகாரசபைகளின் வேண்டுகோளுக்கு அமைய தாபிக்கப்பட்டன. முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சேதனப்பசளை அமைவிடங்கள் 21 மற்றும் உயிர்வாயு பொறித்தொகுதிகள் 05 ஆகியவற்றை 2016ஆம் ஆண்டில் நிறைவுசெய்யும் வகையில் நிதியுதவி அளிக்கப்பட்டன

மொத்த கருத்திட்ட ஒதுக்கீடு மற்றும் செலவிடப்பட்ட தொகை அற்றும் அவற்றின் நிலைமை பற்றிய விபரம் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

அட்டவணை **13.3: 2016** ஆம் அண்டில்நிதியளிக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ வசதிகள்

| இல | சேதனப்பசளை உயிர்வாயு / பொறித்தொகுதி | நிறைவடைந்தவை | நிர்மாணம் இடம் பெறுகின்றது /மேம்பாடுகள் | மொத்த கருத்திட்ட ஒதுக்கீடு: | அளிக்கப்பட்டதொகை (இலங்கை ரூபா:) |
|---|---|---|---|---|---|
| **சேதனப்பசளை பொறித்தொகுதி** | | | | | |
| 1 | திவுலபிடிய பி.ச | √ | | 3,571,488.10 | 3,232,311.10 |
| 2 | பெல்மடுள்ள பி.ச | √ | | 6,092,080.80 | 5,149,425.90 |
| 3 | தமன்கடுவை பி.ச | | √ | 6,278,909.31 | 3,795,283.08 |
| 4 | இரத்தினபுரி மா.ந.ச | | √ | 32,540,341.62 | 15182892.19 |
| 5 | இபுல்பே பி.ச | √ | | 7,272,972.76 | 5,025,654.87 |
| 6 | மகாவலி அதிகாரசபை இலங்கை(நிராவிய பண்ணை) | | √ | 4,190,754.33 | 2,338,150.87 |
| 7 | திரப்பனே பி.ச | | √ | 5,572,025.61 | 4,507,455.66 |
| 8 | ருகுனு கத்தரகம தேவலயம் | √ | | 4,922,456.83 | 4,492,250.63 |
| 9 | மாத்தலை மா.ந.ச | | √ | 12,930,943.12 | 8,664,391.81 |
| 10 | அம்பேகமுவ பி.ச | | √ | 7,498,067.90 | 6,287,004.24 |
| 11 | நாமல்ஓயா பி.ச | | √ | 4,284,956.92 | 3,782,531.57 |
| 12 | மாத்தலை பி.ச | √ | | 3,119,876.22 | 2,975,111.12 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | ஹபரதுவ பி.ச | √ | | 1,095,949.52 | 1,077,005.20 |
| 14 | யகக்லமுள்ள பி.ச | √ | | 2,368,636.20 | 2,299,642.06 |
| 15 | நாகொட பி.ச | √ | | 2,743,466.59 | 2,363,647.45 |
| 16 | நியகம பி.ச | √ | | 1,476,753.55 | 1,201,655.42 |
| 17 | ஏல்பிடிய பி.ச | √ | | 1,493,023.90 | 1,252,311.08 |
| 18 | இப்பலோகம பி.ச | √ | | 6,042,336.98 | 5,231,137.44 |
| 19 | தஹலாவ பி.ச | √ | | 5,760,735.00 | 2,984,588.72 |
| 20 | லுனுகம்வெஹர பி.ச | √ | | 5,171,134.00 | 1,649,362.00 |
| 21 | தனமல்வில பி.ச | √ | | 1,801,506.27 | 1,602,394.98 |
| 22 | செவனகலபி.ச | √ | | 2,595,822.19 | 1,132,858.35 |
| 23 | திஸ்ஸமாராம பி.ச | √ | | 5,092,861.90 | 4,677,047.29 |
| 24 | கடுவன பி.ச | √ | | 5,342,134.65 | 2,490,509.83 |
| 25 | புனாகொட இராணுவ முகாம் | | √ | 3,571,538.83 | 917,304.50 |
| 26 | வேளிகம ந.ச | √ | | 9,896,319.09 | 8,670,960.10 |
| 27 | துலவாகலை-லிந்துலை ந.ச | √ | | 6,910,472.63 | 5,280,936.53 |
| உயிர்வாயு பொறித்தொகுதிகள் | | | | | |
| 1 | NLDB புண்ணை (4 உயிர்வாயு பொறித்தொகுதிகள்) | √ | | 4,224,900.00 | 2,663,689.49 |
| 2 | குட்டுநாயக்கா (2 உயிர்வாயு பொறித்தொகுதிகள்) | √ | | 2,686,203.61 | 2,521,830.01 |
| 3 | வுண்ணி வான்படை முகாம் | √ | | 750,590.00 | 711,417.00 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | மகாவலி அதிகாரசபை இலங்கை | | √ | 1,056,225.00 | 211,245.00 |
| பிலாஸ்டிக் மீள்சுழற்சி நிலையங்கள் | | | | | |
| 1 | யாழ்பாணம் மா.ந.ச | √ | | 5,500,000.00 | 2,414,867.18 |
| 2 | இரத்தினபுரி மா.ந.ச(கனடொல) | | √ | 52,116,593.80 | 11,182,892.19 |
| பிலாஸ்டிக்/ பொலிதீன் கழிவு கலஞ்சியசாலைகள் | | | | | |
| 1 | தாமரன்கடுவை பி.ச | √ | | 6,278,909.31 | 3,795,283.08 |
| 2 | இரத்தினபுரி பி.ச | √ | | 2,000,000.00 | 2,314,853.00 |

உபகரணங்கள், பொறித்தொகுதிகள் வழங்கும் வகையில் கருத்திட்டமானது இலங்கை ரூபா 35.0 மில்லியனை சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அனுப்பியுள்ளது. அதற்கினங்க முறையான கழிவு முகாமைத்துவ நடைமுறைகள் பற்றிய விழ்ப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை இலக்கு குழுக்களுக்கும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கும் வழங்குவதற்காக ரூபா 7.6423 செலவிடப்பட்டது. பிலிசறு கருத்திட்டமானது தொழில்நுட்ப, பொருளாதார, இயக்க மற்றும் சுற்றாடல் சாத்தியக்கூறு ஆகியவற்றை இனங்காணும் வகையில் கூட்டுப் பசளை கருத்திட்ட சாத்தியக்கூறு ஆய்வுக்காக இலங்கை ரூபா 14.677 மில்லினை காணி மீட்டல் அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திற்கு வழங்கியுள்ளது.

**13.1.7.5. உபகரணங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் கழிவு போக்குவரத்து வாகனங்கள் ஆகியவற்றை உள்ளூராட்சி அதிகார சபைகளுக்கு வழங்குதல்.**

உபகரணங்கள் மற்றும் பொறிகள் ஆகியவற்றை பெற்றுக்கொள்ளும் நோக்கில் முன்வைக்கப்பட்ட வேண்டுகோள்களை கவனத்தில் எடுத்த பிலிசறு கருத்திட்டமானது. 04 பிலாஸ்டிக் க்ரசர்ஸ் (நொறுக்கி), 04 பொலிதீன் கொம்பெக்கடர்ஸ்,03 டிராக்டர்கள், 03 ட்ரெயிலர்கள், 02 ஸ்கைட் ஸ்டியர் லோடர்கள்(சறுக்கு மாற்றி ஏற்றிகள்), 02 கழிவு கொம்பெக்கடர்கள் ஆகியவற்றை கொள்வனவு செய்து உள்ளூர் அதிகாரசபைகளுக்கு 2016ஆம் ஆண்டின் இறுதியில் விநியோகம் செய்தது.

பின்வரும் அட்டவணையானது அவ்வாண்டில் அத்தகைய பொறிகள் தேவைப்பட்ட உள்ளூராட்சி அதிகார சபைகளையும் வழங்கப்பட்ட பொறிகளையும் காட்டுகின்றது.

**அட்டவணை 13.4:** உள்ளூரராட்சி அதிகாரசபைகளின் பயனுறுதியான கழிவு முகாமைத்துவகான உபகரணங்கள் மற்றும் வசதிகள் வழங்கள்

| இல | உள்ளூராட்சி அதிகாரசபை | பொறிகள்/ இயந்திரங்கள் | வழங்கப்பட்ட தொத்த தொகை(இ.ரூபா) |
|---|---|---|---|
| 01 | யாழ்பாணம் மா.ந.ச | பிலாஸ்டிக் க்ரசர்ஸ் மற்றும் பொலிதீன் கொம்பெக்ட் | 35.0014 |
| 02 | நுவரெலியா மா.ந.ச | பிலாஸ்டிக் க்ரசர்ஸ் மற்றும் பொலிதீன் கொம்பெக்ட் | |
| 03 | பதுளை மா.ந.ச | பிலாஸ்டிக் க்ரசர்ஸ் மற்றும் பொலிதீன் கொம்பெக்ட் | |
| 04 | இரத்தினபுரி மா.ந.ச | பிலாஸ்டிக் க்ரசர்ஸ் மற்றும் பொலிதீன் கொம்பெக்ட் | |
| 05 | தாமன்கடுவை பி.ச | டீரக்கடர் – 01/ ட்ரெயிலர் - 01 | |
| 06 | பொல்கஹவெல பி.ச | டீரக்கடர் – 01/ ட்ரெயிலர் - 01 | |
| 07 | கம்பொல பி.ச | டீரக்கடர் – 01/ ட்ரெயிலர் - 01 | |
| 08 | கடுவெல மா.ந.ச | டீரக்கடர் – 01/ ட்ரெயிலர் - 01 | |
| 09 | மாத்தலை மா.ந.ச | ஸ்கைட் ஸ்டியர் லோடர் | |
| 10 | கரடியான மேல் மாகாணம் | ஸ்கைட் ஸ்டியர் லோடர் | |
| 11 | கடுவெல மா.ந.ச | கழிவு கொம்பெக்கடர் | |
| 12 | கண்டி மா.ந.ச | கழிவு கொம்பெக்கடர் | |

### 13.1.7.6 நடமாடும் கழிவு சேகரிப்பு நிலையங்கள் (சம்பத் பியச)

மீய்சுழற்றிக்கு உட்கடுத்தக் கூடிய மாநாகர திண்மக் கழிவுகளையெல்லாம் முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் சேகரித்து அவற்றை மீள்சுழற்சி முகாவராண்மைகளுக்கு அனுப்புப்புடும் வரையில் கலஞ்சியப்படுத்தி வைத்திருத்தல் இந்த நடமாடும் கழிவு சேகரிப்பு நிலையத்தின் (சம்பத் பியச) நோக்கமாகும். இந்த கருத்திட்டமானது மேல் மாகாண சுகாததார சேவைகள் பணிப்பாளரின் ஒத்துழைப்புடன் வள நிலையங்களை திட்டமிட்டு கொழும்பு மாவட்டததில் 50, கம்பஹு மாவட்டத்திலி 60 மற்றும் களுத்தரை மாவட்டத்தில் 15 வள நிலையங்கள் உட்பட 125 வள நலையங்களை மேல் மாகாணத்ததை உள்ளடக்கியவாறு தாபித்தது. நிர்மாணப்பணியை நிறைவு செய்வதற்கான இந்த கருததிட்டத்தின் மொத்த கருத்திட்ட செலவினமான ரூபா.12.953 மில்லியனை(இலங்கை-ரூபாவில்) கருத்திட்டம் வழங்கியது.

2016 ஆம் ஆண்டில் 125 நடமாடும் கழிவ சேகரிக்கும் நிலைங்களின் பணி

உரு 13-1: மாதிரி நடமாடும் வள நிலையம்




அட்டவணை 13.5: நடமாடும் கழிவு சேகரிப்பு நிலையங்களின் முன்னேற்றம்((சம்பத் பியச)

| இல. | முன்னேற்றம் | கருத்திட்ட மொத்த பெறுமதி (இ.ரூபா)மில்லியன் | விடுவித்த மொத்த தொகை (இ.ரூபா)மில்லியன். |
|---|---|---|---|
| 01 | மேல் மாகாண சுகாதார வைத்திய அதிகாரியின் அலுவலகங்களுக்கு 125 சம்பத் பியச கழிவு சேகரிப்பு நிலையங்கள் | 18.00 | 12.953 |

### 13.1.7.7 உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட சேதனப்பசளை உபயோகித்து “கலப்பு பசளை” தயாரித்தல்

மாநகர கழிவை உபயோகித்து உற்பத்திசெய்யும் சேதனப்பசளை தரமானது உள்ளீடுகளுடன் வேறுபடுகின்றது. ஆகையால், அவற்றின் தரத்தை பேணுதல் மிகவும் கடிணமான விடயமாகவுள்ளது. இதன் விளைவாக உள்ளூராட்சி அதிகாரசபைகளால் உற்பத்தி செய்யப்படும் சேதனப்பசளை கேள்வியானது கமக்காரர் சமூதாயத்தின் மத்தியில் குறைவடைகின்றது. இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனமானது (இ.கா.மீ.அ.கூ) கூட்டுப்பசளை சந்தைப்படுத்தல் மற்றும் தரம் பற்றிய பிரச்சினைகளுக்கு தீர்வொன்றை முன்வைத்துள்ளதுடன் கலப்புப் பசளை சந்தைப்படுத்தல் பற்றிய விரிவான கருத்திட்ட

முன்மொழிவு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது. சாத்தியக்கூறு ஆய்வு செலவினம் இலங்கை ரூபா 24.25 மில்லியன் மற்றும் கருத்திட்ட நடைமுறையாக்கச் செலவினம் இலங்கை ரூபா 17.3 மில்லியன் ஆகியவை உட்பட கருத்திட்டத்தின் மொத்த மதிப்பீட்டு செலவானது இலங்கை ரூபா 41.55 மில்லியன் ஆகும். 2016 ஆம் ஆண்டின் இறுதியில் கருத்திட்டத்தை முடித்தவுடன் அதன் முடிவுகளின் அடிப்படையில் 2017 ஆம் அண்டில் முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டத்தை திட்டமிட்டு நிறைவேற்றி கலப்புமுறை பசயை உற்பத்தி ஆரம்பிக்கப்படும்.




.

.

அட்டவணை **13.6:**கலப்பு பசளை கருத்திட்டம்

| இல. | முன்னேற்றம் | கருத்திட்ட மொத்த பெறுமதி (இ.ரூபா)மில்லியன் | விடுவித்த மொத்த தொகை (இ.ரூபா)மில்லியன். |
|---|---|---|---|
| 01 | சாத்தியக்கூறு ஆய்வு நிறைவடைந்தது.<br>சேதனப்பசளை விற்பனையானது பத்தரமுல்லை தியத கார்டனில் 02.09.2016 திகதி ஆர்பித்து வைக்கப்பட்டது | 41.55 | 14.677 |

**13.1.7.8 இலங்கையில் கழிவு முகாமைத்துவம் பற்றிய தற்போதைய நிலை மற்றும் தீர்வுகள் பற்றிய ஆய்வு**

இலங்கையின் தற்போதைய பிரச்சினைகள் மற்றும் கழிவு முகாமைத்தும் பற்றி ஆய்வொன்றை மேற்கொள்ளும் நோக்கில் களனி பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தின் சமூக விஞ்ஞானப் பரிவில் ஆய்வு நிலையத்தை கருத்திட்டம் தெரிவு செய்துள்ளது இதன் அடிப்படையில், கருத்திட்டமானது 1வது வரைவை 2015 டிசம்பர் 15 ஆம் திகதி பெற்றுக்கொண்டது. முதல் வரைவை சமர்ப்பித்ததன் பின்னர் இறுதி அறிக்கையை மேலும் மேம்படுத்துமாறு குழு கேட்டுக்கொள்ளப்பட்டது. அதற்கிணங்க நிறைவு செய்யப்பட்ட இறுதி அறிக்கையானது 2016 திசம்பர் 27ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது.

தற்போதைய சேதனப்பசளை அமைவிடங்களின் வினைத்திறனை அதிகரித்தல், சாத்தியமான சந்தை வாய்ப்பை மேம்படுத்தல், இறுதியான பயனாளிகள் மத்தியில் சேதனப்பசளை பிரபலப்படுத்தல் மூலோபாயங்களை விருத்தி செய்யதல் மற்றும் மரிக்கவைத்ததன் பிறகு விஞ்சியவற்றுக்கு பரிகாரம் காணும் மாற்று வழிகள்ஆகியவற்றை காண்பதே இந்த ஆய்வின் பிரதான நோக்கங்களாகும். மாதிரி ஆய்வொன்று 21 உள்ளூராட்சி அதிகாரசபைகளை உள்ளடக்கியலாறு மேற்கொள்ளப்பட்டது.

**13.1.7..9 ஊடக பிரச்சாரங்கள் மற்றும் வீட்டு மட்டத்தில் கழிவுகளை பிரித்தல் மற்றும் கூட்டுப்பசளையாக்கல் செயற்பாடுகளை ஊக்குவித்தல்**

மிடியாவத வானொலி நிகழ்சிசித்திட்டமானது நாட்டில் கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தம் வகையில் ஒலிபரப்பப்பட்டது.

கழிவு மகாமைத்துவம் பற்றிய “மிடியாவத” வானொலி

நிகழ்ச்சித்திட்டங்கள் 35 ஒலிபரப்ப்பட்டதுடன் வெற்றியயீட்டிய வெற்றியாளர்களுக்கு பணப் பரிசுகளும் வழங்கப்பட்டன.

பொலிதீன் பாவனையை கட்டுப்படுத்வும் தரக்குறைவான பொலிதீன் மற்றும் பிலாஸ்டிக் ஆகியவற்றை இல்லாதொழிக்கவும் ஒன்பது பத்திரிகை விளம்பரங்கள் வெளியிடப்பட்டன.

ஸ்ரீபாத கழிவு சேகரிப்பு நிகழ்சித்திட்டம், வெள்ளத்தால் பாதிப்புக்கு உள்ளான மக்களுக்கு சிரமதான பிரச்சாரம், ம.சு.அ மற்றும் வட மத்திய மாகாணசபை ஆகியன இணைந்து ஒழுங்கமைத்த சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ருகுனு-கதிர்காமம் மஹா தேவாலய, கண்டி பெரஹரா, பொசன் நிகழ்ச்சித்திட்டம் அனுராதபுரம், பிசிசமல் பூஜை அனுராதபுரம், பரிசுத்த அன்னை தேவாலய திருவிழா தலவிலை-2 போன்ற விசேடமாக நிகழ்வுகள் தொடர்பில் நான்கு பிரச்சார நிகழ்சித்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. கழிவு முகாமைத்துவம் பற்றிய .5.000 ஸ்டிக்கர்கள் மற்றும் 750.000 துண்டுப்பிரசுரங்கள் பொது மக்களை வழிப்பூட்டுவதற்காக புகையிரத பகுதியின் ஊடாக விநியோகிக்கப்பட்டன.

### 13.1.7.10 வீட்டு கூட்டுப்பசளை தொட்டிகள் விநியோகம் செய்தல்

வீட்டு பசளைத் தொட்டிப் பாவனை முறையானது வீட்டிலுள்ள சமையல் அறையில் தேங்கும் கழிவை சுற்றாடல் சிநேகபூர்வ முறையில் முகாதைத்துவம் செய்வதற்கு வசதியானதும் இலகுவானதுமான முறையாகும்.நாட்டில் காணப்படும் உயர் உற்பத்திச் செலவினம் மற்றும் போக்குவரத்துச் செலவினம் ஆகியவற்றின் காரணமாக அ பொதுமக்கள் மற்றும் உள்ளூர் அதிகாரசபைகளுக்கு தற்போதைய உயர்ந்த சந்தை விலையில் தொட்டிகளை வழங்கவோ அல்லது விலைக்கு வாங்குமாறு மக்களை ஊக்குவிப்பதோ மிகவும் கடினமான காரியமாக உள்ளது

இதற்கு பரிகாரம் காணும் வகையில் பிலிசறு கருத்திட்டம 2016ஆம் ஆண்டின் செயற்திட்டதிதில் காணப்பட்ட பாதீட்டின் பிரகாரம் தொட்டிகளை கொள்வனவு செய்தது. 2016 டிசம்பர் 31ஆம் திகதியில் உள்ளவான நிலைமை பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. இந்த தொட்டிகளுக்கு உள்ளூர் அதிகாரசபைகள்,நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட நோக்கள் ஆகியவற்றுக்கு உயர் கேள்விகொன்று காணப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது.

. . .

அட்டவணை **13.7**: :கழிவு சேகரிக்கும் தொட்டிகள் / பிலாஸ்டிக் கழிவு சேகரிக்கும் தொட்டிகள் விநியோகம் தொடர்பான விபரங்கள்-2016

| உளளூர் அதிகாரசபை/ நிறுவனத்தின் பெயர்/தனிப்பட்ட நோக்கம் | வழங்கிய அளவு | மொத்த தொகை (இலங்கை ரூபா) |
|---|---|---|
| நாட்டிலுள்ள புகையிரத நிலையங்கள் | 1,200 | 3,800,000.00 |
| அரசாங்க நிறுவனங்கள் | 600 | 1,900,000.00 |

**13.1.7.11 சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடங்கள் மற்றும் எஞ்சிய கழிவு அகற்றல் தொடர்பில் குறைந்த செலவிலான எரியூட்டிகள் ஆகியவற்றிக்கு உதவியளித்தல்.**

**மொன்ரோவியாவத்தை தற்காலிக கழிவு அகற்றுமிடம்.**

தெண் மாகாணசபை முதல் அமைச்சர் அவர்களால் கூட்டப்பட்ட விசேடமான கூட்டமொன்றில் மொனோரியாவத்தை கூட்டுப்பசளை அமைவிடததிற்கான தற்காலிக் கழிவு(குப்பை) அகற்றல் இடமொன்றுக்கு நிதியளிக்கவென கூட்டு கருத்திட்டம் ஒன்றை நடைமுறைபடுத்த வேண்டும் என்ற இணக்கப்பாடு ஏற்பட்டது. 2015 ஆம் ஆண்டில் கூட்டுப்பசளை அமைவிடத்தை சார்ந்த சூழலில் வாழ்ந்த பொது மக்களக்கு ஏற்பட்டிருந்த எதிரிமறை தாக்கங்களுக்கு பரிகாரம் காணும் வகையில் பிலிசறு கருத்திட்டமானது இந்த அமைவிடத்தின் நிர்மாணப் பணியின் அதன் பங்கான ரூபா 04 மில்லியன் தருவதற்கு இணங்கியதுடன் அதனை அனுப்பியது. 2016 ஆம் ஆண்டில் தக்க வைப்பு பணமாக இலங்கை ரூபா 0.482 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.

உரு 13-2:மொனோரியாவதிதை தற்காலிக கழிவு அகற்றல் இடம்





அட்டவணை 13.8: மொனோரியாவத்தை தற்காலிக கழிவு அகற்றல் இடம்

| இல | உள்ளூர் அதிகாரசபையின் பெயர் | முன்னேற்றம் | செலவளிக்கப்பட்ட தொகை(இ.ரூபாவி) மில்லியன் |
|---|---|---|---|
| | தொம்பே சுகாதார கழிவு அகற்றல் அமைவிடம் | 2500 மெ..தொன்னுக்கு அதிகமாக உள்ளது (சனவரி – டிசம்பர் 2016) | 2.03 |
| | மொனோரியாவத்தை காலி மாவட்டம் | நிர்மாணத்தில் தடுப்புவைப்பு கொடுப்பனவு . | 0.482 |
| | மாத்தலை மா.ந.ச (சுகாதார கழிவு இடத்திற்கான வடிவமைப்பு மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு | வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்ப கட்டத்திற்கான சாத்தியக்கூற்று ஆய்வு | 0.40 |

| இல | உள்ளூர் அதிகாரசபையின் பெயர் | முன்னேற்றம் | செலவளிக்கப்பட்ட தொகை(இ.ரூபாவி) மில்லியன் |
|---|---|---|---|
| | மாத்தலை பி.ச (குறைந்த செலவு எரியூட்டி) | நிர்மாணப் பணி நிறைவடைந்துள்ளது | 3.882 |

### 13.1.7.12 பெரிய மற்றும் சிறிய அளவிலான கூட்டுப்பசளை பொறித்தொகுதியில் ஈடுபட்டுள்ள அலுவலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களுக்கு இயக்கம் மற்றும் பேணுகை பற்றிய பயிற்சி

பிலிசறு கருத்திட்டமானது பின்வரும் பயிற்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

ஆட்டவணை 13.9:உள்ளூராட்சி அதிகாரசபை பணியாளர்கள் மந்நும்ஏனைனோரகளுக்கு கழிவு முகாமைத்துவ பயிற்சி

| இல | மாகாணம் | இலக்கு குழு | மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | மொத்த செலவினம் (இ.ரூபா) |
|---|---|---|---|---|---|
| | உவா மாகாணம் | தொழிலாளர்/அமைவிட முகாமைகயார்கள்/தொண்டர்கள் அரச உத்தியோகத்தர்கள்/தொண்டர்கள் | 1 | 57 | 969,184.00 |
| | வட மத்திய மாகாணம் | | 2 | 133 | |
| | மாகாணம் வடமேல் மாகாணம் | | 2 | 138 | |
| | சபரகமுவ மாகாணம் | | 2 | 86 | |
| | மத்திய மாகாணம் | | 1 | 62 | |
| | கிழக்கு மாகாணம் | | 1 | 65 | |
| | தெண் மாகாணம | | 3 | 217 | |
| | மேல் மாகாணம் | | 2 | 141 | |

| இல | மாகாணம் | இலக்கு குழு | மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை | மொத்த பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை | மொத்த செலவினம் (இ.ரூபா) |
|---|---|---|---|---|---|
| | மொத்தம் | | 14 | 899 | |

### 13.1.8 கருத்திட்ட ஒருங்கிணைப்பு, இயக்கம் மற்றும் முகாமைத்துவம் .

சுற்றாடல் மற்றும் மகாவலி அபிவிருத்தி அமைச்சரின் பணிப்புரைக்கு இணங்க, அனைத்து பங்குதாரர்களின் ஆலோசனையுடன் மாநகர கழிவு முகாமைத்துவம் பற்றிய செயற்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், 2016ஆம் ஆண்டில் கருத்திட்டத்தின் ஒருங்கிணைப்பு, இயக்கம் மற்றும் முகாமைத்தவம் ஆகியவற்றுக்காக இலங்கை ரூபா 30.6083 மில்லியன் ஒதுக்கீட்டுடன் ஒப்புதலும் வழங்கப்பட்டது. இந்த ஆண்டின் போது கருத்திட்டத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக இலங்கை ரூபா 30.25 மில்லியன் பயன்படுத்தப்பட்டது.

2016ஆம் ஆண்டில், பிலிசறு கருத்திட்டத்தின் II ஆம் கட்டத்தை நடைமுறைபடுத்துவற்காக புதிய பணியாட்கள் ஆட்சேர்ப்பொன்று இடம்பெற்றது

2016 ஆம் ஆண்டின் முடிவில், கீழே காட்டப்பட்டு உள்ளதைப் போல், பின்வரும் பணியாட்கள் அவ்வப்போது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் நீண்ட காலமாக வெற்றிடமாக இருந்த முக்கிய பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு இடம்பெற்றது

**அட்டவணை 13.10:** 2016 ஆம் ஆண்டில் காணப்பட்ட பதவியணி நிலை

| **பதவி** | **ஆளணி நிலைகளின் எண்ணிக்கை** | **ஆட்சேர்ப்பு எண்ணிக்கை:** | **ஆட்சேர்ப்பு இடம்பெற்ற மாதம்** | **காணப்பட்ட வெற்றிடங்கள்** |
|---|---|---|---|---|
| பணிப்பாளர் | 01 | 01 | திசம்பர 2016 | -- |
| பிரதிப் பணிப்பாளர | 01 | 01 | - | -- |
| பிரதி முகாமையாளர் | 01 | 01 | யூலை 2016 | -- |
| சிரேஸ்ட பொறியியலாளர் | 01 | 01 | ஒக்டோபர 2016 | -- |
| கணக்காளர் | 01 | 01 | செப்டெம்பர் 2016 | -- |
| கருத்திட்ட உத்தியோகத்தர் | 04 | 01 | யூலை 2014 | 01 |
| | | 01 | ஏப்பிரல் 2015 | |
| | | 01 | ஏப்பிரல் 2015 | |
| நிர்வாக உத்தியோகத்தர் | 01 | -- | - | 01 |
| கணிம அளவையாளர் | 01 | -- | - | 01 |
| கருத்திட்ட பொறியியலாளர் | 02 | -- | - | 02 |
| கருத்திட்ட உதவியாளர் | 04 | 02 | | 02 |
| | | 01 | ஏப்பிரல் 2015 | -- |
| | | 01 | ஏப்பிரல் 2015 | -- |
| | 01 | -- | | 01 |
| வரைவு நபர் | 01 | 01 | ஏப்பிரல் 2015 | -- |
| கொள்வனவு உத்தியோகத்தர் | 01 | 01 | யூலை 2016 | -- |
| கொள்வனவு உதவியாளர் | 01 | -- | - | 01 |
| சட்ட உதவியாளர | 01 | 01 | யூலை 2014 | -- |

| பதவி | ஆளணி நிலைகளின் எண்ணிக்கை | ஆட்சேர்ப்பு எண்ணிக்கை: | ஆட்சேர்ப்பு இடம்பெற்ற மாதம் | காணப்பட்ட வெற்றிடங்கள் |
|---|---|---|---|---|
| கணக்கிட்டு உதவியாளர் | 01 | -- | | 01 |
| எழுதுவினைஞர் | 05 | 01 | திசம்பர் 2013 | 01 |
| | | 01 | திசம்பர் r 2013 | -- |
| | | 01 | ஏப்பிரல் 2015 | -- |
| | | 01 | ஏப்பிரல் 2015 | -- |
| அலுவலக உதவியாளர் | 02 | 02 | - | -- |
| மொத்தம் | 30 | 21 | | 11 |

### 13.1.9 பிலிசறு கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றம்

பிலிசறு கருத்திட்டத்தின் நிதிசார் முன்னேற்றமானது இலகுவில் பரிந்துகொள்ளும் வகையிலும் தூய்மைத்தன்மையை பேணும் வகையிலும் செயற்திட்டம்-2016 இல் திட்டமிடப்பட்ட செயற்பாடுகள் மற்றும இலக்குகளின் பிரகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த கருத்திட்டமானது பணியாள் பற்றாக்குறையால் பாதிப்புக்கு உள்ளாகியபோதும் 2016 ஆம் ஆண்டில் **99.87%** மான முன்னேற்றத்தை அடைந்திருந்தது.

2016 மேம் ஆண்டில் இந்த கருதிட்டத்தின் செயற்திட்டத்தை நடைமறைபடுத்தும் முகமாக ஆரம்பத்தில் 190.0 மில்லியன்(இலங்கை ரூபா) ஒதுக்கப்பட்டது

.இந்த ஆண்டின் போது “புணருதய தேசிய சுற்றாடல நிகழ்ச்சித்திட்டதிதின்” கீழ் நான்கு கருத்திட்டங்களை முன்னெடுக்க சனாதிபதி செயலகம் இலங்கை ரூபா.11.575 மில்லியனை வழங்கியது. ஆகையால், 2016ஆம் ஆண்டில் உண்மையான ஒதுக்கீடு இலங்கை ரூபா 201.575 மில்லியன் ஆகும். இஅந்த கருத்திட்டமானது இந்த கருத்திட்டம் திறைசேரியின நிதிக்கான முன்னேற்றம் 99.88% ஆகையால் இலங்கை ரூபா 189.7659 மில்லியன் மற்றும் புனருதய நிதியின் முன்னேற்றம் 94.30% ஆகையால் இலங்கை ரூபா 10.91486 வையும் பயன்படுத்தி இருக்கலாம் அட்டவணை.11 மற்றும் அட்டவணை.12 ஆகியன நிதிசார் முன்னேற்ற பகுப்பாய்வின் கூறு வாரியான முறிவை காட்டுகின்றது..

அட்டவனை **13.11:** திறைசேரி நிதியின் நிதிசார் முன்னேற்ற பகுப்பாய்வின் கூறு வாரியான முறிவு-2016

| | **பாகம்/ நடவடிக்கை** | **மொத்த நிதி ஒதுக்கீடு (இலங்கை ரூபா) மில்லியன்** | **திரள் நிதி பயண்பாடு (இலங்கை ரூபா) மில்லியன்** |
|---|---|---|---|
| 1 | முறையான கழிவு முகாமைத்துவ நடைமுறைகளுக்கான விழிப்புணர்வை கட்டியெழுப்பல் | 6.6724 | 6.6731 |
| 1.1 | இலக்கு குழுக்களுக்கு விழிப்புணர்வை கட்டியெழுப்பல் | 0.8011 | 0.8261 |
| 1.2 | ஊடக நிகழ்ச்சிகள்(தொலைக்காட்சி மற்றும் வானொலி) | 2.5195 | 2.5195 |
| 1.3 | இவ்வாண்டின் விசேட நிகழ்வுகளுக்கான பிரச்சாரம் | 1.0365 | 1.0123 |
| 1.4 | பதாதைகள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் அச்சிடல்(தமிழ் மற்றும் சிங்களம்) | 2.3153 | 2.3153 |
| 2 | பங்குதார்களுக்கு பயிற்சியளித்தல் | 1.0548 | 0.9692 |
| 2.1 | சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்கு பயிற்சியை நடாத்துதல் | 1.0548 | 0.9692 |
| 3 | மாநகர கழிவுகளுக்கு சேரும் கழிவின் அளவை கட்டுப்படுத்தல் | 9.0630 | 8.5699 |
| 3.1 | கழிவு பிரித்தல் செய்பாட்டை ஊக்குவித்து வீட்டு மட்டத்திலி கழிவு முகாமைத்துவம் மற்றும் கூட்டுப்பசளை தயார்ப்பை ஊக்குவித்தல் | 2.1120 | 1.2887 |
| 3.2 | ஜப்பானிய “3 ஆர்” எண்ணக்கருவை மேம்படுத்தல் | 6.9510 | 7.2812 |
| 4 | ஊள்ளூர் அதிகாரசபைகளுக்கு முறையான கழிவு முகாமைத்தவ வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல் | 139.1671 | 140.7421 |
| 4.1 | வேண்டுகோள்களின் அடிப்படையில் கழிவு முகாமைத்துவ அமைவிடங்களை இனங்காண்பதற்கு உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கு உதவியளித்தல் | 0.273360 | 0.2734 |
| 4.2 | கழிவு முகாமைத்துவ (புதிய கருத்திட்டங்களை) தாபித்தல் | 62.7930 | 53.8212 |
| 4.3 | துலஅவசியமான மேம்பாடுகள் மற்றும் விரிவாக்கங்கள் | 8.8263 | 7.6663 |

| | பாகம்/ நடவடிக்கை | மொத்த நிதி ஒதுக்கீடு (இலங்கை ரூபா) மில்லியன் | திரள் நிதி பயண்பாடு (இலங்கை ரூபா) மில்லியன் |
|---|---|---|---|
| 4.4 | உள்ளூரரட்சி அதிகார சபைகளுக்கு அவசியமான உபகரணங்கள் மற்றும் பயனுறுதியான கழிவு முகாதைத்துவம் சம்பந்தமான வசதிகள் ஆகியவற்றை வழங்குதல் | 24.0800 | 35.0014 |
| 4.5 | தற்போதைய கூட்டுப்பசளை உற்பத்தி அமைவிடங்கள், உயிர் வாயு பொறித்தொகுதிகள், உபகரணங்கள் மற்றும் வசதிகளை உள்ளூராட்சி அதிகாரசபைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு பொறுப்புக்களை அளித்தல் | 43.1945 | 43.9798 |
| 5 | தனியார் துறையினருக்கு லொஜிஸ்டிக் ஒத்துழைப்பு ஏற்பாடுகளை வழங்குதல் | 1.2500 | - |
| 6 | தேசிய கழிவு முகாமைத்துவம் பற்றிய தரவுத்தளத்தை தயாரித்தல் | 0.1238 | 0.1238 |
| 7 | தொம்பே சுகாதார கழிவு அகற்றல் அமைவிடத்தை இயங்கச் செய்தல் | 1.6553 | 2.0304 |
| 8 | செலவுப் பயன் பகுப்பாய்வு | 0.4053 | 0.4053 |
| 9 | கருத்திட்ட ஒருங்கிணைப்பு, இயக்கம் மற்றும் முகாமைத்துவம் | 30.6083 | 30.25 |
| 9.1 | கருத்திட்ட ஒருங்கிணைப்பு, இயக்கம் மற்றும் முகாமைத்துவம் | 30.6083 | 30.2521 |
| மொத்த ஒதுக்கீடு/செலவினம் | | 190.0000 | 189.7659<br>99.88% |

| | | | |
|---|---|---|---|
| 1 | புணருதய தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தில் திட்டமிடப்பட்ட கல்வி அமைச்சின் பாடசாலை கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டததை நடைமுறைசெய்தல் | 4.2000 | 4.2000 |
| 1.1 | புாசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை | 0.6000 | 0.6000 |
| 1.2 | கழிவு ,<br>வெவ்வேராகும்<br>தொட்டிகள்<br>சுவரொட்டிகள்<br>விநியோகத்தை<br>சஞ்சிகையில்<br>வெளியிடல், | 3.6000 | 3.6000 |
| 2 | மாத்தலை மாநகர சபையில் சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடம் தொடர்பான தொழில்நுட்ப சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் எண்ணக்கரு வடிவமைப்பு | 0.8000 | 0.4000 |
| 3 | புணருதய தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தில் திட்டமிடப்பட்ட இரத்தினபுரி பி.ச கழிவு மீள்சுழற்சி நிலையம் | 2.5750 | 2.3149 |
| 4 | புணருதய தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தில் திட்டமிடப்பட்ட கந்தகொல(இரத்தினபுரி) ஒருங்கிணைக்கப்பட்ட திண்மக்கழிவு முகாமைத்துவ கருத்திட்டம் | 4.0000 | 4.0000 |
| மொத்த ஒதுக்கீடு/செலவினம் | | 11.5750 | 10.9149<br>94.30% |

### 13.2 பாடசாலை முன்னோடி நிகழ்ச்சித்திட்டம்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவு மற்றும் கல்வி அமைச்சின் ஒத்துழைப்புடன் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கு ஆகியன விருத்தியடைந்த சுற்றாடல் நேயமிக்க எதிர்கால தலைவர்களை கட்டியெழுப்புவதை இலக்காக்க கொண்டு பாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய சுற்றாடல் முன்னோடி(NEPP) நிகழ்ச்சித்திட்டமாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டமானது நாட்டிற்கு வடிவான சுற்றாடலை ஆதரிக்கும் வகையிலான நிகழ்ச்சித்திட்டங்களை நாடலாவிய ரீதியில் ஒவ்வொரு பாடசாலையிலும் நடாத்துகின்றது. இந்த திட்டத்திற்கு வலுவூட்டும் வகையில் 2015-2019 ஐந்து வருட செயற்திட்டத்திறிகான அமைச்சரவை ஒப்புதலையும் மத்திய சுற்றாடல் அதிகாரசபை பெற்றுக்கொண்டது.

ஐந்து வருட செயற்திட்டத்தின் பிரகாரம் 2016ஆம் ஆண்டின் முன்னேற்றம் பிக்வருமாறு:

அட்டவணை **13.13:** இலங்கையிலுள்ள மொத்த பாடசாலைகளின் எண்ணிக்கை **- 10042 (**சிங்களம் மற்றும் தமிழ் மொழி)

| நிகழ்ச்சித்திட்டம் | மொழிமூலம் | நாட்டிலுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை | 2016ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை | பாடசாலைகளின் மொத்த எண்ணிக்கை | மொத்த தொகை |
|---|---|---|---|---|---|
| சூழல்-மன்ற நிகழ்ச்சித்தி ட்டம | சிங்களம் | 1357 | 878 | 2235 | 3429 |
| | துமிழ் | 891 | 303 | 1194 | |
| சுற்றாடல் முன்னோடி .நிநிகழ்ச்சித்திட் டம் | சிங்களம | 2486 | 457 | 2943 | 3739 |
| | தமிழ் | 765 | 31 | 796 | |

2016ஆம் ஆண்டில் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு பிரிவால் நடாத்தப்பட்ட நடவடிக்கைகள் பின்வருமாறு.

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய (சு.மு.நி) சாதனங்கள் உற்பத்தி முன்னேற்றம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை **13.14:** சு.மு.நி சாதனங்கள் உற்பத்தி முன்னேற்றம்

| தொ.இ | சாதனங்கள | சிங்கள மொழி | தமிழ் மொழி |
|---|---|---|---|
| 1 | சுற்றாடல் முன்னோடி குறிப்பு புத்தகங்கள் | 24500 | 6500 |
| 2 | சுற்றாடல் முன்னோடி தொப்பிகள் | 3750 | 1000 |
| 3 | சுற்றாடல் முன்னோடி பதக்கங்கள் | 24500 | 6500 |
| 4 | ஹரிதா சான்றிதழ் | 5600 | 1100 |
| 5 | ஹரிதா பதக்கங்கள் | 5600 | 1100 |
| 6 | ராஜதா சான்றிதழ் | 1500 | 250 |
| 7 | பதக்கம்- ராஜதா | 1500 | 250 |
| 8 | தங்கம் -சான்றிதழ் | 625 | |
| 9 | பதக்கங்கம் தங்கம் | 625 | |
| 10 | சுற்றாடல் முன்னோடி ஆசிரியர் வழிகாட்டி புத்தகங்கள் | 1000 | |
| 11 | சுற்றாடல் முன்னோடி கொடிகள் | 375 | |

குறிப்பு: மாகாண/ மாவட்ட அலுவலகங்களால் ஆவணங்கள் அனுப்பிவைக்கப்பட்டதன் பிரகாரம் சுற்றாடல் புதிய முன்னோடி குழுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. முாகாண அலுவலகங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்கள் ஆகியவற்றால் மேற்படி பதக்கங்கள் விநியோகம் செய்யப்பட்டன.

### 13.2.2 தேசிய வழிநடத்தல் குழு

சுற்றாடல் பற்றிய கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை பாடசாலை மாணவர்கள் மத்தியில் விரிவுபடுத்தல் செயற்பாட்டில் சு.மு.நி திட்டமானது குறிப்பிடத்தக்க வெற்றியை அடைந்திருப்பினும் சில நிறுவனங்கள் மற்றும் தாபனங்கள் ஆசியவற்றின் பிரச்சினைகள் காரணமாக அதன் உச்ச பயனை அடைய முடியாதுள்ளது என்பதை சு.மு.நி தாக்கத்தை மதிப்பீடு செய்யும் நோக்கில் 2004 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சுயாதீன மதிப்பீடொன்றானது அவதானித்துள்ளது.

ஆகையால், முன்னோடி நிகழ்ச்சித் திட்டத்தை நெறிப்படுத்தம் வகையில் சுற்றாடல் மற்றும் கல்வி அமைச்சுகளின் செயலாளரின் தலைமையின் கீழ் சம்பந்தப்பட்ட உததியோகத்தர்களை உள்ளடக்கிய சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்ட வழிநடத்தல் குழுவொன்றை2015 ஆம் ஆண்டில் தாபிக்குமாறு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டில் தேசிய வழிநடத்தல் குழுக்கூட்டம் ஒன்று பெப்ருவரி 09ஆம் திகதி இடம்பெற்றது.

### 13.2.3 தெரிவு செய்யப்பபட்ட பாடசாலை மாணவர்களுக்கு தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

சுற்றாடல் முன்னோடி மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை மேம்படுத்துவதே தலைமத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். தெரிவு செய்யப்பபட்ட முன்னோடி தலைவர்கள் பின்வரும் நிகழ்வுகளில் பங்குபற்றினர்

அட்டவணை.13.15: தலைமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

| இல | திகதி | மாவட்டம் | இடம் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 02.06.2016 | கொழும்பு | சென் ஜோன்ஸ் கல்லூரி கொழும்பு 14 | 100 |
| 2 | 03.06.2016 | மட்டக்களப்பு | பம்லிக் கல்லூரி மட்டக்களப்பு | 85 |
| 3 | 15.07.2016 | பொலன்னுறுவை | ப்ராதிபா மண்டபம் மன்னம்பிட்டிய, திம்புலாகல | 100 |
| 4 | 11.08.2016 | யாழ்பாணம் | இளைஞர் சங்க நிலையம் | 85 |
| மொத்தம் | | | | 369 |

### 13.2.4 ஆசிரியர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்- வலய மட்டம்

சு.மு.நி யில் உயிர்நாடியாக செயற்படுவது முன்னொடி பொறுப்பு ஆசிரியர் ஆகும். ஆகையால் இந்த நிகழ்சித்திட்டத்தை வலுவூட்டுவதற்கு ஆசிரியர் பயிற்சி வலய மட்டத்தில் பின்வருமாறு நடாத்தப்பட்டுள்ளது.:

அட்டவணை 13.16: ஆசிரியர் பயிற்சி நிகழ்ச்சிட்டம்

| இல: | திகதி | மாவட்டம் | கல்வி வலயம் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 30.03.2016 | நுவரெலியா | நுவரெலியா | 111 |
| 2 | 05.04.2016 | | வலபனே | 83 |
| 3 | 19.05.2016 | அம்பாறை | திருக்கோவில் | 47 |
| 4 | 09.06.2016 | குருனாகலை | கிரியுள்ள | 62 |
| 5 | 24.06.2016 | யாழ்பாணம் | யாழ்பாணம் | 54 |
| 6 | 25.06.2016 | பொலன்னறுவை | பொலன்னறுவை | 100 |
| 7 | 02.07.2016 | | ஹின்குரக்கொட | 100 |
| 8 | 15.07.2016 | கம்பஹ | நீர்கொழும்பு | 95 |
| 9 | 31.10.2016 | முல்லைதீவு | முல்லைதீவு | 60 |
| | மொத்தம் | | | 712 |

### 13.2.5 அதிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்- வலய மட்டம்

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் பின்வரும் வலயங்களில் வினைதிறனை மேம்படுத்தும் வகையில் வெற்றிகரமாக நடாத்தப்பட்டன. அதிபர்களுக்கான விழிப்புணர்வு

அட்டவணை 13.17: அதிபர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

| இல: | திகதி | மாவட்டம் | கல்வி வலயம் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | 29.03.2016 | நுவரெலியா | நுவரெலியா | 92 |
| 2 | 26.05.2016 | யாழப்பாணம் | யாழப்பாணம் | 81 |
| 3 | 26.05.2016 | குருனாகலை | மிஹாவ | 80 |
| 4 | 31.05.2016 | மாத்தலை | மாத்தலை | 84 |
| 5 | 12.07.2016 | கம்பஹ | மினுவாங்கொடை | 100 |
| | மொத்தம் | | | 437 |

### 13.2.6 சு.மு.நி ஒருங்கிணைப்பாளர்களுக்கு மூன்று நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்

சு.மு.நி ஒருங்கிணைப்பாளர்களுக்கு மூன்று நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் சிங்கராஜ குஹுடுவ கபதுகாப்பு நிலையத்தில் யூலை 16 முதல் யூலை 18 வரை இடம்பெற்றது. இரண்டு-நாள் வதிவிட சுற்றாடல் முன்னோடி



### 13.2.7 சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்டம் பற்றிய இரண்டு-நாள் வதிவிட பயிற்சியொன்று சு.மு.நி ஆணையாளர்கள் மற்றும் சிறந்த செயலாற்றுகை வெளிப்படுத்திய சிங்கள மற்றும் தமிழ் ஆசிரியர்களுக்கும் நடாத்தப்பட்டது



நிகழ்ச்சித்திட்டமொன்று .. இரண்டு நாள் வதிவிட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்று சு.மு.நி ஆணையாளர்களுக்கும் சு.மு.நி ஆணையாளர்கள் மற்றும் சிறந்த செயலாற்றுகை வெளிப்படுத்திய பொறுப்பு ஆசிரியர்களுக்கும் கன்னெலியா வன பாதுகாப்பு நிலையத்தில் 2016 மே 5-7 வரை இடம்பெற்றது.

### 13.2.8 தேசிய கல்லூரிகளுக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

2016 ஆம் ஆண்டில் தேசிய கல்விக் கல்லூரி ஆசிரியர் பயிலுநர்களுக்கும் ஆறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் சுற்றாடல் கல்வி மற்றும் வழிப்புணர்வு பிரிவால் நடாத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் “மானெல் திவயினே மாஹஜன விநிஸ்ய” என அழைக்கப்பட்ட தனித்தவமான நாடக நிகழ்ச்சியொன்று தேசிய கல்விக் கல்லூரி ஆசிரியர் பயிலுநர்காளல் நடாத்தப்பட்டது

அட்டவணை 13.18: விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

| இல: | திகதி | இடம் | பங்கேற்பாளர்களின் எண்ணிக்கை: |
|---|---|---|---|
| 1 | 27.02.2016 | **ஹப்பிடிகம தே.க.க** | 169 |
| 2 | 12.03.2016 | **சிஹறன தே.க.க** | 80 |
| 3 | 19.03.2016 | **தம்பதெனிண சாரிபுத்த தே.க.க** | 80 |
| 4 | 30.04.2016 | **நில்வலா தே.க.க** | 213 |
| 5 | 14.05.2016 | **பஸ்துன்ரட தே.க.க** | 206 |
| 6 | 11.06.2016 | **யாழ்ப்பாணம் தே.க.க்** | 177 |
| | **மொத்தம்** | | 925 |

### 13.2.9 சூழல்-குழாம் நிகழ்ச்சித்திட்டம்

பிள்ளைப் பருவத்தில் இருந்தே சுற்றாடல் பற்றிய மனப்பாங்கை குழந்தையின் உள்ளத்தில் பதியவைப்பதே சூழல்-குழாம் நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்காகும். ஆதலால் சுத்தமானதும் பசுமையானதும் சுத்தமானதுமான சிறந்த சுற்றாடலொன்நை உருவாக்கும் மனப்பாங்கை தரம் 1-5 வரையிலான பிள்ளைகளின் உள்ளங்களில் விதைத்து அதனைத்தொடர்நது அவர்களை தரம் 6 முதல் சு.மு.நி திட்டத்தில் இணைத்தக்கொள்ளல்.

அட்டவணை **13.19:** சுற்றாடல் குழாம் சாதனங்கள் உற்பத்தி பற்றிய முன்னேற்றம்-2016, கீழே காட்டப்பட்டுள்ளது

| இல: | சாதனம் | சிங்கள மொழி | தமிழ் மொழி |
|---|---|---|---|
| 1 | **துருலதா சான்றிதழ்** | 20000 | --- |
| 2 | **சோபா சான்றிதழ** | 4000 | 1000 |
| 3 | சூழல்-குழாம் ஆசிரியர் வழிகாட்டி நூல் | 1000 | 500 |

### 13.2.10.சுற்றாடல் முன்னோடி செய்தி மடல்(மாவட்ட ரீதியில)அச்சிடல்

சுற்றாடல் முன்னோடி நிகழ்ச்சித்திட்ட வாசிப்போர், ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோரை விழிப்பூட்டி அனுபவங்களை பகிர்ந்து கொளவது சுற்றாடல் முன்னோடி செய்தி மடல் அச்சிடல் செயற்பாட்டின் முக்கிய இலக்காகும்.

2016ஆம் அண்டில் மாவட்ட சு.மு.நி மடலானது 22 மாவட்டங்களில் வெளியிடப்பட்டதுடன் அவற்றின் 44000 பிரதிகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன..

### 13.2.11.சு.மு.நி தேசிய முகாம்

நாட்டிலுள்ள ஒட்டுமொத்த சுற்றாடல் மன்னோடியாளர்கள் ஒன்றிணையும் விசேட நிகழ்வு **“தேசிய முகாம்”** என அழைக்கப்படுகின்றது. இந்த நிகழ்வானது அற்புதமானதும் அபிமானமானதும் குறிப்பிடத்தக்கதுமான செயற்பாடுகளை உள்ளடக்குகின்றதுடன் முன்கோடிகள் மேன்மையடைக்கூடிய மிகவும் அரிதான நிகழ்வாகும் பேராதெனிய தேசிய கல்விக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும். உத்தியோகத்தர்கள் உள்ளடங்களாக 350 பங்கேற்பாளர்களுடன் தேசிய குழாம்-2016, செம்டெம்பர் 21-24 ஆம் திகதி வரை இடம்பெற்றது.

### 13.2.12 சனாதிபதி பதக்கங்கள் வழங்கும் விழா

2016 ஆம் ஆண்டின் ,சனாதிபதி பதக்கம் வழங்கும் விழா அதிமேதகு சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் தலைமையில் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2016ஒக்டோபர் 18ஆம் திகதி இடம்பெற்றது. அனைத்து செயற்பாடுகளையும் வெற்றிகரமாக செய்து முடித்து நேர்முகப் பரீட்சையிலும் சித்தியடைந்த 41 சுற்றாடல் முன்னோடிகளுக்கு அதிமேதகு சனாதிபதியால் சனாதிபதி பதக்ங்கள் அணிவிக்கப்பட்டு பாராட்டப்பட்டதுடன் சிறந்த சுற்றாடல் முன்னோடி நிகழ்சசித்திட்டத்தில் செயயலாற்றுகையை வெளிப்படுத்திய மூன்று ஆசிரியர்களும் .கௌரவிக்கப்பட்டனர்.

### 13.2.13. முன்னேற்ற மீளாய்வும் ஏற்றுமதி ஊக்குவிப்பு கவுன்சில் மற்றும் பிராந்திய சுற்றாடல் உத்தியோகத்தர்கள் (EEPC & DEO’s) ஆகியோருடனான மாகாண மட்ட கூட்டம ;

முப்பத்துாறு (36) வலய மற்றும் பிரதேச சு.மு.நி ஆணையாளர்கள் மற்றும் மாவட்ட ஆலோககர்களுக்கு பல விசேட விழிப்னுணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் பதுளை ஒனிகா ஹோட்டலில் 2016.02.01 ஆம் திகதி இடம்பெற்றன.. 2016ஆம் ஆண்டில் சு.மு.நி திட்டத்திலி கொடுக்கப்பட்ட இலக்கை அடைவது தொடர்பில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தத்தை கண்காணிக்கும் முகமாக மாகாண மட்ட முன்னேற்ற மீளாய்வ மற்றும் கண்காணிப்பு கூட்டங்கள் ம.சு.அ கேட்போர் கூடத்தில் 2015.11.01 ஆம் திகதி இடம்பெற்றது.

### 13.2.14. சு.மு.நி தரவுத் தளத்திற்காக கணினிகளை கொள்வனவு செய்தல்

2016ஆம் ஆண்டில் சுற்றாடல் சு.மு.நி தரவுத் தளத்தை பேணம் வகையில் கல்வி மற்றும் வழிப்புணர்வு பிரிவுக்கு நான்கு கணனிகள் கொள்வனவு செய்யப்பட்டன.



உரு 13-3: சனாதிபதி பதக்கம் வழங்கும் விழா

### 13.2.15 சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுததிய சனாதிபதி பதக்கம் வென்றோருக்கு வெளிநாட்டு அனுபவம் மற்றும் பயிற்சியை வழங்குதல்.

ஏனைய நாடுகளில் பின்பற்றிவரும் சுற்றாடல் பேணல் மற்றும் விழிப்புணர்வு நடைமுறைகள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் அதிகரித்து அவர்கள் நாட்டிற்கு மீண்டும் திரும்பி வந்துவடன் சிறநித சேவையை வழங்கும் அதேவேளையில் சனாதிபதி பதக்கங்களை வென்றெடுக்குமாறு மாணவர்களை ஊக்குவித்தல ஆகியன மேற்படி வெளிநாட்டு கற்கை விஜயங்களின் குறிக்கோள்களாக உள்ளன. .2016ஆம் ஆண்டில் இந்த நிகழ்ச்சித்திட்டமானது டிசம்பர் 05 முதல் டிசம்பர் 11 வரை இடம்பெற்றது.. கல்வி அமைச்சில் இருந்து ஒரு உத்தியோகத்தரும் சு.மு.நி திட்டத்தின் 03 பொறுப்பாசிரியர்களும் மாகாணம் மற்றும் மாவட்டங்களைச் சேர்ந்த 03 உத்தியோகத்தர்களும் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் 02 உத்தியோகத்தர்கள் உள்ளடக்கிய குழுத் தலைவரும் சிறந்த செயலாற்றுகையை வெளிப்படுத்தி சனாதிபதி தங்கப் பதக்கங்கள் வென்ற 24 வெறிறியாளர்களும் புது டில்லி சுற்றாடல் மற்றும் விஞ்ஞானம் பற்றிய நிலையத்தின் ஒருங்கிணைபில் இடம்பெற்ற இந்த வெளிநாட்டு கற்கை விஜயத்தில் பங்கேற்றனர்.





## 13.3 .இலங்கையில் மத்திய சற்றாடல் அதிகாரசபையின் ஆய்வுகூடங்களை வலுப்படுத்தலும் கண்காணிப்பு திறனை மேம்படுத்தலும்

2014ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆய்வுகூட வலுப்படுத்தல் கருத்தட்டமானது மூன்று பிரதான பகுதிகளை உள்ளடக்குகின்றது. அவை பின்வருமாறு; ம.சு.அ யின் தற்போதைய தேவைகளுக்கு இணங்க அவசியமான வளங்களை வழங்குதல், ஆய்வுகூட பணியாளர்களின் திறனை கட்டியெழுப்பல் மற்றும் மாகாண மற்றும் கம்பஹ ஆய்வுகூடங்களை தாபித்தல் என்பனவாகும்.

2016, ஆம் ஆண்டில் ம.சு.அ ஆய்வுகூட வலையமைப்பின் இலக்கை எய்தும் வகையில் கம்பஹ ஆய்வுகூடமானது அடிப்படை நீர்த்தர அளவுருக்களை பரிசோதனை செய்வதற்கான வளங்களுடன் தாபிக்கப்பட்டது. கம்பஹ ஆய்வுகூடத்திற்கு மாதிரியெடுத்தல் மற்றும் சுற்றாடல் மாதரிகரள பகுப்பாய்வு செய்தல் ஆகியவற்றில் திறனுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டதுடன் ம.சு.அ யின் மத்திய ஆய்வுகூடத்தில் விரிவான பயிற்சியொன்றும் அவருக்கு வழங்கப்பட்டது. தகுதியான பணியாள் பற்றாக்குறையானது மத்திய மற்றும் மாகாண ஆய்வுகூடங்களின் நீர் தரம் பற்றிய பிரிவில் காணப்படும் தகுதிவாய்ந்த பணியாள் பற்றாக்குறை பிரதான பிரச்சினையாக உள்ளது. 2016ஆம் ஆண்டில் இந்த பிரசினையானது ஒன்பது இரசாயணவியலாளர்கள் மற்றும் ஏழு ஆய்வுகூட உதவியாளர்கள் நியமனம் செய்ததன் ஊடாக தீர்க்கப்பட்டது. புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோர்களுக்கு விரிவான அறிமுக பயிற்சி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. நீர் தரம் பற்றிய பிரிவுக்கு இரசாணப் பொருட்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக ரூபா 1.5 மில்லியனையும் வளித் தர பிரிவுக்கு உபகரணங்கள் கொள்வனவு செய்ய ரூபா 28.5 மில்லியனையும் ஆய்வுகூட வலுவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ம.சு.அ ஒதுக்கியது ரூபா 1.7 மில்லியன் பெறுமதியில் கொள்வனவு செய்யப்பட்ட இரசாயணப் பொருட்கள் மற்றும் கண்ணாடி உபகரணங்கள் மத்திய மற்றும் மாகாண ஆய்வுகூடங்கள் மத்தியில் விநியோகம் செய்யப்பட்டன.

**பெற்றுக்கொள்ளப்பட்ட உபகரணங்கள்**

- B & K 2270 ஒலி மட்ட பகுப்பாய்வு கருவி
- மொத்த ஹய்ட்ரோ காபண் பகுப்பாய்வு கருவி
- ஸ்டெக் எமிசன் கண்காணிப்பு உபகரணம
- இரண்டு உயர அழுத்த மாதரி காபன் மொனோசைட் பகுப்பாய்வு கருவி
- ஓசோன் பகுப்பாய்வு கருவி
- சுற்றுச்சூழல் வளித் தரம் கண்காணிப்பு முறைமை கிட்டத்தட்ட ரூபா 26 மில்லியன் பெறுமதியில்

## 2016 ஆம் ஆண்டில் பெற்றுக்கொண்ட உபகரணங்கள்




High Volume Samplers




Stack Monitoring Equipment



Hydrocarbon Analyzer




Air quality analyzers



Sound Level Analyzer

**ஏனைய உபகரணங்கள் பழுதுபார்க்கப்பட்டவை**

- இரண்டு உயர் வொலுயும் சாமப்லர்கள்
- B & K 2250 ஒலி மட்ட மீட்டர், 0.65 மில்லியன் ரூபா பெறுமதியில்

## 13.4 இலங்கையில் திண்ம கழிவு அகற்றல் வசதிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் (ஈ.டி. சீ. எப் கருத்திட்டம்)

### 13.4.1.அறிமுகம்

#### 13.4.1.1.மேலோட்டப் பார்வை

பல்வேறு சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளுக்கு காரணமாய் அமைந்துள்ள தற்போதைய முறையற்ற நகராட்சி திண்மக் கழிவு அகற்றல் முறைமைக்கு பரிகாரம் காணும் வகையில் விஞ்ஞான ரீதியில் நிரூபிக்கப்பட்டதும் சுகாதார சீர்கேடற்றதுமான கழிவுப் பொருட்கள் அகற்றும் அமைவிடங்கள் பலவற்றை ஒன்றிணைந்த கழிவுப் பொருள் முகாமைத்துவத்துவ தீர்வுகளாக நிர்மாணிப்பதற்கு ம.சு.அ திட்டமிட்டுள்ளது

இலங்கை அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட பல்வேறு வழிமுறைகளைப் பின்பற்றியதன் பின்னர், இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட நகரங்களில் 04 சுகாதார சீர்கேடற்ற கழிவுப் பொருட்கள் அகற்றப்படும் அமைவிடங்களை நிர்மாணிக்கும் நோக்கில் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது ஏற்றுமதி அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதி கடன் வசதியின் (EDFC) கீழ் கொரிய அரசாங்கத்தின் ஏற்றுமதி-இறக்குமதி (Eximbank) வங்கியிடமிருந்து நிதி உதவியை பெற்றுத்தருமாறு திறைசேரிக்கு கோரிக்கை விடுத்தது மேற்படி சுதார முறையிலான கழிவு அகற்றல் அமைவிடங்கள் அநுராதபுரத்தில் அமைந்துள்ள கீரிக்குலம, ஹிக்கடுவயில் அமைந்துள்ள மொன்ரோவியாவத்த, பாணந்துறையில் அமைந்துள்ள மலமுல்ல, உடுநுவரவில் அமைந்துள்ள கோணாடிகாவத்த ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படும்.
இறுதியில் இவை சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி அதிகாரசபை பிரதேசங்களில் தோற்றுவிக்கப்படும் எஞ்சிய கழிவுகளை அகற்றும் பொதுவான கொத்தனி கழிவு அகற்றல் அமைவிடமாக செயற்படும்.

இக்கருத்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த செலவு அமெரிக்க டொலர் 41.886 மில்லியனாகும். இத்தொகையில் 33.536 மில்லியன் அமெரிக்கடொலர்EDCF இலிருந்து பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்கப்படுகின்றது. எஞ்சிய 8.350 மில்லியன் அமெரிக்க டொலர் இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும். EDCF கடன்களுக்கு பிரயோகிக்கக்கூடிய நியமங்களும் நிபந்தனைகளும் உதவி பெறும் நாடுகளின் பிரிவுகள் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன.

#### 13.4.1.2.கருத்திட்டத்தின் நோக்கெல்லை

நான்கு அமைவிடங்களிலும் ஒவ்வொரு சுகாதார சீர்கேடற்ற கழிவு அகற்றல் அமைவிடங்களை வடிவமைத்து நிர்மாணித்தல், மீகஸ்வெவ, மெதிரிகிரிய(பாணதுரை மலமுலலவுக்கு மாற்றீடாக) கீரிகுளம் அனுராதபுரம்கீரிமலை, யாழ்ப்பாணம் (உடுநுவர கொடிகாவத்தைக்கு மாற்றீடாக) ஹிக்கடுவை, மொனோரியாவத்த கழிவு நீர் சுத்திகரிப்புக்கான பொறித்தொகுதி தாபித்தல் குப்பை அகற்றும் இடத்தில் வாயு கண்காணிப்பு பொறித்தொகுதி தாபித்தல் கழிவு மதிப்பீடுகள் கழிவு அகற்றல் முறைமை மற்றும் வசதிகளின் திறன் அளவுகள் ஆகியவற்றை மதிப்பீடுசெய்தல்

#### 13.4.1.3 எதிர்பார்க்கப்பட்ட பலன்களும் விளைவுகளும்.

இந்த கருத்திட்டத்திம் உள்ளடக்கியுள்ள திண்மக் கழிவு முகாமைத்துவ வசதிகளின் ஊடாக சம்பந்தப்பட்ட நகரங்களைத் தூய்மையாக வைத்திருப்பதற்குரிய உட்கட்டமைப்பு வசதியை இலங்கையில் கட்டியெழுப்ப முடிகின்றது. மேலும் இந்த கருத்திட்டத்தை நிறைவேற்றுவதன் ஊடாக தேசிய அபிப்பிராயம், தொழில் வாய்ப்புகள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றையும் ஊக்குவிக்க முடிகின்றது. இந்த கருத்திட்டமானது முறையாக கழிவுகளை அகற்றி, மாநகர திண்மக் கழிவுகளை முகாமைத்துவம் செய்வதன் மூலம் சிறப்பான பொதுச் சுகாதாரம் மற்றும் உடல் நலம் ஆகியவற்றை உறுதிசெய்வதுடன் அதனூடாக நோய்கள் ஏற்படுதலை குறைத்து வருமானத்தை சேமிக்கவும் வழிசமைக்கின்றது. இறுதியாக கருத்திட்டத்தின் எதிர்பார்பாக உள்ளது யாதெனில்:

கருத்திட்டப் பகுதியைச் சூழவுள்ள சுற்றாடல் நிலைமையை மேம்படுத்துதல். இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் பொதுச் சுகாதாரம், உடல் நலம் ஆகியவற்றை அதிகரித்தல். கழிவு நீர் சுத்திகரிப்பு முறைமைளின் சுகாதார தன்மையை மேம்படுத்துதல்

மண், நீர் மற்றும் காற்று மாசடைதலைக் குறைப்பதுடன், ஏனைய சுற்றாடல், சமூக-பொருளாதார பிரச்சினைகளையும் குறைத்தல்

ஒன்றிணைந்த திண்மக் கழிவு சுத்திகரிப்பு வசதிக்கான செயற்பாடுகளில் தொழில்நுட்ப அறிவைப் பிரயோகித்தல

இக்கருத்திட்ட அமுலாக்கத்தின் ஊடாக எதிர்பார்க்கப்படும் குறிப்பிடத்தக்க சுற்றாடல், தொழில்நுட்ப, சமூக பொருளாதார நன்மைகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன:

**சுற்றாடல் நன்மைகள்:**

- மீள்சுழற்சி செய்யக்கூடிய மூலவளங்களின் பாவணையை அதிகரித்தல்.
- சுகாதார முறையிலான சுத்திகரிப்பு முறையினூடாக பிரதேச வாழ் மக்களுக்கு இன்பகரமான வாழ்க்கைச் சூழலை வழங்குதல் சுகாதார முறையில் பரிகரிக்கும்.
- முறையினூடாக பிரதேச வாழ் மக்களின் பொதுச் சுகாதார நிபந்தனைகளுக்கு உதவியளித்து பங்களிப்புச் செய்தல்.
- விஞ்ஞான ரீதியான சுத்திகரிப்பு செயன்முறையைப் பின்பற்றுவதன் மூலம் இரண்டாம் தர சுற்றாடல் பிரச்சினைகளை குறைந்து முறையான நிலத்தோற்ற அழகுகூட்டு முயற்சிக்கு வழிசமைத்தல்
- சீரற்ற மற்றும் அதிகாரமளிக்கப்படாத கழிவுகற்றல் முயைால் ஏற்படும் மாசடைதல் பிரச்சினைகளில் இருந்து ஆளுகைப் பிரதேசத்தைப் பாதுகாத்தல்.
- சிவில் முறைப்பாடுகள் பற்றிய பல்வேறு பிரச்சினைகளைத் தடுத்தல்/ தீர்த்துவைத்தல் மூலம் சுற்றாடலைப் பாதுகாத்தல், பிரசைகளின் பொதுச் சுகாதாரத்தைப் பாதுகாத்தல்
- அரசாங்கத்தினது தேசிய காணிப் பயன்பாட்டுத் திட்டத்தில் உள்ளவாறுகளியாட்ட நடவடிக்கைகள், ஓய்வெடுத்தல் ஆகியவற்றுக்கென போதியளவு இடவசதியை ஏற்படுத்திக் கெடுத்தலை உறுதி செய்தல்

**தொழில்நுட்ப நன்மைகள்:**

- விரிவான முகாமைத்துவத்தினூடாக நம்பத்தகு மற்றும் சிக்கனமான கழிவு முகாமைத்துவ முறையை ஏற்படுத்துதல்
- நீண்டகால அடிப்படையில் சுகாதார முறையிலமைந்த கழிவுப் பொருள் அகற்றுகை.
- கழிவுப் பொருள் இடப்படும் பகுதியின் நடவடிக்கைகள் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றில் தொழில்நுட்ப அறிவு அதிகரித்தல்.
- கழிவு நீர் சுத்திகரிப்பு மற்றும் முகாமைத்துவ தொழில்நுட்பத்தை அதிகரித்தல்.

**பொருளாதார நன்மைகள்:**

- ○ யதார்த்தமான நிலப் பயன்பாடு
- ○ பிரதேச வாழ் மக்களுக்கான கழிவுப் பொருள் சுத்திகரிப்பு செலவைக் குறைத்தல்
- ○ நிர்மாணித்தல், இயக்கச் செயற்பாடுகள் பணிகள் தொடர்பான வேலை வாய்ப்புகளை அதிகரித்தல்
- ○ கழிவு அகற்றல் அமைவிடங்கள் மேம்பாட்டு பணியின் ஊடாக சுற்றாடல் பற்றிய பிரசைகளின் விழிப்புணர்வை மேம்படுத்தல்
- ○ சூற்றுச்சூழலில் சுற்றாடல்-நேய வசதிகளுடன் இணக்கமான செயற்பாடுகளை தாபித்துக் கொள்வதன் ஊடாக பொருளாதார நன்மைகளைப் பெற்றுக்கொள்ளல்.
- ○ வீட்டுக் கழிவுப் பொருட்களை முகாமைத்துவம் மற்றும் அகற்றுதல் தொடர்பான நடவடிக்கைகளில் செலவைக் குறைத்தல்
- ○ மூலவளங்களை மீள் சுழற்சி செயற்பாடிற்கு உட்படுத்துவதன் மூலம் செலவின் வினைத்திறனை ஏற்படுத்துதல

**சமூக நன்மைகள்:**

- நம்பிக்கையுடைய சுகாதார ரீதியான கழிவுப்பொருள் சுத்திகரிப்பு வசதிகளை வாங்குதல்
- சுற்றுச்சூழல் நிபந்தனைகளுக்கு அமைய மிகப் பொருத்தமான கழிவுப்பொருள் அகற்றும் அமைவிடத்தை அமைப்பதன் மூலும் அபாயகரமான வசதிகளுகது எதிரான அனுகூலமான மனப்பாங்கை அதிகரித்தல்
- சுற்றாடல்-சிநேபூர்வ எண்ணக்கருவை பிரயோகிப்பதன் மூலம் சுற்றாடல் மற்றும் பிரயோசனமற்ற கழிவுப் பொருள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதற்கு உதவுதல்

- ▪ கழிவுப் பொருள் சுத்திகரிப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் கழிவுப் பொருள் அகற்றப்படும் நிலப் பகுதிக்கான இடப் பற்றாக்குறை பற்றிய பிரச்சினையை தீர்த்து வைத்தல்.
- ▪ நீண்டகாலப் போக்கில் சுகாதார முறையிலான கழிவுப் பொருள் இடப்படும் பகுதியை ஏற்படுத்துதல்.
- ▪ பிராந்திய அபிவிருத்திக்கு தொடர்ச்சியாக பங்களிப்புச் செய்தல்.

### 13.4.2 கருத்திட்ட அமைவிடங்கள்



### 13.4.2.1. அனுராதபுரம் கீர்த்திகுலம மற்றும் ஹிக்கடுவை மொன்ரோவியவத்தை

கருத்திட்ட உத்தியோகத்தர்கள் மேற்படி இரண்டு(02) அமைவிடங்கள் பற்றிய விபரமான வடிவமைப்புகளை 2016 மாரச் மாதத்தில் பெற்றுக்கொண்டனர் அனைத்தொடர்ந்து இவ்விடயம் சம்பந்தமாக குன்உஹ பொறியியல் மற்றும் ஆலோசனை கம்பனியின் ஆலோசகர்களுக்கு (USD) 426,623 அமெரிக்க டொலர்கள் அனுப்பப்பட்டது. மேற்படி இரண்டு கழிவு அகற்றல் அமைவிடங்களை நிர்மாணம் செய்வதற்கான ஒப்பந்தப்காரரை பெற்றுக்கொள்வது சம்பந்தமான விலைமனு ஆவணங்களை முன்னெடுப்பதற்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது.

அதற்கிணங்க, விலை மனு ஆவணங்கள் சம்பந்தப்பட்ட இணைப்புகளுடன் வகுக்கப்பட்டு நிறைவுசெய்யப்பட்டது.

இந்த ஆவணங்கள் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் கொள்வனவு குழுவால் நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப குழுவால் பரிசோதனைக்கு உட்பட்டதுடன் கொறிய எக்சிம் வங்கியின் இணக்கப்பாட்டிற்காக அனுப்பப்பட்டது.

### 13.4.2.2. மெதிரிகிகிரிய உடகன்னாவ (பயாகலவிற்கான மாற்று அமைவிடம்)

நேரம் மற்றும் காணி கிடைக்கும் தன்மை மற்றும் கருத்தட்டத்தின் அளவு ஆகியன வரையறுக்கப்பட்ட நிலையில் இருந்ததன் காரணமாக பொலொன்னறுவை மாட்டத்தைத் சேர்ந்த உடகன்னாவ, மெதிரிகிரியாவில் வனத் திணைக்களத்திற்கு உரித்தான (சரளை குழி) காணியொன்று பயாகலவிற்கு மாற்றீடாக இனங்காணப்பட்டது. முன்மொழியப்பட்ட இந்த காணியானது பிலிசறு கருத்திட்டத்தால் நிர்மாணிக்கப்பட்ட கூட்டுப்பசளை பொறித்தொகுதிக்கு அருகில் அமைந்துள்ளது.

பூர்வாங்க விசாரணைகள் எல்லாம் குன்ஹவா ஆலோசகர்களுடன் முன்னெடுக்கப்பட்டது. அவ்விடத்தின் அடிப்படை அம்சங்கள் சுகாதாரமான முறையில் கழிவு அகற்றல் அமைவிடமொன்றை தாபிப்பதற்கு உகந்ததாக உள்ளது. வனத் திணைக்களம் கருத்திட்டத்தை முன்னெடுப்பதற்கான அதனது சம்மத்ததை தெரிவித்தள்ளது.

அதே வேளையில் காணியை விடுவித்துக் கொள்ளவும் சுற்றாடல் பரிந்துரையை பெற்றுக்கொள்ளவும் அவசியமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அமைவிடத்திற்கான சாத்தியக்கூறு ஆய்வும் நிறைவடைந்தது. கருத்திட்டமானது மெதிரிகிரிய அமைவிடத்தின் கருத்துரு வடிவமைப்பு 2016 மே 31ஆம் திகதி பெற்றுக்கொண்டதுடன் கருத்துரு வடிவமைப்பு தொடர்பில் பங்குதாரர்களின் கருத்துக்களை பெற்றுக்கொள்வதற்கு அவர்களுடன் கூட்டமொன்று யூன் 09 ஆம் திகதி இடம்பெற்றது. அதன் பிரகாரம் ஆலோசகர்கள் அமைவிடத்தின் விபரமான வரைவு வடிவமைப்பை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். இருப்பினும் அங்கு தாபிக்கப்படவிருந்த கருத்திட்டம் தொடர்பில் பொ மக்கள் கொந்தளிப்பொன்று காணபட்டது.. இதன் காரணமாக பொது மக்களை மெய்ப்பிக்கும் விதமாக தொம்பே கழிவு அகற்றல் அமிடத்திற்கான விஜயமொன்று ஏற்பாடு செய்யப்பட்டது.





. உரு **13-4:** கள விஜயம் -மெதிரிகிரிய



உரு **13-5:** பங்கு தாரர்கள் கூட்டம்-மெதிரிகிரிய

இறுதியாக அவர்கள் கருத்திட்டம் தொடர்பில் இணக்கம் தெரிவித்ததுடன் முன்மொழியப்பட்டிருந்த அமைவிடம் தொடர்பாக தொடர்ந்தும் எதிர்ப்பை வெளியிட்டு அதனை மெதிரிகிரியாவின் வேறு இடத்திற்கு மாற்றுமாறு கோரிக்கை விடுத்தனர். இறுதியில் கருத்திட்ட அமைவிடமானது மீண்டும் மெதிரிகிரிய, மிரிஸ்வத்தையில் அமைந்திருந்த வன திணைக்களத்திற்கு உரித்தான காணிக்கு மாற்றப்பட்டது.

காணியை விடுவித்துக்கொள்ளல் மற்றும் சுற்றாடல் ஒப்புதலை பெற்றுக்கொள்ளல் ஆகிய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. கருத்திட்ட தாமதத்தின் காரணமாக ஏற்பட்டிருந்த கால தாமதத்தை சமாளிக்கும் விதமாக கருத்திட்ட சாத்தியக்கூறு, கள விசாரணைகள் மற்றும் வடிவமைப்பு ஆகிய செயற்பாடுகள் சமகாலத்தில் முன்னெடுக்கப்பட்டன.

வடிவமைப்புப் பணியானது நிறைவு செய்யப்பட்டதுடன் மேற்படி அமைவிடத்திற்குறிய இறுதியான விபரமான வடிவமைபை கருத்தட்டம் 2016 டிசம்பர் மாதத்தில் பெற்றுக்கொண்டது.

இருப்பினும் உடகண்ணாவ அமைவிடம் தொடர்பாக மேற்கொள்ள்பபட்ட பணிகளுக்கு மேலதிகமான பட்டியலொன்றை ஆலோசகர்கள் சமர்ப்பித்தனர்.. இது மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளரால் நியமிக்கப்பட்ட குழுவின் மீளாய்வின் கீழ் இன்னும் காணப்படுகின்றது.

**13.4.2.3. கீரிமலை யாழ்ப்பாணம் (கோணடிகாவத்தைக்கு பதிலாக மாற்று அமைவிடம்)**

யாழ்பாணத்தில் அத்தகைய வசதியொன்றை தாபிக்க வேண்டிய அவசியத்தை வலியுறுதிய கோரிக்கையொன்று யாழ்பாண அலுவலகத்தினால் முன்வைக்கப்பட்டது அந்த அமைவிடமானது வலிகாமம் வடக்கு பிரதேச சபை பிரதேசத்தில் அமைந்துள்ள கீரிமலையில் அமைந்துள்ளது. ஆரம்ப சாத்தியக்கூறு ஆய்வானது ஆலோசகர்கள்:Kunhwa, சம்பந்தப்பட்ட வலிகாமம் வடக்கு பிரதேச சபை அலுவலர்கள், ம.சு.அ யாழ்பான அலுவலக உத்தியோகத்தர்கள் ஆகியோரால் மேற்கொள்ளப்பட்டது். மேலும், யாழ்ப்பானம் பிரதேச செயலாளருடன் கூட்டமொன்று ஒழுங்கமைக்கப்பட்டு காணியை விடுவிப்பதற்கான ஆரம்ப கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. உத்தேச காணியானது விடப்பட்ட சுண்ணாம்புக்கல் குழியொன்றில் அமைந்திருந்ததுடன் அதன் அடிப்படை அம்சங்கள் சுகாதாரமான கழிவு அகற்றல் அமைவிடமொன்றை தாபிப்பதற்கு உகந்ததாக இருந்தது. ஆகையால், அந்த அமைவிடத்தை விடுவிப்பது தொடர்பில் சாத்தியக்கூறு ஆய்வும் அளவையும் ஆரம்பிக்கப்பட்டன. அமைவிடத்துடன் தொடர்புடைய அனைத்து விசாரரணைகளும் நிறைவடைந்ததுடன் யாழ்ப்பாண கள-நிலைமை மோசமாக காணப்பட்டதால் கருத்திட்ட அமைபிடம் சாரந்த பிரதேசத்தில் நீர்த்தேக்கத்தின் நீர்மநிலையியல் தன்மை பற்றிய விசேடமான ஆய்வொன்றும் மேற்கொள்ளப்பட்டது.

ஆய்வின் வியைவுகளின் அடிப்படையில் கருத்தரு வடிவமைப்பு நிறைவு செய்யப்பட்டு 2016 யூன் 10 ஆம் திகதி பங்குதார முகவராண்மைகளுடன் கலந்துரையாடப்பட்டது. 2016 ஆகஸ்ட் 11 ஆம் திகதி .விபரமான வரைவு வடிவமைப்பு பற்றிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்த கருத்திட்டத்தின் அரசியல் அரங்கு பற்றிய மெய்ப்பித்தல் தொடர்பில் கௌரவ முதலமைச்சர் மற்றும் சம்பந்தப்பட்ட அரச உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் விசேட கூட்டமொன்று 2016 செப்டெம்பர் 06ஆம் திகதி இடம்பெற்றது.

. .





உரு **13-6:** பங்குதாரர் கூட்டம் கீரிமலை யாழ்ப்பாணம்

### 13.4.3 கருத்திட்ட பணியாட்கள்

பொறியியலாளர் எம்.பீ. ஹேமதாச கருத்திட்டத்தின் பணிப்பாளராக 2016 டிசம்பர் 14 ஆம் திகதி பதவியேற்றுள்ளார். அதுவரையில் பிரதி கருத்திட்ட பணிப்பாளர் திருமதி சரோஜினி ஜயசேகர -கருத்திட்ட பணிப்பாளரின் கடமைகளையும் 2015 டிசம்பர் 01 ஆம் திகதயில் இருந்து கவனித்து வந்துள்ளார்.

அட்டவணை **13.20:** கருத்திட்ட பணியாட்கள் **(EDCF)**

| | பதவி | பெயர் | இருந்து | வரையில் |
|---|---|---|---|---|
| 01 | கருத்தீட்ட பணிப்பாளர் | பதில் கடமை | 2016.01.01 | 13.12.2016 |
| | | பொறியியலாளர் எம்.பி ஹேமதாச | 14.12.2016 | இதுவரையில், |
| 02 | பிரதி கருத்தீட்ட பணிப்பாளர | திருமதி சரோஜினி ஜயசேகர | 01.06.2012- | இதுவரையில் |
| 03 | முகாமையாளர் திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு(பகுதி நேரம்) | திரு. ஜே.எம்.யூ இன்திரரத்ன | 01.09.2012 | இதுவரையில் |
| 04 | முகாமையாளர கொள்வனவு மற்றும் ஒருங்கிணைவு | திரு. காமினி கமகே | | இதுவரையில் |
| 05 | கருத்திட்ட கணக்காளர் | திரு பிரதீப் வக்வெல(பதில் கடமை) | 15.02.2015 | 18.10.2016 |
| | | திரு லங்கா தர்மவிக்ரம | 19.10.2016 | இதுவரையில் |
| 06 | கருத்திட்ட உத்தியோகத்தர் | திரு. கே.டபிய்யூ. குணவர்தன | 11.07.2014 | இதுவரையில் |
| 07 | கருத்திட்ட பொறியியலாளர் | வெற்றிடமாகவுள்ளது | | |
| 07 | நிர்வாக உத்தியோகத்தர் | திருமதி .ஜீ.எம். லியனகே | 17.03.2014- | 20.05.2016 |
| 08 | கொள்வனவு உத்தியோகத்தர் | திரு கே.டி.சீ.பீ.ஜயவிக்ரம | 25.07.2016 | இதுவரையில் |
| 09 | கண்காளர் எழுதுவினைஞர் | திருமதி கே.எல. ஏ. பிமானி வத்சலா | 03.12.2012 | இதுவரையில் |
| 10 | பொது எழுதுவினைஞர் | திரு எச்.எச்.டீ. சன்தருவன் | 01.08.2013 | இதுவரையில் |
| 11 | அலுவலக உதவியாளர் | திரு வை.ஜீ.என். குணரத்ன | 14.11.2013 | இதுவரையில் |

அட்டவணை 13.21: வநிதிசார் முன்னேற்ற அறிக்கைகள் சுருக்கம்S - 2016

| வருமானம் | ஒதுக்கீடு | பெறுகை | செலவினம் |
|---|---|---|---|
| | | | |
| வெயிநாட்டு பங்களிபபு | 160,000,000 | 59,834,000.00 | 59,834,000.00 |
| உள்ளூர் பங்களிப்பு | 26,027,134 | 26,027,134.00 | 26,027,134.00 |
| ஏனைய வருமானம் | | 127,004.74 | 127,004.74 |
| மொத்தம் | 186,027,134 | 85,988,138.74 | 85,988,138.74 |
| * குன்உஹா ஆலோசனை கம்பனிக்கு இந்த கொடுப்பனவை பரிந்துரைத்து சான்றளித்தல் | | | 60,000,000.00 |
| | | | 145,988,138.74 |
| செலவினம் | | | |
| | | | |
| வரிகள்,அறவீடுகள் தீரிவைகள், | | | 11,067,881.29 |
| அமைவிட விடுவிப்பு, உட்கட்டமைப்பு | | | 2,466,773.14 |
| | | | 13,534,654.43 |
| போக்குவரத்து(எரிபொருள் மற்றும் வாடகை) | | 1,166,866.29 | |
| அலுவலக வழங்கள் | | 42,825.18 | |
| கருத்திட்ட பணியாள் சம்பளம் | | 7,176,262.01 | |
| தோடர்பாடல மற்றும் தபால்வெலவு | | 113,672.53 | |
| புயிற்சி மற்றும் திறன் கட்டியெழுப்பல் | | 179,376.00 | |
| வாடகை/குத்தகைவிடல் | | 3,145,983.32 | |

| வருமானம் | ஒதுக்கீடு | பெறுகை | செலவினம் |
|---|---|---|---|
| கருத்திட்ட ஒருங்கிணைப்பு | | 193,115.96 | |
| ஏதிர்பாரர நிகழ்வுகள் /நானாவித | | 601,383.02 | 12,619,484.31 |
| | | | |
| மொத்த செலவினம் | | | 26,154,138.74 |
| | | | |

### 13.5. இலங்கையில் பிரதான நீர்நிலைகளின் நீர்த்தரத்தை கண்காணித்தல் -ஜெய்கா கருத்திட்டம் மற்றும் ம.சு.அ ஆய்வுகூடங்கள் மற்றும் அமுலாக்கல் உத்தியோகத்தர்களின் திறனை மேம்படுத்தல் கருத்திட்டம்

மேற்படி கருத்திட்டமானது தொழில்நுட்ப ஒத்துழைப்பு கருத்திட்டத்தின் கீழ் பரிசீலனைக்கு எடுத்தக்கொள்ளப்பட்டு உள்ளதுடன் ஜெய்கா நிபுணத்துவ குழுவினர் அவர்களின் பணிக்கால அட்டவணைக்கு இணங்க கருத்திட்ட நடவடிக்கைகளை தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த கருத்திட்டத்தின் உள்ளூர் சகாவாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள் செயற்படுகின்றனர். இந்த கருத்திட்டத்திற்கு இதுவரையில் ஜெய்க்கா குழுவின் செயலாளரைத் தவிர வேறு கருத்திட்ட பணியாட்கள் எவரும் ஆட்சேர்ப்புச் செய்யப்படவில்லை. ஜெய்கா இந்த தொழில்நுட்ப மானிய கருத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இரண்டு ஆலோசனை நிறுவனங்களான வரையறுக்கப்பட்ட சீ.டி..ஐ பொறியியல் சர்வதேச கம்பனி மற்றும் வரையறுக்கப்பட்ட ஒரியன்டல் ஆலோசகர்கள் குளோபல் கம்பனி ஆகியவற்றறை வாடகைக்கு அமரத்தியுள்ளது. இந்த கருத்திட்டத்தின் கீழ் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் செயலாக்கத் திறன் மற்றும் களனி ஆற்றுப்படுகையில் அதனது பிராந்திய கிளை அலுவலகங்களின் நீர் தரமுகாமைத்தவம் பற்றிய திறன் ஆகியவை மேம்படுத்தப்படுமென எதிர்பார்கப்படுகிறது. இந்த கருத்திட்டமானது 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வருடங்களுக்கு தொடர்ந்து செயற்படவுள்ளது. இந்த தொழில்நுட்ப மானிய கருத்திட்டத்தின் கீழ் நான்கு பாரிய வெளியீடுகள் எதிர்பார்கப்படுகின்றன.

இலங்கை சுற்றுச்சூழல் நீர்த்தரம் பற்றிய நியமங்களின் அடிப்படையில் நீர் நிலைகளை வகைப்படுத்தும் செயன்முறை அமைப்பை அறிமுகம் செய்தல்

ஆய்வுகூட பணியாளர் மேற்கொள்ளும் நீர்த்தர பகுப்பாய்வின் திறன் மேம்படுத்தப் படுகின்றது.

பரிசோதனை உட்பட, இலக்கு எதிர்நிலை தாபனங்களின் நீர்த்தர கண்காணிப்பு மீதான அமுலாக்கல் திறன் மேம்படுத்தப்படுகின்றது, மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல் உருவாக்கப்படுகின்றது, மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய அவசியம் ஊக்குவிக்கப்படுகின்றது.

பரிசோதனை உட்பட, நீர்த்தர கண்காணிப்புத் தரவு முறைமையின் முகாமைத்துவ தகவல்கள், சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பற்றிய தரவு, மற்றும் மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல் உட்பட நாட்டின் மேற்பரப்பு நீர் நிலைகள் அபிவிருத்தி அடைகின்றதுடன் அவை பயனுறுதியாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

கருத்திட்ட நடவடிக்கைகளின் பெரும்பாலானவை அவை ஒவ்வொன்றினதும் கருத்திட்ட வெளியீடுகளுக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள பணியாளர் குழுக்களை வரவழைப்பதன் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன வகைப்படுத்தல், மாதிரியெடுத்தல் மற்றும் பரிசோதனை மற்றும் ஆய்வுகூடதிற்கான சர்வதேச தரநிர்ணய தாபனத்தின் (ISO) அங்கீகாரத்தை பெறல் மற்றும் மாசுபடுத்தும் மூலங்களின் பட்டியல் (PSI) தரவுத் தளத்தை அபிவிருத்திசெய்தல் ஆகியவை பற்றிய வரைவு வழிகாட்டிகளை வடிவமைத்தல் செயற்பாட்டில் இந்த குழுவி பணியாற்றும் உறுப்பினர்கள் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர். கடந்த காலத்தில் அடைந்த முக்கிய சாதனைகள் கீழே சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன.

### 13.5.1 2016 ஆம் ஆண்டில் ஏற்பட்ட கருத்திட்ட முன்னேற்றத்தின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

ஓட்டுமொத்தமாக கருத்திட்டத்தின் 1வது குழு கருத்திட்டத்தில் திட்டமிடப்பட்டுள்ள பலன்களை அடையும் வகையில் துரிதமான துல்லிய நடவடிக்கைகளை பின்பற்றி கருத்திட்டத்தை சரியான திசையில் வழிநடத்தி கண்காணித்து அதனை முறையாகவும் பயனுறுதியாகவும் நிறைவேற்றியுள்ளது. கடந்த பன்னிரண்டு மாதங்களில் நீர் தரக் கண்காணிப்பு மற்றும் பரிசோதனை பற்றிய முன்னோடி பரிசோதனைகளை நிறைவேற்றும் வகையில் அதிக நேரத்தை களப்பணியில் செலவிட்டனர். புணியாற்றும் குழுவிற்கான கூட்டங்களுக்கு புறம்பாக ஆய்வுகூட முகாமைத்துவம் மற்றும் உள்ளக ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான நியம இயக்கச் செயன்முறைகளை தயாரிப்பதற்கான கருமப்பீடம் ஒன்று தாபிக்கப்பட்டது. கடந்த மாதங்களில் அடைந்த முக்கிய சாதனைகளும் முகம்கொடுத்த பிரதான பிரச்சினைகளும் கீழே சுருக்கமாக தரப்பட்டுள்ளன.

2016 ஆகஸ்ட் மாதத்தில் இடம்பெற்ற முன்னைய மதிப்பீடு மற்றும் கண்காணிப்பு வேளையில் நடவடிக்கைகளை நிறைவேற்றுவதில் பாரிய தாமதங்கள் ஏற்பட்டாலும், கருத்திட்டமானது பெரும்பாலும் அசல் செயற்திட்டத்தின் நேர அட்டவணையுடன் இணங்கிச்செல்கின்றது என்ற விடயம் பின்வரும் செயற்பாடுகள் மூலம் தெளிவானது. (1) சர்வதேச தர நிர்ணய தாபனத்தின் அங்கீகாரத்ததை பெறும் இரண்டாம் நடவடிக்கையில் ஆய்வுகூடத்திற்கு உதவியளித்தல் தொடர்பில் விசேட நிபுணரை வரவழைத்தல் (2) நடவடிக்கைகள் 3-1 நிறைவேற்றும் வகையில் பின்பற்றி வந்த முழுமையான பங்கேற்பு அணுகுமுறையில் இருந்து விலகி சமநிலை அணுகுமுறைக்கு மாறல் மற்றும் (3) முன்னைய எடுகோள்களில் ஏற்படும் மாற்றங்களில் இருந்து எழும் தொழில்நுட்ப பிரச்சினைகளுக்கு பரிகாரம் காண்பதற்கு தகவல் முகாமைத்தவ முறைமை நிபுணத்துவரை வரவழைத்தல்.

ஆய்வுகூட உபகரணங்கள் இருபத்து மூன்றில்(23) இருபத்து இரண்டு(22) மற்றும் சோதனை பொருட்கள் ஆகியவற்றின் கொள்வனவு நிறைவடைந்துள்ளது. இருபத்து மூன்றாவது கொள்வனவு பொருளானது சான்றளிக்கப்பட்ட குறிப்புபு பொருட்கள் பதின்மூன்றைக் கொண்ட(13) ஒரு தொகுதியாகும் பதின் மூன்று(13) பதார்த்தங்களில் சீ.ஆர்.எம் ஒன்று மற்றும் ஊட்டச்சத்து ஆகியவற்றின் விநியோகமானது தாமதமடைந்துள்ளது. வழங்குநர் ஒருவர் வாடிக்கயைாளர் முகாமைத்துவம் தொடர்பில் தனது ஆய்வுகூடத்தை பதிவுசெய்யும் நடவடிக்கையை நிறைவு செய்யாமை .இதற்கு பிரதான காரணமாய் அமைந்தது.

ஜெய்கா குழு சம்பந்தப்பட்ட வழங்குநரிடம் தொடர்பை ஏற்படுத்தி நேரடியாக விஜயத்தை மேற்கொண்டு கொள்வனவு செயன்முறையை இந்த வருட முதல் காலாண்டுப் பகுதியில் துரிதப்படுத்தும். யப்பானில் இரண்டாவது எதிர்நிலை பயிற்சியானது 2016 யூன் மாதத்தில் நிறைவடைந்து. 2016 மே 29- யூன் 11 வரையில் இடம்பெற்ற பயிற்சியில் பன்னிரண்டு(12) உத்தியோகத்தர்கள் பங்கேற்று யப்பானில் இடம்பெறும்

ஆய்வுகூட பகுப்பாய்வு, ஆய்வுகூட கழிவு நீர் முகாமைத்துவம், தொழிற்சாலைகள் பரிசோதனை மற்றும் நீர் தரம் மேம்படுத்தல் ஆகியவற்றில் அறிவை பெற்றுக் கொண்டனர். இந்த வருடத்தின் முதல் அறையாண்டுப் பகுதியில் குறிப்பாக

ஏழாவது(7) மற்றும் பத்தாவது(10) குழுக் கூட்டங்களைின் அனுகூலத்தை பயன்படுத்தி இடம்பெற்ற இரண்டு நிபுணத்தவ கூட்டங்களில் உத்தேச நீர்த்தர நியமற்கள் கிருமி நாசினிகள், இரசாயன ஓட்சிசன் தேவை, நிக்கல், துத்தநாகம் மற்றும் அலுமினியம் ஆகியவற்றிகன் மீதான விசேட கவனத்துடன் 'மீளாய்வு மற்றும் மாற்றததிற்கும் உட்படுத்தப்பட்டன. மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் மற்றும் தலைவர் ஆகியோரின் அங்கீகாரத்ததை பெற்றுக்கொள்வதற்கு முதல் நடவடிக்கையாக சபைக் கூட்டமொன்று 2016 யூலை 21ஆம் திகதி இடம்பெற்றது. அதனைத. தொடர்ந்து இது ஒழுங்கு விதிகளை நடைமுறைபடுத்தும் செயற்பாட்டை ஊக்குவிக்கும் வகையில் நிதி அமைச்சின் கீழான சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு கொண்டுவரப்பட்டது. இப்போது இவ்விடயம் அங்கிகாரத்தை பெறுவதற்காக நிலுவையில் உள்ளது. அதே வேளையில் ம.சு.அ ஆய்வுகூடமானது களனி ஆற்றின் நீர்த்தர கண்காணிப்பை வருடாந்த கண்காணிப்பு திட்டத்தின் பிரகாரம் நிறைவு செய்துள்ளது. உத்தேச ஆற்றின் வகைபடுத்தல் செயற்பாடு மேம்படுத்தப்பட்ட நீர்த்தர முகாமைத்துவம் பற்றிய ஏற்புடைமை மற்றும் சாத்தியக்கூறு ஆகியவற்றிகன் அடிப்படையில் மீயாள்வு செய்யப்படும்.

ஆய்வுகூட அங்கீகாரம் தொடர்பில் தரம் பற்றிய கைநூல்கள், செயன்முறை கைநூல்கள் மற்றும் நியம இயக்க நடைமுறைகள் போன்ற சம்பந்நதகப்பட்ட ஆவணங்கள் தயாரிப்பு இறுதி கட்டத்தில் உள்ளன. ஆய்வுகூடமானது ISO/ IEC 17025 அங்கீகாரத்திற்காக 2017 ஆம் ஆண்டு சனவரியில் விண்ணப்பிக்கும் செயற்பாட்டடை முன்னெடுக்கும். இந்த ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து பணிப்பாளர் மற்றும் இரசாயணவியலாளர் ஒருவர் தற்காலிகமாக விடுவிக்கப்பபட்டுள்ளமை பிரதான சவாலாக இருந்தது.. இருப்பினும், அவர்கள் அங்கீகார செயற்பாட்டை முன்னெடுப்பதற்காக 2017ஆம் ஆண்டின் சனவரி மாதத்தில் கடமைக்கு மீண்டும் திரும்பியுள்ளனர். அங்கீகார செயற்பாட்டிற்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை தயாரிக்கும் முக்கிய வகிபாகத்தை வகித்த ஆய்வுகூட சுற்றாடல் உத்தியோகத்தர் ஒருவர் வருடாந்த இடமாற்றத்தின் ஒரு பகுதியாக இரத்தினபுரி மாகான அலவலகத்தற்கு இரசாயவியலாளராக 2017 சனவரி மாத்தில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார். ஆய்வுகூடமானது இந்த உத்தியோகத்தரை அங்கீகார விண்ணப்பம் தொடர்பான செயற்பாட்டை முன்னெடுக்கும் வரையில் ஆயடவுகூடத்தில் இரண்டு வாரங்களுக்கு தற்காலிகமாக இணைபபதற்கு ம.சு.அ மனித வள திணைக்களத்திடம் ஒருங்கிணைப்பு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

செயற்பாடு 3-1 றை பொருத்தவரையில், கருத்திட்ட உருப்பினர்கள் நீர்த் தர கண்காணிப்பு பற்றிய வரைவ வழிகாட்டிகளை விருத்தி செய்யும் செயற்பாட்டை துரிதமாக்கி கடந்த மாதங்களில் அட்டவணையில் ஏற்பட்ட கால தாமதத்திற்கு பரிகாரம் கண்டுள்ளதுடன் களனி கங்கை படுகையில் முன்னோடி பரிசோதனை செயற்பாட்டையம் முன்னெடுத்துள்ளது. இணக்கப்பாட்டு பரிசோதனை பற்றிய அனுபவம் மற்றம் சர்வதேச தரநிர்ணய தாபனத்தின் ஒழுங்கு மரபு ஆகியவற்றில் பரிச்சையமுள்ள மூன்று மேலதிக் உத்தியோகத்தர்கள் வழிகாட்டிகளை நிறைவு செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இச்செயற்பாடானது கப்பல் நிலைமைகள், கொள்கலன் மற்றும் பேணிகள் ஆகியன ஐ.எஸ்.ஓ அங்கீகார தேவைகளுடன் இணக்கப்பாட்டை கொண்டுள்ளதா என்பதை உறுதிசெய்து நீர் மாதிரிகளின் பாதுகாப்பை பேணுவதற்கு பங்களிப்பு செய்கின்றது.

புதிய மாசு மூலங்கள பட்டியல் தரவுத் தளம் (PSI) தொடர்பில் புதிய சு.பா.உ முகாமைத்தவ முறைமையொன்ற 2016 யூலை மாத இறுதியில் இருந்து செயற்பாட்டிற்கு வந்துள்ளது. இந்த புதிய முறைமையின் செயலாற்றுகையை மேம்படுத்தவதற்காக இன்னும் திரத்தங்கள் அவசியமாக உள்ளன. இந்த முறைமையை செயற்படுத்தும் முகமாக எழு விடயங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றை செயலாற்றுவதற்கான நேரத்தை ஒட்டுமொத்தமாக

அட்டவணைபடுத்தும் நடவடிக்கை இடம்பெற்றது. அவை முறையே (1) தற்போதைய சுற்றாடல் பாதுகாப்பு உரிமங்களை(சு.பா.உ) நடைமுறைபடுத்தல். (2) சு.பா.உ /மா.மூ.அ சேர்வர் முறைமை கொள்வனவு. (3) இந்த முறைமையை ம.சு.அ யில் பரீட்சார்த்தமாக பரிசோதனை செய்தல் (4) சு.பா.உ /மா.மூ.அ முறைமையை வெளியிடல். (5)மாகாண அலுவலகங்களின் பிரதிநிதிகளை பயிற்றுவிப்பாளர் பாடநெறியில் பயிற்றுவித்தல் , (6) ஒவ்வொரு மாகாண அலுவலகத்தில் இருந்தும் வரவழைக்கப்பட்ட பரிசோதகர்களை பயிற்றுவித்தல் மற்றும் (7) இறுதியாக இந்த ஏழு படிமுறைகளின் ஊடாக இந்த முறைமையின் துல்லியத் தன்மையை சரிபார்த்தல். கொள்வனவு செயற்பாட்டின் முன்னேற்றத்தை இணைந்து கண்காணித்து ஏதும் இடர்பாடுகள் இருப்பின் அவற்றை அகற்றுவதற்கு அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகின்றது. சு.பா.உ /மா.மூ.அ முறைமையை வெளியிடும் செயற்பாடானது நாட்டின் புது வருட காத்துடன் இணைந்தவாறு முன்னெடுக்கப்படும். புதிய முறைமையின் சுமூகமான பரிமாற்றம் இடம்பெறுவதை உறுதிசெய்யும் வகையில் சம்பந்தப்பட்ட நிபுணத்துவரை மிகவும் கவனமாக நகர்த்தும் நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

2016 ஆம் ஆண்டின் இறுதியில் நடவடிக்கை 3-1 ற்கு பொறுப்பான இரண்டு நிபுணர்கள ஏற்புடைய வழிகாட்டிகளை இறுதிசெய்யும் செய்பாட்டிற்கு முன்னுரிமை அளித்து கவனம் செலுத்தியுள்ளனர். இருப்பினும், அவர்களின் இந்த செயற்பாடானது சு.பா.உ திட்டம் மற்றும் கழிவு WQ தரங்கள் மேம்பாடு தொடர்பில் முன்னெடுக்கும் நடவடிக்கை 3-3 இல் மனித-வள பற்றாக்குறைக்கு வழிசமைத்தது. 2016 ஆம் ஆண்டின் இறுதியில், மத்திய சுற்றாடல் அதிகார சபை மற்றும் கருத்திட்ட குழு ஆகியவற்றுக்கு இடையில் அணுகுமுறைகளில் வெளிப்படையான இடைவெளிகள் காணக்கூடியதாக இருந்தன. அணுகுமுறை நடவடிக்கையில் பொது இணக்கப்பாட்டை கட்டியெழுப்பும் செயற்பாட்டில் துரிதமாக செயற்பட்டு கருத்திட்டத்தின் பயனுறுதியான நடைமுறையாக்கத்தை உறுதிசெய்வதற்கு குழுத் பணிக் குழு 3-3 அவசியமான அனுசரணையை தலைவர் மற்றும் பிரதி குழுத் தலைவர் ஆகியோரால் 2017 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் வழங்கப்படும். தகவல் முகாமைத்தவ முறைமை பற்றிய நடவடிக்கை—4 மாசு மூலம் பட்டியல் பற்றிய நடவடிக்கை 3-2 ற்கு தொடராக முன்னெடுக்கப்பட்டுள்ளது. மா.மூ.அ தரவுத் தளத்தின் விருத்தியில் ஏற்பட்ட பாரிய முன்னேற்றதின் காரணமாக ஜெய்கா குழுவின் தகவல் முகாமைத்தவ நிபுணர் தரவுத் தளத்தின் பயன்பாட்டு நடவடிக்கைளுக்கு வசதிசெய்வதற்கான முன்னெடுப்பை எடுத்துள்ளார். மத்திய சுற்றாடல் அதிகார சபையின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் முகாமையாளரின் பதவி துறத்தலானது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் வளப்பங்கீடு செயற்பாடு ஆகியவற்றுக்கு இடையிலான ஒருங்கிணைப்பில் தாக்கத்தை செலுத்தியுள்ளது. தலைமைத்துவம் இன்மையால் ஏழும்பிய இந்த தாக்கமானது ஜெய்கா குழுவின் தகவல் தொழில்நட்ப நிபுணத்துவரின் மேலதிக நேரப் பணியால் தணிக்கவும் இலக்கு காலக்கெடுவை சமாளிக்கவும் வழிசமைத்தது. மனித வள பிரிவானது 2017 ஆம் ஆண்டில் புதிய தகவல் தொழில்நுட்ப தலைவர் ஒருவரை ஆட்சேர்ப்பு செய்ய திட்டமிட்டுள்ளது. அவர் /அவள் தனது பதவியை பெரும்பாலும் 2017 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தில் ஏற்பார். ம.சு.அ யின் மத்திய அலுவலகத்தின் தகவல் முறைமை பயன்பாடு நிறைவு அடைந்திருக்காது இருப்பினும் நாட்டில் உள்ள மாகாண அலுவலகங்களின் முழுமையான பங்கேற்பானது கருத்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கான ஒரு முன் நிபந்தனையாக இருக்கும். இதுவரையில், தகவல் தொழில்நுட்ப முகாமைத்தவத்தின் தலைமைத்துவம் மிகவும் முக்கியமாக இருந்துள்ளது.. முகாமையாளரின் ஆட்சேர்ப்பு மற்றம் அதனைத் தொடர்ந்து அவரை கருத்திட்டத்துடன் ஒருங்கிணைத்தல் ஆகிய செயற்பாடுகள் இணைந்து நெருக்கமாக கண்காணிக்கப்படும்..

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது மா.மூ.அ தாவுத்தளத்தின் நோக்கெல்லையை. வளி தரம் முகாமைத்துவம் தொடர்பில் நிலையான உமிழ்வு மூலங்களை உள்ளடக்கி விரிவுபடுத்தம் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதுடன் அதனூடாக கருத்திட்டத்தின் செயற்பாடுகளை ம.சு.அ யின் பிரதான நாளாந்த இயக்க நடவடிக்கைகளில் ஒருங்கிணைப்பதற்கு உள்ளது. தரவுகளை பதியும்

செயற்பாட்டில் மாகாண அலுவல்களின் பங்கேற்பையும் ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சாவாலொன்றை பங்கேற்பாளர்கள் இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துரையாடினரஇ அவர்கள் அதனைத் தொடர்நது, வளியின் தரத் தரவுத் தளமொன்றை விருத்திசெய்யும் நோக்கத்தை முன்னெடுக்கம் முன்னெமுப்பு தொடர்பில் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சம்பந்தப்பட்ட பிரிவுகளின் மற்றும் அலகுகளின் பணிப்பாளர்கள் மத்தியல் இணக்கப்பாடொன்றை கொண்டுவரும் சிந்தனையொன்றை இனங்கண்டனர்.

அந்த சிங்கனையின் பிரகாரம் மாகாண அலுவலகங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் நாடளாவிய நடவடிக்கைகளில் துறைவாரியான கொள்கைகளை செயற்படுத்தம் பொறிமுறையொன்றாக விசேடமாக நீர் தரம் முகாமைத்தவ கருத்திட்டங்களை வடிவமைத்து ஒழுங்கமைத்து நிறைவேற்றும் செயற்பாட்டை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## 13.6 கிரீன் பார்க் (பசுமை பூங்கா) கழிவு முகாமைத்துவம் -ம.சு.அ

கிரீன் பார்க் (பசுமை பூங்கா) கழிவு முகாமைத்துவ நிலையமானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையால் முகாமைத்தவம் செய்யப்படும் விசேட கருத்திட்டங்களில் ஒன்றாகும் இந்த நிலையமானது சுகாதார கழிவு அகற்றல் அமைவிடம், கூட்டுப் பசளை அமைவிடம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இந்த கழிவு அகற்றல் அமைவிடம் மற்றும் பயிற்சி நிலையம் ஆகியன கொரிய ஒத்துழைப்பு முகவராண்மையின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஆதரவு ஆகியவற்றுடன் நிர்மாணிக்கப்பட்டதாகும். இந்த சுகாதார கழிவு அகற்றல் அமைவிடத்தின் திறனானது நாளொன்றுக்கு 90 தொன்கள் ஆகும். ஆரம்பத்தில் இந்த கழிவு அகற்றல் அமைவிடமானது தொம்பே பிரதேச சபைக்காக நாளொன்றுக்கு 10 தொன் கழிவை முகாமைத்துவம் செய்யுக்கூடிய திறனைக் கொண்ட இறுதியான கழிவு அகற்றல் அமைவிடமாக செயல்படும் வகையில் திட்டமிடப்பட்டள்ளது. ஆயினும், இந்த வசதியானது கம்பஹ மாவட்டதின் ஏனைய உள்ளூராட்சி அதிகார சபைகளில் இருந்து வரும் கழிவுகளையும் ஏற்றுக்கொள்ளக்கூடிய போதியளவு ஆற்றலைக் கொண்டுள்ளது. இந்த கழிவு அகற்றல் வசதியானது கழிவு எடையிடுதல், மற்றும் பதிவிடல் வசதி, கழிவு அகறறல் வசதி, கழிவு சுத்திகரிக்கும் வசதி, வாயு சுத்திகரிக்கும் வசதி, நீர் மாசடைவதை பாதுகாக்கும் குழாய்கள், நிலத்தடி நீர் கண்காணிப்பு கினறுகள், மண் அடுக்கு மூடி, கழிவு அகற்றல் உபகரங்கள்( டோசர், எக்ஸகவேடர், டிப்பர் போன்றவை) மற்றும் சீ.சீ.டி.வி மீயாள்வு முறைமை ஆகியவற்றை கொண்டுள்ளது. இருப்பினும், இந்த வசதியின் இயக்கச் செயற் பாடுகள் 2015 ஆம் ஆண்டில் இருந்தே ஆரம்பமானது. 2015 ஆம் ஆண்டில் தொம்பே பிரதேச சபையால் சேகரிக்கப்பட்ட கிட்டத்தட்ட 1000 தொன் கழிவானது இந்த அமைவிடத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் 1500 தொன்னுக்கு மேற்பட்ட கழிவுகள் பசுமை பூங்கா தொம்பே பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டது. தொம்பே பிதேச சபை பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள கம்பனிகளால் உற்பத்தியான அத்தகைய தீங்கு விளைவிக்காத கைத்தொழில் கழிவுகளும் பசுமை பூங்காவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.2016 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 550 தொன் கைத்தொழில் கழிவு கிரீன் பார்கினால்(பசுமை பூங்காவினால) ஏற்றுக்கொள்ளப்பட்டது அத்துடன் தொன்னுக்கு ரூபா 5000 வீதம் கைத்தொழில் கழிவுகளுக்கு பாரவண்டிக் கட்டணமாக அறவிடப்பட்டது. 2016 ஆம் ஆண்டில், கிரீன் பார்க்கின் (பசுமை பூங்காவின்) சேவையானது வெள்ள அனர்த்தம், சாலாவ இராணுவ முகாம் நிகழ்வு போன்ற விசே அனர்த்த நிலைமைகளுக்கும் வழங்கப்பட்டுள்ளது. 2016 ஆம் ஆண்டின் யூன்,யூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் கடுவெல மாநகர சபையால் அனுப்பப்பட்ட 1400 தொன்களுக்கு அதிகமான கழிவுகள் பசுமை பூங்காவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. அத்துடன் சாலவ அனர்தத்தின் பின்னர் 250 தொன் கழிவுகளும்

பசுமை பூங்காவால் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், அதே அமைவிடத்தில் மாநகர சபையின் உக்கக்கூடிய கழிவுப் பகுதியை கூட்டுப் பசளையாக்கும் அமைவிட வசதியும் சுகாதார கழிவு அகற்றல் அமைவிட வசதிக்கு மேலதிகமாக காணப்படுகின்றது. கூட்டுப்பசளை அமைவிட வசதியில், கழிவின் வகைபடுத்தப்பட்ட சேதனக் கழிவு பெறுமதியான மண் கன்டிசனராக மாற்றம் செய்யப்படுகின்றது. கூட்டுப்பசளை(செயற்கை பசளை) வசதியின் திறனானது நாளொன்றுக்கு ஐந்து தொன்களாகும். தோம்பே பிரதேச சபையால் அனுப்பப்படும் ஒட்டுமொத்த மக்கக்கூடிய கழிவும் செயற்கை பசளையாக மாற்றப்படுகின்றது. 2016 ஆம் ஆண்டில், கிட்டத்தட்ட 23 தொன் செயற்கை பசளை இங்கு உற்பத்தி செய்யப்பட்டதுடன் ரூபா 18,5000 வும் வருமானமாக ஈட்டப்பட்டது. விற்பனை விலையானது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 8 ஆகும் என்பதுடன் பசுமை பூங்காவில் உற்பத்தி செய்யப்படும் செயற்கை பசளைக்கு கமக்காரர்கள் மத்தியில் பெரும் கேள்வியொன்று காணப்படுகின்றது. பல்கலைக்கழக மாணவர்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் கழிவு முகாமைத்துவத்துவத்துடன் தொடர்புபட்டுள்ள கடமைகளில் ஈடுபட்டுள்ள மக்கள் போன்ற பல்வேறு தரப்பினர்களுக்கு கழிவு அகற்றல், செயற்கை பசளையாக்கம் மற்றும் மீள்சுழற்சி பற்றிய நடைமுறை அறிவை பெற்றுக்கொள்வதற்கு கிரீன் பார்க்கின் பயிற்சி மற்றும் கல்வி வசதியானது மிகவும் பயனுள்ளதாக அமைந்துள்ளது.2016 ஆம் ஆண்டில் களனிப் பல்கலைக்கழகம், ஸ்ரீ ஜயவர்தன பல்கலைக்கழகம், வயம பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் ஆகியவற்றை சேர்ந்த பல குழுக்களும் மற்றும் பாடசாலை மாணவர்களும் இவ்விடத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு கழிவு முகாமைத்தவம் பற்றிய அறிவை பெற்றுக்கொண்டனர்.

மேலும், புலத்கோபிடிய பிரதேச சபை, தெய்யோவிட பிரதேச சபை, குச்சவெளி பிரதேச சபை மற்றும் கின்னியா நகர சபை ஆகியவற்றை சேர்ந்த பணியாள்களும் செயற்கை பசளை உற்பத்தி மற்றும் கழிவு அகற்றல் தொடர்பில் கிரீன் பார்க் பணியாற்களால் நடாத்தப்பட்ட செய்முறை பயிற்சியில் பங்கேற்றனர். 2016 ஆம் ஆண்டில் களனிய பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் மற்றும் ருகுணு பல்கலைக்கழகத்தை சேர்ந்த மூன்று மாணவர்களும் கிரீன் பார்க நிலையத்தின் வசதிகளை பயன்படுத்தி அசர்களின் ஆய்வை முன்னெடுத்து அதனை நிறைவு செய்தனர்.

கம்பஹ மாவட்டத்தின் நீர் தரத்கை பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட வசதியானது கிரீன் பார்க் நிர்வாக கட்டிடத்தில் தாபிக்கப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டில் இந்த ஆய்வுக்கூடமானது கிரீன் பார்க் நிலையத்திற்கு மேலதிக வசதியாக செயற்பட்டது.



உரு 13-7: ருகுனு பல்கலைக்கழக மாணவர்களால் நடாத்தப்பட்ட ஆய்வு



உரு 13-8: சுகாதார கழிவு அகற்றல் அமைவிடம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது அதன் ஒழுங்கமைப்பு சேவைகள் மீதான செலவினங்களை ஈடுசெய்யும் வகையில் திறைசேரியால் வருடாந்தம் மானியமாக வழங்கப்படும் மீண்டெழும் (சம்பளங்கள்) மற்றும் மூலதன செலவினங்கள் ஆகியவற்றுடன் 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் 1981 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

2016.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1159 ஆகவும், சேவையில் உள்ள பணியாள்களின் தொகை 879 ஆகவும் இருந்தது

## 14.1 சபை உறுப்பினர்கள்

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் இச்சபையானது சுற்றாடல் அமைச்சரின் ஆலோசனையுடன் அதிமேதகு சனாதிபதியால் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களை உள்ளடக்குகின்றது.

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கூட்டங்கள் உயர் தீர்மானங்களை மேற்கொள்ளும் பொறிமுறையை உடையதாக அமைக்கப்பட்டுள்ளது. .இச்சபையானது அதிகாரசபையின் அலுவல்கள் மற்றும் செயலாற்றுகை பற்றிய இறுதிப் பொறுப்பை ஏற்கின்றதால், அவற்றின் செயற்பாடுகளை சபை உறுப்பினர்கள் மிகவும் நுண்ணாய்வுடன் கண்காணிக்கின்றனர்.

இச்சபையானது ஒவ்வொரு மாதமும் கூடுவதுடன் அதனைத் தொடர்ந்து மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் சுற்றாடல் முகாமைத்துவம் பற்றிய மிக முக்கியமான பிரச்சினைகளுக்கு வழிகாட்டல்கள் மற்றும்பணிப்புரைகளை வழங்கும் வகையில் 11 கூட்டங்களை

நடாத்தியதுடன் சிரேஷ்ட முகாமையாளர்கள் மத்தியில் வலுப்பிரிவினை மற்றும் சமநிலை கோட்பாட்டின் அடிப்படையில் பொறுப்புக்களை பகிர்ந்து கொண்டு பயனுறுதியான கட்டுப்பாட்டு முறைமையை தாபித்து ம.சு.அ யின் ஒட்டு மொத்த முகாமைத்துவத்திற்குமான பொறுப்பையும் ஏற்றுக்கொண்டது.

## 14.2. கணக்காய்வுக் குழு கூட்டங்கள்

கணக்காய்வுக் குழுவானது 1999 நவம்பர 19 ஆம் திகதிய PF/PE 03 ஆம் இலக்க அரசாங்க நிதிசார் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைய தாபிக்கப்பட்டது பொது திறைசேறியின் பிரதிநிதி குழுவுக்கு தலைமை வகிப்பார். இக்குழு காலாண்டுக்கு ஒரு முறையென்ற அடிப்படையில் கூடுகின்றது.. நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி. அனுசியாநாதன் தலைமையில் 2016 ஆம் ஆண்டிற்குறிய நிதியாண்டில் அதிகார சபை சார்பில் நான்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு உள்ளன.

ம.சு.அ தலைவர், பணிப்பாளர் நாயகம், பிரதி பணிப்பாளர் நாயகம் (ம.வ.அ, நிர்வாகம் மற்றும் நிதி) பணிப்பாளர் (நிதி) பணிப்பாளர் (இயக்கச் செயற்பாடுகள் மற்றும் திட்டமிடல்), கலந்துரையாடப்படும் விடயத்துடன் தொடர்புடைய பணிப்பாளர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள், உதவி கணக்காய்வாளர் நாயகம், கணக்காய்வு தலைமை அதிபதி திணைக்களத்தின் கணக்காய்வு மேற்பார்வையாளர்,மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் ஆகியோர் இந்த கூட்டங்களில் பங்குபற்றினர். இந்த குழுவின் கூட்டங்களை ஏற்பாடு செய்பவராகம.சு.அ உள்ளகக் கணக்காய்வாளர் செய்படுகின்றார். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அவதானிப்புகள் அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வகையில் அதிகார சபையின் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## 14.3. மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் கண்காணிப்பும் செயலாற்றுகை மதீப்பீடும்

வருடாந்த செயற்திட்டமானது வரவு செலவுத்

திட்டத்தின் பிரகாரம் கூட்டிணைத் திட்டத்தின அடிப்படையில் தயாரிக்கப்பட்ட.துடன், இலக்குகளின் நம்பகத்தன்மை மற்றும் இலக்குகள் ஆகியவற்றை உறுதிசெய்து அடையக்கூடிய உச்ச திறனையும் உறுதிசெய்யும் நோக்கில் வருடாந்த செயற்திட்டதையும் வரவு செலவுத் திட்டத்தையும் மதிப்பீட்டுக்கு உட்படுத்தி அதனைததொடர்ந்து அதனை நிறைவேற்றுவதற்கான அங்கீகாரத்தை பெறும் வகையில் சபைக்கு சமர்பபிக்கப்பட்டது. சபையின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டதன் பின்னர் உண்மையான செயலாற்றுயானது செயற்திட்டத்துடன் இணங்குகின்றதா என்பதை உறுதிசெய்வதற்கும் தேவைப்படும் பட்சத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கும் செயற்றிட்டத்தின் பிரிவுவாரியான முன்னேற்றங்கள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

.இவ்வாறே, சிரேஸ்ட முகாமையாளர்களுக்கு ஒப்படைக்கப்பற்ற பணிகளுக்குரிய பொறுப்பை அவர்கள் ஏற்பதற்கு வழிசமைக்கவும் வெளிப்படைத் தன்மையை உறுதிசெய்யவும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட சாதனங்களின் விபரங்கள் மற்றும் பதவியணித் தரங்கள் உட்பட்ட மனித வளங்கள் பற்றிய கூற்று, புதிய ஆட்சேர்ப்புக்கள் உட்பட்ட மாதாந்த காலாண்டு மற்றும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் ஆகியன ஒழுங்கான நேர இடைவெளிகளில் சபைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன.

ம.சு.அ. இன் ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகள் பற்றிய ஒழுங்கான முறைமை ஒன்றை ஏற்படுத்தும் முகமாக சுற்றாடல் அமைச்சின் கௌரவ அமைச்சர் தலைமையில், அமைச்சின் கீழ்வரும் ஏனைய முகவராண்மைகளின் பங்கேற்புடன் செயலாற்றுகை இடம்பெறுவதை உறுதி செய்வதுடன் முக்கிய விடயங்கள் தொடர்பான சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகளை கலந்துரையாடி, அதிகார சபையால் நடைமுறை படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகளை மீளாய்வு செய்யும் முகமாக தனித்தனியான முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஒழுங்கு செய்யப்பட்டன.

இலக்குகள் சார்பான உண்மையான செயலாற்றுகை, அவை விலகியிருப்பின் அதற்கான காரணங்களை இனங்காணல், மூலதன செலவினங்களின் முன்னேற்றம் மற்றும் கொள்முதல் தாமதங்கள் ஆகியவற்றை மீளாய்வு செய்யும் நோக்கிலும் நிர்வாகம் மற்றும் தாபனம் தொடர்பான அனைத்து விடயங்கள் பற்றிய பிரச்சினைளை கலந்தாலோசிக்கவும் ம.சு.அ முகாமைத்துவ குழுக் கூட்டம் மாதாந்தம் இடம்பெற்றது. இக்குழுக் கூட்டம், ம.சு.அ. தலைவரின் தலைமையில் சிரேஷ்ட முகாமைத்துவ அலுவலர்களுடன் இடம்பெற்றது. இக்குழுக் கூட்டமானது ம.சு.அ. தலைவரின் தலைமையில் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் பங்களிப்புடன் இடம்பெற்றது.

### 14.4 செயலாற்றுகை மதிப்பீடு

அனைத்து பணியாளர் செயலாற்றுகையையும் மதிப்பீடு செய்வதற்காக ம.சு.அ. பயன்படுத்தும் செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையானது ஒவ்வொரு பணியாளின் வருடாந்த சம்பள அதிகரிப்பை உரிய திகதியில் வழங்குவதற்கான அங்கீகாரத்தை வழங்கும் முக்கிய நோக்கத்தை கொண்டுள்ளது. ஒவ்வொரு பிரிவுகளுக்கும் பொறுப்பாக இருக்கும் பணிப்பாளர்கள் வருடாந்த சம்பள அதிகரிப்பை அங்கீகரிப்பதற்கு அவசியமான அறிவு, திறன்கள், மனப்பாங்கு, இலக்கு சாதனைகள், துல்லியம், மக்கள் தொடர்பாடல், நேர்மை, வருவு, எடுக்கப்பட்ட ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்கிய விபரமான அறிக்கை ஒன்றை தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

நிறுவனத்தின் மனிதவள அபிவிருத்தியுடனான நிறுவனத்தின் வினைத்திறன் மற்றும் பயனுறுதி

ஆகியவற்றை மேம்படுத்துவதே செயலாற்றுகை மதிப்பீட்டு முறைமையை பிரயோகிப்பதன் பிரதான நோக்கமாகும்.

## 14.5 கூட்டாண்மை திட்டம்

கூட்டாண்மை திட்டமானது அதிகாரசபையின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான மூலோபாயங்களை கூட்டிணைக்கின்றது. மேலும், இந்த கூட்டாண்மை திட்டமானது சபையின் எதிர்கால வாய்ப்புக்கள் தொடர்பில் பணிப்பாளர் சபை மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவம் கொண்டுள்ள அர்ப்பணிப்பையும் பிரதிபளிக்கின்றது.

மேலும்,,கூட்டாண்மை திட்டமொன்றானது, தூர நோக்கு, செயற்பணிக்கூற்று மற்றும் நோக்கங்கள், அதிகாரசபையில் தற்போது கிடைக்கக்கூடியதாக உள்ள வளங்கள், தாபனக்கட்டமைப்பு, தாபனத்தின் பலம் மற்றும் பலவீனங்கள், வெளி அச்சுறுத்தல் மற்றும் வாய்ப்புக்கள் (SWOT), முன்னைய மூன்று வருடங்களின் இயக்கச் சாதனைகள் பற்றிய மீளாய்வு, மீளாய்வுக்கு உட்பட்ட வருடத்தின் மூலோபாய திட்டங்கள் ஆகியவை போன்ற விடயங்களுடன் இடம்பெறுகின்றது.

வரவு செலவு திட்டமானது மீண்டெழும் மற்றும் மூலதன வருமானங்கள் மற்றும் செலவினங்கள் பற்றிய உண்மையான கணிப்பை, அவற்றின் செயற்பாடுகள் மீது செல்வாக்கை செலுத்தும் வெளியக மற்றும் உள்ளக காரணிகள் பற்றிய கரிசனைகளுடன் உள்ளடக்குகின்றது. கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கமானது வருடாந்த கணக்குகளை சமர்ப்பிக்க பயன்படுத்தும் வடிவமைப்புடன் ஒருங்கிணைகின்றன.

இதற்கிணங்க 2016 ஆண்டில், நிறுவனத்தின் கூட்டாண்மை திட்டமானது 2016—2020 ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன.

வரையிலான காலத்திற்கு தயாரிக்கப்பட்டு உள்ளதுடன. இந்த அறிக்கையின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயற்திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இந்த திட்டமானது ஏனைய திட்டங்களுக்கிடையில் சூழ்நிலை பகுப்பாய்வு, நடவடிக்கைகள் மற்றும் வருடாந்த செயற்றிட்டங்கள் தொடர்பான மூலோபாயங்கள், மனித மற்றும் நிதிசார் வளங்கள் ஆகியவற்றை கூட்டிணைக்கின்றது. இந்த கூட்டாண்மைதிட்டமானது இக்காலத்தில் நிறைவேற்றுவதற்கென திட்டமிடப்பட்டுள்ள பாரிய கருத்திட்ட விபரங்களையும் வழங்குகின்றது.

## 14.6 ஆண்டறிக்கை

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் ஆண்டறிக்கையானது அதன் செயற்பாடுகள் மற்றும் நிதிசார் நிலையேற்றுத் தன்மை தொடர்பில் பயனுள்ள தீர்மானங்களை மேற்கொள்ளும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. ஆண்டறிக்கையின் வரைவு மற்றும் கணக்குகள் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படுகின்றன. கணக்குகள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையானது அதனை தொடர்ந்து, 30 நாட்களுக்குள், பரிசீலணைக்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்படும்.

கணக்காய்வாய்க்கு உட்பட்ட கணக்குகள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய இறுதி அறிக்கையானது, மூன்று மொழிகளிலும் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் வகையில் நடவடிக்கைகள்

# அத்தியாளம்15 : மனிவள அபிவிருத்தி மற்றும் நிதி அலகு

## 15.1 மனிவளங்கள் அபிவிருத்தி அலகு

பணியாளருக்கு பயிற்சியளித்து அவர்களை அபிவிருத்தி அடையச்செய்வது மனிதவள அபிவிருத்திப் பிரிவின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். மேலும், இப்பிரிவானது ஒழுக்காற்று நடவடிக்கைகளை கையாளும் பணியையும் மேற்கொள்கின்றது.

2016 ஆண்டில், பணியாட்களுக்கு பின்வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகள் வழங்கப்பட்டன. மேற்படி நிகழ்ச்சிநிரலுக்கு மத்தியில் பின்வரும் பயிற்சிகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளும் உள்ளடக்கப்பட்டன.

**உள்ளூர் பயிற்சி:**

(1) சிரேஷ்ட மற்றும் மத்தியதர முகாமையாளர்கள், சிரேஷ்ட சுற்றாடல் உத்தியோகத்தர்கள், சுற்றாடல் உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் நூலகம், சட்ட மற்றும் உள்ளக கணக்காய்வு பிரிவு பணியாளர்கள் மற்றும் கீழ் மட்ட ஊழியர்கள் உள்ளடங்களாக ம.சு.அ யின் பணியாளர்களுக்கு 28 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் 2016 ஆம் ஆண்டில் ஒருங்கமைத்து அவற்றுக்கான அனுசரணையும் வழங்கப்பட்டன.

(2) 2016ஆம் ஆண்டில், தற்போதைய சுற்றாடல் பிரச்சினைகள் மற்றும் பொதுவான பிரச்சினைகள் பற்றிய பணியாளர்களின் அறிவை இற்றைப்படுத்தும் நோக்கில் பிரமுகர்களின் விரிவுரைகள் வரிசையில் ஒரு பகுதியாக 03 விரிவுரைகள் ஒழுங்கமைக்கப்பட்டன.

அட்டவணை **15.1:** பயிற்சி

| பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் பெயர் | | **பங்பற்றிய உத்திளோகத்தர்களின் உண்ணிக்கை** |
|---|---|---|
| 01. | ம.சு.அ கீழ்நிலை உத்தியோகத்தர்களுக்கான இரண்டு நாள் வதிவிட பயிற்சிப்பட்டறை(குழு- II) | 40 |
| 02. | விஞ்ஞான மற்றும் சுற்றாடல் நிலையத்தின் ஒத்துழைப்புடன் இந்தியாவில் ஒழுங்கமைக்கப்பட்ட நான்கு-நாள் பயிற்சிப்பட்டறை | 45 |
| 03. | தலைமைத்துவம் மற்றும் குழு கட்டமைப்பு பற்றிய ஒரு நாள் பயிற்சிப்பட்டறை | 23 |
| 04. | பயிற்சிப்பட்டறை ம.சு.அ முகாமைத்துவ உதவியாளர்களுக்கான இரண்டு-நாள் பயிற்சிப்பட்டறை | 105 |
| 05. | தொழில்நுட்ப பணியாளர்களுக்கான ஆங்கிள மேம்பாட்டு பாடநெறி | 30 |
| 06. | டெங்கு நுளம்பு மற்றும் இனப்பெருக்கம் இடம்பெறும் இடங்கள் இனங்காணல் பற்றிய பயிற்சிப்பட்டறை | 63 |
| 07. | பிரதி பணிப்பாளர்கள், உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் இரண்டு-நாள அறிவாற்றல் கலந்துரையாடல் | 46 |
| 08. | ஊதவிப் பணிப்பாளர்கள், உயர் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழிற்சங்க தலைவர்களுடன் அரை-நாள் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் | 89 |
| 09. | இரசாணன விபத்துக்களை தவிர்த்தல் மற்றும் தயார்நிலை பற்றிய ஒரு-நாள் விழிப்புணர்வு பயிற்சிப்பட்டறை( சு.மா.க பிரிவின் ஒத்துழைப்புடன்) | 175 |
| 10. | ஊடுருவும் அந்நிய உயிரிணங்கள் பற்றி இனங்காணல், கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் பற்றிய பயிற்றுவிப்பாளர் நிகழ்ச்சித்திட்ட பயிற்சி (உயிர்பல்வகைத்தன்மை செயலகத்தின் ஒத்துழைப்புடன்) | 50 |
| 11. | இரசாயணம் கையாளுதல் தொடர்பில் உலகளாவிய ஒத்தசைவான முறைமை பற்றிய பயிற்சிப்பட்டறை (சு.மா.க பிரிவ்ன் ஒத்துழைப்புடன்) | 80 |

நிகழ்ச்சித்திட்டங்கள்



**வெளிநாட்டுப் பயிற்சி**

சுற்றாடல் மாசுக் கட்டுப்பாடு, அபாயகர கழிவு முகாமைத்துவம், திண்மக் கழிவு முகாமைத்துவம், வளித் தரம் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் நீர் தரம் கண்காணிப்பு, புவியியல் தகவல் முறைமை, சுற்றாடல் முகாமைத்துவம் மற்றும் மதிப்பீடு மற்றும் சுற்றாடல் கல்வி மற்றும் விழிப்புணர்வு போன்ற துறைகளில் பயிற்சி பெறுவதற்கு 96 உத்தியோகத்தர்கள் பரிந்துரைக்கப்பட்டுடன் அவர்களில் இருந்து 63 உத்தியோகத்தர்கள் பிரதானமாக குறுகிய-கால பயிற்சிக்காகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

2016ஆம் ஆண்டில், 27 பூர்வாங்க விசாரணைகள் மற்றும் 04 முறைசார்ந்த விசாரணைகள் மனித வளங்கள் பற்றிய பிரிவால் கையாளப்பட்டன

## 15.2 மனிதவளங்கள் முகாமைத்துவ அலகு

ம.சு.அ யின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பதவியணி 2016.01.01 இல் உள்ளவாறு 1159 ஆகும். அதன் பிரகாரம் 2016.12.31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியானது 1159 மற்றும் தற்போது சேவையில் உளள பதவியணியானது 879 ஆகும்.

**அட்டவணை 15.2: 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆட்சேர்ப்பு, பதவியுளர்வு, பதவி துறபப்பு, பதவி இடைநிறுத்தம் மற்றும் இளைப்பாறல்**

| | பதவி | 2016 | | | |
|---|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | பதவியுளர்வு | பதவி துறப்பு /இடைநிறுத்தம் /இடமாற்றம் | இளைப்பாறல் |
| 1 | **சிரேஸ்ட முகாமையாளர்** | | | | |
| | **பணிப்பாளர்** | 1 | 4 | | 2 |
| 2 | மத்திய முகாமையாளர் | | | | |
| | பிரதி.பணிப்பாளர் | | | 2 | 1 |
| | உதவிப்பணிப்பாளர் | 2 | | 1 | 2 |
| | நிகழ்சி பகுப்பாய்வாளர் | | | 1 | |
| 3 | **கனிஸ்ட முகாமையாளர்** | | | | |
| | பிரத்தியேக செயலாளர் | 1 | | | 1 |
| | சிரேட்ட சுற்றாடல் உத்தியோகத்தர் | | | 4 | |
| 4 | **அமுலாக்கல் / நீடிப்பு/இயக்கம்** | | | | |
| | சுற்றாடல் உத்தியோகத்தர | 1 | | 17 | 1 |
| 7 | **முகாமைத்தவ உதவியாளர்(தொ.நு-சாரா)** | 1 | | 2 | |
| | உள்ளக கணக்காய்வு உதவியாளர் | | | 1 | |
| 8 | **கீழ்நிலை (தேர்ச்சி)** | | | | |
| | சாரதி | 12 | | | 1 |
| | **கீழ்நிலை (அரை-தேர்ச்சி)** | | | | |
| 9 | பதிவு கீப்பர் / பைண்டர் | | | | 1 |
| 9 | **கீழ்நிலை (தேர்ச்சி யற்ற)** | | | | |
| | கள உதவியாளர் | 7 | | | |
| | அலுவலக உதவியாளர் | 17 | | 2 | |
| | | **42** | **4** | **30** | **9** |

மேற்படி பதவி உயர்வுகளுக்கு மேலதிகமாக 06 உதவி பணிப்பாளர்கள் மத்திய முகாமையாளர் மட்டம் தரம்-1, 02 முகாமைத்துவ உதவியாளர்கள் தரம் 1 இற்கும்

மற்றும் 04 முகாமைத்துவ உதவியாளர்கள் முகாமைத்தவ உதவியாளர் (தொழில்நுட்பம்-சாரா) சேவை தரம்-II, 06 சாரதிகள் கீழ் நிலை (தேர்ச்சி) மட்ட சேவை தரம்-1 மற்றும் 02 அலுவலக உதவியாளர்கள் தரம்-1 மற்றும் 03 அலுவலக உதவியாளர்கள் கீழ் மட்ட(தேரச்சியற்ற) சேவை ஆகிய பதவிகளுக்கு முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 30(1) பிரகாரம் பதவி உயர்வ வழங்கப்பட்டனர்

அட்டவணை 15.3: பிலசறு தேசிய திண்மக்கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்

| பதவி | | 2016 | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | **புதவி துறப்பு / இடமாற்றம்** | **இளைப்பாறல்** |
| 1. | கருத்திட்ட பணிப்பாளர் | 01 | - | |
| 2. | பிரதி கருத்திட்ட பணிப்பாளர் | 01 | - | |
| 3. | கருத்திட்ட கணக்காளர் | 01 | 01 | |
| 4. | சிரேட்ட பொறியியலாளர் | 01 | - | |
| 5. | பிரதி மகாமையாளர்(திட்டமிடல் மற்றும் நடைமுறையாக்கம்.) | 01 | 01 | |
| 6. | கருத்திட்ட பொறியியலாளர் | | 01 | |
| 7. | கருத்திட உத்தியொகத்தரகள் | 02 | 03 | |
| 8. | கொள்மதல் உத்தியோகத்தர் | 01 | 01 | |
| 9. | கருத்திநிர்வாக அலுவலர் | - | 01 | |
| 10. | கருத்திட்ட செயலாளர் | - | 01 | |
| 11. | கணிம அளவையாளர் | - | 01 | |
| 12. | சட்ட உதவியாளர் | 01 | - | |
| 13. | கருத்திட்ட உதவியாளர் | 02 | - | |
| 14. | கொள்முதல் உதவியாளர் | 01 | - | |
| 15. | அலுவலக உதவியாளர் | 01 | - | |
| | | **13** | **10** | |

அட்டவணை 15.4: திண்மக் கழிவு அகற்றல் வசதி கருத்திட்ட நிர்மாணம்

| பதவி | | 2016 | | |
|---|---|---|---|---|
| | | ஆட்சேர்ப்பு | புதவி துறப்பு / இடமாற்றம் | இளைப்பாரல் |
| 1. | கருத்திட்ட பணிப்பாளர் | 01 | - | |
| 2. | முகாமையாளர்(ஏற்பாடுகள் மற்றும் கொள்வனவு) | 01 | - | |
| 3. | கருத்திட்ட கணக்காளர் | 01 | 01 | |
| 4. | கோள்வனவு உத்தியொகத்தர் | 01 | - | |
| 5. | கருத்திட்ட பொறியியலாளர் | - | 01 | |
| | | **04** | **02** | |

.

## 15.3 நிதி அலகு

2016.12.31 ஆம் திகதியில் முடிவடைந்த நிதியாண்டுக்கான நிதிசார் கூற்றுகளின் குறிப்புகள் கணக்கீட்டுக் கொள்கைகள்

### 15.3.1 .கூட்டாண்மை தகவல்

நிலையகம் மற்றும் சட்டவடிவம்

மத்திய சுற்றாடல் அதிகார சபையானது ஓர் நியதிச்சட்ட அமைப்பாகும். அதன் தலைமையகமானது இல 104,''பரிசரபியச'' டெண்சில் கொப்கேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல, இலங்கை என்ற அமைவிடத்தல் அமைந்துள்ளது.

**பிரதான செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் இயல்பும்**

எமது தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் அற்பணிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்த மாசுக்கட்டுப்பாடு, இயற்கைவளங்கள் மீதான முகாமைத்துவம் மற்றும்சுற்றாடல் கல்வி ஆகியவற்றின் ஊடாக சுற்றாடலை பாதுகாத்து அதன் தரத்தை மேம்படுத்தல்மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் பிரதான நடவடிக்கைகள் ஆகும்.

ஊழியர்களின் எண்ணிக்கை

இவ்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஊழியர்களின் எண்ணிக்கையானது 879 ஆகும்.

தயாரிப்பின் அடிப்படை

இணக்கப்பாட்டு கூற்று

நிதிசார் நிலைமை பற்றிய கூற்று,நிதிசார் செயலாற்றுகை கூற்று,காசுப் பாய்ச்சல் கூற்று, பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்று மற்றும்நிதிசார் கூற்றுக்களின் குறிப்புகள் ஆகியவற்றைமத்திய சுற்றாடல் அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்கள் உள்ளடக்குகின்றன.

இந்த கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் விதிக்கப்பட்டுள்ள இலங்கை பொதுத்துறை கணக்கியல் நியமங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

### 15.3.2 அளவீட்டின் அடிப்படை

நிதிசார் கூற்றுக்கள் வரலாற்றுச் செலவின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன

நிதிசார் கூற்றுக்களில் பணவீக்க காரணிகளுக்கான சீராக்கங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

**நாணய சமர்ப்பனம் மற்றும் செயற்பாடு**

இந்த நிதிசார் கூற்றுக்கள் இலங்கை ரூபாய்களில் சமர்ப்பிக்கப்படுகின்றது. ம.சு.அ யின் செயற்பாட்டு நாணயமாகஇலங்கை ரூபாய்களே செயற்படுகின்றன.

குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

கீழே கொடுக்கப்பட்டுள்ள கணக்கியல் கொள்கைகளானது இந்த நிதிக் கூற்றுக்களில் உள்ள அனைத்து கால அளவுக்கும் சீரான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 15.3.3 ஆதணம், பொறி மற்றும் உபகரணம்

ஆதணம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்விலையானது அவற்றை பயன்படுத்தும் நோக்கத்திற்காக தொழில்படுநிலைக்கு கொண்டு வருவதாக ஏற்பட்ட செலவுகளுடான கொள்வனவு செலவுகளையும் கொண்டிருக்கும். ஒரு சொத்தை ஆரம்பத்தில் கிரயத்தில் அங்கீகரித்ததன் பின்னர், மீள் மதிப்பிடப்பட்ட சொத்துக்கள் அவற்றுக்கு பின்னர் ஏற்படும் தேய்மானத்தை கழித்து மீள் மதிப்பிப்படும்.கிரயத்தில் அல்லது மதிப்பீட்டிலிருந்து திரண்ட தேய்மானத்தை கழித்த பின்னரே அனைத்து ஆதனங்கள், பொறி மற்றும் உபகரணங்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், அல்லது உபகரணமொன்று பல்வேறு பயன்பாட்டு ஆயுலை கொண்டிருக்குமாயின் அவை தனியான ஆதனம், பொறி அல்லது உபகரணங்களாக கணக்கெடுக்கப்படும்.

ஆதனத்தின் எஞ்சிய பெறுமானம், பயன்படு ஆயுட் காலம் மற்றும் தேய்மான முறைகள் என்பன மீளாய்வு செய்யப்பட்டு ஒவ்வொரு நிதியாண்டின் முடிவில் பொறுத்தமாயின் சீராக்கப்படுகின்றன.

### 15.3.4 ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - மானியமாக கிடைக்கப்பெற்றவை

மானியத்தின் கீழ் பெறப்படும்ஏதும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன கிரயத்தில் மூலதனமாக்கப்படுகின்றன.

கிரயத்திலிருந்து திரண்டபெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட பின்னரேஆதனம், பொறி, உபகரணம் மற்றும் ஏனைய இறையிலி காணிகள்கிரயத்தில் பதியப்படுகின்றன. இறையிலி காணிகள் கிரயத்தில் பதியப்படுகின்றன.

ஆயட் காலத்திற்கேற்ப குறிப்பிட்ட தொகைகளை பதிவளிப்பதற்காக இறையிலிகாணி தவிர்ந்த சகல ஆதனங்கள் பொறி மற்றும் உபகரணங்களின் கிரயத்திற்கு நேர்கோட்டு முறையை பயன்படுத்தி பெறுமானத்தேய்வு ஏற்பாடுகள் கணக்கிடப்படுகின்றன

பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிதாக உள்ள திகதியில் இருந்துஅகற்றுதல் இடம் பெறும் திகதி வரையில ஆதனத்திற்கு தேய்மானம் வழங்கப்பட்டுள்ளது.

மேல் குறிப்பிட்டதை போன்று ஆதனம், பொறி, உபகரணங்கள் என்பன கீழே

குறிப்பிட்டுள்ளதைப் போல் நேர்கோட்டு முறையில் மதிப்பிறக்கம் செய்யப்படுகின்றது.மேலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பன எஸ்.எல்.எஸ்.ஏ.எஸ்-7 இல் குறித்துரைக்கப்பட்டவாறு கிரயத்தின் முறையில் கணக்கிடப்படுகின்றது.

மோட்டர் வாகனங்கள் வருடமொன்றுக்கு 25%

தளபாடம், அலுவலக உபகரணங்கள் வருடமொன்றுக்கு 10%

ஆய்வுகூட உபகரணங்கள் வருடமொன்றுக்கு 10%

நூலகம் புத்தகங்கள் வருடமொன்றுக்கு 2.5%

கட்டிடங்கள் வருடமொன்றுக்கு 2.5%

தொம்பே கழிவு அகற்றல் அமைவிடம்வருடமொன்றுக்கு 2.5%

ஆதனம், பொறி மற்றும் உபகரணமொன்று கையுதிர்தல் வேலையில் அல்லது பயன்பாடு அல்லது கையுதிர்தல் மூலம் எதிர்கால பொருளாதார பயன்கள் எதிர்பார்க்கப்படாத வேலையில் ஏற்றங்கரீக்கப்படாத நிலைக்கு உள்ளாகின்றது.ஏற்றங்கீகரிக்கபடாமை காரணமாக தவறவிடப்படும் யாதேனும் ஒரு ஆதாயயீட்டல் அல்லது இழப்பு (நிகர கையுதிர்தல் வருமானம் மற்றும் சொத்தின் காவுத்தொகை ஆகியவற்றுக்கு இடையிலான வித்தியாசம் கணக்கிடப்படுகின்றது) ஏற்றங்கீகரிக்கப்படாத வருடத்தின் வருமானக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

செயலாற்றுகை தரத்தின் ஆரம்ப மதிப்பிட்டிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்கால பொருளாதார பயன்களை மீள் நிறுவல் அல்லது பேனும் முகமாக ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் பழுதுபார்த்தல் அல்லது பேனுகை தொடர்பாக ஏற்படும் செலவினமானது ஒரு செலவாக ஏற்றங்கரீக்கப்படுகின்றது.

### 15.3.5 பொருட் பட்டியல்கள்

நிதியாண்டில் உபயோகித்த கையிருப்புக்கள் வருமானம் மற்றும் செலவினத்தின் கிரயத்தில் அறவிடப்படுகின்றது. எஞ்சிய கையிருப்பானது கிரயத்தில், விற்பனை விலையில் அல்லது நிகர காசு மதிப்பு இவற்றில் எது குறைவாகவுள்ளதோ அதன் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்படுகின்றது.

இரசாயனப் பொருட்கள் மற்றும் கண்ணாடிப் பொருட்களை பொருத்த மட்டில் ஆண்டில் இடம்பெற்ற ஒட்டுமொத்த கொள்வனவும் உபயோக பொருட்களாக கருதப்படும். இவ்வகையான பொருட்களை அளவீடு செய்வதில் உள்ள சிரமம் காரணமாகவும் இந்த முறை பின்பற்றுப்பட்டது. பயன்பாடானது ஒப்பீட்டளவில் குறைவான செலவினத்தை கொண்டதாலும் இந்த முறை பின்பற்றப்பட்டது.

### 15.3.6 குறுகிய தவனை முதலீடு

மூன்று மாதங்களுக்கு மேலான முதிர்வடைவு காலத்தை கொண்ட நிதிச்சந்தை சாதனங்களில் செய்யும் முதலீடுகளானது குறுகிய தவணை முதலீடுகளாக கருதப்பட்டு கிரயத்தில் பதியப்படும்

### 15.3.7 காசும் காசிற்கு நிகரானவைகளும்

காசும் காசிற்கு நிகரானவையும் கையிலுள்ள காசையும் வங்கி வைப்புக்களையும் உள்ளடக்குகின்றது.

### 15.3.8 காசுப்பாய்ச்சல் கூற்று

காசுப்பாய்ச்சல் கூற்றானது மறைமுக முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன

### 15.3.9 பொறுப்புகளும் ஏற்பாடுகளும்

கடந்த கால சம்பவங்களின் விலைவாக ஏற்றபட்டுள்ள தற்போதைய கடப்பாடு ஒன்று இருக்கும் வேளையிலும், அதன் தீர்வானது பொருளாதார பயன்களை உள்ளடக்கிய வளங்களின் வெளிப்பாயச்சல் ஒன்றின் விளைவக்கு இட்டுச் செல்வதாக எதிர்பாக்கப்படும் வேளையில் பொறுப்புக்கள் ஐந்தொகையில் ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றன.கடனாளிகளின் கோரிக்கையின் பேரில் அல்லது ஐந்தொகை திகதியில் இருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டிய கடப்பாடுகள் நடைமுறை பொறுப்புகளாக ஐந்தொகையிலகருதப்படுகின்றன.

நம்பத்தக்க வகையில் மதிப்பீடு செய்யக்கூடிய தற்போதய சட்ட அல்லது ஆக்கப்பூர்வமான கடப்பாடொன்று கடந்த கால நிகழ்வொன்றின் விளைவாக ம.சு.அ கொண்டிருக்குமானல், ஏற்பாடு ஏற்று அங்கீகரிக்கப்படுகின்றதுடன்,கடப்பாட்டை தீர்ப்பதற்காக பொருளாதார பயன்களின் வெளிப்பாய்ச்சல் அவசியப்படும் என்தும் சாத்தியமே.

### 15.3.10 வரியிடல்

வரி செலவுகள் நிதிசார் கூற்றில் அறிக்கையிடப்படுவதுடன் 2006 ஆண்டில் 10ம் இலக்க இறைவரி வருமான ஏற்பாடு மற்றும் அதன் திருத்தங்களுக்கு இணங்க கணக்கிடப்பட்டுள்ளது.

### 15.3.11ஊழியர் பயன்கள்

I. வரையறுத்த பங்களிப்பு திட்டம்

வரையறுத்த பங்களிப்பு திட்டத்திற்கான கடப்பாடானது ஏற்பட்டவொரு செலவாக வருமான கூற்றில் ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது. ம.சு.சு யானது ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு முறையே ஊழியர்களின் மொத்த சம்பளத்தின் 15% மற்றும் 3% ஐ பங்களிப்பு செய்கின்றது.

**II. வரையறுத்த பயன்திட்டம்**

பணிக்கொடையானது நிலையான பயன்திட்டம் ஒன்றாகும். ம.சு.சு சபையானது சம்பந்தப்பட்ட நியதிச்சட்டத்திற்கு இணங்க பணிக்கொடையை

வழங்க கடமைப்பட்டுள்ளது.

சகல ஊழியர்களுக்கும் அவர்களின் ஆரம்ப வருட சேவையிலிருந்து தொடங்கும் ஒவ்வோர் ஆண்டுக்காகவும் நிதி ஆண்டில் இறுதி மாத சம்பளத்தில் அரைவாசியின் மீதமைத்து ஐந்தொகையில் ஏற்பாடொன்றுக்கு முன்கொணரப்படுகின்றது

1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவின் கீழ் செலத்தப்படவேண்டிய பணிக்கொடையின் அடிப்படையில் அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வூதிய பணிக்கொடைக்கான ஏற்பாடு செய்யப்படுகின்றது. இந்த விடயம் நடைமுறை-சாரா பொறுப்புகளின்கீழ்ஐந்தொகையில் வகைப்படுத்தப்படுகின்றது.

அவசியம் ஏற்படும் வேளையில் அவர்கள் நிதியத்தை தருவதால்நிதியமொன்றுஅவசியமில்லை என்பதுதிறைசேரியின் கருத்தாகும்.

## 15.3.12 வருமான அங்கீகாரம்

செலவினம் மற்றும் வருமானம் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன. மூன்று வருடங்களுக்கு வழங்கப்பட்ட உரிமங்கள் மூலம் ஈட்டிய வருமானம் 2015 ஆம் ஆண்டில் ஈட்டிய வருமானத்திற்கும் 1/3 பகுதியாகும். எனவே முன்னைய இரண்டு வருடங்கள் சார்பாக சீராக்கல் இடம்பெற்றது. மேலும் ஒரு வருடத்தில் வழங்கிய உரிமங்கள் மூலம் ஈட்டிய வருமானம், பற்றுச்சீட்டு திகதியை பொருட்படுத்தாது, அதே ஆண்டில் ஈட்டிய வருமானமாக கணக்கிடப்பட்டுள்ளது.

வட்டி மற்றும் வாடகை வருமானம் தவிர்ந்தஏனைய வருமானம் காசின் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளது.

## 15.3.13 ஒப்பீட்டு தகவல்கள்

நடப்பு ஆண்டில் சமர்பணங்களைக் காண்பிக்கும் பொருட்டு ஒப்பீட்டு தொகைகள் அவசியமான இடங்களில் மீளமைக்கப்பட்டுள்ளன.

### 15.3.14 ஐந்தொகை திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்கு பிந்திய அனைத்து பொருட்களும் பரீசீலனை செய்யப்பட்டதுடன், அவசியமான இடங்களில் நிதிசார் கூற்றின் குறிப்புகளில் சீராக்கங்கள் அல்லது வெளிப்பாடுகள் இடம்பெற்றன.

## 15.3.15 பொறுப்புகளும் நிகழ்சாத்தியங்-களும்

நிகழ்சாத்தியங்களானது கடந்த கால நிகழ்ச்சியில் இருந்து தோன்றும் சாத்தியமான சொத்துக்கள் அல்லது கடப்பாடுகள் ஆகும். இவை, ம.சு.சு யின் கட்டுப்பாட்டிற்கு அற்பாட்பட்டதும் நிகழ்கின்ற அல்லது நிகழலாத சூழல்நிலையில் உறுதிசெய்யப்படும்.

மானியங்கள் கணக்கீடு

அரசாங்க கொடைகள்

அரசாங்க கொடைகள் தொடர்பாக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கையானது கணக்கீட்டு முறையையும் பின்வருமாறு உள்ளடக்குகின்றது.

சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்கான அரசாங்க கொடைகளானது அச்சொத்துக்களின் பயன்படு ஆயட் காலத்தின் அடிப்படையில் வருமானமாக ஏற்றங்கீகரிக்கப்படுகின்றது

வெளிநாட்டு முகவாரண்மைகளிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஏனைய மீண்டெழும் மானியங்கள் மற்றும் செலவினங்கள் 2015ஆண்டு கணக்கின் இலாப மற்றும் இழப்பீட்டில் கூட்டிணைக்கப்பட்டுள்ளது.

பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்ளுக்குகான அரசாங்க கொடைகள், அவற்றில் இருந்து ஏதேனும் உறுதியான சொத்துகள் தோன்றாமை காரணமாக செலவினங்களாக கருதப்படுகின்றன.

ஏனைய முகவரான்மைகளிடமிருந்து பெற்ற முலதன மானியங்கள் .

ஏனைய முகவராண்மைகள் இடமிருந்து பெற்ற மூலதன கொடைகளுக்கும் அரசாங்க கொடையை கணக்கீடு செய்வதற்கு பின்பற்றப்பட்ட முறையே பின்பற்றப்பட்டது.

2016 ஆம் ஆண்டில் ம.சு.சு பின்வரும் மானியங்களை பெற்றுள்ளது

அட்டவணை15.6: 2016 ஆம் ஆண்டில் பெற்ற ானியங்கள்

| | |
|---|---|
| Treasury - Recurrent | 544,271,613 |
| Treasury - Capital – in cash | 62,500,000 |
| UNREDD | 1,750,000 |
| Pilisaru Project | 1,543,028 |
| R & SP Unit | 77,220 |
| Environmental Conservation Project | 1,562,515 |
| UNESCO | 158,000 |
| Strengthening of CEA Laboratory | 33,982,655 |
| JICA | 1,175,760 |
| Environment Pioneer Programme | 1,655,540 |

கொய்கா கழிவு அகற்றல் அமைவிட கருத்திட்டம் மூடப்பட்டதால்ரூபா 415.9 மில்லியன் பெறுமதியான ஆதனம் கொய்காவிடம் இருந்து பரிமாற்றம் செய்யப்பபட்டது. இத்தொகையில் கழிவு அகற்றல் அமைவிடத்தின் பெறுமதியான ரூபா395.2 மில்லியன் உள்ளடங்குகின்றது.

### 15.3.15முதலீடுகள்

நிலையான வைப்பு மற்றும் குறுங்கால வைப்புக்கள் மீதான முதலீடுகள் கிரயத்தில் பதியப்பட்டுள்ளன. அவ்வாறான முதலீடுகள் வாயிலாக கிடைக்கப்பெறும் வருமானப் அட்டுறு அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 15.3.17 நிகழ் சாத்தியங்களும் பொறுப்புகளும்

| Medical Insurance Claims | | | 324 | 312 | - | - | - | - | 324 | 312 |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Note 21** | | | | | | | | | | |
| **Payable** | | | | | | | | | | |
| Upper Kothmale Water Quality | | | 728 | 728 | - | - | - | - | 728 | 728 |
| Stamp Duty Payable | | | 493 | 2,907 | - | - | - | - | 493 | 2,907 |
| Interest Received in Advance (Fixed Deposit) | | | 468 | 293 | - | - | - | - | 468 | 293 |
| Retention Fee | | | 856 | 505 | 19,549 | 16,785 | - | - | 20,406 | 17,290 |
| Motor Cycle Insurance | | | 70 | 70 | - | - | - | - | 70 | 70 |
| Implementation Basel Convention | | | 174 | 174 | - | - | - | - | 174 | 174 |
| Solid Waste Management Allowance (DO) | | | 3 | 3 | - | - | - | - | 3 | 3 |
| Pilisaru Project Computers and UPS | | | 24 | - | - | - | - | - | 24 | - |
| Unilanka Security Services | | | - | 300 | - | - | - | - | - | 300 |
| Pilisaru Advance Balance | | | - | 8 | - | - | - | - | - | 8 |
| **Total** | | | **89,500** | **77,951** | **19,899** | **17,135** | **6** | **6** | **109,406** | **95,091** |

**TABLE 0.23 : NOTE 22**

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Note 22** | | | | | | | | | | |
| **Accrued Expenses** | | | - | - | - | - | 80 | 275 | 80 | 275 |
| Salaries and Wages | | | 4,354 | 4,399 | - | - | 753 | - | 5,107 | 4,399 |
| Employee Provident Fund | | | 5,605 | 5,677 | - | - | - | - | 5,605 | 5,677 |
| Employee Trust Fund | | | 1,121 | 1,135 | - | - | - | - | 1,121 | 1,135 |
| Over time | | | | | - | - | 2 | - | | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Note 22** | | | | | | | | | | |
| **Accrued Expenses** | | | - | - | - | - | 80 | 275 | 80 | 275 |
| | | | 944 | 628 | | | | | 946 | 628 |
| Local Traveling | | | 1,745 | 3,018 | - | - | - | - | 1,745 | 3,018 |
| Repairs & Maintenance of Building | | | 598 | 397 | - | - | - | - | 598 | 397 |
| Repairs & Maintenance of Office Equipment | | | 146 | 81 | - | - | - | - | 146 | 81 |
| Security Charges | | | 2,337 | 2,128 | - | - | - | - | 2,337 | 2,128 |
| Electricity Charges | | | 849 | 907 | - | - | - | - | 849 | 907 |
| Fuel and Lubricant | | | 1,860 | 2,823 | - | - | - | - | 1,860 | 2,823 |
| Stationery | | | 74 | 643 | - | - | - | - | 74 | 643 |
| Telecommunication | | | 1,178 | 967 | - | - | 10 | - | 1,188 | 967 |
| Newspapers | | | 22 | 19 | - | - | - | - | 22 | 19 |
| Water supply | | | 82 | 59 | - | - | - | - | 82 | 59 |
| VAT (VAT to Accrued Expenses) | | | 1,352 | 1,015 | - | - | - | - | 1,352 | 1,015 |
| Audit Fees | | | 1,753 | 2,543 | - | - | - | - | 1,753 | 2,543 |
| Office Building Rent | | | 299 | 75 | - | - | - | - | 299 | 75 |
| Nation Building Tax | | | 311 | 429 | - | - | - | - | 311 | 429 |
| NRM Division | | | 315 | 234 | - | - | - | - | 315 | 234 |
| Miscellaneous Expenses | | | 3 | 61 | - | - | - | - | 3 | 61 |

| **Note 22** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Accrued Expenses** | | | - | - | - | - | 80 | 275 | 80 | 275 |
| Pollution Control Division | | | 66 | 59 | - | - | - | - | 66 | 59 |
| Office Equipments | | | 200 | 22 | - | - | - | - | 200 | 22 |
| Office Furniture | | | 203 | 156 | - | - | - | - | 203 | 156 |
| WIP Capital Assets | | | 1,919 | 15,533 | - | - | - | - | 1,919 | 15,533 |
| National Events | | | 3 | 142 | - | - | - | - | 3 | 142 |
| School Programme -Ministry | | | 129 | 3,683 | - | - | - | - | 129 | 3,683 |
| Welfare Expenses | | | 8 | 251 | - | - | - | - | 8 | 251 |
| Insurance | | | 640 | 498 | - | - | - | - | 640 | 498 |
| Economic Service Charges | | | 129 | 138 | - | - | - | - | 129 | 138 |
| Hazardous Waste Management Division | | | 215 | 528 | - | - | - | - | 215 | 528 |
| Clinical Waste Management Program | | | 8,023 | 15,092 | - | - | - | - | 8,023 | 15,092 |
| Legal Expenses | | | 180 | 2 | - | - | - | - | 180 | 2 |
| EIA Division | | | 44 | - | - | - | - | - | 44 | - |
| Repair of Motor Vehicle | | | 833 | - | - | - | - | - | 833 | - |
| Pioneer Camp - Southern Camp | | | 163 | - | - | - | - | - | 163 | - |
| Solid Waste Management Project - Ratnapura | | | 4,000 | - | - | - | - | - | 4,000 | - |

| **Note 22** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Accrued Expenses** | | | - | - | - | - | 80 | 275 | 80 | 275 |
| Reduction of Polythene | | | 11,029 | - | - | - | - | - | 11,029 | - |
| E-Waste Management - Punarudaya Programme | | | 1,086 | - | - | - | - | - | 1,086 | - |
| School Waste Management Programme | | | 3,598 | - | - | - | - | - | 3,598 | - |
| Construction of Polythene Site - Ratnapura | | | 1,327 | - | - | - | - | - | 1,327 | - |
| Land - Ratnapura (Accrued) | | | 318 | - | - | - | - | - | 318 | - |
| Lab Service | | | 216 | - | - | - | - | - | 216 | - |
| Environment Conservation | | | 38 | - | - | - | - | - | 38 | - |
| Air Quality Division | | | 73 | - | - | - | - | - | 73 | - |
| Medical Leave | | | 18,012 | - | - | - | - | - | 18,012 | - |
| SAICM Hazardous Waste Management Division | | | 160 | - | - | - | - | - | 160 | - |
| E- Waste | | | 291 | - | - | - | - | - | 291 | - |
| Advertising | | | 49 | - | - | - | - | - | 49 | - |
| GIS Information | | | 177 | - | - | - | - | - | 177 | - |
| KOICA Project | | | 139 | - | - | - | - | - | 139 | - |
| Development of Access Road - Dompe | | | 4,425 | - | - | - | - | - | 4,425 | - |
| Local Training | | | 216 | - | - | - | - | - | 216 | - |

| **Note 22** | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Accrued Expenses** | | | - | - | - | - | 80 | 275 | 80 | 275 |
| Postage | | | 13 | - | - | - | - | - | 13 | - |
| Environment Congress | | | 12 | - | - | - | - | - | 12 | - |
| Macksons Paint | | | 1 | - | - | - | - | - | 1 | - |
| School Programme | | | 54 | - | - | - | - | - | 54 | - |
| Foreign Travelling | | | - | 28 | - | - | - | - | - | 28 |
| Plastic Expenses | | | - | 31 | - | - | - | - | - | 31 |
| Distress Loans- Stamp Duty | | | - | 1 | - | - | - | - | - | 1 |
| Planning and Monitoring Unit | | | - | 300 | - | - | - | - | - | 300 |
| EPC Division (Laboratory) | | | - | 39 | - | - | - | - | - | 39 |
| School Programme -Treasury | | | - | 109 | - | - | - | - | - | 109 |
| Medical Leave Encashment | | | - | 31,057 | - | - | - | - | - | 31,057 |
| Repairs & Maintenance of Motor Vehicle | | | - | 562 | - | - | - | - | - | 562 |
| Strengthening of Laboratory | | | - | 528 | - | - | - | - | - | 528 |
| Green Awards | | | - | 16 | - | - | - | - | - | 16 |
| Purchase of Laboratory Chemicles | | | - | 216 | - | - | - | - | - | 216 |
| Membership Fee | | | - | 3 | - | - | - | - | - | 3 |
| Motor Cycle Loan | | | - | 0 | - | - | - | - | - | 0 |
| Local Authority/ Institution | | | - | - | 142,376 | 195,281 | - | - | 142,376 | 195,281 |
| Gratuity Payable | | | - | 0 | - | - | - | - | - | 0 |
| E-Waste Programme | | | - | | - | - | - | - | - | |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **Note 22** | | | | | | | | | | |
| **Accrued Expenses** | | | - | - | - | - | 80 | 275 | 80 | 275 |
| | | | | 233 | | | | | | 233 |
| KOICA Project | | | - | 139 | - | - | - | - | - | 139 |
| EEA Division - 319 | | | - | 1,170 | - | - | - | - | - | 1,170 |
| JICA Project | | | - | 1,385 | - | - | - | - | - | 1,385 |
| Lab Strenthening - 413 | | | - | 16,459 | - | - | - | - | - | 16,459 |
| | **Total** | | **82,936** | **115,616** | **142,376** | **195,281** | **845** | **275** | **226,157** | **311,172** |

**TABLE 0.24 : NOTE 23**

| | | | **CEA** | | **Pilisaru Project** | | **EDCF Project** | | **Total** | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| - | | | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** |
| **Note 23** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| **Recurrent Grants** | | | | | | | | | | |
| Male Declaration | | | 2,165 | 2,550 | - | - | - | - | 2,165 | 2,550 |
| Plastic Waste Grant | | | 16,789 | 16,815 | - | - | - | - | 16,789 | 16,815 |
| GIS Project | | | 67 | 67 | - | - | - | - | 67 | 67 |
| Development of Data Base for Evt. Polluting Activities | | | 111 | 111 | - | - | - | - | 111 | 111 |
| Large Scale Water Quality Grants | | | 660 | 660 | - | - | - | - | 660 | 660 |
| KITA Grant | | | 106 | 106 | - | - | - | - | 106 | 106 |
| Water Quality Monitoring Programme | | | 265 | 265 | - | - | - | - | 265 | 265 |

| | | | CEA | | Pilisaru Project | | EDCF Project | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| - | | | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 |
| **Note 23** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| Community Based Water Quality Mgt. Programme | | | 526 | 526 | - | - | - | - | 526 | 526 |
| Water Quality Three Main Water Boundaries | | | 291 | 291 | - | - | - | - | 291 | 291 |
| Strengthening of CEA Laboratory - 2013 | | | 3,626 | 19,268 | - | - | - | - | 3,626 | 19,268 |
| Strengthening of Lab of CEA - 2012 | | | 857 | 857 | - | - | - | - | 857 | 857 |
| Strengthening of National Information Centre | | | 94 | 94 | - | - | - | - | 94 | 94 |
| SAICM Hazardous Waste Management | | | 439 | 599 | - | - | - | - | 439 | 599 |
| SAICM Environment Pollution Control | | | 3,696 | 3,716 | - | - | - | - | 3,696 | 3,716 |
| Greening School - HNB Assurance | | | 68 | 68 | - | - | - | - | 68 | 68 |
| School Pioneer Programme | | | 1,107 | 2,277 | - | - | - | - | 1,107 | 2,277 |
| Environment Conservation Project | | | 1,575 | 692 | - | - | - | - | 1,575 | 692 |
| Kelani River Grant | | | 941 | 1,038 | - | - | - | - | 941 | 1,038 |
| Water Quality - Major Water Bodies | | | 1,116 | 1,512 | - | - | - | - | 1,116 | 1,512 |
| Green Project Grant | | | 37 | 67 | - | - | - | - | 37 | 67 |
| Project on Safe Disposal of Mobile Phones | | | 304 | 304 | - | - | - | - | 304 | 304 |
| Dompe Grant | | | 2,834 | - | - | - | - | - | 2,834 | - |
| Environment Pioneer Camp - Galle | | | 58 | - | | | - | - | | - |

| | | | CEA | | Pilisaru Project | | EDCF Project | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| - | | | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 |
| **Note 23** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| | | | | | - | - | | | 58 | |
| Macksons Paint Lanka Grant | | | 134 | - | - | - | - | - | 134 | - |
| S&D Chemical - Tree Planting Grant | | | 277 | - | - | - | - | - | 277 | - |
| Environmental Consevation Pro | | | 470 | - | - | - | - | - | 470 | - |
| Wetland Day -2016 | | | - | 468 | - | - | - | - | - | 468 |
| National Green Award Grant | | | - | 290 | - | - | - | - | - | 290 |
| **Total** | | | **38,612** | **52,639** | **-** | **-** | **-** | **-** | **38,612** | **52,639** |

**TABLE 0.25 : NOTE 24**

| **Note 24** | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Provision for Gratuity | 239,029 | 227,134 | 196 | 163 | - | - | 239,225 | 227,297 |
| - | | | | | | | | |
| **Total** | **239,029** | **227,134** | **196** | **163** | **-** | **-** | **239,225** | **227,297** |

**TABLE 0.26 : NOTE 25**

| | | | CEA | | Pilisaru Project | | EDCF Project | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 |
| **Note 25** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| **Capital Grant** | | | - | - | **8,760** | **8,760** | **1,144** | **2,255** | **9,904** | **11,015** |
| FRMP Capital Grant | | | 1 | 1 | - | - | - | - | 1 | 1 |

| | | | CEA | | Pilisaru Project | | EDCF Project | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 | 2016 | 2015 |
| **Note 25** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| Dutch Capital Grant | | | 2,653 | 4,008 | - | - | - | - | 2,653 | 4,008 |
| EA1P Grant | | | 4,873 | 5,047 | - | - | - | - | 4,873 | 5,047 |
| Capital Grant - Treasury Fund | | | 134,834 | 105,902 | - | - | - | - | 134,834 | 105,902 |
| Capital Grant - Treasury Fund (Motor Vehicle) | | | 90,165 | 123,024 | - | - | - | - | 90,165 | 123,024 |
| UNDP | | | 781 | 1,735 | - | - | - | - | 781 | 1,735 |
| APPELL Project | | | - | 8 | - | - | - | - | - | 8 |
| Grant of Library Books | | | 74 | 105 | - | - | - | - | 74 | 105 |
| International Development Association | | | 106,358 | 110,507 | - | - | - | - | 106,358 | 110,507 |
| IRMP | | | 1,289 | 1,289 | - | - | - | - | 1,289 | 1,289 |
| E-Waste Capital Grant | | | 9 | 19 | - | - | - | - | 9 | 19 |
| Plastic Waste Management Capital Grant | | | 2,048 | 2,693 | - | - | - | - | 2,048 | 2,693 |
| GIS Capital Grant | | | 320 | 440 | - | - | - | - | 320 | 440 |
| Household Waste Minimizing Project - Gampaha | | | 47 | 94 | - | - | - | - | 47 | 94 |
| Post Tsunami Capital Grant | | | 21 | 43 | - | - | - | - | 21 | 43 |
| Nature Field Centre Grant | | | 375 | 388 | - | - | - | - | 375 | 388 |
| Mezzanine Floor | | | 20,000 | 20,625 | - | - | - | - | 20,000 | 20,625 |

| | | | CEA | | Pilisaru Project | | EDCF Project | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** |
| **Note 25** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| Development of Data Base for Evt. Polluting Activities | | | 494 | 659 | - | - | - | - | 494 | 659 |
| South Asia Program | | | 32 | 42 | - | - | - | - | 32 | 42 |
| Safe Disposal Mobile | | | 168 | 203 | - | - | - | - | 168 | 203 |
| John Keels Foundation | | | 59 | 71 | - | - | - | - | 59 | 71 |
| Library Information Centre | | | 928 | 1,091 | - | - | - | - | 928 | 1,091 |
| Pioneer Program - Ministry Found | | | 1,503 | 143 | - | - | - | - | 1,503 | 143 |
| Strangthening of CEA Laboratory | | | 79,926 | 51,835 | - | - | - | - | 79,926 | 51,835 |
| Environmental Conservation Project | | | 167 | 191 | - | - | - | - | 167 | 191 |
| SAICM Hazardous Waste Management | | | 380 | 434 | - | - | - | - | 380 | 434 |
| SAICM Environment Pollution Control | | | 370 | 420 | - | - | - | - | 370 | 420 |
| Pilisaru Project - Lab Equipments | | | 4,271 | 3,247 | - | - | - | - | 4,271 | 3,247 |
| EDCF Building Fund | | | 1,553 | 1,595 | - | - | - | - | 1,553 | 1,595 |
| KOICA Capital Grant | | | 396,812 | 425,510 | - | - | - | - | 396,812 | 425,510 |
| Water Quality - JAICA | | | 5,537 | 6,152 | - | - | - | - | 5,537 | 6,152 |
| Monitoring Of Water (JICA) | | | 1,393 | 390 | - | - | - | - | 1,393 | 390 |
| UNICEF | | | 94 | 104 | - | - | - | - | 94 | 104 |

| | | | CEA | | Pilisaru Project | | EDCF Project | | Total | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** | **2016** | **2015** |
| **Note 25** | | | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** | **Rs.** |
| Abans Auto (Pvt) Ltd | | | 97 | 97 | - | - | - | - | 97 | 97 |
| R&D Unit | | | 77 | - | - | - | - | - | 77 | - |
| UNREDD Programme | | | 1,735 | - | - | - | - | - | 1,735 | - |
| Environment Consevation Pro | | | 1,563 | - | - | - | - | - | 1,563 | - |
| UNESCO Capital Grant | | | 151 | - | - | - | - | - | 151 | - |
| | | | **861,159** | **868,112** | **8,760** | **8,760** | **1,144** | **2,255** | **867,537** | **879,127** |

# அத்தியாயம 16 : நிதிசார் கூற்றுக்கள் பற்றிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය
எனது இல. } ஐசஎன்/ஈ/சீசஏ/02/16/43
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2017 செப்தெம்பர் 24
Date

தலைவர்
மத்திய சுற்றாடல் அதிகாரசபை

**மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்கள் மீதான 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14 (2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 56ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் 6(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன. நிதிஅதிகாரச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு 2017 யூன் 29 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, .- இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனதுகணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர்கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000–1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறிவேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகள் மற்றும் வெளிப்படுத்தல்களிற்கு ஆதாரமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. கணக்காய்வின் நோக்க எல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகளின் மூலம் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு தற்றுணிவு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பெதுத்துறை கணக்கீட்டு நியமம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை பெதுத்துறை கணக்கீட்டு நியமம் - 02

ஏனைய வெளி நிறுவனங்களிடமிருந்து மீண்டுவரும் மானியமாக மீளாய்வாண்டின் போது பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 14,026,466 தொகையானது நியமத்தின் பிரகாரம் காசோட்டக் கூற்றில் நிதி நடவடிக்கைகளின் கீழ் காட்டுவதற்குப் பதிலாக செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை பெதுத்துறை கணக்கீட்டு நியமம் - 07

மீளாய்வாண்டின் போது ரூபா 84,997,459 கிரயமுள்ள ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் 07 விடயங்களானது அவற்றை பயன்படுத்துவதற்கான தயார் நிலைக்கு கொண்டுவந்ததன் பின்னர் பெறுமானத்தேய்வை மேற்கொள்வதற்கு நடிவக்கை எடுக்காததன் காரணமாக ரூபா 494,016 தொகையான பெறுமானத்தேய்வு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2. கணக்கீட்டுக் குறைபாடுகள்

##### 2.2.2.1 மத்திய சுற்றாடல் அதிகாரசபை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது கட்டடங்களுக்கான பெறுமானத் தேய்வு ரூபா 117,516 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ ) மீளாய்வாண்டில் கணிப்பீட்டுத் தவறு காரணமாக பெறுமதி சேர் வரியானது ரூபா 740,521 தொகையால் அதிகரித்துச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) ஒப்பந்தக் கம்பனிக்கு செலுத்தப்பட்ட ரூபா 9,283,870 தொகையான முற்பணங்களில் ரூபா 4,132,173 தொகையானது ஒப்பந்தக்காரர்களின் விலைப்பட்டியல்களிலிருந்து குறைக்கப்பட்டிருந்த போதிலும் அவை நிதிக்கூற்றகளில் செம்மையாக்கப் பட்டடிருக்கவில்லை மேலும் ஒப்பந்தக்காரரின் விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்துகையில் நிறுத்தி வைக்கப்பட்ட ரூபா 4,905,809 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கிளிநொச்சி வடமாகாண அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் செலவு செய்யப்பட்ட ரூபா 12,603,603 தொகையானது நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கட்டடங்களின் கீழ் மூலதனமாக்கப்படடிருந்தது.

(உ) மனை எரிவாயு நிலைமையை முகாமைத்துவம் செய்தல் செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,491,029 தொகையான உபகரணங்களை இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மூலதனமாக்குவதற்குப் பதிலாக ஆண்டிற்கான செலவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**2.2.2.2 பிலிசரு செயற்திட்டம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிலிசரு செயற்திட்டத்தினால் செலுத்த வேண்டிய மற்றும் பிடித்துவைத்தல்கள் மற்றும் முற்பணங்கள் முறையே ரூபா 1,594,851 மற்றும் ரூபா 6,285,176 ஆல் அதிகரித்து நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பிலிசரு செயற்திட்டத்தினால் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் ஏணைய நிறுவனங்களுடன் சேதனைப் பசளை நிலையங்களை நிர்மாணிப்பது தொடர்பாக குறுங்கால பாரிய அளவு மற்றும் சிறிய அளவிலான செற்திட்டங்களில் உடன்படிக்கை செய்து கொண்ட பணத்தில் மேலும் செலுத்தவேண்டிய பணமாக ரூபா 139,923,530 தொகை நிரந்தர கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் இல்லாது அட்டுறு செலவுகளாக செம்மையாக்கப்பட்டிருந்தது.

### 2.2.2.3 பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் வசதிகளின் அடிப்படையில் திண்மக் கழிவுகளை வெளியேற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் (EDCF)

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொருளாதார ஒத்துழைப்பு நிதியத்தின் கொரிய கடன் வசதிகளின் அடிப்படையில் திண்மக் கழிவுகளை வெளியேற்றும் வசதிகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் 05 கணக்கு விடயங்களின் பரீட்சை மீதியின் பிரகாரம் ரூபா 278,575,020 கூட்டு மொத்த மீதி ஒன்று நிதிக்கூற்றுக்களில் ரூபா 280,708,014 ஆகக் காட்டப்பட்டதன் காரணமாக ரூபாா 2,13,2994 தெகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டதனால் நிதிக்கூற்றுக்களைச் சமப்படுத்தல் சம்பந்தமாக கணக்காய்வின் போது சிக்கலான தன்மை காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 33,197 ஆல் குறைத்து கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் 2015 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 42,170 ஆல் மிகையாகக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தமையும் மீளாய்வாண்டின் போது சரி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல ஆண்டுகளுக்கு முன்னர் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு மிகையாகச் செலுத்தியுள்ள ரூபா 5,447,674 தொகையான பெறுமதி சேர் வரி (VAT) உள்நாட்டு இறைவரி ஆணையாளரினால் எதிரீடு செய்யமுடியாதவை எனக் காட்டப்பட்டிருந்தும் அதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படாது நிதிக்கூற்றுக்களில் பெறவேண்டிய பணமாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) பிளாஸ்டிக் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்திற்காக முன்னய ஆண்டில் பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 48,899 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் போதும் தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571 | பிலிசரு செயற்திட்டம் தொடர்பான 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 350,000 பெறுமதியான மீளச்செலுத்தவேண்டிய 35 வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1994 யூன் 14 ஆந் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | சுற்றறிக்கைக்கு முரணாக அதிகாரசபையின் 866 உத்தியோகத்தர்களுக்காக உணவுப்படியாக ரூபா 10,185,720 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பபடடிருந்தது. |
| (இ) | 2015 யூன் 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | |
| | (i) 09 (ஏ) பிரிவு | வாகனம் விற்றுத்தீர்க்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் உரிய வளவிலிருந்து அனைத்து வாகனங்களையும் பணத்தைப் பெற்றுக்கொண்டு நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 2015 யூலை 09 ஆந் திகதி விற்றுத்தீர்க்கப்பட்ட இசசு டபிள் கெப்பிற்காக பணத்தைப் பெற்றுக்கொண்டு 2016 ஏப்ரல் மாதத்திலேயே வாகனம் விடுவிக்கப்பட்டிருந்தது. |

6

(ii) 10 ஆம் பிரிவு

வாகனங்கள் விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த அனைத்து பணமும் உரிய முறைப்படி திரண்ட நிதிக்கு செலவுவைக்கப்பட வேண்டியதுடன் நடவடிக்கை பூர்த்திசெய்யப்பட்ட உடன் விபரமான ஒரு அறிக்கையானது அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகம், கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோருக்கான பிரதியுடன் அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இடம் பெற்ற வாகன விற்பனைகள் சம்பந்தமாக பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 2,544,324 தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 போதிய அதிகாரத்தினால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

தாபன விதிக்கோவையின் XXIV அத்தியாயத்தின் 8 ஆம் பிரிவின் பிரகாரம் வங்கியின் மூலம் மோட்டார் சைக்கிள்/ஸ்கூட்டர் கொள்வனவு செய்வதற்காக உச்ச அளவு ரூபா 100,000 அல்லது கொள்வனவு செய்வதற்காக செலவு செய்யப்படும் பணம் ஆகிய இரண்டில் குறைந்த தொகையை கடனாக வங்கி மூலம் வழங்கப்பட முடியும் என்ற போதிலும் பொதுத் திறைசேரியின் அங்கீகாரமின்றி 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை ரூபா 100,000 வீதம் மோட்டார் சைக்கிள் கொள்வனவு செய்வதற்காக சுற்றாடல் அதிகாரசபையின் நிதியிலிருந்து கடன் செலுத்தப்பட்டிருந்தது.

# 3. நிதி மீளாய்வு

## 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டில் அதிகாரசபையினதும் அதனோடு தொடர்புபட்ட 02 செயற்றிட்டங்களினதும் நிதி விளைவுகள் ரூபா 45,142,000 மிகையாக இருந்ததுடன் அற்கு எதிராக முன்னய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 72,318,000 ஆக இருந்ததனால் முன்னய ஆண்டுடன் ஒப்பீடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 117,460,000 முன்னேற்றம் அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது பிலிசரு செயற்திட்டத்திலிருந்து ரூபா 30,199,000 இலாபம் கிடைத்தமையும் அதிகாரசபையின் வருமானம் ரூபா 64,486,000 ஆல் அதிகரித்தமையும் மேற்கூறிய முன்னேற்றத்துக்கு தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாணடு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை நிதிப்பற்றாக்குறை ஏற்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் போது மிகை ஏற்பட்டிருந்தது. எவ்வாறாயினும் நிதிவார் விளைவுகளுக்கு ஊழியர் பணிக்கொடை மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வை மீண்டும் செம்மையாக்கும் போது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 646,565,000 தொகையான பங்களிப்பு முரண்களுடன் முன்னேற்றமடைந்து மிளாய்வாண்டின் போது ரூபா 743,306,000 வரை அதிகரித்திருந்தது.

## 3.2 அதிகாரசபைக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட விடயங்கள்

மீளாய்வாண்டின் இறுதி வரை அதிகாரசபைக்கு எதிராக கோவை செய்யப்பட்டுள்ள 65 வழக்குகளில் 05 வழக்குகள் இழப்பீடுகள் கோரி ஒப்படைக்கப்பட்ட வழக்குகளாக இருந்ததுடன் இழப்பீட்டு பெறுமதி ரூபா 2,097,822,000 ஆகும்.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின 10 ஆவது பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் பிரதான குறிக்கோள்களாகக் காட்டப்பட்டிருந்தன.

- தேசிய சுற்றாடல் அதிகார சட்டத்தின் கீழ் சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக சுற்றாடலுக்கு ஆபத்தினை விளைவிப்பதனைப் போல ஆபத்து விளைவிப்பதற்கு வழிவகுக்கும் கழிவுப் பொருட்களை வெளியேற்றுதல், குவித்துவைத்தல் அல்லது ஏனைய முறைகேடான வழிகளின் தன்மை, அளவு உள்ளடக்கம் மற்றும் தாக்கங்களை முறைமைப்படுத்தல், பேணுதல் கட்டுப்படுத்ததல் என்பன.

- சுற்றாடல் தாக்க மதிப்பீட்டினைப் பயன்படுத்தி முறைப்படியான மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்படும் சுற்றாடல் சிக்கல்களின் மூலம் சுற்றாடலுக்கு பயன்தரும் அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதன் மூலம் நாட்டின் இயற்கை வளமுறைமையைப் பாதுகாத்தல்.

- சுற்றாடலைப் பாதுகாப்பதற்காக பொது மக்களின் உதவிகளையும் பங்களிப்புக்களையும் பெற்றுக்கொள்ளல். விசேடமாக பாடசாலை மாணவர்களின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் உள்நாட்டு, தேசிய மற்றும் பூகோள சுற்றடல் பிரச்சினைகள் தொடர்பாக பொதுமக்களுக்கு தெளிவுபடுத்தல்

8

மேற்குறிய குறிக்கோள்களில் பின்வரும் குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(அ) தேசிய சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் பிரதான குறிக்கோள்களில் ஒன்றாக "ஏதாவது உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் சுற்றாடல் பாதுகாப்பு தொடர்பான ஏதாவது சிபார்சுகள் மற்றும் விசேட சுற்றாடல் முறைகேடுகள் தொடர்பான சிபார்சுகளின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுமாறு அந்த சிபார்சுகளைச் செயற்படுத்துமாறும் அந்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கட்டளையிடுதல்" எனக் குறிப்பிடப்பட்டிருந்தம் நாட்டின் தேசிய பிரச்சினையாககக் காணப்படும் குப்பைகளை வெளியேற்றுவதற்கும் சுற்றாடல் முறைகேடுகள் சம்பந்தமாக பிரதேச மட்டத்தில் தேவையான தீர்வுகளைப் பெற்றுக் கொள்வதற்காக உள்ளூராட்சி நிறுவனங்களின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கும் அது தொடர்பான சிபார்சுகளை நடைமுறைப்படுத்துதல் சம்பந்தமாகவும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திண்மக்கழிவு முகாமைத்துவம் சம்பந்தமான அதிக பொறுப்பு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் அதற்காக பிலிசரு செயற்திட்டத்தினால் சேதனைப் பசளை செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் பாரிய அளவான திண்மக்கழிவுகள் நாளாந்தம் ஒன்றுசேரும் கொலன்னாவ மற்றும் மீதொடமுல்ல திண்மக்கழிவு மேடுகள் சம்பந்தமாக தீர்வினை 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்த முடியாதிருந்தது. தேசிய பிரச்சினையாகக் காணப்படும் திண்மக்கழிவு முகாமைத்துவத்தை முறைமைப்படுத்தி சுற்றாடலுக்கும் பொதுமக்களுக்கும் ஏற்படும் சுற்றாடல் மற்றும் சுகாதாரப் பாதிப்பு நிலைமைகளைக் குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்துதல் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது.

(இ) உள்ளூராட்சி நிறுவனம் ஒன்றின் கட்டுப்பாட்டு எல்லைக்குள் சுற்றாடல் பாதுகாப்பு சம்பந்தமான ஏதாவது சிபார்சுகள் மற்றும் குப்பை திண்மக்கழிவுகள், குப்பைகள் மற்றும் கழிவுப்பெருட்களை அத்துமீறி அப்புறப்படுத்துதல், வெளியேற்றுதல் அல்லது போடுதலைத் தடைசெய்தல், கால்வாய்கள் அல்லது நீரோடைகளினுடாக சுத்திகரிக்கப்படாத கழிவு நீரையும் தரம் குறைந்த தொழிற்சாலைக் கழிவுகளையும் வெளியேற்றுதலையும் அல்லது நச்சு இரசாயனப் பொருட்களை வெளியேற்றுதலையும் தடுத்தல் ஆகிய அம்சங்கள் சம்பந்தமான ஏதாவது சிபார்சுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு குறித்த உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு கட்டளையிடுதலானது 1988 இன் 56 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபையின் கடமையாக இருந்த போதிலும் அதற்காக அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

9

(ஈ) தேசிய பிரச்சினை காணப்படும் நகருக்கு அண்மையிலுள்ள பிரதேசங்களில் சேகரிக்கப்படும் குப்பைகள் சம்பந்தமாக நாட்டில் சிறிய அல்லது பாரிய அளவிலான குப்பை முகாமைத்துவ செயற்திட்டங்களை அமல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக கவனம் செலுத்துதல், திண்மக்கழிவு முகாமைத்துவத்தின் மூலம் உருவாகும் உப பெறுபேறான சேதன பசளை தயாரிப்பின் மூலம் இரசாயனப் பசளை பயன்பாட்டிற்கு மாற்றுத் தீர்வினை வழங்குதல், சுற்றாடல் பாதிப்பினை குறைப்பதனைப் போல அதிகாரசபைகு வருமானத்தை பெற்றக்கொள்ளுதல் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக முன்னுரிமையளித்தல் அதிகாரசபையின் பொறுப்பாக உள்ள போதிலும் அதற்காக அதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(உ) தொழிற்சாலைகளுக்காக சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரங்களை வழங்கும் போது அதற்காக முறையான நடைமுறைகள் இல்லாது வழங்குவதன் காரணமாக அதிகாரசபையினால் பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய சேவைகள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஊ) தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்ட குறிக்கோள்களுக்கும் பிரதான செயற்பணிகளுக்கும் மத்தியில் சுற்றாடலில் திண்மக்கழிவுகளையும் கழிவுப் பொருட்களையும் வெளியேற்றுவதற்கு மற்றும் சுற்றாடல் நிலைமையை பாதுகாப்பதற்கும் மேம்படுத்துவதற்குமுரிய அனைத்து நடவடிக்கைகளையும் தொடர்புபடுத்தல் அதிகாரசபையின் பொறுப்பாக உள்ள போதிலும் பெரும்பாலான உள்ளூராட்சி நிறுவனங்களினால் நகரப்பகுதியில் சேகரிக்கப்படுகின்ற குப்பைகளையும், கழிவுப்பொருட்களையும் கொட்டுதல் சுற்றாடலுக்கும் அதேபோல் மக்களின் சுகாதார பாதுகாப்பு சம்பந்தமாகவும் அதிக சிக்கலாக உள்ளதனால் அதற்கு விரைவாக தீர்வினை வழங்கும் தேவைப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பொது முயற்சிகள் தொடர்பான பாரளுமன்ற தெரிவுக் குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதிகாரசபையின் 2014 ஆம் ஆண்டிற்கான செயல்முன்னேற்ற அறிக்கையில் சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப்பத்திரங்கள் காலாவதியாகும் திகதியை சுயமாகச் சுட்டிக்காட்டுகின்ற தரவு முறைமையை 2015 பெப்ரவரி மாதத்தில் அறிமுகப்படுத்துவதாகக் குறிப்பிட்டிருந்த போதிலும் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அவ்வாறான தரவு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1980 ஆம் ஆண்டின் போது பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட தற்பொழுது காணப்படுகின்ற சுற்றாடல் அதிகாரச்சட்டத்தை நிகழ்காலத்துக்குப் பொருத்தமான வகையில் தொழிநுட்பச் சுற்றாடல் மற்றும் சமூகப்பொறுப்புக்களின் பிரகாரம் திருத்தம் செய்வதற்கும் சுற்றாடலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களை தொழில்நுட்பத்தால் கட்டுப்படுத்தி நீர் மின்சக்தி செயற்திட்டங்களை தோற்றுவிப்பதனை மேலும் நடைமுறைப்படுத்தும் சாத்திய வளம் தொடர்பாக முகாமைத்துவத்தின் கவனம் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. மேலும் வலுவான வேலைத்திட்டம் மற்றும் சிறந்த பயன்பாட்டை பெற்றுக்கொள்வதற்காக ஒருங்கிணைந்த தேசிய வேலைத்திட்டத்தை தயாரித்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) காற்று புகைப்பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக இரண்டு தனியார் நிறுவனங்களுக்கு அதிகாரசபையினால் சுற்றாடல் பாதிப்பு சம்பந்தமாக உடன்பாட்டினை வழங்குதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை அதிகாரசபையினால் அல்லது அரசாங்கத்துடன் இணைந்து கொண்டுள்ள நிறுவனம் ஒன்றின் மூலம் அமுல்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருந்தால் அரசாங்க வருமானத்திற்கு அண்ணளவாக ரூபா 3,533,883,188 தொகையான பாரிய அளவான வருமானத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது. சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவத்திற்காக வகைகூறக்கூடிய பொறுப்பபைக் கொண்டுள்ள நிறுவனமாக ஆகக்குறைந்தது இந்த நிகழ்ச்சித்திட்டமானது இலங்கை போக்குவரத்துச் சபையினுடாக அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயிருந்தால் அதனால் அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிக்க முடிந்திருக்கும் என்பது அவதானிக்கப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு 2815 சுற்றாடல் முறைப்பாடுகள் கிடைத்திருந்ததுடன் 1660 முறைப்பாடுகளுக்கு மாத்திரம் தீர்வுகள் வழங்கப்பட்டிருந்தன. அது மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கையில் 59 சதவீத பெறுமதியை கொண்டிருந்ததுடன் தீர்வு வழங்கப்படாத முறைப்பாடுகளின் அளவு 41 சதவீதத்தை மிகைத்திருந்தது. அதற்கிணங்க முறைப்பாடுகளுக்கு தீர்வுகாணும் செயல்முன்னேற்றமானது மிகவும் குறைந்த நிலையில் காணப்பட்டது.

(உ) பிலிசரு செயற்திட்டத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத செயல்திட்டத்தின் குறிக்கோள்கள் அல்லாத ஹைபரிட் பசளை தயாரிக்கும் செயற்திட்டத்திற்காக மொத்தப் பணத்தில் 20 சதவீதமான ரூபா 8,310,000 தொகை 2015 திசெம்பர் 30 ஆந் திகதி இலங்கை காணி மீட்டல் மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்திற்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) பிலிசரு செயற்திட்டத்தின் நிதிகளிலிருந்து அதிகாரசபைக்குச் சொந்தமான வாகனங்களைப் பயன்படுத்துதல், துண்டுப் பிரசுரங்களை அச்சிடுதல், தொம்பே கழிவுப்பொருள் முகாமைத்துவ காணி நிரப்புதல் என்பவற்றிக்காக முறையே ரூபா 450,706 , ரூபா 72,000 மற்றும் ரூபா 6,733,280 தொகைகள் செலவு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளப்பயன்படுத்தும் பிலாஸ்ரிக் கழிவுப்பொருட்கள் முகாமைத்துவ தேசிய செயற்றிட்டத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களுக்கு அக்காலப்பகுதிக்குரிய பணிக்கொடைகளை அச் செயற்றிட்டத்தின் நிதி ஏற்பாடுகளிலிருந்து செலுத்துவதற்கு 2016 நவம்பர் 08 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் ( கழிவுப் பொருள் முகாமைத்துவம்) பணிப்புரைகளின் பிரகாரம் ரூபா 679,300 தொகையான அச் செலவுகள் பிலிசரு செயற்திட்டத்தின் மூலம் செலுத்தப்படடிருந்தது.

(ஏ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் செயற்திட்ட கால எல்லை முடிவடைந்து மீளப்பயன்படுத்தும் பிளாஸ்ரிக் கழிவுப்பொருள் முகாமைத்துவ தேசிய செயற்திட்டத்தில் சேவையாற்றிய 05 உத்தியோகத்தர்கள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் அடிப்படையில் பதவிகளுக்குரிய தகைமைகள் தொடர்பாக எதுவித பரிசோதனைகளும் மேற்கொள்ளாது பிலிசரு செயற்திட்டத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர். இதற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 4.3 நிதியத்தின் குறைந்த பயன்பாடு

உரிய செயற்பாடுகளுக்காக பயன்படுத்தாமையின் காரணமாக அதிகாரசபைக்குச் சொந்தமான வங்கி நடைமுறைக் கணக்கில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காசேட்டின் பிரகாரம் மீதி ரூபா 156,513,919 ஆக இருந்ததுடன் அக்கணக்கில் மீளாய்வாண்டு முழுவதும் ரூபா 85,092,953 இலிருந்து ரூபா 168,876,157 வரையான வீச்சுடைய மீதிகள் காணப்பட்டன.

## 4.4 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டின் போது அனுராதபுர நகரத்தில் புதிய அலுவலகத்தை ஸ்தாபித்ததன் பின்னர் பண்டுலுகமவில் அமைந்திருந்த பழைய அலுவலகக் கட்டிடம் 2017 மே மாதம் வரையும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படாது விளைவற்றுக் காணப்பட்டது.

(ஆ) ரூபா 6,050,000 பெறுமதியான பிலிசரு செயற்திட்டத்துக்குச் சொந்தமான ஜீப் வண்டியொன்று 05 ஆண்டுகளுக்கு அண்மித்த காலமாக பயன்படுத்தப்படாது வைத்திருக்கப்பட்டது.

### 4.5 தாமதமான செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கல்வி அமைச்சின் யுனெஸ்கோ தேசிய ஆணைக்குழுவால் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சினுடாக மத்திய சுற்றாடல் அதிகாரசபைக்கு காபன் படிவினை குறைக்கும் செயற்திட்டத்திற்கான புத்தகங்களை அச்சிடுவதற்கு ஆரம்ப கொடுப்பனவாக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி ரூபா 1,387,385 வழங்கப்பட்டிருந்தும் இச்செயற்திட்டம் 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரசபையினால் 2016 ஒக்டோபர் 18 ஆந் திகதியிலிருந்து நடமாடும் வளி நிலைமை ஆய்வுகூடத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அது 2017 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.6 கொள்வனவு மற்றும் ஒப்பந்த நடைமுறைகள்

முற்பண முறிகள் மற்றும் செயலாற்றல் முறிகளைப் பெற்றுக் கொள்ளாது ரூபா 5,400,000 ஒப்பந்த பெறுமதியான தலைமை அலுவலகத்தின் உள்ளக வீதியையும் சுற்றாடலையையும் புனரமைப்பதற்காக ரூபா 1,080,000 தொகையானது வேலை ஆரம்பித்தல் முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப் பெறுப்பும் நல்லாட்சியும்

### 5.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் ஒவ்வெரு நடவடிக்கையும் இறுதியில் அடைந்து கொள்ளவேண்டிய இலக்கு தெளிவாகக் குறிப்பிடப்படாதிருந்ததுடன் திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக செய்யப்படவேண்டிய 25 நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பலவீனங்கள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்பு |
|---|---|
| (அ) கணக்கீடு | உரிய செலவு விடயங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமை, பெறுமானத்தேய்விடல் சரியாகக் கணிப்பிடப்படாமை, நிர்மாணங்கள் சம்பந்தமாக சரியாக கணக்கீடு செய்யப்படாமை |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | (i) சுற்றாடல் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் அதிகாரசபைக்கு கிடைத்தள்ள அதிகாரங்கள் நடைமுறைப்படுத்தப்படாமை.<br>(ii) உரிய திகதியில் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாமை மற்றும் செயற்திட்டங்களுக்குரிய இறுதி அவதானிப்புக்களையும் கணக்குகளையும் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை. |
| (இ) ஆளணி நிர்வாகம் | ஊழியர்களைச் சேர்த்துக்கொள்ளல், சரியான சம்பள அளவுத்திட்டங்களில் அமர்த்துதல், பதவியுயர்வுகள் என்பன ஏற்றுக்கொள்ளப்பட்ட முறைமையின் பிரகாரம் நிறைவேற்றப்படாமை. |
| (ஈ) வாகனக் கட்டுப்பாடு | வாகனங்களை விற்றுத்தீர்த்தல், காப்புறுதி இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ளல், விபத்துக்கள் இடம்பெறல், வாகனப்பயன்பாடு என்பவற்றிக்காக சரியான நடைமுறைகள் கடைப்பிடிக்காமை. |
| (உ) ஏடுகளையும் பதிவேடுகளையும் பேணல் | பொருள் இருப்பு பதிவேடு, வைப்புக்கள், முற்பணங்கள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டை நாளது வரையாகப் பேணப்படாமை. |

எச்.எம். காமினி விஜேசிங்க

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

14